உ

இராமநாதபுரம் சோமசுந்தரக் கவிராயர்

இயற்றிய

திருக்கழுக்குன்றக் கோவை

இது

குறிப்புரையுடன்

மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

குமாரர்

எஸ். கலியாணசுந்தரையரால்

சென்னை

கபீர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது

Copyright Registered] 1943 [விலை ரூ. 2



பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

உ

கணபதி துணை

முகவுரை

திருச்சிற்றம்பலம்

நீளநின்றுதொழுமினித்தலுநீதியால்
ஆளுநம்வினைகளல்கியழிந்திடத்
தோளுமெட்டுமுடையமாமணிச்சோதியான்
காளகண்ட னுறையுந்தண்கழுக்குன்றமே.

(சுந்தரமூர்த்தி நாயனார்)

திருச்சிற்றம்பலம்

கோவை யென்பது தமிழ்மொழியில் வழங்கும் பிரபந்த வகைகளுள் ஒன்று; அகப்பொருட் செய்திகளைப் பொருளாகக் கொண்டு, அப்பொருளுக்குரிய துறைகளை அமைத்துக் கோப்பதனால் இப்பிரபந்தம் இப்பெயர் பெற்றது; அகப்பொருட் பிரிவாகிய ஐந்திணை நிகழ்ச்சிகளையும் கூறுதலின் ஐந்திணைக் கோவை யென்றும் வழங்கும். பண்டைக்கால முதல் கோவைகள் கடவுள் மீதும், வள்ளல்களின் மீதும் புலவர்களாற் பாடப் பெற்று வருகின்றன.

கோவைகளைக் கட்டளைக்கலித்துறையாற் பாடுவது மரபு. அதனால் கோவைக்கலித்துறை யென்ற பெயரால் கட்டளைக் கலித்துறை வழங்குதலும் உண்டு. கைக்கிளை களவு வரைவு கற்பு என்னும் பெரும் பிரிவுகளும், கைக்கிளை முதலிய முப்பத்து மூன்று கிளவிகளும், ஒவ்வொரு கிளவியிலும் பல துறைகளும் கோவைகளில் அமைந்திருக்கும். திருச்சிற்றம்பலக் கோவையார், பாண்டிக்கோவை முதலிய சில கோவைகளில் உள்ள கிளவி யமைப்பு துறையமைப்பு என்பனவற்றிற்கும், பிற்காலத்துக் கோவைகளில் உள்ளனவற்றிற்கும் சில சில வேறுபாடுகள் உண்டு.

பிற்காலத்துக் கோவை வரிசையிலே **திருக்கழுக்குன்றக் கோவை** ஒன்று. இது பக்ஷிதீர்த்த மென்றும், சங்கதீர்த்தத் தலமென்றும் நாடெங்கும் புகழ்பெற்ற திருக்கழுக்குன்றத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேதகிரீசர் விஷயமாக்

இராமநாதபுரம் வித்துவான் ***சோமசுந்தரக் கவிராயர்** என்பவராற் காப்புச் செய்யுள் உள்பட 456 செய்யுட்களால் ஆக்கப் பெற்றுள்ளது.

சோமசுந்தரக் கவிராயரைச் சோமசுந்தரம் பிள்ளை யென்றும், சோமசுந்தரகுருவென்றும், சோமசுந்தர குருஸ்வாமி என்றும் கூறுவதுண்டு. இராமநாதபுரத்தில் வாழ்ந்த நெல்லையப்பரென்பவருக்குக் குமாரராயுதித்தவர் இப்புலவர். இவர் திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீ **சிவஞான சுவாமி**களிடம் கல்வி பயின்று சிறப்பெய்திய மாணாக்கர்களுள் ஒருவர்; சேதுபதி அரசரின் ஆஸ்தான வித்துவானாக விளங்கியவர். இராமநாதபுரம் அஷ்டாவதானி **பெரிய சரவணக் கவிராயரும்** இயற்றமிழாசிரியர் **இராமானுஜ கவிராயரும்** இவருடைய மாணாக்கர்கள். இவை பெரிய சரவணக் கவிராயர் இயற்றிய சீட்டுக் கவிகளாலும், இராமானுஜ கவிராயர் இவரை நன்னூற் காண்டிகை யுரையிற் சிறப்பித்துள்ள பாடல்களாலும் தெரிகின்றன. இவருடைய சிவபக்திச் செல்வமும், சைவசமயப் பற்றும், பாஷாபிமானமும், பரந்த கல்வியாற்றலும், பிற சிறப்பியல்புகளும் இந்நூலைப் படித்தலால் நன்கு விளங்கும். வேதாந்த சூடாமணியுரைக்குப் பாயிரம் இயற்றிய **சாமிநாத கவிராய**ரென்பவர் இவருடைய சகோதரராவர்.

அந்தகக்கவி **வீரராகவ முதலியார்** இயற்றிய திருக்கழுக்குன்றத் துலாவை 1938-இலும், காஞ்சீபுரம் மஹாவித்துவான் **சபாபதி முதலியார்** இயற்றிய திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பாவை 1939-இலும் என் தந்தையாராகிய **மஹாமஹோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள்** குறிப்புரையுடனும் பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். இத்தலத்தைப் பற்றிய விரிவான செய்திகளை அவற்றிற் காணலாம்.

இந்நூலாசிரியர் தலச் செய்திகளையும் பிறநூற் கருத்துக்களையும் இந்நூலில் ஆங்காங்கு நன்கு புலப்படுத்தியிருக்கின்றனர்; அவை வருமாறு:

இத்தலத்து மூர்த்தியாகிய ஸ்ரீ வேதகிரீசருக்கு மலைமருந்து என்ற திருநாமம் ஒன்று உண்டு. அதனை இவர்,

---

* சேது சமஸ்தான மஹாவித்துவான் பாஷா கவிசேகர **ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்கள்** இயற்றியுள்ள 'சேதுநாடும் தமிழும்' என்னும் நூலும், இராமநாதபுரம் ஸ்ரீமத் ராவ் சாஹிப் மு. **இராகவையங்காரவர்கள்** பதிப்பித்துள்ள 'பெருந்தொகை' என்னும் நூலும் இவ்வாசிரியரின் வரலாற்றை எழுத உதவியாக இருந்தன.

"செங்கை, வளையவன் போற்றும் பிரான்கழுக் குன்றின் மருந்தை" (55)

என்று புலப்படுத்துகிறார்.

"கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே"

என்ற **திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்** திருவாக்கிலிருந்து இப்பெருமானுக்குக் கள்ளம் வல்லாரென்ற திருநாமம் ஒன்றுண்டு என்று தெரியவருகிறது. இக்கோவை யாசிரியர்,

"புல்லர் தம்மனத்திற், கள்ளத் தவன்கழுக் குன்று" (124)

என்று கூறுவது அதனை நினைந்துபோலும்.

பெண்ணினல்லாளென்பது இத்தலத்து அம்பிகையின் திருநாமம்:

"உலகருள் பெண்ணினல் லாளொடுந் தோய்ந்தபெம்மான்" (24),

"விண்டொழுங் காற்றுணைப் பெண்ணினல் லாள்பங்கன்" (65),

"அளிகொண்டு காதள வார்விழிப் பெண்ணினல் லாளொருபால்
களிகொண்டு வாழ்பரன்" (108.)

வேதங்களே மலையுருவாக நின்றனவென்பது ஐதிஹ்யமாதலின் இக்குன்றத்திற்கு வேதகிரி யென்னும் பெயர் வழங்கும்:

"கழுக்குன்றமாம், சொன்னேரு மாமறை" (355),
"வேத வெற்பார்" (419),
"மறைத் திண்கிரி" (447.)

இத்தலத்திலுள்ள சங்கதீர்த்தம் மிக்க புகழ்பெற்றது. அதன்கண் வலம்புரிச் சங்கம் பிறந்ததென்பர்:—

"......வலம்புரிச் சங்குறு தீர்த்தத்தன்பாற்
பாச மொடுங்கப் படிவோர்க் கருள்செய் பரமன்" (82.)

கழுகுகளாற் பூசிக்கப் பெறுதலின் இத்தலத்திற்குத் திருக்கழுக்குன்றமென்னும் பெயர் வந்தது:

"கழுகார் மலை" (95),
"கங்கங் குலவுங் கிரியான்" (206.)

சம்பு, ஆதி என்னும் முனிவரிருவர் கலியுகத்திற் கழுகுருவமாக வந்து இத்தலத்திற் பூசித்துப் பேறு பெற்றனர்:

"......சம்பாதி யாமிரு சீர்முனிவர்
வந்திரு கங்கம தாய்த்தொழு வோன்" (46.)

இந்திரனும் (168), பிரமதேவரும் (189), திருமாலும் (55, 65, 189, 408, 430), நந்திகேசுவரரும் (65), மார்க்கண்டேயரும் (68) இத்தலத்தில் வந்து வழி பட்டவர்கள்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் தாம் கண்ட குரு மூர்த்தியின் திருக்கோலத்தை இத்தலத்தில் தரிசித்து இன்புற்றார்:

"தேசிக னாகியோர் மாணிக்க வாசகர் தேறமும்மை
ஆசிக ளீந்தருள் செய்வோன் கழுக்குன்று" (48.)

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஒரு சமயத்தில் இத்தலத்துப் பெருமான் பொன் வழங்கியருளினார். அதனால் பொன்னிட்டநாத ரென்ற திருநாமம் இம்மூர்த்திக்கு வழங்குகிறது:

"நம்பி, பொன்னை யிரந்தவன் ஈவோன் கழுக்குன்றம்" (186),

"நம்பிக், கீகை பெறத்தரு வோன்கழுக் குன்று" (187.)

ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையைக் கொணருகையில் அதன் ஒரு பகுதி இத்தலத்தில் விழுந்ததென்று கர்ணபரம்பரையாக ஒரு செய்தி வழங்குகின்றது. இப்பிரபந்த ஆசிரியர்,

"இளையவன் மூர்ச்சைக் கனுமான்சஞ் சீவினி யேய்ந்துவந்தாங்கு" (55)

என்று அமைக்கும் உவமை அதனைக் கேள்வியுற்றதனால் நினைவுபெற்றுக் கூறியதுபோலும்.

சிவஞான முனிவருடைய மாணுக்கராகிய இக்கவிஞர் சைவ சித்தாந்த நூல்களில் நல்ல தேர்ச்சி பெற்றிருத்தல் இயல்பே. இப்பிரபந்தத்தில் உரிய இடங்களில் சைவநூற் பெயர்களையும் சைவநூற் கருத்துக்களையும் இவர் அமைத்திருப்பதனால் அதனை உணரலாம்.

ஆகமம்: "ஆகமஞ் சார்தரு மோதி நிகமுடியார்" (10), "ஆகம நூல், சாற்றுவன் றேனுடை யான்" (222.)

சிவஞானசித்தியார், சங்கற்ப நிராகரணம்: "சித்திசங் கற்ப நிராகர ணத்திற் சிறந்துரையா, உத்திதந் தோதுநை யாயிகன் கண்ட னம்" (45.)

குருவினால் அருள்பெறுதல்: "ஈசர்க் கலப்பநிற்போர், குருவைத் தொடர்ந்தென" (75), "பக்குவப் பட்டுணரும், உயிர்க்குமெய்ஞ் ஞான குருவென" (98.)

திருவருள்: "விடையே றியகழுக் குன்றர்க்கும் பாசம் விர வுயிர்க்கும், இடையே திருவரு ணின்றின்பங் கூட்டிய தென்ன" (381.)

பெத்தநிலையும் முத்தநிலையும்: "பெத்தத் திரண்டெனி னுங்கழுக் குன்றிற் பிரானொடுயிர், முத்தத் திரண்டெனக் காணரி தாகும்" (390.)

பஞ்சகிருத்திய நடனம்: "ஆட்டத் துயிர்க்கைந் தொழில்செய்து முத்திய மாற்றுபிரான்" (78), "ஆடலி னைந்தொழி லாற்றுங் கழுக்குன் றமலன்" (435.)

சிவசக்தித் தொடர்பு: "அன்னை மணுட்டி யெனவொரு பேதையை யார்பெருமான்" (131.)

சக்தியின் இயல்பு: "முப்பெண்ணை முத்தொழில் செய்ய வருள் செய் முதல்" (112), "நாமி னிராமுகிழ் பூமி னிமாசலை நாமமுறும், வாமி" (252.)

அணி முதலியன

பலவகை அலங்காரங்களை விரவுவித்துப் பாடியுள்ள பாடல்கள்பல; சிலேடையணியைப் பலவிடங்களிலே காணலாம். ஓரினப்பட்ட சிலவகைப் பொருள்களின் பெயர்கள் சொல்லளவிலே தொனிக்குமாறு திறம்பட அமைத்த பாடல்கள் வருமாறு:

இராசிப்பெயர்கள்: "இரு சேல்காட்டக் கும்பந் தழைகடகம், அத்தம் பெறச்சிங்கங் காட்டு மியல்" (54.)

மாதப்பெயர்கள்: "ஆவணி யாடியோ ரானிய தின்றிவை காசி யென்னே" (130.)

இலக்கணமும் சோதிடமும்: "சத்தந் தெரியிற் கணிதமுறும்" (202.)

இடுகுறி காரணம்: "இடுகுறி காரண மாம்வேறு தேடெய் திடுகுறியே" (250.)

எண்கள்: "மும்மத நால்வாயோ ரைங்கரக் கற்பகமே" (காப்பு), "ஒருவா திருமையு மெய்தமுத் தீமறை நான்கினும்பர்" (365.)

சிற்றுண்டி: "தேன்குழல் சீர்ப்பணி யாரமொடு" (373.)

மடக்கும், வழியெதுகையும் இதன்கண் பயின்று வந்திருக்கின்றன. முரண்டொடையையும் பலவிடங்களிற் காணலாம்.

இந்நூல் பலதிறத்தில் சிராமலைக்கோவையோடு ஒப்புமை பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

இவர் 387, 388, 406-ஆம் பாடல்களில் திருக்குறளிற் கண்ட சொற்பொருள்களை அமைத்திருக்கிறார்.

என் தந்தையாரவர்கள் வெளியிடல் வேண்டுமென்று கருதிய நூல்களுள் இக்கோவை யொன்று. அவர்கள் திருக்கழுக்குன்றத்திற் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பைப் பெற்றதனால் அவர்களுக்குப்பின் நூற்பதிப்புத் தொண்டை மேற்கொண்ட யான் இதனை முதலாவதாக வெளியிடலானேன்.

அவர்களால் இதுவரை குறிப்புரை முதலியவற்றுடன் பதிப்பிக்கப் பெற்ற கோவைகள் ஏழு. அவையாவன: திருவாவடு

துறைக்கோவை, சீகாழிக்கோவை, கோடீச்சுரக்கோவை, பழமலைக் கோவை, கலைசைக்கோவை, சிராமலைக்கோவை, திருவாரூர்க் கோவை என்பனவாம். அவற்றிலுள்ள முகவுரை முதலியவற்றைப் பார்த்தால் கோவைகளின் இலக்கணங்களும், சிறப்பியல்புகளும் நன்கு விளங்கும்.

ஐயரவர்கள் பல வருஷங்களுக்கு முன்பே பனையேட்டிலிருந்து இதனைக் கடிதத்திற் பிரதிபண்ணுவித்து ஆராய்ந்து சில குறிப்புக்களும் எழுதிவைத்திருந்தார்கள். அப் பிரதியின் ஆரம்பத்தில் 'சிவமயம், இராமநாதபுரஞ் சோமசுந்தரக் கவிராயரவர்கள் பாடிய திருக்கழுக்குன்றக்கோவை' என்பனவும், இறுதியில், 'திருக்கழுக்குன்றக்கோவை முற்றும். வேலுமயிலுந்துணை. திருச்சிற்றம்பலம்' என்பனவும் காணப்படுகின்றன. இதனை ஏட்டிலிருந்து என் தந்தையார் விரும்பியபடி கடிதத்திற் பிரதி செய்து உதவியவர் தேவஞ்சேரி **ஸ்ரீ அ. கிருஷ்ணசாமி நாயகர்** என்பவர்.

இந்நூலைக் குறிப்புரை முதலியவற்றுடன் சென்ற ஏப்ரல் மாதத்தில் என் தந்தையாரவர்களது தினத்துக்குள் பதிப்பித்து வெளியிடவேண்டுமென்று யான் பலவாறு முயன்றும் பலவிதமான இடையூறுகளால் அங்ஙனம் வெளியிட இயலாமற் போயிற்று. இப்பொழுதேனும் இந்த நிலைமையில் வெளியிடும்படியான பேற்றை யளித்த திருவருளை என் மனமார வழுத்துகின்றேன்.

இதற்குக் குறிப்புரை எழுதுவதற்கு முக்கியமாக உதவி புரிந்த 'கலைமகள்' ஆசிரியர் ஸ்ரீ வித்துவான் **கி. வா. ஜகந்நாதையருடைய** அன்புடைமையை நான் மிகவும் பாராட்டுகின்றேன். இந்நூலைப் பதிப்பித்து வருகையில் ஒப்புநோக்குதல் முதலிய உதவிகள் புரிந்த திருவல்லிக்கேணி நேஷனல் கலாசாலைத் தமிழாசிரியர்களாகிய வித்துவான்கள் ஸ்ரீ **அ. வைத்தியநாதையருக்கும்** ஸ்ரீ **வே. லக்ஷ்மணையருக்கும்** எல்லா நன்மைகளும் உண்டாகும்படி செய்வித்தருளும் வண்ணம் மறைமலைநாதரைப் பிரார்த்திக்கின்றேன்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துச் செயலாளர் ஸ்ரீமான் **நீ. கந்தசாமி பிள்ளையவர்கள்** ரூ. 25-ம், சென்னை, மாம்பலம் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஆசிரியராக உள்ள ஸ்ரீமான் **ரா. கோவிந்தராஜ ஐயரவர்கள்** ரூ. 10-ம் இந்நூற் பதிப்புக்கு உபயோகித்துக்கொள்ளும்படி வலிந்து உதவினார்கள். அவர்களுடைய பாஷாபிமானம் மிகவும் பாராட்டற் குரியது.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன்பேட்டை
சென்னை, 20–9–1943

இங்ஙனம்,
S. **கலியாணசுந்தரம்**

பாட்டு முதற்குறிப்பகராதி

[எண் - செய்யுளெண்]

அகமலரன்பு	153	அனக்கிளை	419	உலர்ந்தசினை	281
அங்குலியாகி	312	அனத்திற்குணங்	434	உழையே	164
அசைவற்ற	9	அனமோடி	81	உளங்கனி	261
அடிமலரும்	16	ஆகத்தின்	210	உன்னிப்பிரிந்	344
அடியாரகத்	269	ஆகத்தை	60	உன்னைமணந்	279
அடுகுறியோர்ந்து	250	ஆசகல்கல்வி	437	உனக்குவருத்	53
அடுவதொரு	389	ஆட்டத்தரு	412	ஊசனிலா	128
அண்டங்கள்	177	ஆட்டத்துயிர்	78	ஊர்தானணி	335
அணங்கினர்	33	ஆடல்சுனை	182	ஊராரலர்	237
அதுவேபொரு	391	ஆடலினைந்	435	ஊராரலரி	300
அந்தங்கடந்து	66	ஆய்துஞ்சி	225	ஊராரலரொடு	330
அம்மானை	89	ஆர்த்தேன்	61	ஊரோது	86
அயிலொருவா	357	ஆர்ப்பானை	44	ஊற்றிற்பெரு	288
அரசங்கர	299	ஆலையினைட்டு	429	ஊற்றுமணல்	72
அரிந்தார்	162	ஆவணங்காட்ட	398	ஏங்கும் பரந்தன	248
அரியார்	306	ஆவியினைனுயர்	325	எங்கும் புயல்	196
அருந்தனஞ்	296	ஆனேறுயர்த்த	347	எங்குற்றனளெனை	375
அரும்பலர்	316	இக்கன்மொழி	195	எத்தலைகயோ	50
அருள்கொண்டு	287	இடத்துவில்	285	எத்தனையோவித	423
அருள்பெற்ற	157	இடைக்குடை	144	எந்நாளெனை	240
அல்லினுங்கூரு	328	இணங்காதரத்	301	எரியினுமன்பர்	322
அல்வாயுமென்	251	இந்திரன்	36	எலியோடகம்	352
அலையொன்று	35	இந்நாளெனக்	231	எவ்வணிசீரி	397
அலைவாயலை	268	இமைத்து	3	எவ்வாறு	34
அளிகொண்ட	5	இருமனங்கொண்	425	என் குற்றஞ்	139
அளிகொண்டு	108	இளையவன்	55	என்வயமன்	404
அறத்தாலு	212	இறையும்பெரு	76	என்வாய்	136
அறியாதி	138	இனமேவுமன்பர்	235	என்னடியார்	359
அன்பாலவர்	173	ஈதொன்றுரை	315	என்னைட்டணி	181
அன்றிலரற்ற	155	ஈர்த்திபவ	454	என்னைமினிச்	169
அன்னக்குழாத்	67	உக்கங்கை	15	என்னைருயிர்	311
அன்னைய்சுர	362	உடைகொண்ட	90	என்னைருயிரை	166
அன்னையமுது	367	உம்மைக்குழல்	290	என்னைவியாய்	24
அன்னையிரங்	449	உரத்துடனை	448	என்னைவியாய	57
அன்னையுனக்கன்	370	உருத்துநமன்	379	என்னைனுமுரைப்	319
அன்னையுனக்கு	441	உலகமளிக்கு	129	என்னீர்மயல்	111

என்னீரறைந் 346
என்னுயிருய்ந்த 127
என்னுளத் 43
என்னேயினி 221
என்னைமறைப்ப 131
என்னையிரந்த 186
என்னையுமோர் 382
என்னைவியப்புக் 302
எனக்குமலரடி 73
எனைத்தனை 293
எனையெடுத் 340
ஏங்கித்திகைத்து 6
ஏனற்புன 238
ஐவாயினுஞ் 64
ஐவாயினுமிங் 385
ஒண்டிரை 11
ஒப்பறை 219
ஒருகால் 103
ஒருத்தியோ 40
ஒருநாண்முதிர் 105
ஒருபுனலூர 263
ஒருமலர் 115
ஒருவாதிரு 365
ஒருவுறின் 401
ஒழுங்குரல் 408
ஒன்றேயிரண் 87
ஓங்காதரம் 386
ஓரேதுவு 180
கங்குலிற் 39
கஞ்சத்தினை 30
கஞ்சமுமந்த 175
கடலறவேல் 317
கடலூர்ந்த 114
கடலென்றயிர் 337
கடுவார்களன் 399
கண்கள் குழிந்தன 416
கண்டோர் 201
கண்ணீர்பொழி 236
கணந்தானடி 69
கதலியிரண் 25
கதிகண்டவன் 247
கதிருடல் 442
கரத்திற்றழை 85
கரவொன்றை 203
கருகாநமணி 436
கருமானுரி 403
கருவாய்ந்து 228
கருவைத்தவிர்க் 75
கருவைத்தவிர்ப் 7
கல்விப்பொருள் 431
கலியார் 59
கலையினைத் 211
கவளக்கடா 83
கழிதரு 260
கழிவாய் 213
கற்பகமேவும் 21
கற்பத்திற் 192
கற்றறிவார் 51
கறைபடர் 258
கன்றிற்கருள் 336
கன்றிவருந்த 197
கன்னேரு 355
காக்கும்புனத் 170
காதமணத்திடு 371
காதாரு 42
காதுக்கும் 23
காயம்பல 345
காயுங்கனியு 218
கார்க்கண் 354
காரணங்காண் 37
காரணமே 266
காராரகள் 272
காரியின் 52
காலாயுதமு 342
காலையலர்ந்த 242
காவியினீள் 259
கிள்ளையெங் 265
கிளளையைக்கண் 413
கிளிகாண்மட 174
கூபவோர் 358
குலமறிவாய் 132
குளமலி 29
குளிர்தருகாற் 440
குனிக்குமணி 444
கூட்டமபிரி 158
கூர்த்தவுணர் 339
கூவிக்கழற் 41
கூற்றநகுமைத் 309
கூறறுவன் 452
கெடுத்தார் 185
கைக்கேசரி 179
கைப்போது 110
கையிற்சிசு 414
கைவேலல 193
கொங்கைப்பச 244
கொடியேயெழில் 348
கொடும்பாலை 349
கொடுவின்மை 116
கொய்கோ 92
கொய்தனை 199
கோட்டுக்களிற் 178
கோடுகொடி 243
கோண்மலர் 13
கோதாம்பல் 189
கோதாயனிச்ச 324
சகங்களி 122
சங்கத்தாளம் 20
சங்கத்திற் 147
சங்கந்தவழ் 206
சசிகொண்ட 194
சாபமுங்கோலு 254
சாமரை 49
சாலுமடியார் 334
சிங்கக்குருளை 120
சிங்கஞ் 184
சித்திசங் 45
சிவந்தமலர் 396
சீர்கொண்ட 1
சீரினிறை 205
சீருறு காப்பு
சுகங்காட்டு 417
சுத்தம் பெறு 202
சுரவிந்த 18
சுழியும்புனல் 224
சூரியன் 209
செங்கட்டறு 256
செங்கதிரோனை 377
செந்தாமரை 190
செந்தேன் 183
செயிர்த்துப் 216
செழியர்தங் 94
சேறுமென 363
ஞானச்செயலி 451
தண்ணூர்புனற் 253
தண்ணிலவொ 220
தணிவொடும் 32
தந்தியோர் 46
தந்துந்தரளமு 104
தந்தோடு 28
தருமந்தவரு 438
தருவுறுபோ 356
தலையொன்று 88
தழற்குப்புர 100
தன்னேரில் 298

தன்னேரிலாத	198
தன்னேரிலாவொரு	286
தன்னைக்கொல.	343
தன்னொளி	63
தனைக்காத்து	387
தனைநேரிலான்	361
தாரகத்தர்	99
தாய்கொண்ட	159
தாரார்குழல்	31
திருமகளால்	433
திருவுமிறை	58
திரையார்	305
தினமலை	274
தீதுற்ற	109
துப்பினைப்	14
துயின்றாற்	200
துரகத்திரு	392
துவளொரு	376
துன்பமகல்	402
தூதின்பொருட்	445
தூய்மையிற்	341
தூயகன்	148
தூரியமே	372
தெரிந்தார்	278
தெருமரை	79
தென்றிமலரி	395
தேசங்கலந்து	234
தேசவிடங்கன்	82
தேசிகனாகி	48
தேடிப்பத	188
தேன்சென்	215
நச்சிநயமுற	227
நசைபெற	77
நஞ்சுமமுதுங்	119
நடையாலுனது	145
நம்மாதுடன்	369
நம்மாவி	70
நல்லாயிர	277
நலம்புரி	291
நற்றேவ	97
நன்றாக	208
நன்னெறி	246
நாகமஞ்	10
நாடுதமக்கென்	426
நாணணி	140
நாமினியூடல்	427
நாமினிரா	252
நாற்றஞ்செலவு	68
நிறைநீங்க	226
நிறைமதி	47
நின்பாலு	407
நின்னதுவாய்	195
நின்னால்வளர்	223
நின்னையிரப்ப	262
நினக்கேதெரி	151
நீலோடுகண்டர்	270
நெறிகொன்	239
நேயத்தவர்	374
நொச்சிபுனை	446
நோயிழை	432
பசியால்	27
பஞ்சின்	8
பஞ்சினுமெல்லடி	350
பஞ்சினுமெல்விது	321
பண்ணீர்மொழி	303
பணிதருநன்	101
பதமலை	143
பந்தாடி	95
பந்தார்	26
பயிர்க்குமழை	98
பயிற்றாள்	121
பரசுவிளங்	84
பரியாதவ	232
பரிவுமுறவு	275
பருகோட்டு	80
பரையைத்தமக்	327
பனையே	137
பாகங்கொள்	12
பாகியன்	304
பாஷைகநிகர்	187
பாதங்கம்	276
பாபாரி	168
பாம்பணி	19
பார்தோன்றி	282
பாலார்கட	146
பாலையுமாலையும்	331
பாற்கடல்	4
பிரியாமை	172
பிள்ளைநகை	245
பிறைதான்	393
பின்னலதாரும்	420
புகலுந்தொறு	249
புரவலரென்கை	439
புரவலரென்பர்	307
புரிந்திடு	230
புல்லானமைந்த	152
புலரும்படி	62
புலவரையாளும்	320
பூம்போதி	409
பூமனையாய்	314
பெண்பாலை	113
பெத்தத்தி	390
பெற்றவயிறு	353
பெற்றவர்க்குற்ற	428
பெற்றுவளர்	326
பேதைமையான்	318
பேய்க்கூட்டம்	217
பொங்கிப்பரந்த	455
பொங்குங்கருணை	233
பொய்யா	366
பொய்வந்த	333
பொருப்பிற்சிலை	74
பொருளளிப்போன்	424
பொழிநீர்	141
பொன்னம்	394
பொன்னொடா	284
பொன்னேபுணர்	450
போதார	418
போதுநறு	150
போர்கண்டு	289
போரினிலாவு	447
மங்கலமென்ப	406
மடலெங்கு	380
மண்ணைவளர்	117
மண்ணோ	2
மணத்தைக்	176
மணத்தை மறைக்	133
மந்திரமாய்	142
மயங்கத்தன	292
மயங்குவ	453
மயிலைமென்	56
மருந்ததிராழி	430
மலருமது	17
மலைவாழ்குற	368
மறந்தானினை	294
மறிகாட்டி	273
மனைத்தக்க	388
மாமணி	123
மாலுந்திரு	360
மாலைச்சிவப்	400
மாலையையன்	154
மாற்றுவன்	222
மானேயிளி	165
மானேயுனை	364

மின்னுரல	310	மேவாரெனை	378	விடக்குநுகரு	411
மின்னுரிடை	126	மையாரும்	135	விடையேறி	381
மின்னுரும்	22	யாதுசெய்	167	விண்டொழுங்	65
மீன்குழல்	373	யாதுபிரிவு	264	விண்ணுருமும்பர்	271
முகங்கண்டு	191	யாதுபுகல்	280	விண்வாய்ந்த	308
முடங்கல்	207	யான்முதலா	383	விரகத்தழற்	257
முடியாரொரு	160	யான்றேற்று	134	வில்லினுமம்பினு	323
முத்தினரும்பி	204	யானின்றமை	421	விழியாத	71
முத்தும்பவளமு	54	யானெங்கவ	102	விழியேயயின்	96
முந்நீர்சுவற்	156	வசையாண்ட	410	வீட்டிற்கு	255
முப்பெண்ணை	112	வரையாட்டை	313	வெங்கட்டறு	241
முழுப்பாத	214	வன்கட்கடுஞ்	107	வெள்ளத்தலை...	
முன்னுட்சி	422	வாட்டங்கொள்	171	வன்கரை	106
முன்னுண்மலை	118	வாடும்பயிர்	163	வெள்ளத்தலை...	
முன்னுனக	384	வாயார	229	வனோர்	124
முன்னேநமை	267	வாரிகரை	329	வேட்டமிவர்	91
மெல்லநடங்	338	வாவியிற்றன்	351	வேணியிற்	297
மெல்லியசீறடி	332	வாவியிற்றேன்று	125	வேதியரா	283
மெல்லியனின்	149	வானுரு	38	வேந்தரிருவர்	443
மேலாய	93	வானின்புற	415	வேய்பெற்ற	405
மேவணிபாம்	130	வானினஞ்	161		

நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

கந்த - கந்த புராணம்
கம்ப - கம்பராமாயணம்
கலைசைக் - கலைசைக் கோவை
குமரகுருபர - குமரகுருபர ஸ்வாமிகள் பிரபந்தங்கள்
குறுந் - குறுந்தொகை
கோடீச்சுரக் - கோடீச்சுரக் கோவை
சிராமலைக் - சிராமலைக் கோவை
சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்
சீவக - சீவக சிந்தாமணி
தண்டி - தண்டியலங்காரம்
தனிப் - தனிப்பாடல்
திருவா - திருவாசகம்
திருவாவடுதுறைக் - திருவாவடுதுறைக் கோவை
திருவிளை - திருவிளையாடற்புராணம்
தொல் - தொல்காப்பியம்
நாலடி - நாலடியார்
நீதிநெறி - நீதிநெறி விளக்கம்
பெரிய - பெரிய புராணம்
மயூரகிரிக் - மயூரகிரிக் கோவை

வி. பா. - வில்லிபுத்தூரார் பாரதம்

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
14	20	குழற்	குழல்
16	23	புனலிரைத்	புனலிறைத்
25	18	மிடியார்	இடியார்
31	32	லவ்வர	லல்லர
39	26	மேவல	மேவலென்
44	10	ரிடைப்பங்கிற்	ரிடைபங்கிற்
46	22	பாத்தருணின்	பார்த்தருணின்
49	17	நிகராய்ச்	நிகராய
,,	18	வுலையென	விலையென
,,	19	தலைவரை	தலவரை
,,	26	மன்பர்	மன்பர்ப்
,,	29	தெரியி	றெரியி
50	9	பாவியிநா	பாவியினு
,,	18	தனக்கொரு	தமக்கொரு
,,	23	கூடு	கூரு
52	4	வித்தின்	வித்தின்ப
,,	22	விடர் குடல்	விடர்க்குடல்
,,	30	விழவெடுத்து	விழவெடுத்தும்
53	2	யாதந்தந்	யாதத்தந்
,,	17	மானேயென்	மானேயென்மான்
,,	22	யுடைவண்	யிடைவண்
,,	36	னம்மனைபங்	னம்மனைபைங்
55	15	ரிலார் கழுக்...தாயிருவர்	ரிலான் கழுக்...தாரிருவர்
56	20	முயில் வெள்	முயிலவெள்
62	21	மிகவுறல்...வாயினிற்	மகவுறல்...வாயிலிற்
65	31	பெண்ணுளங்	பென்னுளங்
66	16	சீறடிதாழ்	சீரடி தாழ்
67	2	ஆற்றுத்தல்	ஆற்றுவித்தல்
,,	10	வாய்ந்திறைமை	வாய்ந்திறைமைக்
71	3	சொல்லிய...மற்ற வற்றை	சொல்லியுள்ளனவேயல் லாமல்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
73	10	அரும்பினன்	அரும்பினள்
75	18	கலக்க	கலக்கம்
,,	20	இந்திராணி	இந்திரனும் இந்திராணியும்
78	29–31	என்றன்னை.....என்றபடி.	வாள்முகம் — ஒளியையுடைய முகம். ஆவிமேவிடும் என்க ; ஆவி - தலைவி.
80	22–24	எல்லோரும்...நக்கீரரொடு	பருகுதற்குரிய கலமாகிய திருவோடு சம்பந்தமான வழக்கு ; என்றது திருநீலகண்ட நாயனாரொடு
81	17	ஒற்றுமை	ஒன்றிய
83	9	நீர்கடல்	நீள்கடல்
90	7	தேனை	வண்டு
,,	25	திருமால்	இந்திரன்
92	36	கல்லாரத்தொடு	கல்லாரத்தொகு
,,	37	குவளைமலரோடு	குவளைத்
93	15	திருப்புகலூரில்	இத்தலத்தில்
95	13	எனை	அனை
,,	14–15	தகுதி...தகுமென்று	தாயைப்போலத்
96	3	அல்லா	அல்
,,	8	இருப்பிடத்தில்	படுக்கையில்
,,	28	நீர்	புன்னை
97	10–11	அவன் - இறைவன்	அவள் - தலைவி
99	28–29	அன்பைத் தெரிந்து கொள்ளாதவருக்கு	அன்பு செய்யாதவருக்கு
101	25	அன்னைக்குச்	என்று அன்னைக்குச்
102	33	இன்னும்	இன்றும்
106	36	சங்கை...அது	சங்குகளை...அவை
108	32	பிரிவு –	பரிவும் –
112	23	வெங்கைக்கலம்.	வெங்கைக்கோவை,
119	11	மான் –	மான்விழி –
122	23	மென்று	மென்னும்
,,	25	வென்றுபுலப்படுத்தி	வென்னும்
129	18	குதிரைகளாக அழகிய	குதிரைகளாகிய
130	14	விலையோலை	அடிமையோலை

சிவமயம்

திருக்கழுக்குன்றக் கோவை

விநாயகர் காப்பு

சீருறு திங்க ளணிகழுக் குன்றுளிர் செஞ்சடையோன்
வாருறு பூண்முலை மங்கை மணாளன் மலரடிக்காம்
தாருறு கோவை புனையவென் னுவிற் றமைத்தருளும்
காருறு மும்மத நால்வாயோ ரைங்கரக் கற்பகமே.

1. கைக்கிளை

காட்சி

1. சீர்கொண்ட வண்டு செறிகஞ்ச மாம்பல் சிலைகுவளை
ஏர்கொண்ட சண்பக மேய்ந்துறு போகம தேந்தியிள
நீர்கொண்டு காந்தண் மலர்ந்தொரு பைங்கொடி நின்றதென்னே
கார்கொண்ட கண்டர் கழுக்குன்ற மேவுமிக் காவகத்தே. (க)

ஐயம்

2. மண்ணோ மலரோ மலையோ வலையோ வலந்திகழும்
விண்ணோ வுமையொரு பாகம தாகி விளங்குதலாற்
பெண்ணோ வதல்லதோ ராணோ வெனச்சுரர் பேசரிதாம்
எண்ணோ னுறைகழுக் குன்றின் விளங்கு மிவரிடமே. (உ)

துணிவு

3. இமைத்து விழிநம தாவியுய் வித்தன விவ்வடிமண்
அமைத்துநங் கண்குளிர் வித்த வுலர்ந்த தருமலர்த்தார்
சமைத்த துடலின் முகிழ்ப்பணங் கல்லளித் தையனெஞ்சே
குமைத்து நம்மைத் தொலைக்கும் பிரான்கழுக் குன்றிடத்தே. (ங)

குறிப்பறிதல்

4. பாற்கடல் பண்டு விடமு மமுதும் பயந்ததென்றே
நூற்கடல் யாவு நுவன்றவல் லாலெதிர் நோக்கிலம்யாம்
நாற்கட னேர்மறை யம்மான் கழுக்குன்றி னண்ணுமிம்மான்
சேற்கட னீக்கின நோக்கநெஞ் சேதரி சித்தனமே. (ச)

2. இயற்கைப் புணர்ச்சி

இரந்து பின்னிற்றற்கு எண்ணல்

5. அளிகொண்ட கண்ணினர் தந்தனஞ் சென்றிரந் தாலருளும்
ஒளிகொண்டு நிற்பதொத் தெம்மான் கழுக்குன் றுறுமிவரும்
அளிகொண்ட கண்ணினர் தந்தனஞ் சென்றிரந் தாலருளும்
ஒளிகொண்டு நின்றனர் நெஞ்சே யிரந்தின்பத் தோன்றுதுமே. (க)

இதுவுமது

6. ஏங்கித் திகைத்துப் பதைத்துக் கலங்கி யிரங்கியிடர்
தாங்கிப் புலம்ப லொழிநெஞ் சேசகந் தான்மகிழ
வாங்கிச் சிலையெயி லட்டோன் கழுக்குன்றின் வாய்ந்தெழிலான்
ஓங்கித் திகழுமிம் மான்பா லிரந்தின்பத் தோன்றுதுமே. (உ)

இரந்து பின்னிலை நிற்றல்

7. கருவைத் தவிர்ப்போன் கழுக்குன்ற மேவுங் கனங்குழலீர்
புருவச் சிலையைக் குனித்துமைக் கண்ணம்பு போக்கிநெஞ்சம்
உருவச்செய் தொன்று மறியா தவரென வுற்றதென்னீர்
மருவச்செய் புண்ணினை மாற்று மருந்து வழங்குமினே. (ங)

முன்னிலையாக்கல்

8. பஞ்சின் மிதிக்கிற் பதைக்கு நுஞ் சீறடி பார்பொருந்தி
நெஞ்சின் மயக்கங்கொ ணேரிழை யார்கர நீர்பிடித்துக்
கொஞ்சி யுரைக்குங் குயிலென வாயங் குலாவலின்றி
வஞ்சியி னிற்பதென் னெம்மான் கழுக்குன்றின் வாய்முகிழ்த்தே.(ச)

வண்டோச்சி மருங்கணைதல்

9. அசைவற்ற பேரன்பர் சிந்தையு நான்மறை யந்தமுஞ்சேர்
திசைமுற்று மேத்தும் பிரான்கழுக் குன்றின்மின் சீர்க்குழல்வாய்
நசைபெற்ற வண்டினங் காள்புன் மதுவுண நாடியுற்றீர்
இசையுற்ற நீவிர் நடுநிலை குன்ற வியற்றனன்றே. (ரு)

மெய்தொட்டுப் பயிறல்

10. நாகமஞ் சாதெதிர் போதுரித் தோன்றனை நம்புமன்பர்
சோகமங் காரா தறுப்போன் கழுக்குன்றிற் றூய்மையிலே
ஆகமஞ் சார்தரு மோதி நிகழடி யார்நடுச்சேர்
தாகமஞ் சாயன்மின் னேயுடை யேற்கது தந்தனையே. (சா)

பொய் பாராட்டல்

11. ஒண்டிரை சேர்சடை யான்கழுக் குன்றிடை யொன்றியும்பர்
பெண்டிரை யாளு மெழிலுடை யீர்விண் பெயர்மதிநும்

வண்டிரை தேரு மலர்முக மொத்தொளி வாய்தற்கன்றே
தெண்டிரை தோய்ந்து சகம்வலம் வந்து திரிவதுவே. (எ)

இடம்பெற்றுத் தழாஅல்

12. பாகங்கொள் பெண்ணுடை யான்கழுக் குன்றிற் படர்விரக
தாகங்கொள் வேனுக்குச் செவ்வா யமுதினைத் தந்துகண்வாள்
வேகங்கொள் புண்ணின் முலைவேது கொண்டு மிகவுமொற்றிச்
சோகங்கொள் ளாதெனை யாளிடஞ் செல்வி சொலினிதுவே. (அ)

வழிபாடு மறுத்தல்

13. கோண்மலர் திங்கட் சடையான் கழுக்குன்றிற் கூரளிசேர்
வாண்மலர் வாய்ப்பசுந் தேனூறு தண்டலை வாய்ந்துபடர்
நாண்மல ரான்மா நறுந்தளி ராலொளிர் நன்மையினென்
நாண்மல ரான்மா நறுந்தளிர் காத்தரு ணற்கொடியே. (கூ)

இடையூறு கிளத்தல்

14. துப்பினைப் போன்றொளிர் செஞ்சடை நாப்பட் சுடர்மதியோ
டப்பினைத் தாங்கு பிரானெளி யேனறி யாமையிற்செய்
தப்பினைத் தீர்க்குஞ் சிவன்கழுக் குன்றொளிர் தாழ்குழலீர்
செப்பினைக் கைவிட்டுக் கண்கட்டு வித்தைசெய் சீர்மைநன்றே. (கo)

இதுவுமது

15. உக்கங்கை வாளி மனையெனு மாயோ னொருமலர்க்கோர்
சக்கங்கை யேந்தி யருச்சிப்பச் சக்கரந் தானருள்வோன்
இக்கங்கைக் கொண்டவள் பாகன் கழுக்குன்றி னேந்திழையீர்
அக்கங்கை யாடினர் சொற்கங் கையாடா வமைவுநன்றே. (கக)

நீடு நினைந்திரங்கல்

16. அடிமல ரும்பர்க் கரியான் கழுக்குன் றடிமலரும்
கொடியிடை யாரிக் கொடியிடை யாருறக் கூடுமிந்நாள்
நெடிது நிலாவிற் கடிதினி லாவி நிலைப்பதின்றிப்
படிவரு மீது கடிவரு மேதப் படிவருமே. (கஉ)

மறுத்தெதிர் கோடல்

17. மலரு மதுவு மெனவென்று மென்னிடை வாய்ந்தகலா
தலரு மொருபெரு நாணன்ப ராசை யளிநுகரப்
புலரு மெனிற்செய்வ தென்னோ தவமுன் புரிந்திலஞ்சீர்
பலரு முணர்விற் புகழ்வோன் கழுக்குன்றின் பான்மனமே. (கங)

வறிதுநகை தோற்றல்

18. சுரவிந்த மிந்திரன் மாலயன் காணருந் தூய்மலர்த்தாள்
கரவிந்த வெய்யேன் முடிக்க ணருள்வோன் கழுக்குன்றின்வாய்
உரவிந்த மாமுனி யென்னவெங் காம மொட்டுக்கவொளிர்
அரவிந்த மொன்றுசெவ் வாம்பல் சிறுகற் பரும்பினளே. (கச)

முறுவற்குறிப்புணர்தல்

19. பாம்பணி யாக வணிந்தெனை யான்சொல் பனுவல்கொள்வோன்
வாம்பரி மாமறை யான்கழுக் குன்றிடை வாய்ந்தபசுங்
காம்பன தோளுடைக் காரிகை யார்முகக் கஞ்சத்தின்வாய்
ஆம்ப னிலாவரும் பாம்பனி லாநமை யாளுநெஞ்சே. (கரு)

முயங்குதலுறுத்தல்

20. சங்கந் தரளந் தரத்தண் டுளிமழை தந்தெனவென்
அங்கம் புளகம் பெறத்திண் புயத்தறி யாரவிடைச்
சிங்கந் துளங்குறு கொங்கை மதகயஞ் சேர்த்ததிம்மான்
துங்கன் கழுக்குன்றி னற்புதந் தண்மலர் சூழ்பொழிற்கே. (கசா)

புணர்ச்சியின் மகிழ்தல்

21. கற்பக மேவுமிப் பெண்ணேடிங் கார்சுவர்க் கங்கலந்திந்
நற்பகன் மாதவத் தாற்பர மெய்து நலனிகத்தே
முற்பகர் வேத முடியான் கழுக்குன்றின் மொய்பொழில்வாய்
அற்பக முற்றநெஞ் சேயடைந் தேமென் னரிதெண்ணினே. (கஎ)

புகழ்தல்

22. மின்னாரும் வேணி விமலன் கழுக்குன்றின் மெல்லிசையால்
தென்னதென் னவென்று தேனுண் டளிமுரல் செவ்வல்லிகாள்
பன்னாளு நீர்நின்றோர் தாளிற் றவநீர் பயின்றிடினும்
என்னுவ திப்பொன் மணிவாய் நிகர்ப்பதெக் காலுமின்றே. (கஅ)

ஏற்புற வணிதல்

23. காதுக்கும் பூண்முலைச் சூதுக்கு நல்லெழில் காட்டுகரப்
போதுக்குங் காஞ்சனத் தாதுக்கு நேர்மெய்க்கும் புல்லிடைக்கும்
வாதுக்கு மங்கையோ டாடி கழுக்குன்றின் மானனையாய்
ஏதுக்கி யாது பொருந்துமவ் வாறணிந் தேன்றெரிந்தே. (ககூ)

3. வன்புறை

அணிந்துழி நாணிய நுணர்ந்து தெளிவித்தல்

24. என்னுவி யாயென் னுளத்தொளி யாயென் விழிமணியாய்த்
துன்னு வுலகருள் பெண்ணினல் லாளொடுந் தோய்ந்தபெம்மான்

மன்னு வளர்கமுக் குன்றமன் னுயுன் மதிநிகர்பொன்
அன்னுரை யொப்ப வணிந்தேனிந் நாண்மிக வஞ்சலையே. (க)

பெருநயப்புரைத்தல்

25. கதலி யிரண்டோர் தருவிணை யாவிரு கஞ்சமலர்
விதமுறு மம்புய மோர்பூக மீது மிளிர்வதுண்டோ
நிதமிமை யோர்புக ழெம்மான் கழுக்குன்ற நீள்பொழில்வாய்
இதமுற வாழுஞ் சுரும்பினங் காளின் றிசைமின்களே. (உ)

தெய்வத்திறம் பேசல்

26. பந்தார் முலையுமை பங்கன் கழுக்குன்றின் பால்வளர்வோன்
மந்தா கினியை முடிநின்று நீக்கியிவ் வாரிதிவாய்
நந்தாது கூட்டிய தொப்பவிம் மாமண நாம்புணரச்
சிந்தாது கூட்டும் விதிவலி தையமென் சேயிழையே. (ஙா)

பிரியேனென்றல்

27. பசியால் வருந்து மவன்கைப் படின்விண் பயிலமுதம்
புசியா தகற்றுவ துண்டோமெய் யன்பு புணர்ந்துநெஞ்சம்
கசியா விறைஞ்சு மவர்க்கே யருள்வோன் கழுக்குன்றின்வாய்
ஓசியா மனந்தளர் வெய்தன்மின் னேபிரிந் துய்கிலனே. (ச)

பிரிந்து வருகென்றல்

28.தந்தோடு வான்செல் பறவைகொள் வோன்கரந் தானுறல்போற்
கொந்தோடு தோய்குழ லங்ககன் றிங்குறக் கூடுவல்யான்
பந்தோடு மம்மனை பண்ணையி லொன்றிப் பயில்கநதி
இந்தோடு சேர்சடை யான்கழுக் குன்றினிரும்பொழிற்கே. (ரு)

இடமணித்தென்றல்

29. குளமலி கண்ணுடை யான்கழுக் குன்றுறை கோமளமே
அளமரு நெஞ்சிடை யைய முறேலெம் மகன்பதிவாய்க்
களமர்கள் பாடு மருதநும் மூர்க்கள பந்துயில
உளமகிழ் வாற்சொலுந் தாலாட்டை யொக்குமி துண்மையதே.(சா)

4. தெளிவு

30. கஞ்சத் திலைசெறி நீரென வுள்ளங் கலங்குமென்பால்
நெஞ்சத் தருள்கொடு தேற்றி யகன்றங்கு நிற்பர்கொல்லோ
அஞ்சத் தயற்கரி யான்கழுக் குன்றி னளிபெடைவாய்
எஞ்சப் பசிவிரைந் தூட்ட மகிழ்நம் மிறையவரே. (க)

5. பிரிவுழி மகிழ்ச்சி

செல்லுங் கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லல்

31. தாரார் குழல்வண்டு கைவண்டொடார்ப்பத் தனப்பொறையால்
சோரா விடையிறு மென்றொங்கு நூபுரஞ் சூழ்ந்திரங்கச்
சீரா ரடிதவப் பாரார மென்மெலச் செல்லுநெஞ்சே
ஏரார் மதிச்சடை யான்கழுக் குன்றினம் மின்னுயிரே. (க)

பாகனொடு சொல்லல்

32. தணிவொடும் பண்ணை முன்பார்த்தெம்மைப்பார்த்துப்பின்சாயல்
பிணிமுகங் கொண்டு பிணிமுக மோடப் பிடிநடைக்காய்ப் [கண்டு
பணிவுடன் போதர வெம்மான் கழுக்குன்றின் பால்வலவா
அணிசிலம் பார்ப்பவோர் பைங்கொடி செல்வ தறிகுவையே. (உ)

6. பிரிவுழிக் கலங்கல்

ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ வென்றல்

33. அணங்கினர் கூட்டஞ் சசியடைந் தாங்கிவ் வணங்குசென்று
வணங்கின ராகிய வாயத்துண் மேவன் மதிக்கினெஞ்சே
பணங்கிளர் பாம்பணி வோன்கழுக் குன்றினம் பான்மருவும்
மணங்கிளந் தோதிடின் மெய்யன்று பொய்யன்று மாயமிதே. (க)

வாயில்பெற்று உய்தல்

34. எவ்வாறு நம்முயிர் நம்மிடை யெய்துமென் றேங்கிநைவேற்
கிவ்வாறு நீயுய்தி யென்றுநெஞ் சேயின் றிசைத்தனவால்
வெவ்வாறு செல்பவர் காணூர் கழுக்குன்றின் மின்குறிப்போர்ந்
தவ்வாறு செல்பவண் மென்முக நோக்கு மலர்விழியே. (உ)

பண்பு பாராட்டல்

35. அலையொன்று வேணி யரன்கழுக் குன்றமை வார்முலைநேர்
மலையென் றுரைக்கின் மலைவாங் கதிர்செய் வதனமதிக்
கலையென் றுரைக்கிற் கலைவா மனமிந்தக் காரிகையார்
நிலையொன்று மங்க நிகரொன்று மில்லையிந் நீணிலத்தே. (ங)

பயந்தோர்ப் பழிச்சல்

36. இந்திரன் சுந்தரி யென்னநற் போகத் தியைந்துநிதி
மந்திரந் தோறு நிறைத்துத் தனதன் வழுத்தவெய்யோன்
சந்திரன் காலமுற் றெம்மான் கழுக்குன்றிற் றுன்றழைக
பந்திரண் டாலணைத் தெற்புரந் தாரைப் பயந்தவரே. (ச)

7. இடந்தலைப்பாடு

கண்படை பெருது கங்குல் நோதல்

37. காரணங் காண்கில னென்செய்வன் முன்னேன் கழுக்குன்றி [னேர்
ஆரணங் காவி யகங்குளிர்ப் பெய்த வணைத்தகலச்
சீரணங் கண்டுட னுள்ளம் வெதும்பித் திகழ்துயிலற்
றாரணங் கிப்பனி நீர்பெய்தும் யாமத்து மோய்ந்திலதே. (ரு)

7. இடந்தலைப்பாடு

தந்த தெய்வம் தருமெனச் சேறல்

38. வானுரு மாமுகின் மண்ணூர் பயிர்வளர் வான்மழையைத்
தானூர நல்கலொத் தீசன் கழுக்குன்றிற் ருழ்குழலை
யானூர வின்பமுன் கூட்டிய தெய்வமின் றேகினுமத்
தேனூர் மலர்ப்பொழில் வாய்வரக் கூட்டிடுஞ் செல்கநெஞ்சே. (க)

முந்துறக் காண்டல்

39. கங்குலிற் றிங்கட் கதிருண் சகோரமக் கங்குலொழி
வங்குறிற் சிங்கி யிருந்தங் குறிற்பொங்கு மாறின்பநான்
உங்குற வென்னுயி ரிங்குற வங்குநின் றுங்குவந்து
தங்குறும் பைங்கொடி துங்கன்கழுக்குன்றிற் றண்பொழிற்கே.(உ)

முயங்கல்

40. ஒருத்தியோ ரைவர்க் குவப்புறச் செய்தமை யொத்தளியேன்
அருத்திய தோர்ந்தைம் புலனுங் களிக்கவென் னுவியன்னுள்
பொருத்திய வின்ப முளத்தடங் காது புகலவற்ரே
திருத்தி யெனைப்பணி கொள்வோன் கழுக்குன்றிற் சேர்பொழிற்கே. (ந)

புகழ்தல்

41. கூவிக் கழற்பணி யெற்கருள் வோர்கழுக் குன்றர்பங்கார்
கர்விக் கருங்கண் முகமதி நேர்கரக் கஞ்சமன்றி
மேவிக் குளத்துண் மலர்ந்துலர் வார்கஞ்ச மென்னனையென்
ஆவிக்கு ளாவியன் னூர்முலை நேரென் றறைவதின்றே. (ச)

உடன்புணராயத்து உய்த்தல்

42. காதாரு நாகக் குழையினன் பேரன்பர் காதன்மனத்
தாதார மாகி வளர்வோன் கழுக்குன்றி லாயமுன்னே
போதாரு மானனை யீரென துள்ளம் பொருந்துறும்பொற்
பாதார விந்தமண் மீதார மெல்லப் படருமினே. (ரு)

8. பாங்கற் கூட்டம்

தலைவன் பாங்கனைச் சார்தல்

43. என்னுளத் தாமரை தாமரைக் கேற்றமென் றெண்ணிவந்து
மன்னுளந் தார்வத் துறைந்தார் பிரிய வருதுயர்நோய்
உன்னுளத் தார்க்கெதிர் வார்கழுக் குன்றி னொளிருநண்பன்
தன்னுளத் தார வுரைக்கிலன் றேயின்பந் தானுறுமே. (க)

இதுவுமது

44. ஆர்ப்பானை நாகத்தை யாரானை யார்கழுக் குன்றமர்ந்தே
தீர்ப்பானை மும்மலந் தீரானை யன்புளந் தேருநெறிப்
பார்ப்பானை யென்னிடர் பாரானை நேர்ந்திப் பரிசுரைத்தாற்
சேர்ப்பானை வேனைமுன் சேரானை மத்தகச் சீருரமே. (உ)

தலைவனைப் பாங்கன் உற்றது வினுதல்

45. சித்திசங் கற்ப நிராகர ணத்திற் சிறந்துரையா
உத்திதந் தோதுநை யாயிகன் கண்டன மோர்ந்துரைத்தோ
சத்திநின் றேத்தக் கழுக்குன்றத் தீசர்செய் தாண்டவத்தைப்
பத்திகொண் டேபயின் றுய்கொன் மெலிவதென் பார்த்திபனே. (ங)

தலைவன் உற்ற துரைத்தல்

46. தந்தியோர் பாகனிற் பாம்பொரு மந்திரந் தன்னின்வலி
சிந்திய வாறெுப்பச் சம்பாதி யாமிரு சீர்முனிவர்
வந்திரு கங்கம தாய்த்தொழு வோனருள் வாய்ந்திடுவேன்
புந்தியோர் பேதை விழிவலைச் சிக்கிப் புலம்புறுமே. (ச)

கற்றறி பாங்கன் கழறல்

47. நிறைமதி யோர்கள்கொண் டாடு முணர்வுடை நீமிகவும்
குறைமதி யோரினேர் பேதை பொருட்டுக் குணங்களெல்லாம்
இறைமதி யாது தளர்ந்திடி னென்னைகொ லீர்ஞ்சடைமேற்
பிறைமதி சேர்கழுக் குன்ற ரருள்சேர் பெருந்தகையே. (ரு)

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்

48. தேசிக ளுகியோர் மாணிக்க வாசகர் தேறமும்மை
ஆசிக ளீந்தருள் செய்வோன் கழுக்குன் றமர்நண்பநீ
வாசிக ளின்றேர்ந் தெனக்குரைத் தாங்கன்றும் வாய்ந்துரைத்தாற்
கோசிக ளுரெழின் மேனகை மேன்மயல் கூர்வதின்றே. (சு)

பாங்கன் கிழவோற் பழித்தல்

49. சாமரை மான்மதந் தோய்கழுக் குன்றிற் றலைவரைப்பன்
ளுமரை யேத்தலர் போலெம் பிரானெரு நாரியிடை

...மலிர நூலிடைக் கட்டுண்டு நீயயர் வார்வதுதான்
தாமரை நூலிலோர் சீயமுற் றேதளர் தாழ்வொக்குமே. (எ)

கிழவோன் வேட்கைதாங்கற்கருமை சாற்றல்

50. எத்தகை யோரையுந் தேற்று மெனையுமோ ரின்னகையால்
இத்தகை வாடலை யென்னநந் தோசை யெதிர்வெதிரின்
அத்தகை வாடுவ னண்பா கழுக்குன் றமலனருட்
குத்தகை யாகக்கொள் ளாமையி னென்செய்வன் கூறுகவே. (அ)

பாங்கன் தன் மனத்தழுங்கல்

51. கற்றறி வார்தரு சேடனொ ரூமைதன் கட்டுரையால்
மற்றறி வார்வதொப் பாகுமென் சொல்லினிம் மன்னவன்றன்
முற்றறி வார்வதென் செய்கேன் கழுக்குன்றர் மூதருளைப்
பெற்றறி வார்ந்துமோர் பேதைக் கிளைக்கினென் பேசுவதே. (கூ)

பாங்கன் தலைவனோடழுங்கல்

52. காரியன் றுருங் களன்கழுக் குன்றினோர் கன்னிமயல்
நீரியன் றென்சொ லுலையிரும் பேய்புன னேரநின்றாய்
சூரியன் றட்பமுஞ் சந்திரன் வெப்பமுந் தோன்றுமுன்னர்ச்
சீரியன் றேங்கிடச் செய்பவர் யார்முறை தேர்மன்னனே. (கo)

பாங்கன் எவ்விடத் தெவ்வியற்றென்றல்

53. உனக்கு வருத்தமு முன்னைத் தெளிவிக்க வோதியெய்த்த
எனக்கு வருத்தமுந் தந்தமின் வாழ்வ தெழின்மலரோ
மனக்கு மகிழ்ச்சிசெய் வானுல கோவியல் வாய்ப்பெதுவோ
தனக்கு நிகழ்ச்சியி லான்கழுக் குன்றுளிர் தார்மன்னனே. (கக)

தலைவன் இவ்விடத்து இவ்வியற்றென்றல்

54. முத்தும் பவளமு மாம்பலிற் கொண்டோர் முளரியிடைத்
தத்துந் திகழிரு சேல்காட்டக் கும்பந் தழைகடகம்
அத்தம் பெறச்சிங்கங் காட்டு மியலிட மார்முடியார்
கத்தன் கழுக்குன் றிற் கார்ப்பொழி லாமந்தக் கார்க்குழற்கே.(கஉ)

பாங்கன் தலைவனைத் தேற்றல்

55. இளையவன் மூர்ச்சைக் கனுமான்சஞ் சீவினி யேய்ந்துவந்தாங்
குளையவன் காமத் தொடுங்குநின் மூர்ச்சை யொழியச்செங்கை
வளையவன் போற்றும் பிரான்கழுக் குன்றின் மருந்தைமலர்த்
தளையவன் மார்ப தெரிந்து கொணர்வன் றளரனெஞ்சே. (கந)

பாங்கன் குறிவழிச் சேறல்

56. மயிலைமென் சாயலி னுலடி தாழ வரச்செய்யுமோ
குயிலைமென் வாய்மொழி யாலுறச் சேய்மையிற் கூவுங்கொலோ
கயிலையின் மேவும் பிரான்கழுக் குன்றினெங் காவலனை
அயிலைமென் ேறாக்க மெனக்கொண்டு வாட்டுமவ் வாரணங்கே.

பாங்கன் தலைவியைக் காண்டல்

57. என்னுவி யாய விறையோ னிறைகொண் டிரங்குநெஞ்சில்
தன்னுவி நாட்டு மயிலிய லீதயல் சாருமின்னுர்
மன்னுவி யாயவ ளாடிட மீதவன் வார்த்தைமெய்பாற்
பொன்னுவி யாய பிரான்கழுக் குன்றப் புனத்தினெஞ்சே. (கரு)

பாங்கன் தலைவனை இகழ்ந்ததற்கிரங்கல்

58. திருவு மிறைஞ்சுமித் தேவியைக் கண்டுயிர் தேகமுற
ஒருவு மிறைவனை நாமிகழ்ந் தேமுன் னுரைத்தனெஞ்சே
மருவு மறிவின்மை யாலென் றுணர்ந்தனன் வாய்ந்தெனது
கருவு மகற்றும் பிரான்கழுக் குன்றிடைக் கண்டபின்னே. (கசு)

பாங்கன் தலைவனை வியத்தல்

59. கலியார் கருணைக் கடல்கழுக் குன்றினிக் கன்னிகண்ணும்
ஒலியார் மணிவே னுதிசென் றுருவவு மோங்குரஞ்சேர்
வலியா ரிணைக்கொங்கை மாமத யானை வருத்தவுஞ்சீர்
சலியா திருத்தலி னுலெம் பிரானுரந் தான்வரையே. (கஎ)

பாங்கன் தலைவியை வியத்தல்

60. ஆகத்தை யெம்பெரு மாட்டிக்குப் பாதி யளித்தெனக்கும்
பாகத்தை யீந்தருள் வோன்கழுக் குன்றினம் பார்த்திபன்மேல்
சோகத்தை யாற்று மசோகத்தை வேள்விடச் சூழ்விரக
தாகத்தை யீங்கிவள் செவ்வா யமுது தவிர்த்திடுமே. (கஅ)

பாங்கன் தலைவன்றனக்குத் தலைவிநிலை கூறல்

61. ஆர்த்தேன் மலர்ந்துமந் தாகினி வாணிய தாக்குமுடிச்
சீர்த்தேன் மொழியொரு பாகன் கழுக்குன்றிற் சேரெம்பிரான்
தார்த்தே னலம்பு குழலியை நீசொன்ன தண்புனத்தே
பார்த்தே னுனைவந்து பாரா தயாவுயிர் பான்மையொடே. (கசு)

தலைவன் சேறல்

62. புலரும் படியென் வினைதனை யீர்ந்தருள் போதன்விண்ணோர்
பலரும் புகழும் பரன்கழுக் குன்றொளிர் பைம்புனத்தே
மலருங் கனியு நறையு மரும்புமோர் வள்ளையுங்கொண்
டலருங் கொடிகண்ட துண்டே லதுவென தாருயிரே. (உ௦)

தலைவியைக் காண்டல்

63. தன்னொளி பூம்பொழி லெங்கும் விளங்கவென் றன்னையுருத்
துன்னொளி சேர்விழி பார்த்தயர் வாண்முகந் தோன்றுவியர்
வின்னொளி யோடென தாவி கருணையின் யாக்கையினோர்
மின்னொளிர் தேச விடங்கர் கழுக்குன் றின் மேவிடுமே. (உக)

கலவியின் மகிழ்தல்

64. ஐவா யினுஞ்சென்று மெய்யெங்குந் தித்தித்தென் னுவிதளிர்த்
துய்வாய் மகிழ்தரச் செவ்வாயி னீயெனக் கூட்டமுதைத்
தொய்வா யுததி சுரர்கடைந் துண்ணமு தொக்குமதோ
பைவா யரவணி வோர்கழுக் குன்றினென் பாற்றெய்வமே. (உஉ)

புகழ்தல்

65. விண்டொழுங் காற்றுணைப்பெண்ணினல் லாள்பங்கன் விண்டுநந்தி
கண்டொழுங் காவெய்தி யின்புறச் செய்வோன் கழுக்குன்றின்வாய்ப்
பண்டொழுங் காதன் மொழிநின் குழலெழில் பார்த்தலவோ
வண்டொழுங் காய்த்தண் டலைபுக் கொளித்தலர் வாய்த்ததுவே.()

தலைவன் தலைவியைப் பாங்கியொடு வருகெனப் பகர்தல்

66. அந்தங் கடந்து வளர்கழுக் குன்றத் தமலனருள்
பந்தந் தவிர்த்துயிர்க் கின்பஞ் செயக்கொளும் பான்மையெனக்
கந்தங் கமழ்குழ லீருயிர்ப் பாங்கிமுன் காணவென்முன்
வந்தங் களித்தன்பி னின்பந் தவிர்த்திரென் மையலையே. (உச)

தலைவன் தலைவியைப் பாங்கிற் கூட்டல்

67. அன்னக் குழாத்து ணளன்றாது போமன்ன மாகிமயில்
மன்னக் குழாத்துட் குகனூர் மயிலென வாய்ந்துபண்ணை
துன்னக் குழாத்துட னீசென்று கூடுக தோற்றுமன்பால்
உன்னக் குழாத்துள் வளர்வோன் கழுக்குன் றி னொண்ணுதலே. ()

9. பாங்கிமதியுடன்பாடு

நாற்றம்முதலிய ஏழானும் ஐயமுற்றோர்தல்

68. நாற்றஞ் செலவு பயிலொழுக் குண்டி நடைமறைப்புத்
தோற்றந் திரிந்திவள் வேருரு மேதுத் துணியகிலேன்
கூற்றங் குமைத்தொரு பாலற் கருள்கழுக் குன்றப்பிரான்
ஏற்றம் பொலியருள் ளுக்க முறுதவ ரென்னவின்றே. (க)

அவ்வகைதன்னால் ஐயந் தீர்தல்

69. கணந்தா னடியார் கணந்தான் கடியார் கழுக்குன்றின்வாய்க்
குணந்தா னுடையார் குணந்தா னடையார் குலவருளெவ்

வணந்தா னுறுமவ் வணந்தான் பெறுமெழில் வல்லிகுழல்
மணந்தா னிவட்கு மணந்தானுண் டென்று வகுத்திடுமே. (உ)

பிறைதொழுகென்றல்

70. நம்மாவி யாய்நம துள்ளம தாய்வளர் நம்பன்விண்ணோர்
தம்மாவி யாங்கழுக் குன்றப் பிரான்முடி சார்தலினல்
இம்மா விளந்தளிர் மேனி யுமைநுத லேய்தலினல்
எம்மாவி யாய வணங்கே தொழத்தகு மிப்பிறையே. (ங)

சுனையியந்துரைத்தல்

71. விழியாத வன்மதி தீயுடை யோனெனை வேண்டிவந்து
கழியாத வன்பருள் செய்வோன் கழுக்குன் றிற் கன்னிமுலை
அழியாத சந்து நனையா வுடையவி ழாக்குழன்மெய்
ஒழியாத வோவஞ் சுனைதந்த வாறிங் குவப்புடைத்தே. (ச)

சுனைநயந்துரைத்தல்

72. ஊற்று மணலென நெக்குநெக் கேங்கி யுருகுநர்க்குக்
கூற்று மயனுந் தொழவருள் வோன்கழுக் குன்றிடத்தே
வேற்று மணமு முலைதோள் பணைப்பும் வெயர்வுமிப்போ
தாற்று மெனினச் சுனையானு மாடுவ னரணங்கே. (ரு)

தகையணங்குறுத்தல்

73. எனக்கு மலரடிக் குற்றேவ றந்த விறைவிவந்த
உனக்கு நிகரென லாமவ ணட்டங்க ளுற்பலநின்
றனக்கு விழிகோ கனகமிப் போதுறுந் தான்கண்டெம்மான்
மனக்கு மகிழ்கழுக் குன்றணங் கேசெல்க வாழிடமே. (சா)

நடுங்க நாட்டம்

74. பொருப்பிற் சிலைசெய்து மாலம்பு பூட்டிப் புரமெரித்தோன்
விருப்பிற் றிகழ்கழுக் குன்றனை யாரொரு வேழமிரு
மருப்பிற் குருதி யுறக்குத்த வந்த வழிபிழைத்து
நெருப்பிற் சினத்தொரு வேலா லடும்வன் னிலைவியப்பே. (எ)

பெட்ட வாயில்பெற் றிரவு வலியுறுத்தல்

75. கருவைத் தவிர்க்குங் கழுக்குன்றத் தீசர்க் கலப்பநிற்போர்
குருவைத் தொடர்ந்தென வென்னெஞ்சின் மேவிய கோமளமார்
உருவைப் புணர்ந்தின்ப மெய்த வவளுயி ரொத்திலங்கும்
திருவைப் பெரிது மிரப்பவிப் போதங்குச் செல்லுவனே. (அ)

ஊர் வினதல்

76. இறையும் பெருகன் புடையா ருளத்தி னிகப்பதின்றி
நிறையும் பரம்பொரு ளல்வர்க்குங் கல்லா னிழலினுண்மை

அன்றியும் பிரானெனை யாள்வோன் கழுக்குன் றமருநமக்
குறையும் பதியெது சொல்லீர்மெல் லீர்மல ரோதியரே. (கூ)

பெயர் வினுதல்

77. நசைபெற வாழ்த்து மெனக்கெண் ணி யாங்கருணல்கியெட்டுத்
திசைபெற வோங்கரு ளோன்கழுக் குன்றிற் றிருவன்னநீர்
பசைபெற வாழ்பதி யீதென் றுரைக்கிற் பழியதுண்டேல்
இசைபெற வாய்ந்தநும் பேரா யினுஞ்சற் றிசைமின்களே. (கo)

கெடுதியுள் வேழம் வினுதல்

78. ஆட்டத் துயிர்க்கைந் தொழில்செய்து முத்தியு மாற்றுபிரான்
ஈட்டத் தமரர் புகழ்கழுக் குன்றத் தியையுநம்மால்
நாட்டக் கணையிற் குருதிமெய் யெங்கு நனைப்பநுங்கள்
கூட்டத் தயர்ச்சி கொடுவந்த தோவொரு குஞ்சரமே. (கக)

மரை வினுதல்

79. தெருமரை நீத்தெனை யாள்கழுக் குன்றரைச் சேர்பணித்தார்
மருமரை யன்பி னினைப்பார்மெய் வீட்டின்பம் வாய்ப்பவருள்
கருமரை வாழ்த்துமென் கைக்கணை பட்டுநுங் கண்ணெதிரே
ஒருமரை போந்ததுண் டோவுரை யீர்மல ரோதியரே. (கஉ)

வன்றி வினுதல்

80. பருகோட்டு நல்வழக் கோரன்ப னேடு பகரும்பிரான்
ஒருகோட்டு வெண்பிறை யான்கழுக் குன்றத் துறுபுனத்தே
குருகோட்டு மென்சொற் குயிலனை யீரென் கொடுங்கணைபட்
டிருகோட்டு வன்றியொன் றெய்திய தோசொலு வீரெனக்கே. (கங)

மானெடு மனம் வினுதல்

81. அனமோ டிரந்துண் டகமா சறுத்துன்னு மன்பர்க்கன்பன்
வனமோடி யார்கழுக் குன்றினென் னம்புறு மான்றொடர்ந்து
மனமோடி வந்தது நும்மிடை போல மறுகியனத்
தினமோ டிகலு நடையீர்கண் டாலின் றிசைமின்களே. (கச)

ஒழிந்தவற்றுள் வழி வினுதல்

82. தேச விடங்கன் வலம்புரிச் சங்குறு தீர்த்தத்தன்பாற்
பாச மொடுங்கப் படிவோர்க் கருள்செய் பரமன்மல
நாச மடைந்ததண் டீசர்க்கு வீட்டின்ப நல்கருள்சோ
மீச னிடங்கழுக் குன்றின் வழியின் றிசைமின்களே. (கரு)

மொழியாமை வினுதல்

83. கவளக் கடாக்களி றட்ட பிரான்கழுக் குன்றினிடை
துவளத் துணைமுலை கொண்டீ ரெனக்கொன்றுஞ் சொல்லகிலீர்
பவளத்தின் முத்தம் பழுத்தமை காணப் படுமெனவோ
தவளத் திருநகை யோடுற வாட றவிர்ந்ததுவே. (கசு)

இடை வினுதல்

84. பரசு விளங்குங் கரத்தான்பொற் கோயிலின் பாலொலிசேர்
முரசு முழங்கும் பிரானகழுக் குன்றின் முதிர்புனத்தே
அரசு நடுநிலை யெய்தா விடிற்றன மார்வதின்ருற்
கரசுக மென்மொழி யீரிடை யுண்டது காட்டுமினே. (கஎ)

யாரேயிவர் மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்

85. கரத்திற் றழைகண்ணி யேந்துவ ராண்மைமுன் கட்டுரைப்பர்
உரத்திற் படர்ந்துநும் பேரு ரிடையெமக் கோதுமென்பர்
திரத்திற் புகலா திருப்பதென் னென்பர்செந் தீநகைமுப்
புரத்திற் செறிப்போர் கழுக்குன்றின் யாரிவர் பூண்டதென்னே.

எண்ணம் தெளிதல்

86. ஊரோது நுந்திருப் பேரோதுஞ் சென்னெறி யோதுமிடைச்
சீரோது மென்றிவர் போகா தலைந்து திரிந்தவெல்லாம்
காரோது மென்குழற் பாகன் கழுக்குன்றிற் கார்ப்புனந்தோய்
வாரோது மென்முலை தன்பொருட் டாகு மதித்திடினே. (கக)

இருவருமுள்வழி ஒருமையிற் போதல்

87. ஒன்றே யிரண்டுரு வாகிய தென்ன வுமையொருபால்
நின்றே விளங்கும் பிரான்கழுக் குன்றினிந் நீள்புனத்தே
இன்றே மணிபொன் னெனவொன் றிருவரு மேய்ந்ததனுற்
சென்றே நமதிட ரெல்லாஞ் சொலநல்ல செவ்வியிதே. (உ௦)

கையுறை யேந்திநின் றவ்வகை வினுதல்

88. தலையொன்று வேணிப் பிரான்கழுக் குன்றிடைச் சார்ந்துயிர்
நிலையொன்று பூங்குழ லேரிழை யீரின நீங்கியென்கைச் [மெய்ந்
சிலையொன்று வெங்கணை பட்டுளஞ் சோர்ந்து திகைத்தயர்ந்தோர்
கலையொன்று வந்தது கண்டதுண் டோநுங்கள் கார்ப்புனத்தே. ()

பாங்கி எதிர்மொழி கொடுத்தல்

89. அம்மானை யெய்ததொ ரம்மானைக் கேட்டறி வாமதன்றி
அம்மானை யாடுது மம்மானை வென்முலை யாரொடுநீர்
அம்மானை யெய்தது மம்மானை யாங்கண் டறிந்ததுமின்
றம்மானை யூர்தரு மம்மானை யார்கழு கார்மலைக்கே. (உஉ)

பாங்கி இறைவனை நகுதல்

90. உடைகொண்ட தோலினர் மூவிலை வேலின ரோங்குமலர்ப்
படைகொண்ட பாவையோர் பால்கொண்டு வேற்கரப் பாலகனை
இடைகொண்ட வர்கழுக் குன்றி னிவர்கலை யெய்தவிவர்
தொடைகொண்ட மாவிலை யார்புகழ் வாரெழிற் றூநகையே. ()

பாங்கி மதியின் அவரவர் மனக்கருத்து உணர்தல்

91. வேட்ட மிவர்க்கிவ ளம்மானின் வேட்டமெய் யன்றிவர்பால்
நாட்ட மிவட்குப்பின் னாட்டமின் றுனுத னாட்டத்தினுல்
வீட்ட மதனை யிரதிவந் தேத்திட மீட்டருள்வோன்
கோட்ட மகல்கழுக் குன்றத் திவர்விதிக் கொள்கையரே. (உச)

10. பாங்கியிற் கூட்டம்

தலைவன் உட்கோள் சாற்றல்

92. கொய்கோ மலர்நுங் குழற்கடி நீவிக் குழன்முடிக்கோ
செய்கோ பரண்மெய் திருத்திடு கோவணி சேர்த்துடுக்கோ
மெய்கோ மளமின்னேர் பாகன் கழுக்குன்றின் மென்னகையீர்
உய்கோ தகல்பணி யீதென வீந்தெனை யோம்புமினே. (க)

பாங்கி குலமுறை கிளத்தல்

93. மேலாய வேந்தர் குலத்தினிர் நீவிர் மிளிர்தினையி
னுலாய வுண்டி யிழிகுலத் தாளெம் மணங்குபசுப்
பாலாய தோமத்துக் காகு மெருமையின் பாலொன்றுமோ
மாலாய வன்பணி யெம்மான் கழுக்குன்றின் மன்னவரே. (உ)

தலைவன் தலைவிதன்னை உயர்த்தல்

94. செழியர்தங் காதன் மருகா யரசுசெய் தேவர்நுதல்
விழியர்தஞ் சீர்க்கழுக் குன்றின் மகிழின் விளங்குமுந்திச்
சுழியர்தந் தோற்றந் தெளியா துரைத்ததென் றூநகையாய்
கழியர்தங் கன்னியன் றேவுல கீன்றருள் காரிகையே. (ந)

பாங்கி அறியாள் போன்று வினுதல்

95. பந்தாடி நற்சுனை வந்தாடிப் பாவை பருகமுலை
தந்தாடி யூச லுவந்தாடி மாமலர்ச் சார்மணமு
கந்தாடி மன்றி னயந்தாடி சேர்கழு கார்மலைதோய்
இந்தாடி யென்பா ரினத்தெவண் மன்னநின் னெண்ணினளே. (ச)

இறையோன் இறைவிதன்மை இயம்பல்

96. விழியே யயின்முகை வெண்ணகை யேமுக மென்மலரே
மொழியே குயிலொண் முலையே மலையெனை மூதறிவோர்

வழியே நடக்க வருள்வோன் கழுக்குன்றின் மானனையாய்
பழியே யிடையுள தென்கை மயிலியற் பைந்தொடிக்கே. (ரு)

பாங்கி தலைவியருமை சாற்றல்

97. நற்றேவ ரானு மறியான் கழுக்குன்றி னங்கைபொற்றாள்
குற்றேவ லர்ற்றுநர் குற்றேவ லாற்றிடுங் கொள்கையுளேன்
உற்றேவ லாரி னுரைக்கப் படுவதொ ரூமைமுற்றக்
கற்றேவ லானைத் தெளிப்பதொப் பாம்புவி காவலனே. (சா)

தலைவன் தலைவி இன்றியமையாமை இயம்பல்

98. பயிர்க்கு மழைவெம் பசிக்கனம் பக்குவப் பட்டுணரும்
உயிர்க்குமெய்ஞ் ஞான குருவென வென்னுயிர்க் குன்னுயிர்நேர்
அயிர்க்கு மிடையினை யின்றி யமையா.தடற்புரத்தைச்
செயிர்க்கும் பிரான்கழுக் குன்றிடைக் கன்றிடைத் தேமொழியே.

பாங்கி நின்குறை நீயே சென்றுரையென்றல்

99. தாகத்தர் நீரும் பசியின ரன்னமுஞ் சார்வெயிலார்
தேகத்தர் நீழலுந் தாமே பெறுவரச் செய்கையின்மின்
ஆகத்தர் சேர்கழுக் குன்றி னுனக்கிட ராற்றுமல்குல்
நாகத்தர் முன்குறை நீயேசென் றியாவு நவிலுகவே. (அ)

பாங்கியைத் தலைவன் பழித்தல்

100. தழற்குப் புரமிரை யாக நகைக்குந் தலைவரருள்
நிழற்குப் புகுமன்பர் சேர்கழுக் குன்றி னிலவுபசுங்
குழற்குத் தெரித்தெனைக் கூட்டுவை யென்றுனைக் கூர்ந்திரந்தேன்
விழற்குப் புனலிரைத் தேனிக ரார்புவி மேலெனக்கே. (கூ)

பாங்கி பேதைமை ஊட்டல்

101. பணிதரு நன்மணி யூன்பெயு முப்புப் பகர்நுளையர்க்
கணிதரு பேதைமை கொண்டவெம் மானிம வான்றவத்தார்
மணிதரு பாகத்தர் வாழ்கழுக் குன்றுளிர் மன்னமையற்
பிணிதரு வாட்ட நினக்குத் தவிர்க்கும் பெருமையளே. (க௦)

காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்

102. யானெங் கவளெங்கிவ் வாயவெள் ளத்தை யிகந்தெளியேன்
தானெங்கு நின்றன னங்குவந் தென்றுயர் தான்றவிர்த்த
வானெங்கு மேத்தும் பிரான்கழுக் குன்றுளிர் மானைமலர்த்
தேனெங்கு மார்குழ லாயறி யாளெனல் சிற்றறிவே. (கக)

பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்

103. ஒருகால் வழியிற் பொழிமலர்த் தேனுண் ணொருவன்பின்பு
வருகா லுனைற்குத் துணைவேண்டு மோவந்த மானலந்தான்
கருகால முண்ட பிரான்கழுக் குன்றொளிர் காவலவோர்
இருகாலுண் டாங்கினி யெக்காலு நீயுண்க வின்புறவே. (கஉ)

தன்னிலை தலைவன் சாற்றல்

104. தந்துந் தரளமுங் கோக்கு மவரின்றித் தாம்பொருந்தா
பந்துங் களபமும் போன்முலை யீருங்கள் பாவையென்பால்
வந்துங் கிடர்விர கந்தெறக் கூடும் வகையருளாற்
சிந்தும் புனற்சடை யான்கழுக் குன்றென்றித் தேற்றுமினே. (கங)

பாங்கி உலகியல் உரைத்தல்

105. ஒருநாண் முதிர்பனி வெற்பினெம் மன்னைத ணெண்களத்தில்
திருநா ணணிந்த கழுக்குன்றத் தீசரிற் சேர்சகத்தோர்
மருநாண் மலர்க்குழ லார்நகை யெய்திடின் வார்புனல்பெய்
தருநா ணணிந்துபின் னின்புற னீயறி வாயண்ணலே. (கச)

தலைமகன் மறுத்தல்

106. வெள்ளத் தலையிற் சுழியீர்ப்ப வன்கரை மேல்வருவோர்க்
குள்ளத் துயரமொ டோவிட நீந்தி யுறுகரையின்
மெள்ளப் புணர்கென லொப்பாநும் மானை விதிமணத்தாற்
கொள்ளத் தகுமெனக் கூறல் பிரான்கழுக் குன்றணங்கே. (கரு)

பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்

107. வன்கட் கடுஞ்சொல்லர் கானவ ரிங்கு வருவர்கண்டால்
நின்கட் பழிக்கொன்று மஞ்சார் கதிர்குட நீள்கடல்வா
யின்கட் புகுந்ததி யாம்போது நீயிருந் தென்பிறையைப்
புன்கட் பணியோ டணிவார் கழுக்குன்றிற் பூபதியே. (கசா)

கையுறை புகழ்தல்

108. அளிகொண்டு காதள வார்விழிப் பெண்ணினல் லாளொருபால்
களிகொண்டு வாழ்பர னன்பர்தந் நெஞ்சிற் கவின்றுதளிர்த்
தொளிகொண்டு நுந்திரு மேனியி னென்னையு முய்விக்குமால்
குளிர்கொண்டு வாய்கழுக் குன்றத்தி னென்கைக்கொழுந்தழையே.

தையல் மறுத்தல்

109. தீதுற்ற நெஞ்சினர் காணுர் கழுக்குன்றிற் சேருநின்கைப்
போதுற்ற பூந்தழை யெம்பெரு மாட்டி புனைதல்கண்டால்
ஈதுற்ற தெவ்வண மென்றயிர்ப் பார்நம ரென்னையரும்
கோதுற்ற வுள்ளத் தெனைமுனி வார்நனி கொற்றவனே. (கஅ)

ஆற்ரு நெஞ்சினேடு அவன் புலத்தல்

110. கைப்போது கொண்ட தளிர்வாட வுள்ளங் கருகிமிக
எப்போதும் வாடக் கருணைக் கடற்படிந் தின்பவன்பூர்
முப்போது மேத்தும் பிரான்கழுக் குன்றினிம் மொய்குழலார்
இப்போது கொண்ட கொடுமைக்கென் னுங்கொலெனின்னுயிரே.

பாங்கி ஆற்றுவித்து அகற்றல்

111. என்னீர் மயல்கொள்வ தெம்பெரு மாட்டியை யானிறைஞ்சி
நுந்நீர்மை யாவு முவன்றருள் கொண்டபி னுங்கையுறை
அன்னீர் மிடற்றிறை யார்கழுக் குன்றத்தி னூர்ந்துகொள்வேன்
முந்நீர் கதிரெழ வெய்துதிர் நும்மிட முன்னியின்றே. (உ௦)

இரந்து குறைபெருது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல்

112. முப்பெண்ணை முத்தொழில் செய்ய வருள்செய் முதன்மதிமு
கப்பெண்ணையாறெனவேணியிற்கொள்வோன் கழுக்குன்றின்வாய்
இப்பெண்ணை யேற்றங் கொளப்பெறி னம்மை யிடருறுத்தும்
அப்பெண்ணை யேற்றங் கொளப்பெற லாமென் றறிநெஞ்சே.

பாங்கிக்கு உலகின்மேல் வைத்து உரைத்தல்

113. பெண்பாலை வேட்டவர் நீறென் பெருக்குப் பெருமடலூர்
ஒண்பாலை யேய்ந்தென வன்னோர் கழுக்குன் றுறையுமெழிற்
பெண்பாலை வேட்டவர் நீறென் பெருக்குப் பெருமடலூர்
ஒண்பாலை யேய்வ ரிதுநீயுந் தேர்குவை யொள்ளிழையே. (உஉ)

அதனைத் தன்மேல் வைத்துச் சாற்றல்

114. கடலூர்ந்த நஞ்சுண் டுலகளித் தோர்கழுக் குன்றிடைநின்
உடலூர்ந்த வாவியொப் பாள்பொருட் டென்பெருக் கொள்ளியநீ
றடலூர்ந்த மெய்க்கொண்டு கைக்கொண்டதோர்பட மார்ந்திடயான்
மடலூர்ந்து நாளை வருவது திண்ண மதிநுதலே. (உ௩)

பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்

115. ஒருமலர் நாப்பட் பலமலர் தீட்டலு முண்டுகொலத்
திருமலர் வாய்மதுவூற மணம்வரத் தீட்டுவையோ
வருமலர் மேலயன் காணூர் கழுக்குன்றின் வாழுமன்ன
தருமல ரன்றி நடுத்தெரி யாயென்கொல் சாற்றியதே. (உச)

தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்

116. கொடுவின்மை சூழ்பொருப் பாகக்கொள் வோன்கழுக் குன்றின்
வடுவின்மை சேருறுப் பியாவுமவ் வாறு வரைந்தெழுதிக் [மின்னே
கடுவின்மை யார்கண்ணி யென்மய லோர்ந்திரங் காமையினந்
நடுவின்மை யாருந் தெளிதரத் தீட்டில னுனடுவே. (உ௫)

பாங்கி அருளியல் கிளத்தல்

117. மண்ணை வளர்க்குங் கழுக்குன்றின் மேவும் வரதருயர்
விண்ணை யளிப்பவர்க் கன்பிலர் போல விகங்கமொடு
கண்ணை முகிழ்ப்பில் சிறுபார்ப்பு முட்டையுங் கட்டழித்துப்
பெண்ணை யழிப்பது மன்று கருணையின் பெற்றியன்றே. (உசு)

கொண்டு நிலை கூறல்

118. முன்னுண் மலைகுழைத் தாங்கென் மனமு முதிர்குழைவு
மன்று விளங்க வருள்வோன் கழுக்குன்றின் மன்னவபோய்
என்று ருயிர்க்குன் குறைசென் றிசைப்ப னிசைந்திலளேற்
பின்று மடலினை யூர்தரு மார்வம் பெருக்குவையே. (உஎ)

தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற்கு உணர்த்தல்

119. நஞ்சு மமுதுங் கடல்விழித் தோன்றில நற்றுவர்வாய்க்
கொஞ்சு மொழிகள் குறிப்பொன்றுங் காட்டில கூழையொன்று
நெஞ்சு ளரும்பில கொங்கையிப் பேதைக்கென் னீயயர்வாய்
பிஞ்சு மதியணி வோன்கழுக் குன்றிற் பெருந்தகையே. (உஅ)

தலைவன் தலைவி வருத்தியவண்ணம் உரைத்தல்

120. சிங்கக் குருளை மதகரி மத்தகஞ் சேரு மந்நாள்
அங்கைத் தலத்திற் பிளந்தாங்குன் றுருயி ரன்னபொன்னுள்
துங்கக் கருமை விழிவேலென் னெஞ்சந் தொளைத்ததொரு
பங்கைப் பிராட்டிக் கருள்வோன் கழுக்குன்றின் பாலனமே. (உகூ)

பாங்கி தலைவி செவ்வியருமை செப்பல்

121. பயிற்றுள் கிளிக்குரை பாலையு மூட்டிலள் பாவையைக்கண்
துயிற்றுள் கழங்கம் மனையுந்தொ டாளின்சொற் றாயவமு
தயிற்று ணமையர னுர்கழுக் குன்றி னவிருமுல்லை
எயிற்றுள் குறிப்பிது வென்றுண ரேனெம் மிறையவனே. (௩௦)

தலைவன் செவ்வியெளிமை செப்பல்

122. சகங்களி கூர வருமடி யாரெதிர் சார்ந்துநெஞ்சு
முகங்களி கூர வருள்வோன் கழுக்குன்றின் மொய்குழலாய்
சுகங்களி கூர்மொழிக் கென்குறை நீசென்று சொல்லியக்கால்
அகங்களி கூர வுனையெதிர்ந் தின்சொ லறைந்திடுமே. (௩௧)

பாங்கி என்னை மறைப்பின் எளிதென நகுதல்

123. மாமணி யாடகந் தாமிருந் தாலுமம் மாமணிபொன்
தாமணி வாரின்றி யொன்று வுனக்குமத் தாமரைவாழ்
தூமணி மேகலை யாட்கு மெனையன்றித் தோய்வெளிதால்
ஆமணி செஞ்சடை யான்கழுக் குன்றி னமர்மன்னனே. (௩௨)

அந்நகை பொருது அவன் புலம்பல்

124. வெள்ளத் தலையிற் சுழியீர்ப் பவனோர் மிதவைகைவந்
துள்ளத் தயர்வரப் பற்ற வதுகுப் புறலுமலை
தள்ளப் பதைப்பவற் கொப்பாயி னேன்புல்லர் தம்மனத்திற்
கள்ளத் தவன்கழுக் குன்றணங் குன்னகை கண்டபின்னே. (௩௩)

பாங்கி தலைவனைத் தேற்றல்

125. வாவியிற் றோன்று மலர்பல வேனும் வனசத்தின்மேற்
றாவியிற் றோன்று மனமுறைந் தாங்கெங்க டோகைநல்லாள்
காவியிற் றோன்றும் விழியார் பலருளென் கண்ணகலாள்
ஆவியிற் றோன்றும் பிரான்கழுக் குன்றண்ண லஞ்சலையே. (௩௪)

பாங்கி கையுறை ஏற்றல்

126. மின்னா ரிடைபங்கன் சேர்கழுக் குன்றினென் மெய்த்தவத்தால்
என்னாவி யாய்வரு மின்பொருட்டா னெஞ்சி னைந்தயரப்
பன்னா ளலைந்து வருந்தினை யாங்கள் படர்புனத்தே
மன்னா விரங்கலை யீந்தருள் கையுறை வாங்குவனே. (௩௫)

கிழவோன் ஆற்றல்

127. என்னுயி ருய்ந்ததென் சுற்றமு முய்ந்த தெனையளித்தார்
மன்னுயி ருய்ந்த வெனையாண் டருளு மதிநுதலாள்
தன்னுயி ருய்ந்ததெம் மான்கழுக் குன்றினித் தாழ்குழலாள்
இன்னுயி ருள்ள மகிழ்வோடென் கையுறை யேற்றவின்றே. (௩௬)

இறைவன் தனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கு அவன்குறை உணர்த்தல்

128. ஊச னிலாதங்கொ டிங்குழன் றென்ன வுழல்வரொன்றும்
பேச கிலார்பித்துக் கொண்டவர் போலப் பிறங்குதழை
தேச நிலாவக் கொணர்ந்துபல் காலென்முன் சேர்வரென்னோ
ஈச னுலாவு கழுக்குன் றனையவ ரெண்ணமதே. (௩௭)

இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்

129. உலக மளிக்கு மளக்கும்வன் பார மொழிக்குமகக்
கலக மகற்றவோர் பெண்ணாகும் பொன்னனைக் காயமிடல்
இலக வலகம்பத் தொன்றுமின் னேயிமை யோர்முகந்தோய்
திலகங் கழுக்குன்றி னெம்மான்பொன் மேருச் சிலையினம்பே. (௩௮)

இதுவுமது

130. மேவணி பாம்பெனக் கொள்வதல் லாலன்பர் மெல்லியசொற்
பாவணி வோன்கழுக் குன்றிற் றபோதனர் பாங்குறலாற்
காவணி யார்புல் லருந்த றகாதெனக் கண்டகலிவ்
வாவணி யாடியோ ரானிய தின்றிவை காசியென்னே. (௩௯)

பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்

131. என்னை மறைப்பதென் னுன்மே லவாவினை யேய்ந்தொருமான்
தன்னை யிபத்தை வினுவிமு னெய்தினர் தாமிதுபோழ்
தன்னை மனுட்டி யெனவொரு பேதையை யார்பெருமான்
மின்னை நிகர்க்குஞ் சடையான் கழுக்குன் றின் மேவினரே. (௩௰)

பாங்கியைத் தலைவி மறைத்தல்

132. குலமறி வாயென் குணமறி வாய்நம கோத்திரத்தின்
நலமறி வாய்நிழல் போலக லாதெனை நண்ணிடுநீ
புலமறி வாய்தழை கைக்கொடு வந்தார் பொருட்டுமின்னே
சலமறி வார்சடை யார்கழுக் குன்றினென் சாற்றுவதே. (௩௧)

பாங்கி என்னை மறைப்பது என்னெனத் தழாஅல்

133. மணத்தை மறைக்கு மலரி னொளியை மறைக்கும்பொன்னிற்
குணத்தை மறைக்கவொண் ணுதமின் னேநின் குரைகழல்சார்
கணத்தை மறைத்தெனக் கியாவையு மோதல் கரந்ததென்றன்
வணத்தை மறைக்குந் தெரியான் கழுக்குன் றின் வார்புனத்தே. ()

பாங்கி கையுறை புகழ்தல்

134. யான்றேற்று நாண்முத லித்தழை கண்டதின் றெந்தவமே
தான்றேற்று மாறுளிர் தார்க்குழ னீயுந் தரித்ததின்றால்
வான்றேற்று சீர்த்தி யிறைகொணர்ந் தானன்பு வாய்ந்தணிவாய்
தேன்றேற்று சொல்லியோர் பாகன் கழுக்குன்றிற் றேமொழியே.

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்

135. மையாரும் வேல்விழி மானொரு கைம்மான் மலர்ச்சுனைவாய்க்
கையாரு நீர்பிடிக் கூட்டிப் புணர்ந்திக் கணிநிழற்சார்
மெய்யார வின்புறல் கண்டெனைப் பார்த்து மிகவயர்வார்
பொய்யாரை மேவ கிலார்கழுக் குன்றிற் புரவலரே. (௩௩)

தோழி மறுத்தற்கருமை மாட்டல்

136. என்வாய் சலிக்க வுரைத்தது கோடி யெனையிரந்தோன்
தன்வாய் சலிக்க வுரைத்தது கோடிவெண் டாமரைவாழ்
மின்வாய் சலிக்கப் புகழ்வோன் கழுக்குன்றின் மென்னகையாய்
நின்வாய் சலிக்கப் புகலா தருள்செய்த னீதியதே. (௩௫)

தோழி தலைமகன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்

137. பனையே நமக்குயி ரீயுமென் பாரைம் படைகொள்கரும்
பனையே யடாநல்ல காலமென் பாரிப் படிக்கனையப்

பணையே நிகர்கழுக் குன்றரி னீறென்பு பண்பிற்கொண்டொப்
பணையேது மில்லையென் றேதிரி வோமென்பர் பைங்கொடியே(சசு)

தோழி தலைவியை முனிதல்

138. அறியாதி யான்புகல் சொற்குற்ற நீபொறுப் பாயுன்மனம்
குறியாது சொற்றன னின்னுயி ரன்னபைங் கோதைமின்னார்
நெறியாது கூறின ரவ்வாறு போதிவன் னெஞ்சருளம்
செறியாது நிற்கும் பிரான்கழுக் குன்றுளிர் சேயிழையே. (சஎ)

தலைவி பாங்கியை முனிதல்

139. என்குற்றஞ் செய்தனை யென்குற்ற நீத்தரு ளென்றுரைத்தாய்
நின்குற்றந் தானிது வன்றே லுரையுன் னெறிப்படியே
நன்குற்ற மைந்த வெனைத்தீங்கு சொல்வதெ ஞனிலத்தோர்
புன்குற்றந் தீர்த்தருள் செய்வோன் கழுக்குன்றிற் பொற்கொடியே.

தலைவி பாங்கி கையுறை யேற்றல்

140. நாணணி யென்பர் மடவார்க்குப் பூந்தழை நானணியும்
நாணணி யாகவொர் மன்னர் பொருட்டெனை நன்கிரந்திந்
நாணணி யோதில் விலக்குவ தோசுரர் நங்கையர்கள்
நாணணி யோங்கநஞ் சுண்டோன் கழுக்குன்றி னன்னுதலே. (சகூ)

இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல்

141. பொழிநீர் மலர்கொடு பூசிப் பவர்க்கருள் பூத்தவர்தம்
பழிநீ ரகற்றும் பிரான்கழுக் குன்றினுன் பைந்தழைதான்
விழிநீ ரொழித்து முகச்சோர்வு நீக்கிப்பொன் மெய்தளிர்ப்ப
மொழிநீர தாக்கி நகைநில வாக்கிற்றெம் மொய்குழற்கே. (ருo)

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல்

142. மந்திர மாய்மணி யாய்மருந் தாயெனை வாய்பவநோய்
தந்திர மாகத் தவிர்ப்போன் கழுக்குன்றிற் றூர்மன்னனே
இந்திர நீல மணிப்பா சறைக்கட லேய்மதிபோற்
சந்திர காந்த மணிப்பாறை யாம்பகல் சாரிடமே. (ருக)

குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல்

143. பதமலை யார்முடி மாலயன் காணப் படாதவெம்மான்
நிதமலை யாளொடும் வாழுங் கழுக்குன்றி னேரிழையாய்
மதமலை யாசையி னெண்பிடி தேடி மறுகுபல
விதமலை யாநிற்கு நோக்குதுஞ் செல்கவிம் மென்புனத்தே. (ருஉ)

குறியிடத்து உய்த்து நீங்கல்

144. இடைக்குடை சிங்க முலைக்குடை யானை யிணைவிழிசேர்
நடைக்குடை மான்பிடி யோடுதல் பாரய னண்ணலின்
தொடைக்குடை மென்மலர் கொய்திக் கணத்திங்குத் தோன்றுவலேம்
படைக்குடை யான்பணி வோன்கழுக் குன்றொளிர் பானன்மொழியே.

இறையோன் குறியிடத்து எதிர்ப்படுதல்

145. நடையா லுனது திருமேனி வாட நடுங்குறுநுண்
ணிடையா லெனதுளம் வாட வெழுந்தனை யிவ்வருள்வேள்
படையா லதிருயிர் காப்பதற் கோவன்பர் பாற்படர்மால்
விடையா லுலகளிப் போன்கழுக் குன்றொளிர் மெல்லியலே. (ருச)

புணர்ச்சியின் மகிழ்தல்

146. பாலார் கடலு மமுது நுகர்ந்திடு பண்ணவரும்
சேலார் கருங்கண் கனிவாயு மூறிய தீம்புனலும்
மாலா ரெளியனு மாகவிந் நாள்வந்து வாய்த்ததுதான்
நீலார் களத்திக் கழுக்குன்றின் வாழ்பர னீளருளே. (ருரு)

புகழ்தல்

147. சங்கத்திற் கீரனை வென்றோன் கழுக்குன்றிற் றாழ்ந்தவிடை
சிங்கத்திற் கொக்கு மயின்முக நேரெனச் சேர்கமலம்
பங்கத்திற் கண்ணீ ரரும்பிமுட் டாளெங்கும் பாயநடுங்
கங்கத்திற் கண்ட வனந்தோறும் புக்கலை வார்ந்ததுவே. (ருசா)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்

148. தூயகன் மாமணி யாற்செறி யாரந் துலங்குநடு
நாயக மாமணி போலுன தாய நடுவுறைவாய்
தீயக லாநெஞ்சர் பாற்செறி யாது திருக்கழுக்குன்
றேயக லாநிதி வேணியெம் மானரு ளென்னுமின்னே. (ருஎ)

பாங்கி மெல்லியற் சார்ந்து கையுறை காட்டல்

149. மெல்லிய னின்கை வருந்தவிப் போதும் விரைத்தளிரும்
வல்லியல் கொங்கையென் மன்னுயி ரேகொய்து வாடுவதென்
நல்லியன் றென்றளிர் பைம்போ தினியன நான்கொணர்ந்தேன்
அல்லியல் கண்ட னமர்கழுக் குன்றத் தணிந்தருளே. (ருஅ)

பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டல்

150. போது நறுமென் றளிரு மினிதினிப் போதணிந்தேன்
வாது கனங்குழை யோடுசெய் வான்சென் மதர்விழியாய்
கோது தவிர்த்தவர் போற்றும் பிரான்கழுக் குன்றின்மெல்லத்
தாது மலர்மெல் லடிபெயர்த் தாயத்திற் சார்ந்தருளே. (ருகூ)

பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல்

151. நினக்கே தெரியுமெம் பாவை பொருட்டிவ ணீயலைந்த
தெனக்கே தெரியும் புணர்த்த வுபாயமிந் நன்றியினென்
மனக்கே களிப்பவம் மாதைநின் னுவியின் வாய்ந்தளிப்பாய்
தனக்கே நிகர்பிற ரில்லான் கழுக்குன்றிற் றூர்மன்னனே. (கூo)

விருந்து விலக்கல்

152. புல்லா னமைந்தவெஞ் சீறூர்க் குரம்பையிற் போந்தருளாற்
பல்லா றமைந்த வுணவுபைந் தேன்மரைப் பால்சவரி
வில்லா ரிராமர்க் களித்தென யாந்தர மேவியுண்டு
செல்லா யெழினகர்க் கெம்மான் கழுக்குன்றிற் சீர்மன்னனே.(கூக)

விருந்திறை விரும்பல்

153. அகமல ரன்புசெவ் வாய்வழிந் தாங்கமு தாமொழியால்
முகமலர் கொண்டுரைத் தீரத னுலென் முகமலர்க்குத்
தகமலர்வொன்றிற்றும் மிற்புகுந் துண்டெல்லி சார்ந்தகல்வேன்
சுகமலர் வாய்மொழி பங்கன் கழுக்குன்றிற் றேரைகயுரே. (கூஉ)

11. ஒருசார் பகற்குறி

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டு இரங்கல்

154. மாலையை யன்றளித் தென்னுவி காப்ப மதித்தவர்புன்
மாலையை யின்றளித் தென்னுவி நீப்ப மதித்தனரால்
மாலையை யன்புறு மெய்யன் கழுக்குன்றின் மானனையாய்
மாலையை யோவுற விவ்வுடல் செய்தவன் வாழியவே. (க)

பாங்கி புலம்பல்

155. அன்றி லரற்றக் குவளைகண் ணீர்மல்க வாதவன்மெய்
கன்றி யொளிப்பக் கடல்வாய்மெய் வாட்டங் கமலமுறத்
துன்றியிச் செக்கர் வடவைவந் தாற்பரன் றேன்றுகழுக்
குன்றி னணைந்தோர்ப் பிரியுமெம் மானுய்யுங் கொள்கையின்றே.()

இதுவுமது

156. முந்நீர் சுவற்றும் வடவை யெழுந்துவிண் மொய்த்ததெனப்
புன்னீர் தருசெக்க ரெய்தக் கதிர்கடல் புக்கதனுல்
என்னீர் மலர்க்குழ லெவ்வாறுய் வாளன்ப ரெய்திலர்சீர்
மன்னீர் மதிச்சடை யான்கழுக் குன்றினிம் மாலையினே. (ங)

தலைவன் நீடத் தலைவி வருந்தல்

157. அருள்பெற்ற வர்பகை யுண்டேனுங் காட்டல ரன்பருறுர்
மருள்பெற்ற வென்றுயர் கண்டுமொண் சேவன் மணந்துதுயின்

றிருளீபெற்ற கண்டர் கழுக்குன் றி னென்னை யிகந்தவர்பால்
தெருள்பெற்ற வோதிமஞ் சென்றுரை யாதது சிரிதன்றே. (௪)

தலைவியைப் பாங்கி கழறல்

158. கூட்டம் பிரிவின்ப துன்பங் கருவிடைக் கூட்டுமன்றெண்
ணூட்டம் பெறுமயன் செய்தலி னுலன்பர் நண்ணுகின்றூர்
தேட்டங் கொளுமவர்க் காப்போன் கழுக்குன் றிற் சேயிழையாய்
வாட்டம் படமன மாழ்கனின் கற்பிற்கு மாண்பதன்றே. (௫)

தலைவி முன்னிலைப்புறமொழி மொழிதல்

159. தாய்கொண்ட வன்பி னடியார்கண் மேலன்பு சார்பரனென்
காய்கொண்ட நெஞ்சுங் கனியாக்கு மீசன் கழுக்குன் றின்வாய்
நோய்கொண்ட மாந்தர்க்கந் நோய்தீர் மருந்து நுவல்வதன் றி
வாய்கொண்ட மட்டுங் கழறி னதற்கு மருந்ததன்றே. (௬)

தலைவி பாங்கியொடு பகர்தல்

160. முடியா ரொருபெண் கொடியார் கழுக்குன் றின் முன்னவர்சீர்
அடியார் புணர்வும் பிரிவுஞ்செ யின்பமு மல்லலும்போற்
பிடியார் நடையாய் நமதன்பர் சேர்வும் பிரிவுமின்பும்
மிடியார் துயருந் தருமவர் வந்தில ரென்செய்வனே. (௭)

தலைவியைப் பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்

161. வானினஞ் சேர் தத் தான்கழுக் குன் றின்மன் னூரெனநும்
கோனினஞ் சேரல னென் றங்கு மிங்குங் குறுகி யெய்ப்பாய்
மானினஞ் சேர்ந்து புனத்தை யழிப்பது மாற்றகிலாய்
தேனினஞ் சூழ்குழ லாயனை தேரினிற் சேர்த்திடுமே. (௮)

நீங்கற்கருமை தலைவி நினைந்து இரங்கல்

162. அரிந்தார் களமரி வாளின் மகவை யருங்கறியாப்
புரிந்தார் தமக்கருள் வோர்கழுக் குன் றிற்பொன் னேபுணர்ந்தார்ப்
பிரிந்தா லரிதுயிர் நிற்ற லணைப்பேன் பிரியினென்றே
தெரிந்தா ளலளென் மலர்மானம் மாலுரஞ் சேர்வதின்றே. (௯)

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்

163. வாடும் பயிர்கண்ட மள்ளர் முகிலொலி வாய்த்துமகிழ்
கூடுந் தகையென நின்னன்பர் தேர்மணி கூரொலிகேட்
டோடுந் துயரெனக் குய்ந்தனை நீயு முவந்துணர்வண்
டாடுங் குழல்பங்கன் ரேய்கழுக் குன் றினென் னுருயிரே. (௧௦)

சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்

164. உழையே யுனக்கிவ் வுழையே யிருக்கவு மொன்றுநன்றும்
குழையே யினிநீ குழையேலெம் மன்பர்கொய் யார்களங்கார்
மழையே யருளின் மழையேய் கழுக்குன்றின் மன்னரினிப்
பிழையே யலதன் பிழையேமைக் காணலர் பெய்புனத்தே. (கக)

இதுவுமது

165. மானே யினியிந்த மானே முதலிய மானலக்கண்
தானே துருதின்பந் தானே யுறப்புனந் தான்புரக்கும்
ஆனே றுகைத்த பிரானேர் கழுக்குன் றமைகணிசெந்
தேனே ரருந்துபைந் தேனே யலர்கொளுஞ் செய்கையினே. (கஉ)

முன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தல்

166. என்று ருயிரை மணந்தாரை யன்பரென் றேயிருந்தும்
அன்னார் சிறிதன் பிலரா யயர்ப்பினும் யாமயரேம்
மின்னார் சிறைமயில் காள்மற வாதவர் மேவிற்சொல்வீர்
பொன்னார் கடுக்கைப் பிரான்கழுக் குன்றுளிர் பூம்புனத்தே. ()

பாங்கி தலைவன்முன்னின்று இற்செறிப்பு அறிவுறுத்தல்

167. யாதுசெய் கேமிக் கணியார் மலர்க்கையி னேடவிழ்த்திப்
போதுகொய் வீரெனக் கொய்தா ரெமர்தினைப் பூங்குரலெம்
மாதுவெய் தாந்துய ரெம்மோடு மெய்தச்செல் வாங்குறிச்சி
ஈதுமெய்ம் மாதுடை யோன்கழுக் குன்றுறை யெம்மிறையே. (கச)

பாங்கி இற்செறிப்புணர்த்தி ஓம்படை சாற்றல்

168. பாபாரி புண்ணியப் போர்விடை யானரி பாம்புருக்கொள்
சாபாரி கந்தனைத் தந்தோனோர் சேயினைச் சாடுநமன்
கோபாரி சேர்கழுக் குன்றுடை யாய்விதி கூட்டியுனக்
கேபாரி யென்றலி னீபாரி யன்றே விறப்பளின்றே. (கரு)

தலைவன் தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தல்

169. என்னு மினிச்செய்வ தென்னுவி யன்னவ ரிப்புனத்தே
மன்னு தகன்றுதம் பூங்கோயின் மேவ வகுத்ததன்றி
ஒன்னாரி னென்னெதிர் நேர்கணி யாரை யொறுத்தெறிகோ
கொன்னார் மழுவொளிர் கைத்தலத் தான்கழுக் குன்றிடத்தே. (கசு)

12. பகற்குறி இடையீடு

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்

170. காக்கும் புனத்தினைக் காவா தொழியக் கடிவரெமர்
போக்கும் புகன்றன ளூர்க்கன்னை விட்டெமைப் போகலரால்

வாக்கும் படியருள் வாரா வெனக்கருள் வள்ளல்வைக
ஆக்குங் கழுக்குன்றத் தாகா தறமன்ன வாய்ந்தருளே. (க)

இறைவியைப் பாங்கி குறிவரல் விலக்கல்

171. வாட்டங்கொண் மாமையு மூட்டங்கொள் ளாமையும் வாய்ந்ததுயில்
நாட்டங்கொ டீர்வையுந் தேட்டங்கொள் பார்வையு நாடியன்னை
கூட்டங்கொள் விண்ணோர் புகழும் பிரான்கழுக் குன்றின்மின்னே
ஓட்டங்கொள் செம்மைகண் கொண்டாளிவ் வாடிடத் தொன்றலையே.

இறைமகள் ஆடிடம் நோக்கி அழுங்கல்

172. பிரியாமை யுண்டெனி னட்பாம் பயனின்னம் பெற்றுமகன்
றிரியாமை கண்டுமிப் பூம்புன நீங்க வெழுதல்சிங்கத்
துரியாமை கொண்ட கழுக்குன்றெம் மானன்ப ரோடுறவாய்த்
தெரியாமை யாலகல் பேதை யறிவினுஞ் சீருடைத்தே. (உ)

பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறல்

173. அன்பா லவர்வரல் பார்த்துமென் னையர்த மாணைக்கஞ்சி
வன்பால் வழிநோக் கியுமிங்கு மங்கு மனஞ்சுழலத்
துன்பால் விழிபொழி யாற்றின் மிதந்துசெல் சோர்வுகிள்ளாய்
மின்பா லவன்கழுக் குன்றன்பர் மேவின் விளம்புதியே. (ச)

பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல்

174. கிளிகாண் மடமயில் காள்புயல் கண்வளர் கேழ்பொழில்சேர்
அளிகா ணுமக்குப் பகையாம் பிடிநடை யாரகலக்
களிகாண் வனத்தின் மகிழ்வீர் பரமன் கழுக்குன்றின்வாய்
ஒளிகாண் மதிநுத லாரெனக் கோதிய தோதுமினே. (ரு)

வறுங்களம் நாடி மறுகல்

175. கஞ்சமு மந்தத் திருப்பாற் கடலையுங் கையிகந்தென்
னெஞ்சமு மிந்த விதனுங் குடிகொண்ட நேரிழையார்
அஞ்சமு மேனமுங் காணார் கழுக்குன் றமர்மயில்காள்
தஞ்சமு முய்வு மெனக்கெவ னென்றவண் சார்ந்தனரே. (சு)

வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்

176. மணத்தைக் குழற்கியல் பாமெனப் பாட்டருள் வல்லவனெண்
மணத்தைப் புவிக்கருள் வோன்கழுக் குன்றிது வாயினம்மான்
மணத்தைப் பெறக்கொடி யேனுறல் கற்பக மாமலர்தோய்
மணத்தைப் பறக்கறி யாவண் டவாவும் வகையொக்குமே. (எ)

13. இரவுக்குறி

இறையோன் இருட்குறி வேண்டல்

177. அண்டங்க ளெட்டங் கருள்வோன் கழுக்குன் றமலனெழிற்
கண்டங் கறுத்தெனை வல்லிரு ணீங்குமக் காரணனுட்
கொண்டங் களிக்குங் கருணையிற் பெய்ம்முகில் கூடுமிந்நாள்
வண்டங் கரற்றுங் குழல்யானும் மூர்க்கு வருவிருந்தே. (க)

பாங்கி நெறியினது அருமை கூறல்

178. கோட்டுக் களிற்றினம் வேட்டுக் களிப்பிற் குறுகுஞ்சிங்கம்
மோட்டுப் பசுப்பல கோட்டுத்திண் வேங்கையின் மூண்டுகுத்தும்
காட்டுக்குண் மேவலுன் வீட்டுக் ககல்புலி கட்செவிமுன்
ஆட்டுக் குவந்தவ ஞட்டுக் கழுக்குன் றமர்மன்னனே. (உ)

இறையோன் நெறியினது எளிமை கூறல்

179. கைக்கே சரியுண்டு மாதங்கந் தோற்றிடுங் கஞ்சுகிபோம்
மெய்க்கே சுவண வணியுள வாருண்ட மென்கழலார்ப்
பக்கே சரிகளை வெல்லுநுஞ் சீறா ரணுகலெளி
திக்கே நிகர்மொழி பங்கன் கழுக்குன் றினேந்திழையே. (ங)

பாங்கி அவன்நாட்டு அணியியல் வினுதல்

180. ஓரே துவுமின்றி யென்னையுங் காத்தரு ளுத்தமனென்
பாரே தலைக்கணி யீசன் கழுக்குன் றனையமன்ன
தாரே துடையே தணியேது பூச்சேது சார்வெதுதோய்
நீரே துரைத்தரு ணின்னுட் டருங்கற்பி னிற்பவர்க்கே. (ச)

கிழவோன் அவள்நாட்டு அணியியல் வினுதல்

181. என்னுட் டணியியல் கேட்டாவ தென்னை யெனதுநெஞ்சக்
கன்னுட் டருண்மலர்ப் பாதத்தி னன்கழுக் குன்றநல்லாய்
உன்னுட் டணங்கனை யாரணி சாந்த முடைநிழனீர்
மென்னுட் டிசைக்கவி யாவும் விடாது விளம்புதியே. (ரு)

அவற்குத் தன்நாட்டு அணியியல் பாங்கி சாற்றல்

182. ஆடல் சுனைவிளை யாட றினைக்கணி யார்நிழன்மேற்
சூடல்கல் லாரமெய்ம் மூடல்கல் லாரத் தொகுதளிர்கள்
பாடல் குறிஞ்சிமன் றூடல் பெறுஞ்சிவன் பாய்கழுக்குன்
றாட லியைகுழல் வாட லிடையுடை யோர்தமக்கே. (சு)

பாங்கி இறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தல்

183. செந்தேன் மொழிநின தன்பர் முகில்பெய் செறியிருள்வாய்
வந்தேன் றிரண்ட தனந்தரு வீரன்றி வாய்முத்தந்தான்

தந்தே விடுத்திர் பணமணி தானுந் தருதிரென்றே
இந்தேய் முடியவர் தோய்கழுக் குன்றி னிறுத்தனரே. (எ)

நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தல்

184. சிங்கஞ் சினந்து தொடர்தல்கண் டேங்கிச் செறிமதமா
தங்கங் கலங்கி வெருண்டோடும் புன்னெறி தன்னிலுமைக்
கங்கம் பகிர்ந்தரு ளீசன் கழுக்குன் றனையவன்பர்
வெங்கங் குலின்வரத் தானிசைத் தாட்கென் விளம்புவதே. (அ)

நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத்தல்

185. கெடுத்தார் கலியைப் படுத்தார் நலியைமுன் கிட்டியெனைத்
தடுத்தா ரருளின் மடுத்தார் கழுக்குன்றிற் சாருமன்பர்
அடுத்தார் சுனைநின் றெடுத்தா ருயிரையன் பானமக்குக்
கொடுத்தா ருனையும் விடுத்தார்மின் னேயென்னை கூறுவதே. (கூ)

நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்கு உரைத்தல்

186. என்னை யிரந்த நினக்குமுன் னின்னுரை யெண்ணியன்னுள்
தன்னை யிரந்த வெனக்கு மகிழ்வுறச் சார்ந்துநம்பி
பொன்னை யிரந்தவன் றீவோன் கழுக்குன்றம் போலுமன்னு
மின்னை யிரந்திவ் விருளருள் பெற்றிங்கு மேவினனே. (க०)

தலைமகனைப் பாங்கி குறியிடை நிறீஇத் தாய்துயில் அறிதல்

187. பாகை நிகர்க்கு மொழியுமை யாளொரு பாகனம்பிக்
கீகை பெறத்தரு வோன்கழுக் குன்றி னியைந்தமின்னே
சாகை யனைத்துந் துயில்கென நீவிடத் தானமைந்த
தோகை யடிக்கடி கூவுமென் னேயெழுந் தோகையொடே. (கக)

பாங்கி தலைவிக்குத் தலைவன் வரவறிவுறுத்தல்

188. தேடிப் பதமுடி மாலயன் பன்னாட் டிரிந்தலைந்து
கூடிப் புகழ்தலுந் தோற்றும் பிரான்கழுக் குன்றணங்கே
வாடித் தளர்ந்தொரு கைம்மாவவ் வேங்கை மரநிழல்வாய்
நேடிப் பிடியினைக் காணு தலம்வந்து நிற்கின்றதே. (கஉ)

பாங்கி தலைவியைக் குறியிடத்துக் கொண்டு சேறல்

189. கோதாம்பல் வாய்க்கட்டி மேய்க்கு முகுந்தன் குசேசயத்தோன்
மீதாம்பல் விண்ணோர் புகழ்வோன் கழுக்குன்றின் மெல்லியல்பார்
சேதாம்பல் பைஞ்சுனை வாயுற்று முல்லைவெண் சீர்முகைக்கு
வாதாம்பல் வாயையொவ் வாதுகண் ணீரின் வணங்கியதே. (கங)

பாங்கி தலைவியைக் குறியுய்த்து அகறல்

190. செந்தா மரைமயில் வெண்டா மரைக்குயில் சேர்ந்துவளர்
நந்தா வனஞ்செறி தண்கழுக் குன்றுளிர் நாதனடிப்

பைந்தா மரையிலன் பாரன மேயிந்தப் பைம்பொழில்வாய்ச்
சந்தா ரலர்தழை கொய்தணை வேன்கணங் தாழ்த்துநில்லே. (கச)

வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதல்

191. முகங்கண்டு கூறும் பலகண் டலர்தலை முன்னிமுந்நீர்
அகங்கண்ட கஞ்சத்தெ னெஞ்சக் கமல மதிகமென்றே
சகங்கண்ட வன்கழுக் குன்றணங் கேயிதழ்த் தண்கதவம்
சுகங்கண்ட வாய்ச்செவ் வொளிதள்ள விவ்விரு டோன்றியதே. ()

தலைவி ஆற்றினது அருமை நினைந்து இரங்கல்

192. கற்பத்திற் கொண்டூ வெனப்பரந் தானைக் கரநிகர்ப்பத்
தற்பத்திற் பெய்யு மிருடூங்கி யாமத்துத் தந்திமுதல்
அற்பத்திற் போகா விலங்குழ னீணெறி யார்வதுண்டோ
நற்பத்திக் கேயருள் வோர்கழுக் குன்றினென் னுயகமே. (கரு)

புரவலன் தேற்றல்

193. கைவே லலதுநின் கண்வே லிரண்டுங் கனமினன்றிப்
பொய்வே யுன திடை மின்னும் விலங்கிருள் போக்குமென்றே
நெய்வே யலங்கற் குழலாய் மனங்கொண்டு நின்னை மணந்
துய்வே னடைந்தன னம்மான் கழுக்குன்றி னுண்மகிழ்ந்தே. (கஎ)

புணர்தல்

194. சசிகொண்ட வர்முடி மேலுல குய்யத் தறுகண்விட
நிசிகொண்ட வர்கழுக் குன்றின்மை தோயுமிந் நீள்கருங்கண்
அசிகொண் டவருடன் யான்புணர்ந் தின்றுறு மானந்தம்வெம்
பசிகொண்ட வர்தொலை யாவனம் பெற்றுயும் பான்மையன்றே. ( )

புகழ்தல்

195. இக்கன் மொழிகுழன் மின்னுண் முகத்தி னெழில்கவர்ந்து
பக்கன் மலியிரு ளோட்டுநர் போல்விண் படர்மதியே
அக்கன்ம முற்றிய தாலேர் கழுக்குன் றரனடிதான்
தக்கன் மகத்திடைப் புக்குன் னுடலறச் சாடியதே. (கக)

இறைமகள் இறைவனைக் குறிவரல் விலக்கல்

196. எங்கும் புயல்புடை தூங்கிருள் யாமத் தெனைநினைந்து
தங்கும் பரிவினிற் சிங்கங் களிற்றிரை தான்கொடங்கும்
இங்குஞ் சுழல்வுறுஞ் சாரலி னீவர லேற்பதன்றுற்
பொங்குங் கருணைப் பிரான்கழுக் குன்றிற் புகழ்மன்னனே. (உ௦)

தலைவன் தலைவியை இல்வயின் விடுத்தல்

197. கன்றி வருந்த விரன்மலர் கொய்வதென் காதனல்லார்
ஒன்றி யிறைஞ்சத் துயில்பயில் சேக்கையின் புற்றுறைவாய்

மன்றி னடஞ்செய் திருவர்க்கு வீடருள் வள்ளல்கழுக்
குன்றி னிருந்தெனைக் காக்கவிங் கெய்துங் குலதெய்வமே. (உக)

இறைவியை எய்திப் பாங்கி கையுறை காட்டல்

198. தன்னே ரில்லாததோர் மின்னேகன் னேயங் தழைத்தமெய்யன்
கன்னேரென் னேரருண் முன்னேநின் மன்னேய் கழுக்குன்றின்வாய்
அன்னே யிரங்குவ தென்னேமின் னேரிடைக் காந்தழையும்
இன்னேபொன் னேர்மல ரன்னேர் குழற்குங்கொண் டெய்தினனே.

பாங்கி தலைவியை இற்கொண்டேகல்

199. கொய்தனை பூவுந் தழையும் விழிதுயில் கூர்ந்தெழுந்தால்
வைதனை சீறுந் திருமா ளிகைக்கு வருதியருள்
பெய்தனை யாமெனக் காக்கும் பிரான்மலர் பெய்தமதன்
மெய்தனை யட்டவ னேய்கழுக் குன்றன்ன மென்னகையே. (உரு)

பின்சென்று இறைவனைப் பாங்கி வரவு விலக்கல்

200. துயின்றாற் றுயிலு மெழுந்தா லெழுமன்னை தூங்கிருள்வாய்
அயின்றார்ப் பரித்திபந் தன்னைவெஞ் சீய மணைபுனத்தே
பயின்றாற் பழிவரு மென்றஞ்சும் பேதையெம் பால்வரனீ
குயின்றார் சடையுடை யெம்பெரு மான்கழுக் குன்றண்ணலே.(உச)

பெருமகன் மயங்கல்

201. கண்டோர் தமையென்றுங் கரணு வகைசெய் கருணைப்பிரான்
விண்டோர் வரும்பதத் தான்கழுக் குன்றொளிர் மெல்லியலாய்
கொண்டோர் விடாயது தீர்வான்கொண் டோர்புனல் கூர்மகிழ்வால்
உண்டோர் களத்தைப் பிடிப்பவ ரொக்குமிங் கோதுரையே.(உரு)

தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்

202. சுத்தம் பெறுமன்பர்க் கன்பன் கழுக்குன்றிற் றேன்றுமெம்மான்
சித்தந் திகைத்திடு நீயிர வெய்தற்குச் சேர்ந்தடிதாழ்
கொத்தங் கமர்கின் னகரேய்ந்த போதொளிர் கொம்புரைக்கும்
சத்தந் தெரியிற் கணித முறுமெனச் சாற்றினளே. (உசா)

திருமகட் புணர்ந்தவன் சேறல்

203. கரவொன்றை நீங்கும் பிரான்கழுக் குன்றினுங் கன்னியைத்தோய்
இரவொன்றை யஞ்சுவ னிவ்விர வஞ்சல னேய்ந்தவல்குல்
அரவொன்றை யஞ்சுவ லவ்வர வஞ்சல னுய்ந்தெனது
வரவொன்றை யேமகி ழெம்மூர்க் கெளிதுறல் வாணகையே. (உஎ)

14. இரவுக்குறி இடையீடு

இறைவிக்கு இருளை இறைவரவுணர்த்தல்

204. முத்தி னரும்பி மரகதப் பாசிலை மொய்த்தலர்பொற்
கொத்தி னரும்புன்னைச் சேக்கையி னன்னக் குழாங்கலந்து
கத்தி யுறுந்துயில் கொள்ளாத தென்னை கழுக்குன்றத்தே
பத்தி விளைந்தோர்க் கருள்வோ னருளன்ன பான்மொழியே. (க)

தான்குறி மருண்டமை தலைவி அவட்குணர்த்தல்

205. சீரி னிறையுந் திருக்கழுக் குன்றுறை செல்வர்பிறை
நீரின் மலியுஞ் சடையா ரருளன்ன நீதிமன்னர்
தேரின் மணியொலி யென்றுபுள் ளோசை செவிமடுத்துக்
காரின் முதிர்குழ லாய்சென்று மீண்டனன் கால்கணைந்தே. (உ)

பாங்கி தலைவன் தீங்கெடுத்து இயம்பல்

206. சங்கந் தவழ்ந்து வயிறுளைந் தீன்ற தரளநிரை
அங்கங் கொளிர்மட வார்நகை போல வவிர்துறைவர்
கங்கங் குலவுங் கிரியா னருளன்ன காரிகைநின்
அங்கந் தளர்ந்திட வையம் பெறுகுறி யாற்றினரே. (ங)

தலைவன் புலந்து போதல்

207. முடங்கல்வண் டாழையின் முட்டைப்ப வெவ்விருண் மொய்த்தகங்கு
லடங்கலுங் கானலின் வாய்ப்பதத் தால்வழி யாய்ந்திளைப்ப
மடங்கரும் புன்னெஞ்ச மேயெனை வாட்டினை வாழியநீ
விடங்களங் கொள்வோர் கழுக்குன் றனையவொர்மின்பொருட்டே.

புலர்ந்தபின் வறுங்களம் தலைவி கண்டிரங்கல்

208. நன்னுக மேல்வளர் வானள வானென் னவைக்கவிபோற்
பன்னுக மேலணி வான்கழுக் குன்றன்பர் பண்பாலவாய்ப்
புன்னுக மேகைதை யேநெய்த லேவளர் பூம்புனையே
என்னுக மேவவிங் குற்றூர்கொல் யான்வந் திகந்தபின்னே. (ரு)

தலைவி தன் துணைக்கு உரைத்தல்

209. சூரியன் சந்திரன் தெற்கு வடக்கிடைத் தோன்றினுமென்
ஆரியன் சொல்வழு வானது திண்ணமவ் வந்தகனைக்
கூரியன் மூவிலை வேலினட் டோன்கழுக் குன்றனையாய்
சீரிய னெஞ்சன் செயுங்குறி தப்புங்கொல் செப்புகவே. (சா)

தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்

210. ஆகத்தின் மேலுல கேழையு மீன்றரு ளன்னையுற்றோர்
மேகத்தின் மேலுறு தென்கழுக் குன்றன்ன வேந்தர்பொய்யார்

தாகத்தின் மேற்செய் குறியுந்தப் பாரிது தான்றெரிவாய்
நாகத்தின் மேற்கற் பகமாலை தோன்ற னறுநுதலே. (எ)

இறைவன்மேல் பாங்கி குறிபிழைப் பேற்றல்

211. கலையினைத் தேடித் திரிமா னெனவுனைக் காதலித்திம்
மலையினைச் சாரலைச் சூழ்ந்தன் முழுதெய்த்தும் வந்திலையாற்
சிலையினைக் குன்றெனக் கொண்டோன் கழுக்குன் றிற் றிண்புயநின்
நிலையினைச் சேர்நகர்க் கொன்றுதுஞ் செல்வழி நீபகரே. (அ)

இறைவிமேல் இறைவன் குறிபிழைப் பேற்றல்

212. அறந்தாலு மன்னு மடியார் கழுக்குன் றமலனன்பு
துறந்தாலு மவ்வர னன்றோரை வாழ்விக்கச் சூழ்கருணை
இறந்தாலு மென்னுயிர் காக்க வருமவ ளென்னைச்சற்று
மறந்தாலும் யான்மற வேன்கணைப் போதுநும் மாதினையே. (கூ)

அவள் குறிமருண்டமை அவள் அவற்கு இயம்பல்

213. கழிவாய்க்கும் பெண்ணைவன்கால்பொர லாலுதிர்காய்த் தொனிநின்
னுழிவாய்க்கும் பேரன் பினணின் குறியென வொன்றிப்பவச்
சுழிவாய்க்கு மென்னையுங் காப்போன் கழுக்குன்றிற் றேகையன்னுள்
விழிவாய்க்கு நீர்கொங்கை மூழ்கத் திரும்பினள் வேலண்ணலே. ()

அவன் மொழிக்கொடுமை சென்று அவன் அவட்கு இயம்பல்

214. முழுப்பாத கத்தனென் றெண்ணு தெனக்கருண் மோகனன்பர்
குழுப்பாத முற்றக் கருணைசெய் வோன்கழுக் குன்றனையாய்
விழுப்பா தவத்திடைத் தேடா விடமில்லை மென்றுயிலை
எழுப்பா தகன்றவன் போன்றகன் றுருன் னிறையவரே. (கக)

என்பிழைப்பன்றென்று இறைவி நோதல்

215. தேன்சென் றலர்ந்த மலர்மது வுண்ணுந் தெரியலொடும்
வான்சென் றிறைஞ்ச வருள்வோன் கழுக்குன்றின் மான்விழியாய்
கான்சென் றுதிருங் கனித்தொனி யாவுங் கவின்குறியாய்
நான்சென் றலைந்த தவரறி யாதநெ னற்றவமே. (கஉ)

தாய் துஞ்சாமை

216. செயிர்த்துப் புரமட் டவன்கழுக் குன்றுளிர் செல்லொலிபோல்
வயிர்த்துற் றொலியொடு தேரூர்ந்து மன்னர் வரவுமின்னே
உயிர்த்துக் கருவிப்பி மாண்டென நம்மை யுயிர்த்திறவா
தயிர்த்துத் துயின்றிலள் யாமத்து மன்னை யறைவதென்னே. (கங)

நாய் துஞ்சாமை

217. பேய்க்கூட்டம் பாடப் பிராட்டிகொண் டாடப் பெருந்திருக்கூத்
தாய்க்கூட்டம் வாடவென் முன்னுங் கழுக்குன் றகத்திற்செய்வோன்

வாய்க்கூட்ட நஞ்சருள் வாரியி ஞர்த்து மதிநுதலிந்
நாய்க்கூட்டந் துஞ்சில யாமத்துஞ் சொல்வதென் ஞயகற்கே. (கச)

ஊர் துஞ்சாமை

218. காயுங் கனியுங்கொண் டேயும் பெருந்தவர் காணரிதாய்
ஓயும் பெரும்பொருள் வாயுங் கழுக்குன் ருேளிருமின்னே
தாயுங் கடுங்குர ஞயுந் துயிலினுஞ் சாருமிவ்வூர்த்
தோயுந் தறுகணர் வாயும் விழியுமென் றுஞ்சிலவே. (கரு)

காவலர் கடுகல்

219. ஒப்பறை யோசையி லார்கழுக் குன்றி லொருவரன்பால்
தப்பறை யோசையி னண்பரெய் தாமையிற் ருழ்குழலாய்
எப்பறை யோசைக்கு மஞ்சேனைக் காவல ரெற்றுகுணில்
அப்பறை யோசையொத் தப்பறை யோசையச் சந்தருமே. (கசு)

நிலவு வெளிப்படுதல்

220. தண்ணில வொன்றுசெவ் வாய்த்தேன் மொழிபங்கர் சார்கழுக்குன்
றுண்ணில வென்றெனை யாளன்பர் தேர்மணி யோசைசெவி
நண்ணில தென்றுயர் தீரவொட் டாதலை நாப்பண் வெய்தாய்
வெண்ணில வென்று பெயர்கொடு நஞ்சம் வெளிப்பட்டதே. (கள)

கூகை குழறல்

221. என்னே யினிச்சொல்வ தென்னேய வன்ப ரிருளின்வந்து
முன்னே தனித்துநின் றென்னோர் வரவுன்னி முன்னிநிற்பக்
கன்னேரு நெஞ்சர்கண் முன்னே ருருன்கழுக் குன்றனையாய்
கொன்னே குழறுமிங் கெங்நேர மும்வன்கட் கூகைகளே. (கஅ)

கோழி குரற்காட்டல்

222. மாற்றுவன் றீதினை வன்கண்ண ரெய்தினு மாறிலருள்
ஆற்றுவன் ருழு மினிக்கழுக் குன்றையென் ருகமநூல்
சாற்றுவன் ருேலுடை யானன்பர் சார்வு தடுத்துமின்னே
கூற்றுவன் றாதெனக் கூவுமென் னேயிந்தக் கோழிகளே. (ககூ)

15. வரைவு வேட்கை

தலைவியைப் பாங்கி பருவரல் வினவல்

223. நின்னுல் வளர்க்கப் படுங்கிளி பாலுண்டு நின்னுரைபோல்
தன்னு லுரைக்கப் படாமைகண் டோவுன் றளர்நடைக்காய்ப்
பின்னுல் வருமப் பிடிக்கஞ்சி யோநெஞ்சம் பேதுறலென்
முன்னுல் வருக்கின் பருள்வோன் கழுக்குன்றின் மொய்குழலே. (க)

அருமறை செவிலி அறிந்தமை கூறல்

224. சுழியும் புனன்மதி தோய்சடை யானெந்தத் தொல்லுலகும்
அழியும் பொழுது மழியான் கழுக்குன்றி னன்பரின்சொல்
மொழியுந் தழையும் வடிவும் பெருதெழின் மொய்த்த கொங்கை
பொழியுங்கண் ணீர்தெரிந் தையமுற் றுளன்னை பொற்கொடியே.

தலைமகன் வருந்தொழிற்கு அருமை சாற்றல்

225. ஆய்துஞ் சினுங்குரை நாய்துஞ் சிடாபுரப் பாரொடிவ்வூர்
வாய்துஞ் சினுமம்பர் வாய்துஞ் சிடாதிந்து வாய்ந்தகரும்
பேய்துஞ்சி யாமத்துங் குக்குடங் கூகை பிதற்றித் துஞ்சா
வேய்துஞ்சு தோளி பிரான்கழுக் குன்றன்பர் மேவரிதே. (௩)

தலைமகனூர்க்குச் செல ஒருப்படுதல்

226. நிறைநீங்க விவ்வூர் நிலைநீங்க விந்நா ணிறுத்தியநம்
மறைநீங்க நெஞ்சின் மயனீங்கு மாறூர் மருந்தன்பிலார்
குறைநீங்கு மாநகர்க் கேகித் தெரிந்திங்குக் கூடுதுமெய்ம்
முறைநீங்க லாவரன் வாழ்கழுக் குன்றொளிர் மொய்குழலே. (௪)

பாங்கி தலைவனைப் பழித்தல்

227. நச்சி நயமுறக் கண்டோர்க் கலைகட னண்ணும்வெய்யோன்
உச்சி வரினறு மென்குழ லாய்வெப் புறுத்துதல்போல்
மெச்சி மகிழமுன் செய்தன்ப ரின்றிவ் விதம்விளைத்தால்
நொச்சி யணிகழுக் குன்றர் செயலென்று நோக்குதுமே. (௫)

பூங்கொடி இறையோன்தன்னை நேர்ந்து இயற்பட மொழிதல்

228. கருவாய்ந் துயிர்த்தது பார்த்துநின் றுக்குங் கயற்றுறைவர்
மருவார்ந்த வோதி மறப்பர் கொலோவென் வருத்தங்கண்டு
வெருவார்ந் துரையல் கழுக்குன்றத் தீசன்கை வேணியொளிர்
உருவார்ந்த தீநதி தட்பமும் வெப்பமு மொன்றிடுமே. (௬)

கனவு நலிபுரைத்தல்

229. வாயார முத்தங் கொடுத்தென் முதுகுதை வந்துமலர்ப்
பாயார வைத்தலர் வேய்ந்தாரங் கொங்கை பயில்வித்தின்ப
மேயார வுற்றனர் காணூர் விழித்தபின் மேலென்செய்கேன்
தீயார முற்றுகை யெம்மான் கழுக்குன்றிற் சேயிழையே. (௭)

கவினழிபு உரைத்தல்

230. புரிந்திடு குற்றமுண் டாங்கொலெ னன்பர்முன் போந்தணையார்
தெரிந்திடு குற்றம் பசலைக்கென் செய்தனன் சேர்ந்துமெய்யில்
விரிந்திடு பேரழ கெல்லாங் கவர்ந்தெங்கு மேவிற்றென்றுச்
சொரிந்திடு மன்பர்க் கருள்வோன் கழுக்குன்றிற் றாமொழியே. ()

தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்

231. இந்நா ளெனக்கினி தெய்திற் புகழுவர்க் கெய்திடுமின்
அன்னு யெனதா வியுமுய்யும் வானோ ரனைவருக்கும்
மன்னு மவர்கழுக் குன்றன்ன வன்பர்முன் வாய்ந்தெனது
பொன்னு ணுடனமெய் பொன்னனை தென்று புகல்பவரே. (கூ)

நின்குறை நீயே சென்றுரை என்றல்

232. பரியா தவருளஞ் சேரான் கழுக்குன்றிற் பார்த்திபர்மேற்
பிரியா தவன்பினிற் காணுது தீதையும் பெற்றியொன்றும்
தெரியர் தவரெனிற் சேர்ந்தோதல் வேண்டுந் தெரிந்துமளி
புரியா தவர்க்குப் புகன்றென் பயன்புகல் பூங்கொடியே. (௧௦)

தலைமகள் அலர் பார்த்துற்ற அச்சக்கிளவி

233. பொங்குங் கருணையி னுவிக டோறும் புணர்ந்துறைவோர்
தங்கும் பெருகரு ளன்ன கழுக்குன்றிற் சாரிறைநின்
எங்கும் பரந்த புகழினிந் நாண்மின்னுக் கெய்துமயல்
நுங்குங் கவர்ந்தல ராயெவ் விடத்தினு நொந்துகவே. (௧௧)

ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி

234. தேசங் கலந்து புகழ்கழுக் குன்றுெளிர் செல்வரடும்
பாசங் கலந்த விருளென வெங்கும் பயிலிருள்வாய்
வாசங் கலந்து புலிகரி சிங்கம் வழங்கதரின்
நேசங் கலந்தெம் வயினுறன் மன்னவ நீதியன்றே. (௧௨)

காமமிக்க கழிபடர் கிளவி

235. இனமேவு மன்பர் தொழுங்கழுக் குன்றத் திறைவரடி
தினமேவி வாழ்த்துமெம் மண்ண லுருமையிற் சேருமென்னேய்
அனமே யொளிர்பு ளினமே கனமே யலைவனமே
வனமே யினமே துரையீர் புரையீர் மனத்தினர்க்கே. (௧௩)

தன்னுட் கையாறெய்திடு கிளவி

236. கண்ணீர் பொழிகுவை காறடு மாறிக் கழியொழிவாய்
பெண்ணீர் மருவியொ ரேந்தலை யுட்கொண்டு பேதுறுவாய்
தெண்ணீர் முடிகொள் கழுக்குன்றத் தார்தொடை சேர்நெய்தலே
மண்ணீ டயர்வுகொள் ளென்போலுண் டோபிரி வாருனக்கே. ()

நெறி விலக்குவித்தல்

237. ஊரா ரலரி னொளிருமிவ் வோங்கலி னேங்குபுகழ்த்
தாரா ருறிஎலந் தாரார் தருந்துயர் சாருமென்றே
வாரார் முலையவர் வாரா துரைத்தியவ் வானவர்க்காய்க்
காரார் களங்கொள் பிரான்கழுக் குன்றன்ன காவலர்க்கே. (௧௫)

குறி விலக்குவித்தல்

238. ஏனற் புனமினங் காமினென் றார்க்கய லேவவன்னை
பானற் கருங்கட் டிருவகன் றுளென்று பான்மொழியாய்
கூனற் பிறையண்ணி செஞ்சடை யார்கழுக் குன்றமன்ன
மானப் பெருந்தகைக் கோதியிங் கெய்தா வகைபுரியே. (கரு)

வெறி விலக்குவித்தல்

239. நெறிகொன் றுறுதக்கன் சென்னி யரிந்தெச்ச நின்றவற்றோர்
மறிகொன் றதன்முடி யீவோன் கழுக்குன்றின் வாழுமனைக்
கறிகொன் றறியா திழைப்பாய்நம் மான்றொட ராண்டகையார்
வெறிகொன் றிடாதிவ் வெறிகொன்றெ னென்ன விளம்புமின்னே. ()

பிற விலக்குவித்தல்

240. எங்கா ளனைவந் தணைந்தாரந் நாண்முத லெப்பிறப்பும்
அன்னா ரெனது குலதெய்வம் யான்மற் றடிமையென்றெம்
மன்னா னவர்க்குச் சிலதூது வந்தெவன் வாய்ப்பதென்பாய்
முன்னா னவர்க்குமுன் னோன்கழுக் குன்றொளிர் மொய்குழலே.(கஅ)

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்

241. வெங்கட் டறுகண் மதவேழ நம்முயிர் வீட்டவரும்
அங்கட் சினவுகை வேலாற் பணிகொணம் மன்பர்வரை
விங்கட் குரவ ரெதிர்கொள்ள நீயிசைத் தெற்புரப்பாய்
திங்கட் சடையுடை யெம்மான் கழுக்குன்றிற் சேயிழையே. (கக)

16. வரைவு கடாதல்

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்

242. காலை யலர்ந்தசெந் தாமரை போன்று கவினுமுகம்
மாலை புலர்ந்த மலராய தென்னென வந்தவனைக்
காலை யுகந்த பிரான்கழுக் குன்றினென் னஞ்சுகத்தின்
பாலை முகந்ததிப் பூசையென் றேங்கினள் பைங்கொடியே. (க)

அலர் அறிவுறுத்தல்

243. கோடு கொடிநில நீர்வா யலரொளி கூர்மலரும்
நீடு முலகின்மின் னார்வா யலர்நின் னிறையளிகொண்
டாடு மிதுவோர் புதுமையன் றோவயன் மாலிருவர்
தேடு மொருவர் திருக்கழுக் குன்றன்ன சீர்மன்னனே. (உ)

தாய்அறிவுறுத்தல்

244. கொங்கைப் பசப்பு முடலின் விளர்ப்புங் கொளுமிளைப்பும்
நங்கைக் கயர்ச்சியுங் கண்டுகொண் டன்னையு நாடுளத்திற்

சங்கைக் கிடமுற் றுயிர்த்துச் செயிர்த்துச் சகிக்கலளோர்
மங்கைக் கிடங்கொடுப் போர்கழுக் குன்றன்ன மன்னவனே. (௩)

வெறி அச்சுறுத்தல்

245. பிள்ளை நகைகொளத் தந்தை யரிந்துடல் பெட்பெழுநற்
றள்ளை யமைதறி வேட்டோன் கழுக்குன்றிற் றையலெழில்
கொள்ளை கொளலுன் குறையென்ன மன்னகொள் ளாதெமன்னை
வெள்ளை யறிவுற வெள்ளை மறியற வேண்டினளே. (௪)

பிறர்வரைவு உணர்த்தல்

246. நன்னெறி செல்வோர்க் கருள்வோன் கழுக்குன்றி னம்பற்கன்ப
மின்னெறி பூண்முலை வேட்டுப்பல் வேந்தர் விரவுதலாற்
சென்னெறி வாரணந் தேடிவெஞ் சீயந் திரியும்பொல்லாப்
புன்னெறி செந்நெறி யாயதென் னேவுன் புணர்ப்புரையே. (௫)

வரைவெதிர்வு உணர்த்தல்

247. கதிகண்ட வன்பர்க் கருள்வோன் கழுக்குன்றிற் காவலவென்
துதிகண்டு நல்லருள் செய்யுமின் னுண்மணஞ் சூழ்ந்துவந்தால்
நிதிகண்ட வாதுல ரென்னவெங் கேளிர் நினைமகிழ்வார்
மதிகண்ட சந்திர காந்த முருகா வகையுமுண்டே. (௬)

வரையும் நாள் உணர்த்தல்

248. எங்கும் பரந்தன வேங்கைசெவ் வாய்மலர்ந் தியாங்கடுயர்
தங்கும் படிமற்றுே ரம்புலி யூர்கொளச் சார்ந்ததெழில்
பொங்குந் திருவை மணவூர்க் கனுப்பப் புகல்வரெமர்
கொங்குண் மலர்க்குழல் பங்கன் கழுக்குன்றிற் கொற்றவனே. (௭)

அறிவறிவுறுத்தல்

249. புகலுந் தொறுமெனக் கேவியப் பெய்துறும் பூங்குழைகீண்
டகலுங் கயல்விழி நின்னால் வருமல ரன்னைக்குஞ்சூ
திகலும் பணைமுலைப் பண்ணைக்கு மன்றி யெனக்குமிந்தப்
பகலுந் தெரித்தில ளெம்மான் கழுக்குன்றிற் பார்த்திபனே. (௮)

குறி பெயர்த்திடுதல்

250. அடுகுறி யோர்ந்து புரநகைத் தோனடி யாரொடென்னை
விடுகுறி யோர்வோன் கழுக்குன்றின் மின்னைவை வேல்வநீ
தொடுகுறி மின்னூர் பயிறலிற் கண்டலர் தூற்றற்குமுன்
இடுகுறி காரண மாம்வேறு தேடெய் திடுகுறியே. (௯)

பகல் வருவானை இரவு வருகென்றல்

251. அல்வாயு மென்னெஞ்சு மேய்வோன் கழுக்குன் றனையமன்னு
வில்வாயும் யாணர்ப் புருவம் பெறுமெங்கண் மின்பொருட்டால்

வல்வாயும் வெய்ய மனமுங்கொள் கானவர் வந்துவந்து
பல்வாயு மார்தலி னெல்வாயி னீவரல் பண்பதன்றே. (கo)

இரவு வருவானைப் பகல்வருகென்றல்

252. நாமி னராமுகிழ் பூமி னிமாசலை நாமமுறும்
வாமி நிலாவிய பாகன் கழுக்குன்றின் வாழுமன்ன
தோமி னிலாநுதற் றேகை பொருட்டிருள் சூழ்கரியின்
யாமினி நீவரல் யாமினி நீவர லேற்கிலமே. (கக)

பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்

253. தண்ணார் புனற்சடை யார்கழுக் குன்றிற் றலைவவெங்கள்
கண்ணார் குவளையு நெஞ்சார் கமலமுங் கண்டலர
விண்ணார் மதியும் பருதியும் போனீ விரவலினென்
பெண்ணா ரமுதின்மு னல்லும் பகலும் பிறங்குவையே. (கஉ)

பகலினும் இரவினும் அகலிவணென்றல்

254. சாபமுங் கோலு மலைமாலுற் றேரெனைச் சாரிருட்கோர்
தீபமும் பானுவும் போல்வார் கழுக்குன்றிற் செல்வர்பிர
தாபமுஞ் சீர்த்தியு மஞ்சுங் கதிரவர் சார்களவைப்
பாபமுந் தாவுரைப் பார்வர லல்லும் பகலினுமே. (கங)

உரவோன் நாடும் ஊரும் குலமும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்

255. வீட்டிற்கு நல்வழி செய்வோன் கழுக்குன்றின் வேலவநின்
நாட்டிற்கு மூர்க்குங் குலத்திற்கும் வாய்மைக்கு நற்புகழ்க்கும்
தேட்டிற்கு மோங்கு மரபிற்கு மன்றியெஞ் சேயிழையாள்
கோட்டிற்கு நேரு முலைவிலை யாங்கொல்பொற் கோட்டிற்குமே.

ஆறு பார்த்துற்ற அச்சம் கூறல்

256. செங்கட் டறுகட் சினக்கொடுங் கூற்றிற் றெறுமடங்கல்
வெங்கட் களிற்றுக் குப்புக்குத் திரிசரி மேவலனென்
றெங்கட் கருங்குல தெய்வமன் னுளிசைத் தாளிமையோர்
தங்கட் கிறைகழுக் குன்றத்தண் ணலிங்குச் சாரலையே. (கரு)

ஆற்றுத்தன்மை ஆற்றக் கூறல்

257. விரகத் தழற்கைங் கணைதென்றல் காட்டம் விசிறியினென்
உரகத் தகலல்குன் மெய்யெங்கும் வேவிப்ப வுற்றநவக்
கிரகத் துயர முனைநோக்கி யாற்றினள் கேடில்மறைத்
துரகத் தவன்கழுக் குன்றனை யாய்நின் றுணிவென்னையே. (கசு)

காவல்மிகவுரைத்தல்

258. கறைபடர் கண்டத் திறைபடர் சீர்க்கழுக் குன்றமன்ன
முறைபட வெம்மூ ருறைபட ரன்னைகண் மூடலிலர்

நிறைபட ரன்றி மிறைபடர் காவலர் நீள்கைக்குணில்
பறைபட நெஞ்சங் குறைபட வாவி பதைக்குமின்னே. (கஎ)

காமமிகவுரைத்தல்

259. காவியி னீள்விழி பங்கன் கழுக்குன்றக் காவலவோர்
வாவியி னேழ்கடல் கூடலின் வந்தென மன்னியவென்
ஆவியின் மேய சிறியாட்குக் காம மடர்ந்தறலில்
சாவியின் வாடுகின் றுள்சற்று நீயினித் தாழ்ப்பதன்றே. (கஅ)

கனவு நலிபுரைத்தல்

260. கழிதரு மென்பணி வோர்கழுக் குன்றன்ப கன்னியின்பம்
பொழிதர நீவந் தணையுங் கனவெழு போதிலளாய்
இழிதருங் கண்ணீ ரருவி முலைவெற் பியையவுந்திச்
சுழிதரு வெள்ளத் திடைமிதந் தாள்கரை தோன்றச்செய்யே. (கசு)

கவினழிபு உரைத்தல்

261. உளங்கனி வாருறு வார்க்கருள் செய்யு மொருவர்கண்டம்
களங்கனி யார்கழுக் குன்றன்ன மன்னவள் காய்கரிபுண்
விளங்கனி யாகிமண் ணுண்ட மணியன்ன மேனிகொண்டாள்
வளங்கனி நாட கணந்தாழ்க்கி னெய்தும் வசையுனக்கே. (உ௦)

17. ஒருவழித் தணத்தல்

தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்

262. நின்னை யிரப்பதொன் றுண்டு மறுக்கலை நேர்ந்தருண்மற்
றென்னை யெனிற்சுப மேதுவ தாயின் றெழினகரேய்ந்
துன்னை யுதிக்குமுன் காண்பேன் கழுக்குன் றுளியருணேர்
பின்னை வருத்தங் கொளாது தெருட்டுதி பெண்ணணங்கே. (க)

மென்சொற் பாங்கி விலக்கல்

263. ஒருபுன லூரர்சென் றுரெனு மாற்ற முரைக்குமுன்கண்
வருபுன லூர்வெள்ள மோடுநின் றேரை மறிக்குமலை
பொருபுனல் வேணிப் பிரான்கழுக் குன்றுளிர் பூபவங்கண்
தருபுன னீர்க்கடன் மங்கைக் கியற்றிப்பின் சார்நகர்க்கே. (உ)

தலைவன் நீங்கல் வேண்டல்

264. யாது பிரிவுமெய் யாவி கனவி னிகந்தெனவிப்
போது பிரிவின் றெனையனுப் பும்வகை புந்தியுண
ராது பிரான்கழுக் குன்றத் தமல னருளிலர்போல்
வாது குழையொ டிகல்விழி யாய்நின்று மாழ்கலென்னே. (ங)

பாங்கி விடுத்தல்

265. கிள்ளையெங் கேயினைக் கொள்ளையெங் கேகைக் கெழுமுபொன்னம்
பிள்ளையெங் கேயிவை தள்ளையெங் கேயெனப் பேசிற்சொல்வ
தெள்ளையெங் கேயிரு வள்ளையெங் கேயென் றிணைகனென்னென்
றுள்ளையெங் கேகழுக் குன்றர்க்கன் டாசெய்வ தெல்லையேறே. (ச)

தலைவிக்கு அவன்செலவு உணர்த்தல்

266. காரண மேதென் றறியகி லேன்கவ லேனலமா
நாரண னுடருஞ் சோதி கழுக்குன்றி னுண்மலராய்
வாரண மூர்வின தன்பர் தமதூர் வயினடைந்துன்
பூரண மாமதி போன்முகங் காண்பர் புலருமுன்னே. (ரு)

தலைவி நெஞ்சொடு புலத்தல்

267. முன்னே நமைக்கண் டணைத்துயிர் தந்த முதல்வருனை
மின்னே பிரியல மென்றூர் பரவை வெதுப்புவதொத்
தின்னே பிரியி னிலைநமக் கோர்தவ றிம்மயலாற்
கொன்னே வருந்தலொன் றன்றியெம் மான்கழுக் குன்றிடத்தே.(சு)

சென்றேன் நீடலிற் காமமிக்க கழிபடர் கிளவி

268. அலைவா யலைந்துரி யார்வா யுறலற் றறவிளர்ப்புற்
றுலைவாமென் போலுங்கண் ணீர்முத் தரும்பியிங் கூர்சங்குகாள்
மலைவாய் மயிலொடு சேர்கழுக் குன்றரை மன்னலர்போல்
இலைவாய் திறப்ப தெனினல னேவிசைப் பீரவர்க்கே. (எ)

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்

269. அடியா ரகத்தே வளர்கழுக் குன்றத் தமலனைப்போற்
கடியார் குழலா யுனதுளத் தன்பர் கலந்திருப்ப
மிடியார் நிதியாசை யின்மெலிந் தாங்கு மெலிவதென்னே
நொடியார் பொழுதே வருவர் வருந்தலை நோயுறவே. (அ)

பாங்கி தலைவிக்கு இறையோன் வந்தமை உணர்த்தல்

270. நீலோடு கண்டர் கழுக்குன்றர் நோக்கத்தி னீற்றுமதன்
தோலோட வூர்தருங் காலோடப் பூங்கழை தோற்றுமணக்
கோலோட நின்னுள மாலோட வன்பர் குறுகினராற்
சேலோ டலர்வெளி வேலோடு வென்றகட் சேயிழையே. (கூ)

தலைவனொடு பாங்கி நொந்து வினாதல்

271. விண்ணூரு மும்பர் பணிவோன் கழுக்குன்றின் வேலவநின்
பண்ணூரு மென்மொழி நின்னைப் பிரிந்திடர்ப் பவ்வமன்றிக்
கண்ணூரு நீர்வெள்ளந் தோய்தல்கண் டுண்மையிற் கண்டனன்யான்
பெண்ணூரு முற்பவ மீனமென் றியாவரும் பேசுவதே. (கo)

தலைவன் பாங்கியொடு நொந்து வினுதல்

272. காரார் களத்தர் கழுக்குன்றத் தொன்றுங் கனங்குழையீர்
தீரா வருத்தமொ டேகுமென் போலுமைத் தீர்தலின்யான்
வாரார் முலைக்கண் வழிவிழி நீரலர் வாய்ப்பன்றிவேள்
போரா ரலர்க்குமும் மூரா ரீலர்க்கும் பொறுத்தனிரே. (கக)

பாங்கி இறைவியை ஆற்றுவித்திருந்த அருமை கூறல்

273. மறிகாட் டியசெங்கைத் துங்கர் கழுக்குன்றின் மன்னநென்னற்
செறிகாட்டிற் போயுடன் மீள்வே னெனுமுரை தேறிவரும்
நெறிகாட்டி நின்னூர் நெறிகாட்டி நீவிர் நிதம்புணரும்
குறிகாட்டி மின்னைப் புரந்தே னமதுயிர் கூடுறவே. (கஉ)

18. வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல்

என் பொருட்பிரிவுணர்த்து ஏந்திழைக்கென்றல்

274. தினமலை யுள்வருஞ் சேயிழை வந்தனை செய்துநெஞ்சின்
உனமலை புல்லிய பாகன் கழுக்குன்றி னொள்ளிழையாய்
மனமலை வெய்தா வகைதெளிப் பாய்சென்று வாய்ப்பநும்மான்
தனமலை கொள்ளத் தனமலை கொண்டிங்குச் சார்குவனே. (க)

நின் பொருட்பிரிவு உரை நீ அவட்கென்றல்

275. பரிவு முறவு மொழுக்கமுங் கொண்டோர் பரவவருள்
விரிவு மகிழ்வு மளிப்போர் கழுக்குன்றின் வேந்தபொருட்
பிரிவு மதனால் வருந்துயர் நோயின் பிரிவு மின்பால்
தெரிவு பெறவொரு நீயே யுரைத்தங்குச் செல்லுகவே. (உ)

நீடேனென்று அவன் நீங்கல்

276. பாதங்கம் பங்கயக் கண்ணர்கள் காணாப் பரமரும்பர்க்
காதங்கஞ் செய்விட முண்டோர் கழுக்குன் றணங்குநும்மூர்
மீதங்கங் கார்நுமர்கொண்டாடப் போய்க்கொண்டு மீள்வனின்றே
மாதங்கந் தோய்வுற மாதங்கங் கோடியின் மாதங்கமே. (ங)

பாங்கி ஓடரிக்கண்ணிக்கு அவன் செலவுணர்த்தல்

277. நல்லா யிரங்கனின் கொங்கை விலைக்கு நமர்வியப்பப்
பல்லா யிரங்கரி மேற்றனங் கொண்டிப் பகல்வருவான்
இல்லா யிரங்கரு விக்கழுக் குன்றுற வேய்நர்க்கன்பில்
அல்லா யிரங்கலி னெஞ்சர்செல் கானன்ப ரார்ந்தனரே. (ச)

பூங்குழை இரங்கல்

278. தெரிந்தார் தெரிபரன் ஞேய்கழுக் குன்றன்பர் சீர்ப்பொருட்காய்ப்
பிரிந்தா ரெனுமுரை மெய்யைவிட் டாவி பிரிகிலர்பால்
விரிந்தா ரெழினகை வீங்கிரு ளோட்டுமின் னேயுரைப்பாய்
கரிந்தா ருடல்வெந் திடவே ளழற்கணை காய்கின்றதே. (ரு)

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்

279. உன்னை மணந்திடப் பொன்னைக் கொணர்ந்திட வோர்ந்தகன்றூர்க்
கென்னைத் தணந்தவ ணெய்தின ரென்றிட ரெய்தினிது
தன்னை யுணர்ந்திடு வேனவர்க் கிங்குறைந் தாரலர்தான்
முன்னை யணைந்திடு மீசன் கழுக்குன்றின் மொய்குழலே. (சு)

தலைவி கொடுஞ்சொற் சொல்லல்

280. யாது புகல்வே னெனதாசை யன்று ரிபத்தையரி
காது கடம்புகு வாரா மதனையென் காதுணர்ந்திப்
போது புலம்ப றகாதா மலரெங்கும் போர்க்குமிந்தத்
தீது தவிர்கெனி றரன்கழுக் குன்றிற் றெளிப்பதற்கே. (எ)

வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்

281. உலர்ந்த சினையுடைப் பாதவத் தாதவத் தொன்றும்வெப்பான்
அலந்த பெடைக்குப் புறவு சிறைநிழ லாற்றல்கண்டு
கலந்த உணர்விற் சுரத்தகன் றூர்வரக் காண்குவைமும்
மலந்த விரவருள் செய்வோர் கழுக்குன்றின் மான்விழியே. (அ)

பருவங் கண்டு பெருமகள் புலம்பல்

282. பார்தோன் றியவன்பர்க் கன்பன் கழுக்குன்றின் பாற்படர்ந்து
கார்தோன் றியநடைச் சீர்தோன் றியமயில் காந்தளலர்ந்
தேர்தோன் றியகொன்றைத் தார்தோன் றியவென்க ணேய்ந்தமைக்கண்
ணீர்தோன் றியவன்பர் தேர்தோன் றியதிலை நேரிழையே. (கூ)

இகுளை வம்பென்றல்

283. வேதிய ராகுதி நாளுஞ் சுரர்க்கருள் வேள்வியொரு
வாதிய லாவரு வாரத ணுன்மும்மை மாரிதிங்கட்
கோதிய வாறுபெய் யும்வம்பு நாளிது வோர்திநையேல்
மாதிய லாகத்த னெம்மான் கழுக்குன்றின் வாணுதலே. (கo)

இதுவுமது

284. பொன்னுந் தொழுமெழி லன்னுயுன் பூங்குழற் பொற்புக்கஞ்சிப்
பன்னு ளுயிர்க்கமு தன்னூர் கழுக்குன்றின் பாலொளித்து

மின்னு முகிலின மின்நாணின் மேனி மெலிவுமனத்
துன்னு வெழுமையின் முன்னுடும் வம்பொழி யூர்துயரே. (கக)

இறைமகன் மறுத்தல்

285. இடித்துவில் வாய்ந்தம்பு கான்றுறு கோப மெழத்திசைவாய்த்
தடித்து வெளிநின்றிக் காரன்பர்த் தீர்ந்தோர் தமதுயிரைக்
குடித்து வரவஞ்சு மென்பால்வம் பாமென்று கூறல்வம்பாம்
நடித்து நலமுயிர்க் கீவோர் கழுக்குன்றி னன்னுதலே. (கஉ)

அவர் தூதாகி வந்தடைந்ததென்று பாங்கி ஆற்றுவித்தல்

286. தன்னே ரிலாவொரு மின்னே ரிடைப்பங்கிற் சங்கரரென்
கன்னேரு நெஞ்சினு நன்னேயங் கொள்வோர் கழுக்குன்றின்வாய்க்
கொன்னே யிரங்கலென் பொன்னே நிதியன்பர் கொண்டுறுதல்
முன்னே புகன்றிட வின்னேயோர் தூதிற்கொண் மூவுற்றதே. (கங)

இறைமகள் ஆற்றல்

287. அருள்கொண்டு நம்மை யணைந்தின்ப மார்விக்கு மென்றுளத்தின்
மருள்கொண்டு நையலை யாம்பிரி யேமென்ற வாய்மையரிவ்
வெருள்கொண் டலந்திட நிற்பர்கொல் லோமண மேவவின்றே
பொருள்கொண் டணைவரெம் மான்கழுக் குன்றிற் புரவலரே. (கச)

அவன் அவண் புலம்பல்

288. ஊற்றிற் பெருகு முதகத்திற் கண்வழிந் தோடுபுனல்
ஆற்றிற் சுழன்றென் வரவாய்ந்து காணு தயர்ந்திளைத்த
ஈற்றிற் றுயிலுற வென்னை யணைத்தெழ வின்மையின்வெங்
காற்றிற் சருகொக்கு மெம்மான் கழுக்குன்றிற் கண்மணியே. (கரு)

பாகனொடு சொல்லல்

289. போர்கண்டு நள்ளார் புறங்கண் டிடவிடும் புங்கம்பின்னிற
பார்கண்டு சேர்ந்து படமா நடத்திடு பாகவிண்வாய்க்
கார்கண்டு நாம்வரல் காணுது நெஞ்சங் கலங்குபொன்மான்
தேர்கண் டரன்கழுக் குன்றிடை யுய்வான் செலுத்துகவே. (கசு)

மேகத்தொடு கூறல்

290. உம்மைக் குழல்கண்டு வென்ற பகைநும் முளத்திற்கொள்ளா
தெம்மைக் கெனதுயி ராகிநிற் பார்தம் மிடரகலச்
செம்மைப் பொருண்முற்றி யான்வரு மாறுமுன் சென்றுரைப்பீர்
மும்மைச் சகம்புரப் போர்கழுக் குன்றின் முகிலினமே. (கஎ)

பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவறிவுறுத்தல்

291. நலம்புரி யன்பர்க் கருள்வோன் கழுக்குன்றி னுள்பலவெம்
குலம்புரி மாதவத் தால்வரு வோய்நின் கொழுநரொன்னார்
உலம்புரி தோள்வென்று தேரூர்ந் தருங்பொரு ளுற்றுவந்தார்
வலம்புரி யார்க்கு மெதிர்கொண் டிறைஞ்சி வலம்புரியே. (கஅ)

வலம்புரி கிழத்தி வாழ்த்தல்

292. மயங்கத் தனஞ்சயற் காப்பான்முன் கண்ணன்செவ்வாயின்வைத்தே
இயங்கத் தொனித்தசங் கென்ன வெனதன்பர் யான்பிரிவான்
உயங்கப் பெருது நிதியொடு தேரின்வந் தூதுசங்கம்
வயங்கற் புளத்தார் புகழ்வோன் கழுக்குன்றின் வாழியவே. (கசு)

தலைவனைப் பாங்கி நினைத்தமை வினுதல்

293. எனைத்தனை யேநினை வித்துப் பவவெப்ப மேகவன்பின்
நனைத்தனை யேயுமன் பாளன் கழுக்குன்றி னுயகபோர்
முனைத்தனை யேபொருண் முற்றினை யேயவை முற்றுமிடைத்
தினைத்தனை யேனு நினைத்தனை யேயெந் திருவினையே. (உ0)

தலைவன் நினைத்தமை செப்பல்

294. மறந்தா னினைத்தனை யோவென் றுரைத்தன் மரபுநெஞ்சின்
இறந்தான் மறக்கவுங் கூடு மதுவன்றி யிவ்வுழி நாம்
துறந்தா லவணினைத் தேனென்று சொல்வதென் சொல்லமுதே
அறந்தாழ் விடையுடை யோன்கழுக் குன்றினென் னுவியையே.

அனைத்தகையவனை ஆற்றுவித்திருந்த அருமை கூறல்

295. நின்னது வாய்மை புகழுரு ணீதி நினையடைந்தாள்
தன்னது நேயங் குலம்பொற்புக் கற்பிவை சாற்றிநின்னுற்
பொன்னது காதலிற் சென்றுரைன் ருற்றினன் பூபவொரு
மின்னது பாக முடையான் கழுக்குன்றின் மின்னினையே. (உஉ)

19. வரைவு மலிதல்

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்கு உணர்த்தல்

296. அருந்தனஞ் செல்லா தருந்துயில் கொள்ளா தயர்ந்துமின்னே
வருந்தனஞ் செல்வ மனைமுன்றில் வாய்ப்பன் மலையின்மலைப்
பொருந்தனம் பாலுடை யோர்கழுக் குன்றிற் புரவலர்நின்
பெருந்தனங் கொள்ளக் குவித்தார்பல் கோடி பெருந்தனமே. (க)

காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல்

297. வேணியிற் றேணியிற் கங்கையிற் றிங்கண் மிதக்கவைப்போன்
காணியிற் பேணியிற் கொண்ட கழுக்குன்றிற் காவலர்தம்

பாணியிற் பாணியொ டென்பாணி நாளைப் பதிப்பதெம்மோய்
வாணியிற் சேணியிற் பொன்னூரின் வாழ்த்தி மகிழ்ந்திடுமே. (உ)

தமர் வரைவெதிர்ந்தமை தலைவிக்குப் பாங்கி சாற்றல்

298. தன்னேரில் லாததொர் மின்னே ரிடைபங்கன் சார்கழுக்குன்
றன்னே ரொளிர்குழற் பொன்னே மணப்பொருட் டாகவந்து
நின்னேய வன்பர்த நன்னேய மார்தமர் நேர்வரைவை
முன்னே நமரெதிர்ந் தென்னேகொ ளோகை முகமன்களே. (ங)

தலைமகள் உவகையாற்ருது உளத்தொடு கிளத்தல்

299. அரசங் கரவென் பவர்க்குக் கழுக்குன்றத் தார்ந்தருள்செய்
பரசங் கையரரு ளாலன்ப ரென்னங்கை பற்றுமண
முரசங் கறங்கின மைநீல முத்த முகிழ்ப்பதன்றிக்
கரசங் கணிவளை யங்குலிக் கேயினிக் காண்டுநெஞ்சே. (ச)

பாங்கி தலைவனை வாழ்த்தல்

300. ஊரா ரலர்தென்றற் றேரா ரலரி னுளமழல்வரய்த்
தாரா மயிலையுன் ருரா னுயிரைத் தழைவித்துமால்
சீரார் திருவென வாரா மகிழ்வின்று செய்யுநின்சீர்
நீரார் கழுக்குன்ற ரேரார் கயிலையி னீடுகவே. (ரு)

மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்

301. இணங்கா தரத்தன்ப ரேத்துங் கழுக்குன் றிறையருளால்
வணங்கார் குலத்தை வணங்குஞ் சிலையின் வணக்குமொய்ம்ப
பணங்கா தலிக்கு மெழிலல்கு லாளைமுன் பாத்தருணின்
மணங்கா தலித்தவ் வணங்கா தரித்து வணங்குதலே. (சா)

அது கண்டோன் மகிழ்வு

302. என்னை வியப்புக் கிடமாக்கு மென்னையிங் கேய்வதற்காய்ப்
பொன்னை வணக்கு மெழிலுடை யாண்மலர்ப் போதிறையா
அன்னை நிகர்க்குமன் பாளர் கழுக்குன்றி னுரணங்கு
தன்னை முகக்கும் பலிதூஉய்ப் பராவுந் தகைமையதே. (எ)

20. அறத்தொடு நிலை

கையறு தோழி கண்ணீர் துடைத்தல்

303. பண்ணீர் மொழிதோய் கழுக்குன்றெம் மான்மடைப் பள்ளியின்வாய்த்
தெண்ணீருன் சிற்றில் சிதைத்தது வோவன்னை சேர்ந்துநெஞ்சம்
புண்ணீ ருறவிளை யாடலென் றன்னுய் புகன்றனளோ
கண்ணீ ரருவி முலைமலை மேவக் கலுழ்வதென்னே. (க)

கலுழ்தற் காரணங் கூறுதல்

304. பாகியன் மென்மொழி பாகன் கழுக்குன் றிற் பாவையன்னாய்
நாகிய னன்மலர்ச்சோலையின் வாயெனை நண்ணிநண்பான்
ஆகிய நேயத் தணைத்தின் பளித்தகன் றருடனே
ஏகிய நெஞ்சுறக் காணு தழுதழி வெய்துங்கண்ணே. (உ)

தெய்வங்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல்

305. திரையார் கழியின் கரையாருந் தெய்வத் திருமுனின்றே
உரையாடன் மெய்யென் றுரையா டரவல்கு லோர்ந்தொருபாற்
பரையார் கழுகின் வரையார்த மன்பரைப் பற்றநெஞ்சம்
கரையார் நதியின் விரையா விழிநீர் கலுழ்வதென்னே. (ந)

இகந்தமை இயம்பல்

306. அரியார் கழுக்குன் றுரியார்த மன்பரும் யானுமன்றி
வரியார் மலர்ப்பொழில் வாய்ப்பிற ரின்றென்னை மன்னுமந்நாள்
கரியா ரெவரில ரென்றே யிகந்தனர் காதலர்தாம்
பெரியார் பிழைப்பிற் பிழையதன் றேசொல்க பெய்வளையே. (ச)

பாங்கி இயற்பழித்துரைத்தல்

307. புரவல ரென்பர்நின் கொண்கரை யந்தப் பொருட்குத்தகப்
புரவலர் நின்னைக் கடவுளைக் காட்டிப் புகன்றசொல்லும்
புரவலர் தாம்பிரிந் துன்பால் வருத்தம் பொருத்திவிண்ணோர்
புரவலர் சீர்க்கழுக் குன்ற ரருளிலர் போன்றனரே. (ரு)

தலைவி இயற்பட மொழிதல்

308. விண்வாய்ந்த கொண்டற் றுளியன்றி யுண்ண விரும்புவது
மண்வாய்ந்த சாதகப் புட்கும்பொய் யாமை மழைக்குமின்றாற்
பெண்வாய்ந்த பாகர் கழுக்குன் றன் னையெனைப் பேணுமருட்
கண்வாய்ந் தவர்க்கு மெனக்குமவ் வாறு கருதுகவே. (சூ)

தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல்

309. கூற்றங் குமைத்த கழலார் கழுக்குன் றிற் கூறிநம்முன்
மாற்றம் பிழைப்ப விவட்பிரிந் தாளென்று வன்கட்டெய்வம்
சீற்றஞ்செய் யாதுநம் மன்பர்தம் பாற்பொறை செய்யமின்னே
ஏற்றம் பெறும்பலி யூட்டிப் பணிதர வேகுதுமே. (எ)

தலைவி இல்வயிற் செறித்தமை இயம்பல்

310. மின்னு ரலரொடு பொன்னுரு மேனி விளர்ப்புமுளத்
துன்னு மலர்த்திரு வன்னாய் புறம்போக் கொழிகென்றன்னை

சொன்னாள் கழுக்குன்றின் மன்னு மரன்பதந் தோயுமன்பார்
என்னுவி யாமவர் மன்னுரிவ் வோகை யிசைப்பதற்கே. (அ)

செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்

311. என்னு ருயிர்க்குயி ராகிய வன்பரிவ் வெல்லியின்வாய்ப்
பொன்னு ரிரதத்தின் மன்னுர் வரக்கண்டு பொங்கியுளத்
தொன்னு ரெனவழன் றிங்நா ளெவனவ னேவென்றன்னை
சொன்னு ளிருண்மணந் தன்னுர் கழுக்குன்றிற் றூநகையே. (கூ)

எறிவனை வேற்றுமைக்கு ஏது வினுதல்

312. அங்குலி யாகின்ற தோள்விட மாகின்ற தன்னஞ்சொரி
மங்குலி னுகின்ற கண்வெள்ளி யாமென்னை மாதங்கமோர்
வெங்குலி சாயுதன் மாலயன் வீயா விதங்கடுவார்
கங்குலி னூர்ந்த களத்தான் கழுக்குன்றிற் காதன்மின்னே. (கο)

வெறி விலக்கல்

313. வரையாட்டை யுண்மகிழ் வார்தெய்வ மாதலின் வாய்த்ததென்றே
வரையாட்டை யுண்மகிழ் வார்வாய் கழுக்குன்றம் வாழ்த்துறுநா
வரையாட்டை மேவும் வனத்திற்கண் டிம்மான் மயல்வகைதீர்
வரையாட்டை யினுங்தெரி யாய்பிதற் றிநை வாய்முருகே. (கக)

வெறிவிலக்கியவழி வினுதல்

314. பூமனை யாய்வளர் பொன்பொருட் டான்மணம் பொங்குகணைக்
காமனை வென்றகண் ணூர்கழுக் குன்றிற் கமழ்கடப்பந்
தாமனை நங்குல வள்ளிக்கு வாய்த்த தலைவனைப்பல்
நாமனை யாந்தொழ வெண்ணு துரைத்ததெ னன்னுதலே. (கஉ)

பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

315. ஈதொன் றுரைப்பனோர் மாதொன்று பாக னெழிற்கழுக்குன்
றேதொன்று தொட்டொளிர் கோதொன் றிலானரு ளேய்ந்தொர்மன்னர்
காதொன்று வேல்விழி சூதொன்று கொங்கைநின் கன்னிக்கன்னுய்
போதொன்று தாமருள் போதொன்றி நோக்கினர் போதொன்றினே.

புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

316. அரும்பலர் வல்லியைக் கொங்கை முகமிடை யால்வென்றதாற்
சுரும்பலர் கஞ்சங் கொடியால்வெல் வான்சுனை தோய்செவ்விவாய்க்
கரும்பலர் சொல்லுன் மகளடி யீர்த்திடுங் காலெடுத்தான்
விரும்பல ரூரெரித் தான்கழுக் குன்றினோர் வேள்கரைக்கே. (கச)

களிறுதரு புணர்ச்சியான் அறத்தொடு நிற்றல்

317. கடலற வேல்விடு மண்ணலொத் தானெரி காய்கரியின்
உடலற வேல்விடு மன்னன் றுகிரொத்த தூறுதிரம்

கெடலறு சீர்க்கழுக் குன்றுரை வெள்ளிக் கிரியரக்கன்
மிடலறத் தூக்கத் தழுவன்னை போன்றனண் மெல்லியலே. (கரு)

தலைமகள் மெய்வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினுதல்

318. பேதைமை யான்மதி யாடியிற் கிண்டு பிடிப்பவுள
மீதமை யாநினைக் கண்டழு மான்மெய் மெலியமின்னே
தீதமை யார்தொழுஞ் செல்வக் கழுக்குன்றிற் றேவரடிப்
போதமை யாருளம் போலக் கலங்கிப் புலம்பலென்னே. (கசு)

செவிலி நற்றாய்க்கு முன்னிலையான் அறத்தொடு நிற்றல்

319. என்னு னுரைப்பனுன் மின்னுளன் னுய்பல் லெழுவதற்கு
முன்னு முதுக்குறைந் தாளிமை யோர்கண் முழுதும் வந்தித்
துன்னு வுருகா வொழுங்குடன் வாழ்த்த வுவந்தருள்வோர்
கொன்னு ரயின்மழு வாட்கரத் தார்கழுக் குன்றிடத்தே. (கஎ)

21. உடன் போக்கு

பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்

320. புலவரை யாளும் பிரான்கழுக் குன்றிற் பொருந்தெமர்சீர்க்
குலவரை யெட்டை நிகராய்ச் செம்பொன் கொடுக்கினும்வெண்
நிலவரை நீணுதல் கொங்கை வுலையென நேர்கலரேழ்
தலைவரை யாவிவ ளோடுன் னகர்க்கினிச் சார்ந்தருளே. (க)

தலைவன் உடன்போக்கு மறுத்தல்

321. பஞ்சினு மெல்லிது பாதங் கழுக்குன்றிற் பண்ணவனுண்
நஞ்சினும் வெவ்விது கற்சுரஞ் சேய்த்தென் னகர்புலனோர்
அஞ்சினு முய்யநின் ருண்மகிழ் வாற்றுமென் னுரமுதை
நெஞ்சினு நவ்வியன் னுயுடன் போதற்கு நேர்வதின்றே. (உ)

பாங்கி தலைவனை உடன்படுத்தல்

322. எரியினு மன்பர் பிரிவெனுந் தீச்சுடு மென்றுமின்னுர்
அரியினு நாடற் கரியார் கழுக்குன்றி னண்ணல்கொண்கர்ப்
பிரியினும் வெந்தழல் வீழ்வா ரெனிலெங்கள் பெண்பிரிவிற்
றெரியி னுடன்றழல் கற்சுரஞ் சீரி தெனற்கையமே. (ங)

தலைவன் போக்கு உடன்படுதல்

323. வில்லினு மம்பினு மன்றிக்கண் ணுன்மதன் வீயச்செய்தோன்
எல்லினு மல்லினும் வாழ்கழுக் குன்றிற்பஞ் சேயடியும்
சொல்லினு நாவைச் சுடுஞ்சுரஞ் செல்லத் துணிந்ததென்ருல்
கல்லினும் வல்லிதென் னெஞ்செனற் கையமென் காரிகையே. (ச)

பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்

324. கோதா யனிச்ச மிதிப்பினுங் கொப்புளங் கொள்ளுமடி
தீதா ரழற்சுரஞ் செல்வதெவ் வாறென்று சிந்தைநைந்து
போதா ரருள்விழி நீருட லாரப் புகன்றனரேர்
மாதா ரழன்மேனி யன்கழுக் குன்றினம் மன்னவரே. (௫)

தலைவி நாணழிபு இரங்கல்

325. ஆவியி னுறுயர் வாமடவார்க் கென்ப தாய்ந்துணர்ந்தும்
பாவியி நாளுடன் போகத் துணிந்தமை பார்க்கிற்பெண்மை
காவியி னேர்விழி யாயிழி வாமெனுங் கட்டுரையோர்
தேவியி னுருரு வார்கழுக் குன்றிற் றெளிவித்ததே. (௬)

கற்பு மேம்பாடுபூண்முலைப் பாங்கி புகறல்

326. பெற்று வளர்த்திடு தாய்தந் தையினும் பெரிதெனினும
உற்று நினைக்கி லுயிரினு மோம்பற் குரித்தெனினும்
சுற்று மலர்க்குழ லார்க்கரு நாண் கற்பிற் றாயதன்றுன்
முற்று மளிக்கும் பிரான்கழுக் குன்றெளிர் மொய்குழலே. (௭)

தலைவி ஒருப்பட்டெழுதல்

327. பரையைத் தனக்கொரு பாகத்தில் வைத்தென் பவவினைநோய்ப்
புரையைத் தவிர்ப்போர் கழுக்குன்றன் னுயுடன் போக்கெனுமத்
திரையைப் பெருக்கி யகலாதிந் நாண்மிடல் சேர்ந்தவென்னுண்
கரையைக் கரைந்ததந் தோவன்ப ரன்பெனுங் கார்க்கடலே. (௮)

பாங்கி சுரத்தியல்புரைத்துழிச் சொல்லல்

328. அல்லினுங் கூடு மிருட்குழ லாளொடு மார்ந்தெனுளக்
கல்லினுஞ் சேர்வோர் கழுக்குன்றின் வாயலர் கட்டுரைக்கும்
இல்லினும் பார்வைக் கொடுமையோ டன்னை யிசைக்கும்வெய்ய
சொல்லினும் வெவ்விய தோவன மேயெரி தோய்வனமே. (௯)

பாங்கி கையடைகொடுத்தல்

329. வாரி கரைவிட்டுப் பேரினுங் குன்றலை வாயுறினும்
காரின் மிகுத்த கருங்களத் தெம்மான் கழுக்குன்றமார்
மாரி நிகர்க்குங் குழல்சா மரைமயிர் வாய்த்திடினும்
நாரி தனைக்கை விடாது புரத்தி நரபதியே. (௧௦)

வைகிருள் விடுத்தல்

330. ஊரா ரலரொடு சீரா ரலர்மல ரோதியன்னை
தீரா விடரையு நேரா யகற்றிச் செகமலைக்கும்
காரார் விடநுகர் நீரார் கழுக்குன்றிற் கன்னியுன்னோ
டேரார் மகிழ்ந்த மூரார் தருமுன மெய்துவனே. (௧௧)

தலைவன் சுரத்துய்த்தல்

331. பாலையு மாலையும் போலு மொழிமலைப் பாவையுடன்
காலையு மாலையும் வாழ்கழுக் குன்றர்தங் கண்ணருளால்
வேலையு நாலையும் வெல்லும் விழியிடை மெல்லியலாய்
சோலையுஞ் சாலையும் பார்த்தடி மென்மலத் தோயவையே. (கஉ)

தலைமகன் தலைமகள் அசைவறிந்திருத்தல்

332. மெல்லிய சீறடி கன்றிடுங் குன்றிடு மேனிமுத்தாற்
புல்லிய கஞ்ச மெனமுகம் வேர்வு பொருந்தும்பைந்தேன்
சொல்லிய லாகன் கழுக்குன்ற ஞயிந்தச் சோலையின்வாய்க்
கல்லிய லார்வெஞ் சுரமாறு மட்டுங் கலந்துறையே. (கங)

உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்

333. பொய்வந்த நுண்ணிடை பாகன் கழுக்குன்றிற் பொன்புகழும்
மெய்வந்த மான்விழி வந்த வருத்தம் விரவடிகள்
தைவந் தவாவிற் குழன்முடித் தாய்மலர் தான்புனையக்
கைவந்த தாலிது முன்னைத் தவப்பயன் காண்மனமே. (கச)

கண்டோர் அயிர்த்தல்

334. சாலு மடியார் பவவெப்ப நீத்தின்பத் தண்டுளிகள்
காலு மருண்முகில் சேர்கழுக் குன்றன்ன காளையுடன்
ஏலு மிவள்சுரத் தெய்திய தென்னிவர் யாவரெழின்
மாலு மெழில்கண்டு மாலுந் திருவு மருவும்பித்தே. (கரு)

கண்டோர் காதலின் விலக்கல்

335. ஊர்தா னணிமையி னின்று கதிரு மொழிந்ததிவள்
சீர்தா னினைக்கிலிக் கான்யாறு நீந்துந் திறனிலள்விண்
பார்தான் புகழும் பிரான்கழுக் குன்றன்ன பண்பவெம்மில்
நீர்தா மிருந்திவ் விராவுண்டு வைகறை நீங்குமினே. (கசா)

கண்டோர் தம்பதி அணிமை சாற்றல்

336. கன்றிற் கருள்பசு வொத்தொளி ரெற்கருள் கண்ணர்கழுக்
குன்றிற் கயல்பத் தடிநடந் தாலுயர் கோபுரமும்
ஒன்றிற் குளிர்செய் பொழிலு மகழும்விண் ஞேங்கெயிலும்
துன்றிற் புயறுயின் மாடமுந் தோய்நகர் தோன்றிடுமே. (கஎ)

தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்கு உரைத்தல்

337. கடலென் றயிர்த்த கழிதோய்ந்து நீருணுங் கார்க்கணங்கை
விடலென் றகத்தன்பின் வாழ்த்து மவர்க்கருண் மெய்யர்தம
துடலென் றிகப்பின்றி வாழ்கழுக் குன்றென வுன்னியுறங்
கிடலென்று முற்றணி மாளிகை தோய்நக ரென்னகரே. (கஅ)

22. கற்பொடு புணர்ந்த கவ்வை

செவிலி பாங்கியை வினுதல்

338. மெல்ல நடந்தென் விழிகுளிர் வித்தின் மென்செவிகள்
புல்ல வமுதுகுத் தாலன்ன தீஞ்சொற் புகன்றுநம
தில்ல நிறைந்து விளையாடுங் கிள்ளையெங் கேகிற்றும்பர்
அல்ல லகற்றுங் களத்தான் கழுக்குன்ற மன்னமின்னே. (க)

பாங்கி செவிலிக்கு உணர்த்தல்

339. கூர்த்த உணர்வுடை யார்க்கருள் வோன்கழுக் குன்றினிருள்
போர்த்த பொழிலின் விளையாடும் போதெழில் பூத்தநின்மான்
ஆர்த்த கழலினேர் வேள்கண் டலங்க லணியவன்றுய்
பார்த்த விழியிமை யாதுநின் ருளிது பார்த்ததுண்டே. (உ)

செவிலி இளையளென்போர்க்கு எதிரழிந்து மொழிதல்

340. எளையெடுத் தாண்டு தனதரு ளானெஞ் சிடைமலர்த்தாள்
தளையெடுத் தாடும் பிரான்கழுக் குன்றிடைத் தான்வருநாள்
அளையெடுத் தீய விந்நாள் வளர்த்தேனை யகன்றொருநாள்
சுளையெடுத் தார்பின் சென்று ளெளையல்லற் சுனைவிடுத்தே. (ந)

தன் அறிவின்மைதன்னை நொந்துரைத்தல்

341. தூய்மையிற் றம்முளத் தன்புகொள்வோரைத் தொடர்பிறப்பார்
நோய்மையிற் றீர்ப்பவர் சேர்கழுக் குன்றி னுணுகிடையாய்
சேய்மையிற் செல்லில் வருந்துங்கொல் காலென்று செப்புமென்மான்
வாய்மையிற் சித்தம் வையாதிவ் விடர்குடல் வாய்ந்தனனே. (ச)

செவிலி தெய்வம் வாழ்த்தல்

342. காலா யுதமுங் கலாப மயிலுநின் கண்முன்விட்டு
வேலா யுதவெம் பலிதூய் மலர்சொரி வேன்கரத்தில்
சூலா யுதங்கொள் பிரான்கழுக் குன்றிடைத் துண்ணெனவெம்
பாலா யுதவிழி மின்னுள் வரவருள் பாலிக்கினே. (ரு)

செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்

343. தன்னைக் கொலவரும் வேழத்தை மாய்த்துமோர் தையல்பங்கா
மின்னைப் புணர்கழுக் குன்றிற் சுனைவாய் விழுவெடுத்து
முன்னைத் தொடர்பி னுயிர்புரந் தார்நிற்ப மொய்க்குநமர்
பொன்னைக் கொடுப்பவர்க் கீவரென் றன்னைமின் போயினளே. (சு)

நற்றாய் பாங்கி தன்னெடு புலம்பல்

344. உன்னிப் பிரிந்திருப் பாள்கொலோ வன்றியு முன்னறிவா
மின்னைக் குலக்கிழி வெய்தாமற் கற்பு விடாமன்மணங்

தன்னைப் பரன்கழுக் குன்றிற்செய் யாதந்தந் தானகற்றிப்
பின்னைக் கலுழ்ந்துபெண் பேதையென் வாய்மைபெற் ருய்மகளே.

நற்ருய் பாங்கியர் தம்மொடு புலம்பல்

345. காயம் பல்கல னுலழ குற்றெனச் காணுமுங்கள்
ஆயம் பிரியவு நெஞ்சிற்ரு ரேதில னுலமையும்
நேயம் பிடர்பிடித் துந்த வருஞ்சுர நீங்குவதென்
மாயங் கறைமிடற் ருன்கழுக் குன்றினென் வாணுதலே. (அ)

நற்ருய் அயலார்தம்மொடு புலம்பல்

346. என்னீ ரறைந்தெனைத் தேற்றித் துயர்ப்பவ மேய்ந்தினைத்தேன்
புன்னீ ரகற்றும் பிரான்கழுக் குன்றினென் பொன்னனையாள்
மென்னீர் மலர்முகத் தின்னீர் நகையும் விளங்குகுயில்
நன்னீர் மொழியுங்கண் டாலன்றி யுய்வன்கொ னினியே. (கூ)

நற்ருய் பயிலிடந்தம்மொடு புலம்பல்

347. ஆனே றுயர்த்த பிரான்கழுக் குன்றி னலம்பொழில்வாய்த்
தேனே யிளங்குயி லேமயி லேபைஞ் சிறைக்கிளியே
மானே யென்றிரு மானே ரொருபெரு மானுடன்வெங்
கானே கினள்வரு நாளுரைத் தாள்கொல் கழறுமினே. (க0)

நிமித்தம் போற்றல்

348. கொடியே யெழில்கொள் கொடியே யிடையொடு கொற்றமுற்றிப்
படியே முளிக்கும் படியேயு மண்ணலெம் பால்வரக்கைத்
துடியே யுடைவண் டுடியே யுருவினன் ருேய்கழுக்குன்
றடியே கரைந்தவ் வடியே பெறுவை யரும்பலியே. (கக)

நற்ருய் சுரந்தணிவித்தல்

349. கொடும்பாலை யென்றழு மோர்குழ விக்கருள் கூர்ந்துதித்தித்
திடும்பாலை வேலையுண் ணென்றருள் வோர்கழுக் குன்றினெம்மில்
அடும்பாலை வென்மொழி யான்றவத் தாற்பெறு மாயிழைக்குச்
சுடும்பாலை யாற்றிக் குடியாவி யுய்யச் சுடரவனே. (கஉ)

நற்ருய் தன்மகள் மென்மைத்தன்மைக்கு இரங்கல்

350. பஞ்சினு மெல்லடி பைந்தார் மிதிக்கிற் பதைக்கும் வஞ்சர்
நெஞ்சினு மன்பர் புகழ்கழுக் குன்ருளிர் நேயர் நுகர்
நஞ்சினு மாரழல் காலும்வெம் பாலை நடப்பள்கொல்லோ
உஞ்சினு மென்னுயிர் நிற்கு முபாயங்க ளொன்றுமின்றே. (கங)

இளமைத் தன்மைக்கு உளமெலிந்து இரங்கல்

351. வாவியிற் றன்னிழல் கண்டோர்பெண் ணுக மதிக்குமென
தாவியிற் கண்ணிற் சிறந்த சிறியவென் னம்மனைபங்

காவியிற் றேய்தொடை யான்கழுக் குன்றன்ன காவலன்பின்
மேவியிற் றேய்ந்துகுற் றேவல்செய் புந்தியு மேவுவளே. (கச)

அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்

352. எலியோ டகம்புக வாழுமெ னம்மனை யெய்த்தவன்பர்
கலியோட வெல்லும் பிரான்கழுக் குன்றன்ன காவலன்பின்
வலியோட நைந்திடு காலையிற் பாலையில் வாரணம்பல்
புலியோட வஞ்சுமென் றஞ்சியெ னெஞ்சம் புழுங்குறுமே. (கரு)

கண்டோர் இரக்கம்

353. பெற்ற வயிறு பிசைந்துர மெற்றிப் பெருங்கரத்தான்
முற்ற முலைமுக டொண்கணி னீர்துயர் முற்றப்பெற்றாள்
குற்ற மகலன்பர் போற்றும் பிரான்கழுக் குன்றிற்பண்ணை
சுற்ற முடனெழு மன்னையோர் தோகை துறந்ததற்கே. (கசா)

செவிலி ஆற்றுத்தாயைத் தேற்றல்

354. கார்க்கண் ணிழிமழை யென்னக்கண் ணீர்முலை காலவன்னாய்
ஊர்க்க ணெவரு மிரங்க விரங்க லொழிதருவாய்
போர்க்க ணெயிலடுங் காலைக் கழுக்குன்றிற் போதன்கொண்ட
தேர்க்க ணிருக்குமல் லாலெங்கு நீங்குமின் றேடுவனே. (கஎ)

செவிலி முக்கோற்பகவரை வினுதல்

355. கன்னேரு மென்னெஞ் சினும்வள ரீசன் கழுக்குன்றமாம்
சொன்னேரு மாமறை யந்தத் தொருமையிற் றேற்றிருமை
மின்னேரு மென்னுமுக் கோல்களி ஞலைவர் வீயச்செல்வீர்
பொன்னேரு மின்னெரு மானேரு மன்னுடன் போந்ததுண்டே. ( )

மிக்கோர் ஏதுக் காட்டல்

356. தருவுறு போதணி வார்க்குப் பயனன்றிச் சார்தருவின்
மருவுறு போதென் பயனெனி யேன்முழ் மலப்பகைக்கு
வெருவுறு போதஞ்ச லென்போன் கழுக்குன்றின் மேவியநின்
திருவுறு போதவ் விதிவிதித் தானயன் றேர்மயிலே. (கக)

செவிலி எயிற்றியொடு புலம்பல்

357. அயிலொரு வாதகை வேளென வாய்ந்தவொ ரண்ணலுடன்
குயிலொரு கூடிகந் தேகுவ தொத்தெங் குரம்பைவிடடோர்
மயிலொரு வாமய லால்வெய்ய பாலையில் வந்ததுண்டோ
எயிலொரு மூன்றுமட் டான்கழுக் குன்றி னெயின்மகளே. (உ0)

செவிலி குரவொடு புலம்பல்

358. குரவோர் கிலாய்கொளின் பாவையு நீயுங் குலாவியுமெங்
குரவோர் தவத்துறு பாவையும் யாமுங் குலாவுறநல்

குரவோர் பணியிற் றிருவருள் வோன்கழுக் குன்றெனவா
குரவோர் மயலின்மின் சேர்வ தொழிகென்று கூறுதற்கே. (உக)

சுவடு கண்டு இரங்கல்

359. என்னடி யார்களை யானெனக் கொண்டுய்வை யென்றருளால்
தன்னடி யென்முடி வைத்தோன் கழுக்குன்றந் தன்னில்வளர்
பொன்னடி யிங்கிவை யன்னவண் மையல் பொருந்தவொளிர்
மன்னடி யுங்குவை யென்றென துள்ள மதித்ததுவே. (உஉ)

கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்

360. மாலுந் திருவெனு நீயு மிமையவர் வாழ்த்தமறை
நாலுந் தொழவருள் வோன்கழுக் குன்றன்ன நாயகனும்
சேலுங் கமலமும் போல்விழிப் பேதையும் செய்யவழல்
காலும் சுரம்வரக் கண்டதுண் டோவிரு காலுநொந்தே. (உங)

கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்

361. தனைநே ரிலார்கழுக் குன்றி னுமைநிகர்த் தாயிருவர்
மினைநே ரிடைகண்ட துண்டோவென் றன்னை விளம்பினளால்
எனைநே ரொருபெரு மன்னனைக் கண்டன னென்விழியால்
உனைநே ருருவொன்று கண்டதுண் டேலிவட் கோதுகவே. (உச)

செவிலி தலைவியைக் காணாது கவலை கூர்தல்

362. அன்னாய் சுரத்தினம் மன்னையைக் கண்டனை யோவென்றன்னை
சொன்னா லதற்கென்ன சொல்வே னெனையடித் தொண்டுகொண்ட
என்னா யகன்கழுக் குன்றினச் சொற்செவி யேற்குமுனோன்
றன்னா ருயிருடல் விட்டேகச் செய்தல் சதிருடைத்தே. (உரு)

23. மீட்சி

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தல்

363. சேறு மெனநினை நெஞ்சுஞ் சுடுஞ்சுரந் தேடியெய்த்து
நாறு மலர்நிறை யோதியைக் காண்கில னங்கையொரு
கூறு பெறும்ரன் றேய்கழுக் குன்றன்ன கொற்றவனோ
டேறு புகழ்நக ரெய்துதல் கேட்டன்னை யெய்தினனே. (க)

தலைவன் மீண்டு தம்மூர் சார்ந்தமை சாற்றல்

364. மானே யுனைமுனங் கண்ட பொழிலிது வாரணத்தை
ஊனே யுதிரம் பெருகவென் றுன்னுயி ரோம்பியதிக்
கானே யழுந்து முனைவந் தெடுத்ததிக் கற்சுனையெம்
கோனே யெனவும்பர் வாழ்த்தும் பிரான்கழுக் குன்றிடத்தே. (உ)

தலைவி முன்செல்வோர் தம்மொடு தான்வரல் பாங்கியர்க்குணர்த்தி விடுத்தல்

365. ஒருவா திருமையு மெய்தமுத் தீமறை நான்கினும்பர்
மருவா மகிழ வளர்ப்பீரெம் பண்ணையின் வாய்ந்துருவோ
டருவா மரன்கழுக் குன்றி னுமைவிட்டோ ரண்ணல்பின்போம்
உருவார் குழல்பின் வருவா ளெனுமுரை யோதுமினே. (௩)

முன்செல்வோர் பாங்கியர்க்கு உணர்த்தல்

366. பொய்யா விநாயகன் வேலோனைப் பெற்ற புராணனருள்
மெய்யா ருமையுடன் வாழ்கழுக் குன்றிடை மேவுபண்ணை
மொய்யார் குழற்றைய லீருமை விட்டொரு மொய்ம்பர்பின்போம்
மையார் விழியவ் வரசுடன் மீண்டு வருவளின்றே. (௪)

பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்

367. அன்னை யமுதுகுத் தென்ன வொருசொல் லறைகுதுநின்
பொன்னை ளவளுயி ரன்ன னுடனரன் பொற்கழுக்குன்
றுன்ன ரடைசுர மன்னவன் னனக ருற்றவனோ
டிந்நாள் வருகுவ ளென்ன மறையோ ரிசைத்தனரே. (௫)

நற்றாய் தலைமகன் உளங்கோள் வேலனை வினுதல்

368. மலைவாழ் குறத்தியை வேட்ட மலைக்குகன் வாழ்ந்தெனவென்
தலைவாழ் பதத்தரன் றேய்கழுக் குன்றன்ன தையலைக்கூர்
இலைவா ழுயில்வெள் வேலோய் மணந்தெம்மி லேய்ந்திடுமோ
நிலைவா ழனைமனை யேய்ந்திடு மோவிது நீயுரையே. (௬)

24. தன்மனை வரைதல்

பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினுதல்

369. நம்மா துடனிங்கு வந்தன ரேனு நளிர்வரைமேல்
அம்மா தினைக்கழுக் குன்றத் தரன்மணந் தாங்குநம்மூர்
வெம்மா னனைய விழியை விதியுளி வேட்பவன்பர்
தம்மா நகரவர் தாய்வர மின்னே சமைத்தருளே. (௧)

செவிலிக்கு இகுளை வரைந்தமை உணர்த்தல்

370. அன்னா யுனக்கன்னை சொல்வகை செய்வ தழகெனினும்
பின்னை நடக்கை யுணரா தியம்பினள் பேதைபங்கின்
மன்னை விளங்கும் பிரான்கழுக் குன்றினம் மாதைமதன்
அந்நா ளியற்று மணவோகை தூத ரறைந்தனரே. (௨)

வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உணர்த்தல்

371. காத மணத்திடு பைங்குழல் பங்கிற் கலந்தருளாற்
போத மெனக்கு மளிப்போன் கழுக்குன்றிற் பொற்றொடியாய்

சீத மலர்ப்பொன்னை மன்னவ னன்மணஞ் செய்தசெய்தி
தூத ருரைத்தமை கேட்டுன் மகளின்று சொற்றனளே. (ந)

தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு இயம்புகென்றல்

372. தூரிய மேழுதற் பல்லிய மார்ப்பச் சுடரெரிமுன்
ஆரிய வேதியர் சேடைசெய் தாசி யறையவுற்றூர்
சீரிய வோகை கொளுமின்னை யான்மணஞ் செய்ததுளம்
கூரிய நுந்தமர்க் கோதரன் றேய்கழுக் குன்றணங்கே. (௪)

பாங்கி தானது முன்னே சாற்றியதுணர்த்தல்

373. மீன்குழல் பார்வைசொல் பங்கன் கழுக்குன்றின் மேன்மைபெறும்
ஆன்குழ லோசையி னுலைழைத் தோனன்ன வாண்டகையாய்
தேன்குழல் சீர்ப்பணி யாரமொ டுன்கைச்செம் பொன்புனைதல்
நான்குழன் மாமலர்த் தாரனைக் கோதின னுன்முனமே. (ரு)

25. உடன்போக்கு இடையீடு

நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன் செலவுணர்த்தி விடுத்தல்

374. நேயத் தவர்க்கருள் செய்வோன் கழுக்குன்றி னெஞ்சத்தன்பார்
ஆயத் தவர்க்குரை செய்வீர்மின் னூர்க்கழ காங்கற்பென்றித்
தேயத் தவர்க்குப் பணிவிடை செய்யத் தெறுங்கொடுந்தீப்
பாயத் தவர்க்கு மகல்வரும் பாலை படர்முறையே. (க)

தலைமகள் தன்செலவு ஈன்றாட்கு உணர்த்தி விடுத்தல்

375. எங்குற் றனளெனை யின்றுளென் றேங்கி யிடரினுளம்
பொங்குற் றழுதகண் ணீர்வெள்ள நீந்திப் புகலிலளாய்த்
தங்குற் றலமரு மன்னைக்கிவ் வன்பர்பின் சார்ந்தமைநீர்
அங்குற் றுரைமி னிறைகழுக் குன்றன்ன வந்தணிரே. (உ)

நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்

376. துவளொரு நூலிடை பாகன் கழுக்குன்றிற் றேன்றிப்பன்னுள்
எவளொரு சீர்மக ளாய்வர மாதவ மேய்ந்தனை நீ
அவளொரு கோவொடு மன்னுய் சுரஞ்சென் றனள்கவலேல்
இவளொரு சாலியச் சாலியொர் சாலி யெனச்சொல்லவே. (ந)

நற்றாய் அறத்தொடு நிற்றலின் தமர் பின்சேறலைத் தலைவி கண்டுரைத்தல்

377. செங்கதி ரோனைப் பொருவா னிருட்டிரள் சேர்ந்ததென
நங்கதிர் வேல்வலத் தண்ணலைக் கான்வர நண்ணியடர்த்
திங்கதிர் வா லுல கஞ்சச் சிலைக்கணை யேவிநிற்பார்
அங்கதிர் மூவிலை வேலோன் கழுக்குன் றகன்றுவந்தே. (௪)

தலைவியைத் தலைவன் விடுத்தல்

378. மேவா ரெனைவெதிர்ந் தாலோர் விளக்கிற்பல் விட்டிலென்ச்
சாவா ரதுவென் மிடலேனு நின்னையர் சாரினெஞ்சம்
ஓவா திரங்கலி னஞ்சுவ ளுதலி னூங்குச்செல்வாய்
கோவா யுலகெங்கு மாரும் பிரான்கழுக் குன்றிடத்தே. (ரு)

தமருடன் செல்வோள் அவன் புறம் நோக்கிக் கவன்று அரற்றல்

379. உருத்து நமன்வரற் கஞ்சுமென் னெஞ்சிற்ற ணெண்மலர்த்தாள்
இருத்து பெருமான் கழுக்குன்றி னென்பொருட் டென்னையர்மேற்
பொருத்து கருணையின் வெங்கிடு மண்ணல்பொற் றேர்ப்புரவி
மருத்து மலைகொணர் மாருதி போலென்றும் வாழியவே. (சு)

26. வரைவு

தலைவன் வரைந்துழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்

380. மடலெங்கு மார்மணம் போலுயிர் தோறும் வளர்கருணைக்
கடலெங்கு மோங்கு புகழ்க்கழுக் குன்றன்ன காரிகையை
மிடலெங்கும் வாழ்த்துமிவ் வேந்தன் மணஞ்செய் விதங்கணுற
உடலெங்குங் கண்படைத் தானில்லை மாலுந்தி யுற்றவனே.

27. இல்வாழ்க்கை

தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்

381. விடையே றியகழுக் குன்றர்க்கும் பாசம் விரவுயிர்க்கும்
இடையே திருவரு ணின்றின்பங் கூட்டிய தென்னமலர்த்
தொடையே புனையிந்தத் தோகையொ டென்னிடைத் தோன்றியன
நடையே யிருவர் தவம்போல வந்தின்ப நாட்டினையே. (க)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்

382. என்னையு மோர்பொரு ளாக வுரைப்பதெ னென்னையுமிம்
மின்னையு மெங்களோ டுங்கள் குலத்தையும் வீவதின்றிப்
பின்னையும் வாழச்செய் தாய்கழுக் குன்றிற் பிரானருளார்
உன்னையு நேர்பவர் யார்மன்ன வாழிபல் லூழியுமே (உ)

வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை வினுதல்

383. யான்முத லாகிய பல்லிடை யூற்றினிவ் வேந்தலைநீ
தான்முத லொடொட் டிதுகா றிடையிடை தான்மறித்துன்
ஊன்முதல் யாவு மொடுங்கவு மெவ்வா றுளித்துநின்றாய்
வான்முதல் வாழ்த்தும் பிரான்கழுக் குன்றொளிர் மான்பிணையே. ()

தலைமகள் வருந்தாதிருத்தற்குக் காரணங் கூறல்

384. முன்னு னகமலர் வோடு முகமலர் மொய்த்தநகை
தன்னு லினிதா மொழியுரைத் தாங்கென்றுந் தான்புகலிம்
மன்னு மவரன்பு கின்னது கேண்மையும் வாய்த்துயிர்தான்
இந்நா ளிருந்தது பெம்மான் கழுக்குன் றி னேந்திழையே. (௪)

பாங்கி தலைவனை வரையுநாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினாதல்

385. ஐவா யினுமிங் கிவளூட்டு மின்ப வமுதருந்தல்
செய்வா யொழியாய் கண்மு மிடையிடை தீர்ந்துமுன்னர்
நெய்வா யலர்மல ரோதியை யாற்று நிலையெவனே
பைவா யரவணி வோன்கழுக் குன்றன்ன பார்த்திபனே. (௫)

பாங்கி மணமனைச்சென்ற செவிலிக்கு இருவர் அன்பும் உரைத்தல்

386. ஓங்கா தரம்பெற நங்கழுக் குன்றி னுமையொருபால்
வாங்கா தமர்ந்தன்பு செய்யவின் பார்தரு வானவன்போல்
நீங்காத வன்புகொ ளுன்மக ளார்விக்கு நேயவின்ப
மாங்கா தலின்மகிழ்ந் துண்டு கணம்பிரி யானண்ணலே. (௬)

இல்வாழ்க்கை நன்று என்று செவிலிக்குணர்த்தல்

387. தனைக்காத்துத் தற்கொண்ட வற்பேணித் தேவென்று தாழ்ந்துறுசொல்
லினைக்காத்துச் சோர்வின்றி நற்குண நற்செய லேய்ந்துவந்தோர்
மனைக்காத்துப் பாகம் பெறவமைத் தூணில்லின் வாய்ந்தவறத்
துணைக்காத் தனளரன் றேய்கழுக் குன்றன்னை யுன்மகளே. (௭)

மணமனைச் சென்றுவந்த செவிலி பொற்றொடி கற்பியல் நற்றாய்க்கு உணர்த்தல்

388. மனைத்தக்க மாண்பு வளத்தக்க வீகை மகிழ்நனுண்ட
பினைத்தக்க வுண்டி துயின்றுற் றுயி றல் பெயர்முன்னெழல்
அனைத்தக்க வாரளி தெய்வத்திற் போற்ற லமைந்துநின்மான்
நினைத்தக் கவளென் றரன்கழுக் குன்றி னிறுத்தினளே. (௮)

செவிலி நற்றாய்க்கு மனைவாழ்க்கைத்தன்மை உணர்த்தல்

389. அடுவ தொருபுற மட்டவை வந்தோ ரருந்தமகிழ்ந்
திடுவ தொருபுறம் பின்வரல் பார்த்திட வேவலரை
விடுவ தொருபுற மிவ்வாறுன் மான்றிரு மேவினளால்
நடுவ தொருபுறங் கொண்டோன் கழுக்குன்றி னுயகியே. (௯)

செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தல்

390. பெத்தத் திரண்டெனி னுங்கழுக் குன்றிற் பிராணுடுயிர்
முத்தத் திரண்டெனக் காணரி தாகு முறைமையினென்
சித்தத் திரண்டுரு வென்பதல் லானின் றிருமகட்கும்
கத்தத் துவம்பெறு மன்னற்கும் வேற்றுமை கண்டிலனே. (௧௦)

28. பரத்தையிற் பிரிதல்

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கேது இதாம் அவ்விறைவிக்கென்றல்

391. அதுவே பொருளென மாலயன் மாதவ ரண்டர்க்குமாம்
சதுவே தெமுமறி யான்கழுக் குன்றன்ன தார்க்குரிசில்
மதுவே யலங்கற் பரத்தையர் பாடன் மகிழ்ந்தமையால்
இதுவே யிறைவி புலவிக்கோ ரேதுவி னேய்ந்திடுமே. (க)

தனித்துழி இறைவி துனித்தழுது இரங்கல்

392. துரகத் திருமறை யான்கழுக் குன்றன்ன தோன்றலெனைக்
கிரகத் திடையுற்று நீப்பதுண் டோவது கேட்டுமதன்
உரகத் தினைநிகர் தென்றலை யேவ வுருத்தென்னெஞ்சின்
விரகத் தழலை யெழுப்பவென் னுவி மெலிகின்றதே. (உ)

ஈங்கிதுவென்னெனப் பாங்கி வினுதல்

393. பிறைதான் வளர்ந்தென நாடொறு மன்பு பெருக்கியன்பர்
இறைதா னிகந்திட லின்றிநின் பால்வைக வென்னைமின்னே
மறைதான் புகழுங் கழுக்குன்றத் தீசரை வாழ்த்தலர்போல்
குறைதான் மனங்கொடு நீமிக வாடிக் குலைவதுவே. (ங)

இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்

394. பொன்னம் பொகுட்டம் புயக்கே சரநுகர் பூஞ்சிறைய
அன்னம் பசிக்குகண் மீனருந் தாவள மார்வயலூர்
மன்னம் புயத்தொடை வேற்று மணம்பெறன் மாவியப்பால்
இன்னம் பிறர்க்கரி யான்கழுக் குன்ஞெளி ரேந்திழையே. (ச)

தலைவியைப் பாங்கி கழறல்

395. தென்றி மலரின் மணஞ்சீதம் வவ்வுத றிண்ணமது
அன்றி மணமின் மலரினும் வீழு மரன்கழுக்குன்
றென்றி வளர்நிலை யல்லது மன்ன ருறினுமனம்
கன்றி வருந்தனின் கற்புக் கழகன்று காரிகையே. (ரு)

செவ்வணி அணிந்து சேடியை விடுத்தல்

396. சிவந்த மலர்த்தொடை பைங்குழல் சூட்டிச்செவ் வாடையுடீஇ
நிவந்த முலைக்குங் குமம்பூசி யென்னிடை நீடும்வினைத்
துவந்த மகற்றும் பிரான்கழுக் குன்றன்ன தோன்றலுளத்
துவந்த பரத்தை மனைச்செல வோர்மின்னை யுய்க்குவனே. (சு)

அவ்வணி உழையர்கண்டு அழுங்கிக் கூறல்

397. எவ்வணி சீரிதென் றிந்துவை யேய்ந்தர வென்புமணி
வெவ்வணி யார்கழுக் குன்ஞெளிர் மான்கற்பின் மேவொழுக்கத்

தவ்வணி யேமகிழ் மன்னர் மயங்கு மணியர் தம்மிற்
செவ்வணி காணுறிற் றெவ்வணி யாமென்று சீறுவரே. (எ)

பரத்தையர் கண்டு பழித்தல்

398. ஆவணங் காட்ட வழக்காடு நம்பி யலமரவென்
றேவணங் காட்டி கழுக்குன்றி ஞண்சற் றிலாதவள்செம்
மாவண்ங் காட்டனங் கோவவர் வாயின் மருவுசெய்ய
பூவணங் காட்டுமப் பொன்னனை யாளைப் புணர்பொருட்டே. (அ)

வரவுகண்டு வந்து வாயில்கள் மொழிதல்

399. கடுவார் களன்கழுக் குன்றன்ன வன்பர்பைங் காய்க்கதலி
நடுவா ரரசொன்று பூத்த வியப்பினை நாடியுடன்
வடுவார் விழியாய் பரத்தைய ரின்னின்றும் வந்தமையால்
விடுவா ரலரவர் வாய்மையும் மென்மையும் வேட்கையுமே. (கூ)

தலைமகன் வரவு பாங்கி தலைவிக்கு உணர்த்தல்

400. மாலைச் சிவப்புறு சேடியைக் கண்டுநின் வாயில்வந்த
காலைச் சிவப்புறல் சீரிதன் ருற்கரு தார்களத்தில்
வேலைச் சிவப்புறச் செய்வோர்மு னன்பொடு மேவுதிவேள்
கோலைச் சிவப்புற வேவவட் டார்கழுக் குன்றணங்கே. (கഠ)

தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்

401. ஒருவுறின் வந்திடு மூடனங் காயன்ப ரோங்குமில்வாய்
மருவுறி ஞென்றிடு மேற்கண நின்சொன் மறுத்திடலாம்
வெருவுறி னங்கெனை யாள்வோன் கழுக்குன்றின் மேவுமென்கண்
உருவுறின் முந்து மகிழ்வெனி னெங்ஙனு னுறுஞ்சினமே. (கக)

புணர்ச்சியின் மகிழ்தல்

402. துன்ப மகல்கழுக் குன்ற ரருட்பதத் தொன்மலரார்
இன்ப மெனுநறை யுண்ணு மடியா ரிதயவண்டின்
அன்ப தமையு மெளியேன் கலந்திரண் டற்றுடலோ
டென்ப துருகுறு மின்பமிம் மான்றர வேய்ந்தனனே. (கஉ)

வெள்ளணியணிந்து விடுத்தல்

403. கருமா னுரியார் கழுக்குன் றனைய கணவற்கிந்து
பொருமா துடைமுல்லை மாலைமுத் தாரம் புனைந்தொர்பொன்னை
இருமா னனவிழிச் சேரிப் பரத்தைய ரிற்கணுய்ப்பாம்
அருமா தவமோர் குழவியின் வந்த தறிவிக்கவே. (கங)

வெள்ளணிஅணிந்து விடுப்புழிப் புள்ளணிமாலைவேலண்ணல் வாயில்வேண்டல்

404. என்வய மன்றி வருபிழை யாதலி னேந்திழையென்
றன்வய மொன்றி யெதிர்கொள்ளு மாறு தகவுரைப்பாய்
நின்வய நின்றிடு நெஞ்சின னென்று நினையிரந்தேன்
மின்வய மொன்று பிரான்கழுக் குன்றுளிர் மெல்லியலே. (கச)

தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்

405. வேய்பெற்ற முத்தொரு பாற்கழுக் குன்றின் விளங்குபச்சைத்
தாய்பெற்ற சேயி னிருவீருஞ் செய்த தவத்தின்வந்த
சேய்பெற்ற வாட்டத்தி னெய்யா டினளவட் டேர்ந்தநின்றால்
நோய்பெற்ற சிந்தையு முற்றனண் மன்னு நுணுகிடையே. (கரு)

தலைவன் தன்மனத்து உவகை கூர்தல்

406. மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன் நன்கலமாம்
அங்கல மாகிய நன்மக்கட் பேறெனல் யானடைந்தேன்
இங்கல மந்து பவத்திடை நையா தெனக்கருள்செ
யுங்கல னாரும் பணிகழுக் குன்றர்க் குறுமன்பினே. (கசா)

தலைவிக்கு அவன்வரல் பாங்கி உணர்த்தல்

407. நின்பா லுவகை செயுங்கிளி வெங்கா னிடைநடந்துன்
அன்பான் மிகவும் பினும்வரு மாயி னகற்றுவதோ
மின்பால் வளர்பரன் றேய்கழுக் குன்றின் விளங்கிழையுன்
றன்பான் மிகவுறல் கேட்டன்பர் வாயினிற் சார்ந்தனரே. (கஎ)

தலைவியுணர்ந்து தலைவனொடு புலத்தல்

408. ஒழுங்குரல் வாய்ப்பிணிப் புண்டோன் பணியு மொருவன்றினைக்
கொழுங்குர லார்கழுக் குன்றிற் பணைத்தோட் குலப்பரத்தை
செழுங்குர லாதியோ ரேழிசைப் பாட்டார் செவிக்கென்பிள்ளை
அழுங்குரல் கேட்டு மகிழ்வெய்து மோவந்த தற்புதமே. (கஅ)

பாணன் முதலாப் பாங்கனீருப் பேணிய வாயில்கள் பெரியோன்
விடுத்துழித் தலைமகள் மறுத்தலுட் பாணன் மறை

409. பூம்போதி னாரண னாரணன் விண்ணோர் புழுங்கிநஞ்சாற்
கூம்போதி னாளும் பிரான்கழுக் குன்றன்ன கொற்றவர்பால்
யாம்போதி யென்ன விடாதெம்முன் பாண விசைக்குமிசைக்
காம்போதி வேசையர்க் காம்போதி யன்னோர் கடைத்தலைக்கே. (கக)

பாணன் கூறல்

410. வசையாண்ட வன்கண்ணர் காணார் கழுக்குன்ற மன்னவருன்
மிசையாண்ட காதன் மகனேயும் வாயிலின் மேவவெட்டுத்

திசையாண்ட வன்னோர் பணியாற் புகழுவன் சீர்த்தகற்பின்
இசையாண்ட நீயென் னிசையாண் டிடாவித மென்னையன்னே. ()

விறலிவாயில் மறை

411. விடக்கு நுகரு மதியோ தமைப்புகழ் மேன்மையின்றூர்
தொடக்கு விடாதவர் போதனை யோவன்பர் தொல்வினைவேர்
இடக்கு மவர்கழுக் குன்றுறு மென்மு னெதிர்ந்துகொன்று
அடக்கு முடைவாய் விறலிநின் பாடலு மாடலுமே. (உக)

கூத்தர் வாயில் மறை

412. ஆட்டத் தருமை யதுவே பயின்றுகற் பார்மடவார்
வாட்டத் துறவவ ரன்பரைத் தம்வயம் வாய்ப்பமயல்
கூட்டக் கணிகைய ரோர்வர்நற் கூத்தவிக் கூத்தவர்பாற்
காட்டக் கணிவோன் கழுக்குன்றி னெம்மிடைக் காட்டியென்னே()

பாங்கி வாயில் மறை

413. கிள்ளையைக் கண்டைவெலுஞ்சொலென் றன்பு கெழீஇப்பரத்தைக்
கொள்ளையைக் கண்டவ ரேவவந் தார்கழுக் குன்றர்பெற்ற
வள்ளையைக் கண்டடர் சேல்விழி வள்ளி மணாளனன்ன
பிள்ளையைக் கண்டென்னை தள்ளையைக் கண்டென்னைபேதைமின்னே.

விருந்தொடு வந்துழிப் பொறுத்தல் கண்டு தலைமகன் மகிழ்தல்

414. கையிற் சிசுவும்பொன் மேனிப் பசுமையுங் காலுநெய்யின்
மெய்யிற் கசிவு நொசிவு மிடைமுலை மேற்பயமும்
பையிற் பொலியல்கு லாட்காண வின்று படர்விருந்து
மையிற் பொலிகழுக் குன்றர் கருணையின் வாய்த்ததுவே. (உச)

தலைவன் புதல்வனைக் காண்டல்

415. வானின் புறவவி யாற்கழுக் குன்றத்தின் வாழிமையோர்
கோனின் புறவழி பாட்டான்மெய் யந்தணர் கோதில்குழாம்
தானின் புறவருள் பொன்னுற் கவினுருந் தாமின்புற
யானின் புறவென் றவமணி கண்டின் றெடுத்தனனே. (உரு)

பாங்கி மகப்பொறை கூர்ந்த வண்ணம் உரைத்தல்

416. கண்கள் குழிந்தன கண்கள் முலையிற் கறுத்தனசீர்ப்
பண்கள் புரைமொழி வாய்விளர்த் தங்கம் பசந்ததுதேன்
உண்கள் வழிகொன்றை யான்கழுக்குன்றெழி லுற்றதிடை
பெண்கள் சிகாமணி பிள்ளை வயிற்றிற் பிறந்தவன்றே. (உசு)

பள்ளியின் அழுங்கல்

417. சுகங்காட்டு மென்மொழி பாகர் கழுக்குன்றிற் றேன்றுமின்னே
முகங்காட்டு மாரரு ணேக்குமின் சொல்லு முகிண்முலையும்

இகங்காட்டு மின்பந் தருமென வெண்ணு மெனக்குளத்தன்
பகங்காட் டிடாது புறங்காட்ட லென்னிவ் வமளியினே. (உஎ)

தலைமகளொளித்த வூடல் பள்ளியிடத்து வெளிப்படத் தலைமகனேக்கிச் சீறேலென்றவள் சீறடி தொழுதல்

418. போதா ரமளியி னீதா ரகமெனப் போந்தனனென்
மீதா ரருள்செய்முன் றீதார வோர்ந்து வெகுளலையுன்
தாதா ரடிகளிப் போதார வந்திப்பன் ருழ்ந்திரப்போர்
கோதா ருருதரு ளாதாரர் சீர்க்கழுக் குன்றணங்கே. (உஅ)

இஃது எங்கையர் காணின் நன்றன்றென்றல்

419. அனக்கிளை யாத நடைபாகர் வேதவெற் பாரடிதாழ்
மனக்கிளை யாத பெரியோயென் ருளை வணங்கலென்னே
உனக்கிளை யாத விகபர போக முதவுநலம்
தனக்கிளை யாத வெனக்கிளை யாரறிந் தாற்சழக்கே. (உகூ)

அங்கவர் யாரையும் அறியேனென்றல்

420. பின்னல தாரும் பிறைக்கழுக் குன்றிற் பிரானடிபுக்
கின்னல தியாவு மிகந்தின்ப மேய்வா ரிடர்விடயம்
மன்னல ராயுறல் போலவெ னெஞ்சின் வளருமின்னே
நின்னல தியாரையும் யானறி யேனிந்த நீணிலத்தே. (௩௦)

காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்

421. யானின் றமையுண ராதுநின் சாய லியைந்தமணி
தானின் றதுகண் டெடுத்துச்சி மோப்பத்தங் காயுன்மக
வானின் றலமர லென்னேயுன் னில்லிது வாவெனவம்
மானின் றுடைந்தகன் ருள்கழுக் குன்றரை வாழ்த்தண்ணலே. (௩க)

தாமக்குழலியைப் பாங்கி தணித்தல்

422. முன்னுட் சிறப்புறு நீயுர மார்த்துமிம் மொய்ம்பன்மயல்
பன்னுட் பிணிப்ப விருந்தைக் குழன்றமை பார்த்துமலை
மின்னுட் களிக்குமொர் பங்கார் கழுக்குன்றர் மெய்யருளால்
அந்நாட் பொறுத்தென விந்நாட் பொறுத்திகற் பாரணங்கே. (௩உ)

தாமக்குழலி தணியாளாகத் தலைமகன் ஊடல்

423. எத்தனை யோவிதத் தாலுனக் கின்சொ லிசைத்துமுயிர்
சித்தனை யாவடி தைவந்து வந்தித்துஞ் சீருளெள்
ளத்தனை தானின்று நன்ருமின் ருேரணங் காயினையே
கத்தனை யாருங் கழுக்குன்றன் ருய்பொற்புன் கற்பினுக்கே. (௩௩)

பாங்கி அன்பிலை கொடியை என்று இணர்த்தார்மார்பனை இகழ்தல்

424. பொருளளிப் போன்புணர் காலையெப் போதிவன் போமிகவும்
பொருளளிப் போனுறு மென்றுணர் வோரைப் பொருளென்றின்பப்
பொருளளிப் போரை யிகழ்த லுனக்கே பொருந்துமுத்திப்
பொருளளிப் போர்கழுக் குன்றனை யாய்செல்க போமிடத்தே. (உஉ)

காமக் கிழத்தி வாயில் வேண்டல்

425. இருமனங் கொண்டவர் போலுமென் போலுமன் றேயிருகற்
பொருமனங் கொண்டவுன் மாண்பினுக்கூட லுருதுளத்திற்
பொருமனங் கொண்டல னையகை யன்பர் புகாதருளே
திருமனங் கொண்ட பிரான்கழுக் குன்றன்னை சேர்ந்தருளே. (உங)

பாங்கி வாயில் நேர்வித்தல்

426. நாடு தமக்கென் றிருந்து மயற்புல நாடல்விறல்
கூடு மவர்க்கியல் பாகுநின் னன்பர்தங் கோளுமற்றாய்
நீடு மதற்கிவ ணூடிப் பசந்துட னீவருந்தில்
வாடு மெழிற்குட்ட னெம்மான் கழுக்குன்றின் வாணுதலே. (உச)

ஆயிழை மைந்தனும் ஆற்றுமையுமே வாயில்களாக வரவெதிர் கோடல்

427. நாமினி யூடல்செய் தாவதின் றுலன்பர் நம்மகவைத்
தாமினி தாய துணையென வெய்தலிற் சார்ந்தெதிர்கொண்
டியாமினி நேர்களத் தார்கழுக் குன்றி னெழின்மயிலே
தோமினி லாவடி போற்றியின் பாற்றியிற் றேற்றுதுமே. (உரு)

**மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடு இணங்கிய
மைந்தனை இனிதிற் புகழ்தல்**

428. பெற்றவர்க் குற்ற துயர்நீக்கி யின்பம் பெருக்கிடுவோர்
உற்றவர்க் குற்ற பகைக்கஞ் சனைவெல்லு முத்தமனும்
அற்றவர்க் குற்ற துணையாநஞ் சேயுமென் றுய்ந்துணர்ந்தேன்
கற்றவர்க் குற்ற புகலார் கழுக்குன்றிற் காரிகையே. (உகா)

தலைவி தலைவனைப் புகழ்தல்

429. ஆலையி னூட்டு கரும்பிர தந்தரு மாறெதிர்ந்த
வேலையி னூற்று புலவி துயரம் விளைப்பவுமக்
காலையி னூட்டிய வன்பாலின் பெண்ணுளங் காணச்செய்தார்
மாலையி னீட்டர வார்வோர் கழுக்குன்றின் மன்னவரே. (உஎ)

சிலைநுதற் பாங்கி மனைவியைப் புகழ்தல்

430. மருந்ததி ராமுதி வரநுகர் வோரண்டர் வாழுமனைத்
தருந்ததி யார்மால் புகழ்வோர் கழுக்குன்றிற் றூர்மன்னுற்

பொருந்ததி சோகம் பிழைபொறுத் துள்ளன்பு பூண்டமையால்
அருந்ததி நீயெனற் கையமின் ருலென் னருந்தவமே. (உஅ)

29. கல்விப் பிரிவு

கல்விப்பிரிவு தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்

431. கல்விப் பொருள்பெற் றுளோர்கழுக் குன்றர் கழலிணைக்கண்
கல்விப் பொருளின்மெய் தீர்மாலை சூட்டுங் கருத்தலதக்
கல்விப் பொருளின் முதலுயிர் சேரின்பங் காண்பரென்ருற்
கல்விப் பொருளுக் கதிகமின் னேயில்லை காசினிக்கே.. (க)

கல்விப் பிரிவுரைத்த தலைவனைப் பாங்கி விலக்கல்

432. நோயிழை வெம்பவ நீப்பான் சிலந்திதன் னுண்ணிய நூல்
வாயிழை பந்தர் மகிழ்வோன் கழுக்குன்றின் மன்னமுன்னுன்
காயிழை யுய்ந்திடச் செய்யும் முனிவர னுமெனவெம்
சேயிழை யுய்ந்திடும் விஞ்சையுண் டேற்கறகச் செல்லுகவே. (உ)

தலைவன் பாங்கியை உடன்படுத்தல்

433. திருமக ளால்வரு மின்பங் கழுக்குன்றர் சீறடிதாழ்
மருமக ளால்வரு மின்பநன் மக்கட்கு வாய்ந்திடுமால்
திருமக ளால்வரு மின்பநின் னுலென்றுஞ் சேர்ந்தனனம்
மருமக ளால்வரு மின்பமின் றேவில் வருமயிலே. (ந)

பாங்கி உடன்படுதல்

434. அனத்திற் குணங்கொண்டு குற்றத்தை நீக்கு மடக்கமொன்
மனத்திற் றுயர தகற்றுங் கழுக்குன்ற வாணர்க்கன்பர் [றும்
இனத்திற் செறிக்கு மொழுக்கந் தருமென்று மின்பஞ்செய்யும்
கனத்திற் றிகழ்கரத் தாய்கல்வி யென்னிற் கழறியென்னே. (ச)

பாங்கி தலைவிக்கு அறிவுறுத்தல்

435. ஆடலி னைந்தொழி லாற்றுங் கழுக்குன் றமலன்முன்னுட்
கூடலி னுய்ந்த தமிழ்ப்பாற் கடலிற் குளித்துநெஞ்சின்
வீடலி லின்பா ரமுதயில் வானின்று மேவினரால்
ஓடலி னீடர வல்குனல் லாயுன் னுளத்தன்பரே. (ரு)

கல்விக்குப் பிரிந்துழிக் கார்ப்பருவங்கண்டு தலைவி வருந்தல்

436. கருகா நமனி லிடித்தவ னூர்ப்பிறகண் கால்கனல்போற்
பெருகா மிகுமின் னெடுமுகில் கொண்கார்ப் பிரிந்தவரைப்
பருகா வுயிர்வரின் வேம்பாவி யாவி படாதுய்யுமோ
உருகா துளமரு வார்கழுக் குன்றன்ப ரொன்றிலரே. (சா)

தலைவியைத் தோழி ஆற்றுத்தல்

437. ஆசகல் கல்வி யறிவிற் கிலாபங்கொல் லாமையென்றே
காசக லுள்ளத் துணரன்ப ரிம்மழைக் காலத்தினின்
தேசகல் வெய்தி யழிவ துணர்ந்தின்று சேர்வர்கண்டாய்
மாசக னல்லோர் புகழ்வார் கழுக்குன் றின் வாணுதலே. (எ)

30. காவற் பிரிவு

தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்

438. தருமந் தவறு தொழுகவென் ளுட்டிடைச் சார்பகைஞர்
மருமந் தவறு தொழுகநெய்த் தோரவண் வாய்ந்திறைமை
கருமந் தவறு தொழுக வளிப்பன்மைக் கண்டர்பைந்தேன்
துருமந் தவறு தொழுகு கழுக்குன் றிற் ருேய்மயிலே. (க)

பாங்கி தலைவிக்கு அறிவுறுத்தல்

439. புரவல ரென்கை தகவுயிர் காத்துப் பொருநரென்கை
கரவல ரென்று புகழப் பகைக்களை கட்டுமகிழ்
விரவல ரொன்ற வருள்வான்மண் காவற் கிகந்தனர்பூங்
குரவலர் பைங்குழ லெம்மான் கழுக்குன் றிற் கொற்றவரே. (உ)

காவற்குப் பிரிந்துழித் தலைவி கூதிர்ப்பருவங் கண்டு வருந்தல்

440. குளிர்தரு காற்றெனுங் கூற்றங்கொண் மூவெனுங் கூட்டினெஞ்சி
ஒளிர்தரு மம்பி னெனதாவி யுண்பானுறமலைமான்
மிளிர்தரு பாகர் கழுக்குன் றனையநம் வேந்தரென்னே
தளிர்தரு மெல்லிய லாய்நாடு காப்பத் தணந்ததுவே. (ந)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்

441. அன்னு யுனக்குயி ரன்னுர்தந் நாட்டி னவர்க்களித்தும்
ஒன்ன ருடலுயிர் மன்னு தகல வொறுத்துமகிழ்ந்
திந்நா ளுறுமுறை யென்னு லுரைப்பரி தேய்ந்தொருபால்
மின்னு ருருவினர் பொன்னுர் கழுக்குன் றின் மேன்மைபெற்றே. (ச)

31. தூதிற் பிரிவு

தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்

442 கதிருடல் போழ்ந்துவெங் கல்லிடை நிற்பான் கருதியிடி
உதிருட னுந்தகத் தாரிரு வேந்த ருடலகின்றூர்
சதிருடன் யான்சந்தி செய்திட வேண்டுமோர் தாழ்குழல்பால்
முதிருட னண்பர் கழுக்குன் றன் னுட்கு மொழிதிமின்னே. (க)

தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்

443. வேந்த ரிருவ ருகாந்தவெள் ளத்தின் விரவுபுபன்
மாந்தர் கரிபரி தேருடன் கூட மலைதற்குற்றூர்
சாந்தர் புகழ்பரன் சார்கழுக் குன்றெளிர் தாழ்குழனின
காந்த ரதுதவிர்ப் பானகன் றூர்முன்னைக் காதலினே. (உ)

தூதிற்குப் பிரிந்துழித் தலைவி முன்பனிப்பருவங் கண்டு வருந்தல்

444. குனிக்கு மணிமன் றுடைய பிரான்கழுக் குன்றுறுமுன்
பனிக்கு வருந்தியென் னுவி மிகவும் பதைக்குமிந்தச்
சனிக்கு மருந்தொன்று காணே னெனைத்தணந் தாரிரதம்
தொனிக்கு மணியொலி கேட்கின்மின் னேயுயிர் தோன்றிடுமே.(௩)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்

445. தூதின் பொருட்டகன் றூரெவ் வணமிங்குத் தோன்றுவரேரார்
மாதின் பொருட்டென் றயரே றருமி வழுத்திடவோர்
வாதின் பொருட்டுவந் தார்கழுக் குன்றெளிர் மானுன்முலைச்
சூதின் பொருட்டிக் கணம்வந்து தோன்றுவர் தூநகையே. (௪)

32. துணைவயிற் பிரிவு

தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்

446. நொச்சி புனைந்துநள் ளாரெயில் காப்பவந் நொச்சிகொள்வான்
நச்சி யடைந்தொரு மன்ன னெமக்குறு நண்புடையான்
உச்சி புனைந்தனன் வஞ்சி யவற்குற் றுதவச்செல்வேன்
கச்சி யமர்ந்தோன் கழுக்குன்றன் னுய்சொல்லுன் காரிகைக்கே.(க)

பாங்கி தலைவிக்கு அறிவுறுத்தல்

447. போரி னிலாவுமோர் மன்னர்க் குதவிப் பொருட்டிவுளித்
தேரி னிலாவுநி னன்பர்சென் றூர்மறைத் திண்கிரிவாழ்
காரி னிலாவு களத்தா ரருளன்ன காரிகையாய்
பாரி னிலாவுமொன் றுரென்ன பாடு படாரினியே. (உ)

துணைவயிற் பிரிந்துழிப் பின்பனிப்பருவங் கண்டு தலைமகள் வருந்தல்

448. உரத்துட னுவுற் றிதழ்க்கத வாயிர மொன்றுமனைத்
திரத்துட னூர்ந்துந் திருக்கழுக் குன்றிற் சிவனொருபால்
வரத்துடன் மேவியும் பின்பனி நாளுயிர் வாய்ப்பரெவர்
கரத்துட னுவிகொண் டுய்வேன் வராவிடிற் காவலரே, (௩)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்

449. அன்னு யிரங்கலை நின்னு யகனம ராரைவென்று
தன்னு தரமுறு மன்னு னவன்மகிழ் சாரச்செய்து

பொன்னு ரணிமணி மின்னு ரிரதம் பொருகரிமா
இந்நா ளடைந்துமை மன்னுர் கழுக்குன் றிறுத்தனனே. (ச)

33. பொருள்வயிற் பிரிவு

தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்

450. பொன்னே புணர்தற் கமைய மிதுவெனும் போதுகண்ணீர்
மின்னேய் முலைவிழ மெய்ம்மற வாமுன மெய்ம்மறந்த
தென்னே யெனத்தெளித் திரப் புனல்கொ டெழுப்பவிம்மெய்
முன்னேய தோவெனு மெம்மான் கழுக்குன் றின் மொய்குழலே.(ரு)

பாங்கி தலைவிக்கு அறிவுறுத்தல்

451. ஞானச் செயலினர்க் கெட்டுணை யாயினு நன்களிக்கும்
தானச் செயலழி யாவின்ப முத்தி தருநடுநின்
றீனச் செயலறு முன்பின் றரும்பொரு ளென்றுனன்பர்
மோனச் செயலோர் கழுக்குன் றன் ணுய்செல்வர் முற்றுதற்கே. (சு)

பொருள்வயிற் பிரிந்துழித் தலைவி இளவேனிற்பருவங் கண்டு வருந்தல்

452. கூற்றுவன் றூத ரழல்வாள்கைக் கொண்டறை கூவுதல்போல்
தோற்றுவன் கோகிலங் கூவுமிம் மாந்தளிர்ச் சூழலினெங்
காற்றுவன் பாவியிங் காரிள வேனிலை யன்பர்மலம்
மாற்றுவன் சூலத் தரன்கழுக் குன்றன்பர் வந்திலரே. (எ)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்

453. மயங்குவ தென்னைகொ லெம்பெரு மாட்டி மலையத்தென்றல்
இயங்குவ துள்ளத் துணர்ந்தே பொருள்விரைந் திட்டுபுநீ
உயங்குவ திவ்விள வேனிலிற் றீர்ப்பா னுறுவர் பங்கின்
வயங்குவ தாகுமம் மானுர் கழுக்குன் றின் மன்னவரே. (அ)

தலைவன் வந்தமை பாங்கி தலைவிக்கு உணர்த்தல்

454. ஈர்த்தி பவத்தினைச் சேர்த்தி யருளென் றிறைஞ்சுசுர்ச்சேர்
மூர்த்தி கழுக்குன் றிற் றூர்த்தி கழுமென் முகிண்முலையாய்
சீர்த்தி பெறநின தார்த்தி யறவந்து சேர்ந்தனர்நீ
பார்த்தி முகிழ்ப்புடல் போர்த்தி வணங்குநம் பார்த்திபற்கே. (கூ)

தலைவன் வந்துழி மகிழ்ச்சி

455. பொங்கிப் பரந்த சுகானந்த வெள்ளப் புதுப்புனல்வாய்த்
தங்கிச் சிறந்து குளித்துக் களித்துத் தழைத்தனளோர்
பங்கிற் றிகழ்ந்த பரையார் கழுக்குன் றிற் பார்த்திபநீ
இங்கித் திருந்திள வேனிலிற் றேர்மிசை யெய்தக்கண்டே. (கo)

முற்றும்

குறிப்புரை

காப்பு

திங்களணி செஞ்சடையோன் ; திங்களணி கழுக்குன்று எனலுமாம். வார் - கச்சு. தாருறுகோவை - ஒழுங்கையுடைய கோவை யென்னும் பிரபந்தம்; மாலைபோன்ற கோவை யென்பதும் பொருந்தும். மதம் கரிய நிறமுடையதாதலின் காருறு மும்மதம் என்றார் ; அதனைக் கற்பகத்திற்கு அடையாக்கலும் ஒன்று. நால் வாய் - தொங்குகின்ற வாய். கற்பகம் என்றது இங்கே விநாயகரை.

கற்பகம் கோவை புனைய நாவில் தழைத்தருளும். நான்காவ தடியில் எண்ணணி வந்தது.

1. வண்டு செறிகஞ்சம் : கண்களையுடைய தாமரைபோன்ற முகம். ஆம்பல் : வாய். சிலை : புருவம். குவளை : கண்கள். சண் பகம் : மேனி. இளநீர் : நகில். காந்தள் : கை. ஐந்திணைக் கோவை யாகிய இந்நூலின் முதற் செய்யுளில் ஐந்திணைக் கருப்பொருளும் விரவி வந்தன. குறிஞ்சிக்குரிய குவளையும் காந்தளும், பாலை மறவர் கைக்கொண்ட சிலையும், முல்லைக்குரிய சண்பகமும், மருத நிலக்கருப்பொருளாகிய கஞ்சமும் ஆம்பலும், நெய்தலுக்குரிய இளநீரும் வந்தமை காண்க.

2. மலரோ என்றது திருமகளோ கலைமகளோ என்னும் நினைவுபற்றி. மலை வரையரமகளிரோவென்னும் ஐயத்தையும், அலை நீரரமகளோவென்னும் ஐயத்தையும் விண் தெய்வமகளோ என்னும் ஐயத்தையும் குறிப்பித்தன. பெண் என்றும் ஆண் என்றும் தேவர்கள் பேசுவதற்கரிதாகிய இயல்பையுடையவன். இவர் இடம் மண் முதலியனவோ என்க.

3. விழி இமைத்து இவள் மானிட மகள் என்பது அறி வுறுத்தி நமது ஆவியை உய்வித்தன. அடி மண்ணில் அமைத்துக் கண்ணைக் குளிர்வித்தன. தார் உலர்ந்தது - மாலை வாடியது. உடலின் முகிழ்ப்பு - திருமேனியில் தோன்றிய புளகம் ; என்றது வேர்வையையும் உளப்படுத்தியபடி. நெஞ்சே, இத்தையல் அணங்குஅல்லள்.

விழி இமைத்தலும் அடி மண் தோய்தலும் தார் வாடுதலும் உடலின் முகிழ்ப்பும் தலைவி மானிட மகள் எனத் தெளிதற்குக் காரணமாயின.

4. நூற்கடல் யாவும் நுவன்ற வல்லால் - மிகுதியான சாத்திரங்கள் எல்லாம் சொல்லிய பொருள்களையன்றி மற்றவற்றை. விதி நூலுக்குப் புறம்பானதைப் பாரோம் என்றமையின் தலைவியைக் கண்டது ஊழ்வினைவயத்தால் என்பது பெறப்பட்டது; "ஏகு நல்வழி யல்வழி யென்மனம் ஆருமோ" (**கம்ப. மிதிலைக். 147.**) மறைக்கழுக்குன்று என்று கூட்டுக; வேதகிரி என்பது அதன் திருநாமம். அம்மான் - சிவபெருமான். அம்மான் இம்மான் என்றது ஒரு நயம். சேற்கு அடல் நீக்கின நோக்கம் - சேல்மீனினது வலியைப் போக்கின கண். நோக்கம், பயந்தது என்று தரிசித்தனம். விடமென்றது பொதுப் பார்வையையும் அமுதென்றது குறிப்புப் பார்வையையும் ஆம்.

5. அளி - அன்பு, வண்டு. தனம் - செல்வம், நகில். ஒளி - புகழ், மேனி விளக்கம்.

6. சிலை வாங்கி - மலையை வில்லாக வளைத்து; சிலை - மலை. எயில் - திரிபுரங்களை. இம்மான் என்றது தலைவியை.

7. கரு - பிறப்பு; ஆகுபெயர். கனம் - மேகம். கண்ணுகிய அம்பு; கண் என்றது இங்கே பார்வையை.

8. நேரிழையார் - தோழியர். அவர் கரத்தைப் பிடித்து நீர் குலாவுதல் இன்றி. வஞ்சியின் - வஞ்சிக்கொடிபோல. வாய் முகிழ்த்து - வாயை மூடிக்கொண்டு.

9. மறையந்தம் - உபநிடதம். மின் என்றது தலைவியை. இசையுற்ற - சங்கீதத்தைப் பொருந்திய; புகழையுடைய என்பது தொனி. நடு நிலை குன்ற - இடையினது நிலை குறையும்படி. வண்டுகள் கூந்தலின் மேல் மொய்த்தலினுல் பாரம் மிக்கு இடை தாங்காது குறையும் என்பது தலைவன் கருத்து. புகழையுடைய நீங்கள் நடுநிலைமை கெடுமாறு காரியம் செய்தல் நன்றன்று என்னும் பொருளும் தோற்றியது ஒரு நயம்.

10. மயிலே, மின்னே என்னும் விளிகளை ஒருங்கு கூட்டுக. நாகம் - யானை. எதிர்போது - தன்னை எதிர்த்தபோது. ஆராது - அடையாமல். ஆகம் மஞ்சு ஆர்தரும் ஓதி நிகழ் அடி ஆர் நடுசேர் தாகம் உடையேற்கு-ஆகத்தையும் மேகத்தைப்போன்ற குழலையும் நடக்கும் அடியையும் பொருந்திய இடையையும் ஒருங்கே தொட்டுப் பயிலும் ஆவல் உடைய எனக்கு; அது-மெய்தொட்டுப் பயிறலை. ஆகமத்தைச் சார்ந்த ஞானம் உலவுகின்ற அடியார் கூட்டத்திற் சேரும் ஆவலையுடைய எனக்கு என வேறொரு பொருள் தோற்றியது; ஓதி - ஞானம்.

11. திரை - இங்கே கங்கை. உம்பர் பெண்டிரை - தெய்வ மகளிரை. சந்திரன் உம்முடைய முகத்தைப்போன்று ஒளிபெறும் பொருட்டுக் கடலிலாடியும் உலகை வலம் வந்தும் திரிகின்றான் என்றான். கடலாடுதலும் உலகை வலஞ் செய்தலும் விரத வகைகள்.

12. வேது - ஒற்றடம்; "தங்குகண் வேல்செய்த புண்களைத், தடமுலை வேதுகொண் டொற்றியே" (**கலிங்கத்துப்பரணி.**) செல்வி : விளி. சொல்லின், என்னையாளுகின்ற இடம் இதுவே.

13. கோளாக மலர்ந்த திங்கள்; கோள் - கிரகம். கூரளி - மிக்க வண்டுகள். தண்டலை - சோலை. படர்கின்ற நாள் மலராலும் மாவின் நறிய மலராலும் ஒளிர்கின்ற நன்மையைப்போல என்னுடைய நாணம் மலர்கின்ற ஆன்மாவாகிய நறிய தளிரைக் காத்தருள்வாயாக. நாணம் காரணமாக வழிபாடு மறுத்தமையின் தன் உயிரை அதனோடு புணர்த்தி நாண்மலரான்மா என்றாள்.

14. துப்பு - பவளம். அப்பு என்றது கங்கையை. செப் பென்றது நகிலை. கண்கட்டு வித்தை - கண்ணை மூடிக்கொண்ட திறமை. நாணிக் கண்புதைத்த தலைவியை நோக்கித் தலைவன் கூறியது. கண்கட்டு வித்தை செய்பவர்கள் செப்பிடு வித்தையும் செய்வது மரபாயிருக்க அதற்கு மாறாக நீ செப்பைக் கைவிட்டாய் என்று வேறும் ஒரு பொருள் தோற்றியது நயம்.

15. உக்கம் - இடபம். இடப வாகனமும் கையம்பும் மனைவியும் ஆகத் திருமால் சிவபிரானுக்கு அமைந்தார். ஒரு மலர்க்கு - ஆயிரம் மலர்களுள் விட்டுப்போன ஒரு மலருக்காக. சக்கு - கண். இக்கு அங்கைக் கொண்டவள் - கரும்பை அழகிய கையில் ஏந்திய உமாதேவியார். அக்கம் கையாடினர் - கண்ணைக் கையினாலே பொத்திக்கொண்டவர். சொற்கம் கையாடா அமைவு - நகில்மேற் கைவைத்து மறையாமல் இருத்தல். அந்தக் கங்கைமாநதியில் நீராடினவர் சொர்க்கத்தைப் பெறாமல் இருத்தல் நன்றோ என வேறொரு பொருள் தோற்றியது.

16. கழுக்குன்றத்தின் அடிவாரத்தில் மலர்ந்த கொடிகளுக் கிடையில் பொருந்திய இந்தக் கொடிபோன்ற இடையையுடைய தலைவி. மலருங்கொடி என்றது வழிபாடு மறுத்துப் புகுந்த கொடியை (13.) நெடிது நிலாவின் - நெடுநேரம் தாமதமாகி இருந்தால். கடிதினில் - விரைவாக. ஆவி - உயிர். இந்தப் பூமியில் வந்த இவ்வுயிர் நீங்குதற்கரிய துன்பத் தன்மையொடு வரும்.

17. தலைவிக்கு மலரும், நாணத்துக்கு மதுவும், தலைவனது

சைக்கு வண்டும் உவமைகள். புலரும் - வற்றும். உணர்வின் - ஞானத்திறுல்.

18. சுரவிந்தம் - விந்தம் என்னும் பேரெண்ணுற் குறிக்கப் பெறும் தேவர் கூட்டம். கரவு இந்த வெய்யேன் - இந்த வஞ்ச கத்தையுடைய கொடியேன். உரவிந்தம் மாமுனி என்ன - வன்மை பொருந்திய விந்த மலையை அகத்திய முனிவர் அடக்கினுற்போல. வெம்காமம் : தலைவனது காமத்தை. அரவிந்தம் ஒன்று செவ் வாம்பல் - தாமரைபோன்ற முகத்திற் பொருந்திய செவ்வாம் பலைப்போன்ற வாயில். சிறு கற்பு அரும்பினன் - சிறிய முல்லை யரும்புபோன்ற புன்முறுவலைச் செய்தாள்; கற்பு - முல்லை.

இத்துறையைக் கவியினது கூற்ருகப் பெரும்பாலோரும் தலைவனது கூற்ருகச் சிலரும் அமைத்தனர். இச்செய்யுள் தலைவன் கூற்ருயின் எங்காமம் என்றும் கவியினது கூற்ருயின் வெங்காமம் என்றும் பிரித்துப் பொருள் செய்க.

19. நஞ்சையுடைய பாம்பை ஆபரணமாகத் தான் அணிந் தாற்போல இன்னுமையையுடைய என் பனுவலையும் கொள்வோன். பரியாக மறையையுடையவன். காம்பு - மூங்கில். முகமாகிய தாமரையின்கண் உள்ள ஆம்பல் என்றது வாயை. அதன்கண் நிலாவுகின்ற அரும்பாகிய பல்லில் தோற்றிய நிலா என்றது புன்முறுவலை.

20. சங்குகள் முத்துக்களைத் தரும்படியாகத் தண்ணீர்த் துளிகளை மழை பொழிந்தாற்போல் ; சங்கத்திற்பட்ட துளி முத் தாகும் என்பது மரபு. புளகம் - மயிர் சிலிர்த்தல். தோளாகிய கட்டுத்தறியில் பொருந்தும்படி இடையாகிய சிங்கம் நடுங்குதற்கு ஏதுவாகிய கொங்கை ; கொங்கையாகிய மதகயம். இந்த மான், சிங்கமும் நடுங்குதற்குரிய யானையைக் கட்டுத்தறியிற் பொருந் தும்படி சேர்த்தது ; இஃது அற்புதம்.

21. கற்பகம்மேவும் - கற்பு அகத்தின்கண் பொருந்திய ; கற்பக மரத்தில் பொருந்திய. சுவர்க்கம் - நகில் ; சுவர்க்க இன்பம். பரலோகத்தில் அடையும் இன்பத்தை இகலோகத்திலே அடைந்தோம். அன்பை அகத்தில் உற்ற நெஞ்சே, எண்ணில் அரிது என் ? ஒன்றும் அரிதன்று என்றபடி.

22. அளி - வண்டுகள். அல்லிமலர் இயல்பாகவே ஒருகாம் பின்மேல் நீரின்கண் இருத்தலை ஒருகாலில் நின்று நீரில் தவம் செய்வதாகக் கற்பித்து உரைத்தான். இப்பொன் - இத்தலைவி யினது.

23. நகிலாகிய சூதாடு காய்க்கும். கையாகிய மலருக்கும். காஞ்சனத்தாது-பொற்பொடி ; அதற்கு ஒப்பாகிய மெய். வாதின் பொருட்டுக் காளியோடு திருநடம்புரிந்த சிவபெருமான். எந்த உறுப்புக்கு எந்த அணி பொருந்துமோ அவ்வாறு ஆராய்ந்து அணிந்தேன்.

24. துன்னு - பொருந்தி. உலகங்களைப்பெற்ற உன்னுடைய அறிவை ஒத்த திருமகளைப் போன்ற தோழியர்களைப் போலவே நானும் உன்னை அலங்காரம் செய்தேன்.

25. கதலி இரண்டு ஓர் தரு இணையா - இரண்டு வாழைத் தண்டுகள் ஒரு மரத்தில் இணைந்து; கதலி என்றது துடைகளை; தரு என்றது தலைவியை. இரண்டு தாமரைகள் மலர்ந்த ஒரு தாமரை ஒரு கமுகின்மீது விளங்குவதும் உண்டோ? இருகஞ்சம் கண்களையும், அம்புயம் முகத்தையும், பூகம் கழுத்தையும் குறித்தன.

26. மந்தாகினி - கங்காநதி. நந்தாது - குறையாமல்.

27. கசியா - உருகி. ஒசியா - வாடி. உய்கிலன் - வாழேன்.

28. தந்து - நூல். ஆகாயத்திற் பறக்கும் பறவையைக் கைக் கொள்ள எண்ணிய வேடனது கரம் நூலோடு பொருந்துதலைப் போல. கொந்து - பூங்கொத்து. பண்ணையில் ஒன்றி-விளையாட்டில் மனம்பொருந்தி. இந்து - சந்திரன்.

29. குளம் - நெற்றி. அளமரும் - சுழலுகின்ற. களமர்கள் - உழவர்கள். மருதம் - மருதப்பண். களபம் - யானை. எம்மூரில் பாடும் மருதப்பண்ணைக்கேட்டு நும்மூரில் உள்ளயானை துயிலும் என்றமையால் அவ்விரண்டு ஊர்களும் அருகில் உள்ளமை பெறப் படும்.

30. கஞ்சத்து இலை செறிநீர் என - தாமரையிலையின்மேல் பொருந்திய நீரைப்போல. அஞ்சத்து அயற்கு - அன்னவாகனத்தை யுடைய பிரமதேவனுக்கு. அளி பெடைவாய் பசி எஞ்ச - ஆண் வண்டு பேடை வண்டினது வாயில் பசி குறையும்படி. விரைந்து ஊட்ட - வேகமாக உணவை உண்பித்து.

31. கை வண்டு - கைவளைகள். சோரா - சோர்ந்து. இறும் - ஒடிந்துவிடும். நூபுரம் சூழ்ந்து இரங்க - சிலம்பு அடியை வளைந்து சப்திக்க. அடி தவ பார் ஆர - தன்னுடைய பாதம் மிகவும் நிலத் திற் பொருந்தும்படி. இன்னுயிரென்றது தலைவியை.

32. பண்ணை என்றது விளையாட்டு மகளிரை; ஆகுபெயர். எம்மைப் பின் பார்த்து எனக்கூட்டுக. சாயல் கண்டு பிணிமுகம் கொண்டு பிணிமுகம் ஓட - தன்னுடைய சாயலைப் பார்த்து

உண்டான துன்பத்தால் நோயைத் தன்முகத்தே புலப்படுத்திக் கொண்டு மயில் தோற்று ஓட. பிடி நடைக்காய் பணிவுடன் போதர - பிடி இவளது நடையைக் கற்றுக்கொள்வதற்காகப் பணிவொடு பின்செல்ல. வலவா - பாகனே.

33. அணங்கினர் கூட்டம் - தெய்வரம்பையர் கூட்டத்தை. சசி - இந்திராணி. மேவல் மதிக்கின் - போய்ச்சேருதலை ஆராய்ந் தால். பணம் - படம்.

34. வெவ்வாறு செல்பவர் காணுர் கழுக்குன்று-வெம்மையை யுடைய பாசத்தின் வழியே செல்கின்றவர்களால் காணப்படா ராகிய சிவபெருமானுக்குரிய திருக்கழுக்குன்றம். மின் - தலைவி. செல்பவளென்றது உயிர்த்தோழியை. அவளுடைய முகத்தே நோக்கும் குறிப்பால் அவளே தக்க வாயில் என்பதைத் தலைவி அறிவித்தனள்.

35. அமைவார் - பொருந்திய தலைவி. மலைவு ஆம் - மயக்க மாகும். வதனம் மதிக்கலை என்றுரைக்கின் - இவள் முகம் கலையை யுடைய மதி என்று சொன்னல்; மதிக்கலை என்பதைக் கலைமதி என்று மாற்றுக. மனம் கலைவாம் - உள்ளத்தில் கலக்க உண்டா கும். உரைத்தல் கூடாதென்றபடி.

36. இந்திரன் சுந்தரி - இந்திராணி. மந்திரந்தோறும் - வீடு தோறும். பன்மையால் பலமாளிகைகள் உடையவராகுக என்பதை உடம்படு புணர்த்தினுர். தனதன் - குபேரன். வெய்யோன் - சூரியன். பந்து இரண்டென்றது நகில்களை. பயந்தவர் - பெற்ற தாய் தந்தையர். பயந்தவர் தழைக.

37. ஆவி அகம் குளிர்ப்பு எய்த - உயிரும் உள்ளமும் குளிர்ச்சியை அடையும்படி. உடல் சீரணம் கண்டு - தேகம் மெலிந்து. ஊர் அணங்கு - பரவிய வருத்தம்.

38. ஆர நல்கல் ஒத்து - நிரம்பப் பெய்தாற்போல. யான் இன்பம் ஆர. கூட்டிடும் - கூட்டுவிக்கும். செல்கம் - போவேம்.

39. இரவில் சந்திரனது கிரணத்தை உண்ணுகின்ற சகோரம் அந்த இரவின் நீக்கம் அங்கே பொருந்திஞல் ஊக்கம் குறைந்திருந்து, மீட்டும் அக்கங்குல் அங்கு உற்ருல் மகிழ்ச்சி பொங்குவதுபோல. சிங்கி - குன்றி. உங்கு - அவ்விடத்தில். தண் பொழிலில் கொடி தங்குறும் என்க.

40. ஒருத்தி என்றது திரௌபதியை. அருத்தி - அன்பு. ஐம்புலன்களும் களிக்க; "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" (குறள்.)

41. கழற்பணி-தம்முடைய திருவடித்தொண்டு. கழுக்குன்றருடைய பங்கில் ஆர்ந்த காவிபோன்ற கருங்கண்களையும் முகமாகிய மதியையும் உடைய உமாதேவியார்; காவிக்கருங்கண் முகமதி : அன்மொழித்தொகை. உமாதேவியார் திருக்கரத்திலுள்ள தாமரை அரும்பையன்றி. மலர்ந்து உலர் வார் கஞ்சம்மெல் நனை - மலர்ந்தும் வாடியும் நீண்ட தாமரையினது மெல்லிய அரும்பு.

42. ஆயம் - மகளிர்கூட்டம். பேர்தாரும் மான் - திருமகள். படர்மின் - செல்வீராக.

43. ஏற்றம் - சிறப்புடையது. உன் உளத்தார்க்கு - தம்மைத் தியானிக்கும் உள்ளம் உடையவர்களுக்கு.

44. நாகத்தை ஆர்ப்பானை - பாம்புகளை ஆபரணங்களாகப் பூட்டிக்கொண்டவனை. ஆர் ஆனை ஆர் - முழங்குகின்ற யானைகள் பொருந்திய. மும்மலம் தீர்ப்பானை. அன்புள்ளத்தினின்றும் தீரானை; தீரான் - நீங்கான்; அவனைத் தேர்ந்த வாழ்க்கை நெறியையுடைய அந்தணனை; என்றது தன்பார்ப்பனப் பாங்கனை. நேர்ந்து - சந்தித்து. இப்பரிசு - நான் தலைவியைக் கண்டு காமுற்ற இயல்பை. நைவேனை முன்சேர் ஆனைமத்தகச்சீர் உரம் சேர்ப்பான் - முன்னாலே என்பால் இருந்த பலம் மீண்டும் உண்டாகச் செய்வான்.

45. சித்தி - சிவஞானசித்தியார். சங்கற்ப நிராகரணம் : ஒரு சைவநூல். உத்தி - நியாயங்கள். நையாயிகன் - நியாய சாத்திரத்தில் வல்லவன்.

46. யானை ஒருபாகனாலும் பாம்பு ஒருமந்திரத்தாலும் பலம் இழந்ததுபோல. சம்பு ஆதி என்பன அம்முனிவர் பெயர்கள். கங்கம் - கழுகு. வாய்ந்திடுவேனது புந்தி.

47. உணர்வு - அறிவு. குறைமதியோரின் - சிற்றறிவுடையோரைப்போல. இறை மதியாது - இறையளவேனும் எண்ணாமல்.

48. தேசிகன் - ஆசிரியன். மாணிக்கவாசகருக்குத் தரிசனம் காட்டிய தலம் இது. மும்மை ஆசிகள் - ஆமைபோல் நினைத்தும், மீன்போல் பார்த்தும், பறவைபோல் கைத்தலத்தால் அணைத்தும் செய்யும் ஆசீர்வாதங்கள். வாசிகள் - எனக்கும் தலைவிக்கும் உள்ள வேறுபாடுகள். இன்று எனக்குச் சொன்னதுபோல விசுவாமித்திரருக்குச் சொல்லியிருந்தால் மேனகைபால் அவர் மயல் பூண்டிருக்கமாட்டார். முற்றத் துறந்து தவம் புரிந்த கோசிக முனிவரே ஒரு மங்கையின் மயலில் அகப்பட்டாரெனின் நான் எம்மாத்திர மென்ற கருத்துப்பட இது கூறினேன்.

49. மான்மதம் - கஸ்தூரி. பல் நாமரை - பல திருநாமங்களை யுடையவரை. ஒரு நாரி இடையாம் அரை நூலிடை - ஒரு பெண்ணின் இடையாகிய பாதி நூலின்; அரை நூலென்றது அதன் சிறுமையைப் புலப்படுத்த; "இழையொன் றிரண்டு வகிர் செய்த" (தனிப் பாடல்.) சீயம் - சிங்கம். 'தாமரை நூலில் யானை கட்டுண்டதுபோல' என்பது பழமொழி. இங்கே தலைவன் பெருமையை மிகுதிப்படுத்தச் சிங்கத்தைச் சொன்னான்.

50. குத்தகையாக - நுகரும் பொருளாக; "குத்தகையாத் தந்திர்" (குமரகுருபர.)

51. சேடன் - ஆதிசேடன். ஓர் ஊமை தன் கட்டுரையால் - ஓர் ஊமை சொல்லும் வார்த்தைகளால். மற்று: அசை. அறிவு ஆர்வது ஒப்பாகும் - அறிவு நிரம்புவதை யொக்கும். முற்றறிவு ஆர்வது ஒப்பாகும் என்க.

52. காரி - விடம். களன் - கண்டத்தை யுடையவன். கன்னி யினது மயலின் இயல்பு பொருந்தி. என் சொல்லானது உலையிற் காய்ந்த இரும்பின் மேல் தெளிக்கும் புனல் போலப் பயனின்றி யொழியும்படி. தட்பம் - தண்மை.

53. ஓதி எய்த்த - கழற்றுரைகளைக் கூறி இளைத்த. மின் - தலைவி. மனக்கு - மனத்திற்கு. வான் உலகோ-சுவர்க்க லோகமோ. மலரோ, வானுலகோ என்றது எவ்விடத்து என்று வினயவாறு. இயல் வாய்ப்பு - இயல்பின் அமைதி. நிகழ்ச்சியிலான் - இயக்கம் இல்லாதவன். எங்கும் நிறைந்தவனாதலின் போக்கு வரவு இன்றி அமைந்தவன்.

54. இயல் - அத்தலைவியின் இயல்; எழுவாய். முத்து: பல். பவளம்:இதழ். ஆம்பல்: வாய். முளரி: முகம். சேல்:கண். கும்பம்: நகில். அத்தம் கடகம் பெற - கைகள் காப்புக்களைப் பெற. சிங்கம்:இடை. இடம் பொழி லென்க. ஆர் முடி ஆர் - ஆத்தி மாலையைத் திருமுடிக் கண் பொருந்திய.

55. இளையவன் - லக்ஷ்மணன். உளைய - மனம் வருந்தும்படி. காமத்து ஒடுங்கும் - காம நோயால் செயலற்று நிற்கும். செங்கை வளையவன் - திருமால். மருந்தை - நின் மூர்ச்சை தெளிவதற்குரிய மருந்து போன்ற தலைவியை; அமுதம் போன்ற தலைவியை. மலர்த் தளைய வன் மார்ப: விளி. தெரிந்து - ஆராய்ந்து. நெஞ்சு தளரல் - மனம் தளர்ந்து வாடுதலை ஒழிவாயாக.

56. அயிலை மென் நோக்கம் எனக்கொண்டு - வேலை மெல்லிய கண்களாகக் கொண்டு.

57. இறையோனது நிறையைக் கொண்டு; நிறை - மனத்தைச் சென்றுங்குச் சேராது நிறுத்தும் வன்மை (Will-power.) தன் ஆவி - தன் உயிரை. மயிலின் இயல் ஈது. அவனது வார்த்தை மெய். பூால் பொன் ஆவி ஆய பிரான் - தன் பங்கிலுள்ள உமா தேவிக்கு உயிராகவுள்ள பெருமான்.

58. திரு - திருமகள். உயிர் தேகம் உற ஒருவும் - தன் உயிரானது தேகத்தினின்றும் நீங்காமல் பொருந்தி நிற்க இவ்விடத்தை விட்டு நீங்கிவந்த; இது தலைவன் மன வலியை வியந்தபடி. வேறொருவனுயின் அவ்விடத்தே உயிர் நீத்திருப்பானென்பது குறிப்பு. முன் உரைத்தல் நம் அறிவின்மையால். கருவும் - பிறப்பும்; உம்மை இழிவு சிறப்பு.

59. கலி - முழக்கம். ஒலியார்ந்த மணி கட்டிய வேல். நுதி - முனை. உரம் - மார்பு. கொங்கையாகிய யானை. சீர் - திண்மை. தலைவனுடைய மார்பு மலையேயாகும்.

60. பாகம் - பக்குவம். சோகத்தை ஆற்றும் - தளர்ச்சியை உண்டாக்கும். அசோகத்தை - அசோகமலராகிய அம்பை; இஃது உணர்வழிக்கும் பாணம். வேள் - மன்மதன். விரகதாகமென்றது இங்கே காம வேட்கையைக் குறித்து நின்றது; விரக மென்பது பிரிவுத் துன்பத்தை உணர்த்துவது.

61. ஆத்தி மாலையிலுள்ள தேன் விரிந்து கலப்பதனுல் வெண்ணிறமாகிய கங்கையின் நீர் செந்நிறம் பெற்றுச் செந்நிற நீருள்ள சரசுவதியைப் போலத் தோன்றச் செய்யும் திருமுடியையுடைய. மந்தாகினி - கங்கை. எம்பிரான்: தலைவனை நோக்கிய விளி. உன்னை வந்து பாராமையால் துன்புறும் தன்மையோடு தலைவியைப் பார்த்தேன்.

62. புலரும்படி - அழியும்படி. போதன் - ஞானமூர்த்தி. மலர்: முகம் கை அடி முதலியன. கனி: இதழ். நறை - இதழூறல். அரும்பு - நகில். வள்ளை - காது.

63. என்றன்னைப் பார்த்து அயர்வாள். வியர்வையின் ஒளியோடு என் ஆவி பொருந்தும். அவள் தளர்ச்சி கண்டு உயிர் போகுமவ்வளவு வருத்தமுண்டாயிற்றென்றபடி. கருணையினுலே தம் திருமேனியில் ஒரு மின் போன்ற உமாதேவி ஒளிர்கின்ற. தேச விடங்கர்: திருக்கழுக்குன்றப் பெருமான் திருநாமம்.

64. ஐவாய் - மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகள். தொய்வாய் - தளர்ச்சியோடு. உததி - பாற்கடலை. ஒக்குமதோ - ஒப்பதோ.

65. கால் துணை - இரண்டு திருவடிகளையுடைய. பெண்ணி னல்லாள் : இத்தலத்து அம்பிகையின் திருநாமம். விஷ்ணுவும் நந்தியும் இத்தலத்தே பூசித்துப் பேறு பெற்றவர்கள். வண்டு வரிசையாகச் சோலையிற் புகுந்து. அலர் வாய்த்தது - மலரைப் பொருந்தியது ; பழிமொழியைப் பெற்றதென்பது வேறு பொருள்.

66. அந்தம் - அழிவு. இன்பம் செய அமலன் அருளைக் கொள்ளும் இயல்பைப்போல உயிர்ப்பாங்கியை நான் முன்னே காணும்படி ; அவளை முன்னிட்டுக் கொண்டென்றபடி. அன்பின் இன்பம் அளித்து என் மையலைத் தவிர்த்தீர்.

67. மயில் மன் அக் குழாத்துள். பண்ணை துன்ன - விளையாட்டொடு பொருந்தும்படி. குழாத்துடன் - ஆயத்தோடு. அன்பால் தியானிக்கும்படி.

68. திரிந்து - வேறுபட்டு. ஏது - காரணம். ஒரு பாலன் - மார்க்கண்டேயன்.

69. கணம் - க்ஷணம். கடியார் - நீங்கார். குண பூர்ணனும் நிர்க்குணனுமாகிய பரமசிவனது திருவருளானது. குழல் மணம் - கூந்தலிலுள்ள நறுமணம். மணம் உண்டென்று - தலைவனோடு அளவளாவிய கூட்டம் உண்டென்று.

70. மேனியையுடைய உமாதேவியின் நெற்றியை ஒத்தலினால்.

71. ஆதவன் மதி தீ இம் மூன்றையும் விழியாக உடையோன். தன்னினின்றும் நீங்காத அன்பை எனக்கு அருளியவன். சந்து - சந்தனத்தையும். நலையாத உடையையும், அவிழாத கூந்தலையும், உடம்பினின்றும் அகலாத ஓவியத்தையும். ஓவ மென்றது தொய்யில் முதலியவற்றை.

72. கூற்றும் அயனும் தொழ அருள்வோன் - கூற்றுவனாற் பெறும் இறப்பும் பிரமனாற் பெறும் பிறப்பும் இன்மையின் அவர் ஆணைக்கடங்காதது பற்றி அவர் தொழும்படி அருள் செய்வோன். வேற்றுமணம் முதலியன தலைவிக்குத் தலைவனுடைய் கூட்டத்தினால் விளைந்தவை. ஆற்றுமெனில் - உண்டாக்குமானால்.

73. உற்பலம் - குவளைமலர். கோகனகம் - செந்தாமரை. தலைவியின் விழி சிவந்திருத்தலின் இங்ஙனம் கூறினாள். இப்போது உறும் - இப்போது அவள் வருவாள். கண்டு பிறகு செல்வாயாக. மனக்கு மகிழ் - திருவுள்ளத்திற்கு ஏற்றதென்று மகிழ்கின்ற.

74. பொருப்பிற் சிலை செய்து - மேரு மலையை வில்லாகச் செய்து. திருமாலாகிய அம்பைப் பூட்டி. விருப்பின் - விரும்பி எழுந்தருளியிருக்கும் தலங்களுள் ஒன்ருக. வல் நிலை - வலிய நிலை. இதுகூறு, தலைவனுக்கு அவ்யானையால் ஏதம் வந்ததோவென்று தலைவி நடுங்குவளாதலின் இது நடுங்க நாட்டமாயிற்று.

75. கரு - பிறவி. தோழிக்குக் குரு உவமை. கோமளம் - மென்மை. திருவென்றது உயிர்த்தோழியை.

76. இறையும் இகப்பதின்றி - சிறிது நேரமாவது நீங்குதல் இல்லாமல். உள்ளத்தில் நிறையும்.

77. நசை - விருப்பம். பசை - பற்று. பதி - ஊர்.

78. ஆட்டத்து - நடனத்திலே. ஐந்தொழில் செய்து - பஞ்சகிருத்தியங்களை இயற்றி; "தோற்றந் துடியதனிற் ருேயுந் திதியமைப்பில், சாற்றியிடு மங்கியிலே சங்காரம் - ஊற்றமாய், ஊன்று மலர்ப்பதத்தே யுற்றதிரோ தம்முத்தி, நான்ற மலர்ப் பதத்தே நாடு" **(உண்மை விளக்கம்.)** ஈட்டத்து அமரர் - தொகுதி யாகவுள்ள தேவர்கள். நாட்டு அக்கணையில்; கணை - அம்பு. அயர்ச்சி கொடு - சோர்வை மேற்கொண்டு.

79. தெருமரை தெருமரல்-மயங்கல். பணித்தார் மருமரை - பாம்பாகிய மாலையையணிந்த திருமார்புடையவரை. கருமர் - செயலை உடையவர்.

80. பருகு ஓட்டு நல்வழக்கு - எல்லோரும் சுவைப்பதற்குரிய, தான் தக்க காரணங் கூறி ஓட்டச் செய்வதற்குரிய நல்ல வழக்கு; என்றது தருமியின்பொருட்டு நக்கீரரொடு செய்த வாதத்தை. ஒரு - ஒப்பற்ற. பக்கங்களையுடைய ஒரு பிறை யென்க. குருகை ஓட்டும்.

81. ஓட்டில் அன்னத்தை இரந்து உண்டு. அன்பனும் வன மோடியும் ஆர்ந்த; வனமோடி - பாலைவனத்தில் வாழும் துர்க்கை. மானைத் தொடர்ந்து.

82. வலம்புரிச் சங்குறு தீர்த்தத்து - வலம்புரிச் சங்கு தோன்றுவதற்கிடமாகிய சங்க தீர்த்தத்தில். சங்க தீர்த்தம் இத் தலத்தில் உள்ளது. தண்டீசர் - சண்டீசர்.

83. களிறு - தாருகாவன முனிவர் விட்ட யானை. இடை தளரும்படி. பவளத்தில் முத்தம் பழுத்தமை - பவளம் போன்ற இதழினிடையே முத்துப்போன்ற பற்கள் விளங்குதலை. திருநகை யோடு பொருந்தும்படி பேசுதலை நீங்கியது. ஆடல் - பேசுதல்; உறவாடலெனத் தொனிப்பது ஒரு நயம்.

84. பரசு - மழு. அரசு நடுநிலை எய்தாவிடில் தனம் ஆர்வது இன்றால் - அரசொடு சேர்ந்த இடை ஆதாரமாக நிலைபெறு விட்டால் நகில் பொருந்தி இருப்பது இன்றாகும்; அரசென்றது ஓர் உறுப்பை; அரசன் நடுநிலையிலிருந்து பாதுகாவாவிட்டால் குடி மக்களிடம் செல்வம் பொருந்துவது இன்றாகுமென வேறொரு பொருள் தொனித்தது. கர சுக மென்மொழியீர்-கையில் வைத்துப் பாராட்டுதற்குரிய கிளியின் மொழியைப்போன்ற மென்மையான மொழியை உடையீர்.

85. உரத்திற் படர்ந்து - மனவலியோடு வந்து. திரத்தில் - உறுதியோடு. செந்தீயை நகையினால் திரிபுரத்தில் சேர்த்தவர்.

86. கார் ஓதும் மென்குழல் - மேகத்தை உவமையாகச் சொல்லும் மென்மையான கூந்தலையுடைய உமாதேவி.

87. மாணிக்கமும் பொன்னும் சேர்ந்தாற்போல. செவ்வி - சமயம்.

88. வேணி - சடை. உயிர்மெய்நிலை ஒன்று-உயிரும் மெய்யும் ஒற்றுமை நிலைபோல ஒன்றியிருக்கும். சிலை ஒன்று வெம் கணை - வில்லைப் பொருந்திய வெவ்விய அம்பு. கலை - ஆண்மான்.

89. அ மானை எய்ததோர் அம்மானை - அந்த மாய மானை எய்த பெருமானாகிய இராமனை. அம் ஆனை வெல் முலையாரொடும் அம்மானை ஆடுதும் - அழகிய யானையை வென்ற நகிலையுடைய மகளிரொடு அம்மானை விளையாடுவோம். நீர் அந்த மானை எய்ததும் அந்த மானை நாங்கள் கண்டு அறிந்ததும் இன்று; இன்று: பன்மை ஒருமை மயக்கம். அம் ஆனை ஊர்தரும் அம்மானை ஆர் - அழகிய இடபத்தை ஊர்ந்தருள்கின்ற சிவபெருமானைப் பொருந்திய.

90. உடையாகக் கொண்ட தோலையுடையவர். மூவிலை வேல் - திரிசூலம். மலர்ப்படை கொண்ட பாவை - மலரம்புகளைத் தன் திருக்கரத்தே கொண்ட உமாதேவி; சோமாஸ்கந்தமூர்த்தியை நினைந்து கூறியபடி. இவர்கலை - ஏறிய ஆண் மானை. இவர் தொடை கொண்ட மாவிலை - இவர் தொடுத்தலைக் கொண்ட மாவிலையை; இவர் தொடுத்தலைக் கொண்ட பெரிய வில்லையென வேறொரு பொருள் தொனித்தது.

91. இவர்க்கு வேட்டம் இவள்; வேட்டம் - வேட்டைக்குரிய பொருள்; ஆகுபெயர். மான் வேட்டை என்றது பொய். இவட்கு இவர்பால் நாட்டமேயொழிய வேறு நாட்டமில்லை. மதனை வீட்ட. கோட்டம் அகல் - வளைதல் இல்லாத. விதிக்கொள்கையர் - ஊழ் வினையின்படி கூட்டப்பெற்ற கருத்தை உடையவர்.

92. கொய்கோ - கொய்யட்டுமா. அடிநீவி - பாதத்தை வருடி. தன் திருமேனி மெல்லிய மின்னலைப்போன்ற உமாதேவியை ஒரு பாகத்திலே கொண்ட சிவபெருமான். உய் - நான் உயிர் பிழைத்தற்குரிய. கோது அகல் பணி - குற்றம் நீங்கிய குற்றேவல். ஓம்புமின் - பாதுகாவுங்கள்.

93. தினையினால் ஆய உண்டி இழிகுலத்தாள் - தினையாற் செய்த உணவை உண்ணும் இழி குலத்திற் பிறந்தவள். பசுவின் பால் ஹோமத்துக்கு ஆகுமேயன்றி எருமையின் பால் ஆகுமோ?

94. செழியர் - பாண்டியர். மருகு - மருகர். சுந்தரபாண்டிய ராக வந்த கோலத்தை நினைந்தபடி. உந்திச்சுழியர் : தலைவி. கழியர் - வலைஞர். உமாதேவி வலைஞர் மகளாக வரவில்லையா? குலத்தாற் சிறுமையில்லை யென்பது தலைவன் கருத்து.

95. மன்றில் நயந்து ஆடி - நடராசப் பெருமான். இந்து ஆடி என்பார் - சந்திரனைக் கண்ணாடி யென்று எண்ணிச் சென்று பார்ப்பவர்கள். எண்ணினள் - எண்ணத்திலே உள்ளவள்.

96. அயில் - வேல். முகை-முல்லையரும்பு. மலர் - தாமரைப்பூ. மூதறிவோர் - பழுத்த ஞானியர். இடை உள்ளதென்று சொல்வது பழியாகும்; இல்லையென்றபடி.

97. உற்றே - அவளை அணுகி. வல்லாரின் உரைக்கப்படு வது - பேசவல்லாரைப்போலே நான் சொல்வது. ஊமை யொருவன் முற்றும் கற்று வல்லவனைக் கூறுவன கூறித் தெளி வித்தற்கு ஒப்பாகும்.

98. அனம் - அன்னம்; சோறு. பக்குவம் - இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதமென்னும் பக்குவங்கள். அயிர்க்கும் இடையினை - உண்டோ இல்லையோ என்று ஐயுறுதற்கிடமாகிய இடையையுடைய தலைவியை. செயிர்க்கும் - கோபிக்கும். கன்று இடை - வருந்துகின்ற இடையையும்.

99. மின் - உமாதேவி.

100. பசுங்குழல் : தலைவி. தெரித்து - என் குறையைத் தெரி வித்து. 'விழலுக்கு நீரிறைத்ததுபோல' என்பது ஒரு பழமொழி.

101. நாகங்களால் அளிக்கப்பட்ட நல்ல மாணிக்கத்தை, ஊனையும் உப்பையும் விற்கின்ற வலையர்களுக்கு விலையாக அணியும் பேதைமையையுடைய எங்கள் தலைவி. இமவானது தவத்தினால் வந்த நீலமணிபோன்ற உமாதேவியைக் காட்டுகின்ற இடப்பாகத்தையுடைய சிவபெருமான். பெருமையளே; ஏகாரம் வினா.

102. இகந்து - நீங்கி.

103. ஒருகால் - ஒருமுறை. அந்த மான் என்றது தலைவியை.

104. தந்து - நூல். களபம் - யானை. உங்கு - அங்கே. இடர் விரகம் தெற - துன்பத்தைத்தரும் பிரிவுநோயை அழிக்கும் படி. கூடும் வகையைத் தேற்றுமின்.

105. பனிவெற்பு - இமாசலம். களத்தில் - திருக்கழுத்தில். திருநாண் - திருமங்கலிய நாண். மரு - வாசனை.

106. ஓலிட - ஓலமிட. நும்மானை - உங்கள் தலைவியை.

107. கானவர் - குறவர். கதிர் - சூரியன். குடநீர்கடல்-மேல் கடல். போதும் - செல்வம். பணி - பாம்பு.

108. அளி - அன்பு. நெஞ்சின் - உள்ளத்தைப்போல. கவின்று - விளங்கி. நும் திருமேனியில் சேர்ந்தால் என்னையும் உயிர்போகாமற் காக்கும். தழை - தளிரும் பூவும் கொண்டு செய்யப்பெறும் ஒருவகை ஆடை.

109. நெஞ்சினரால் காணப் படாதவர். அயிர்ப்பார் - ஐயுறு வார். நமர் அயிர்ப்பார். என்னையர் - என் தமையன்மார்.

110. கொடுமையினால் என் உயிர் எவ்வாறாகி முடியுமோ!

111. நீர் மயல் கொள்வது என்; மயல் - மயக்கம். அல் நீர் மிடறு - இருட்டின் இயல்பையுடைய திருக்கழுத்து. அருள் கொண்டபின் நும் கையுறை கொள்வேன். இன்று நும் இடம் முன்னி கதிர் முந்நீர் எழ எய்துதிர் - இன்று உங்கள் ஊருக்குப் போய்விட்டுச் சூரியோதயத்தின்போது வாரும்.

112. முப்பெண் - இச்சா ஞானக்கிரியா சக்திகள்; மலைமகள், திருமகள், கலைமகள் என்னும் மூவரும் ஆம். முதல் - முதல்வன். மதிமுகப்பெண்ணை யென்றது கங்கையை. பெண்ணை ஏற்றம் - பனை மடலாகிய குதிரையின் மீதேறுதல். அப்பெண்ணையென்றது தலைவியை.

113. பெண்பாலை வேட்டவர் - உமாதேவியாரையுடைய வாமபாகத்தை விரும்பியவர். நீற்றையும் என்பையும் எருக்கையும் பெரிய இதழ்களையுடைய மலர்களையும் உடைய ஒள்ளிய வலப் பாகத்தைப் பொருந்தியதுபோல. அன்னோர் - அச்சிவபெருமானது. பெண்பாலை - தலைவியாகிய பெண்ணை. பெருமடல் ஊர் ஒண்பாலை ஏய்வர் - பெரிய மடற்குதிரையை ஊருகின்ற ஒள்ளிய ஊழ் வினையையுடையராவர். மடலூர்வோர் நீறு முதலியவற்றை அணிதல் மரபு.

114. அளித்தோர் - பாதுகாத்தவர். ஓர் படமென்றது தலைவியைப் போல உருவெழுதிய படத்தை. மடலூர்வார் இத்தகைய

படத்தைக் கைக்கொண்டு செல்ல, ஊரினர் இன்னுள்பால் இவன் விருப்பமுடையனென்பதை உணர்வார்கள்.

115. ஒருமலர் - முகம். பலமலர் - நீலமலர் போன்றகண்கள், குமிழமலர்போன்ற நாசி, முல்லையரும்புபோன்ற பல் முதலியன. தரு மலரன்றி - மரங்களிலுள்ள மலர்களையல்லாமல்; பிறர்கூறும் பழிமொழியையன்றி யென்பது வேறொருபொருள். நடு - இடை; நடுநிலை.

116. கொடு வில் மை சூழ் பொருப்பு ஆகக் கொள்வோன் - வளைந்த வில்லாக மேகம் சூழ்ந்த மலையைக் கைக்கொள்பவன். கடுவின் மை ஆர் கண்ணி - விஷத்தைப்போல மை பொருந்திய கண்ணையுடைய தலைவி. மயல் - என்னுடைய காம மயக்கத்தை. நடுவின்மை யாரும் தெளிதர - நடுநிலையில்லாத தன்மையை யாவரும் அறிந்து கொள்ளும்படி. நான் நடுவே தீட்டிலன் - நான் இடையையே எழுதிலன்.

117. 'மடலேறப் பனைமரத்தை வெட்டினால் அதிலுள்ள பறவைகள் துன்புறும்; அஃது அருளிலார் செயல்' என்று கூறி மடலை விலக்குகிறாள் தோழி.

விகங்கம் - பறவை. முகிழ்ப்பு - இமை கொட்டுதல். பார்ப்பும் முட்டையும். பெண்ணை - பனைமரத்தை.

118. மலையை வளைத்தாற்போல என் மனமும் முதிர்ந்த குழைவைப் பெற்று விளங்கும்படி அருளியவன். என் ஆருயிரென்றது தலைவியை.

119. கடல் போன்ற கண்களில் நஞ்சு போன்ற மருட்பார்வையும் அமுது போன்ற அருட் பார்வையும் இன்னும் தோன்றவில்லை; பேதைப் பருவத்தினளென்பது தோழியின் கருத்து. கூழை ஒன்று - மயிர் முடியும்படியாகக் கூடவில்லை. நெஞ்சுள் - மார்பில். அயர்வாய் - செய்வாய்.

120. சிங்கக் குருளை - சிங்கக்குட்டி. அனமே : விளி.

121. கிளிக்கு உரை பயிற்றுள். இனிய சொற்களாகிய தூய அமுதத்தை யாம் நுகரும்படி செய்யவில்லை. அவிரும் - விளங்கும்.

122. சுகம் களி கூர் மொழிக்கு - கிளி கேட்டு மகிழும் சொல்லையுடைய தலைவிக்கு.

123. பெரிய மணியும் பொன்னும் இருந்தாலும். அணிவார் இன்றி ஒன்று - ஆபரணம் செய்து அணிபவரில்லாவிட்டால் ஒன்றுகப் பொருந்தாது. தாமரை வாழ் தூமணி மேகலையாள் - திருமகளைப் போன்ற தலைவி. தோய்வு - பொருந்துதல். ஆம் - நீர். மனனே - மன்னனே.

124. மிதவை - தெப்பம். குப்புறலும் - கவிழவே. புல்லர்தம் மனத்திற் கள்ளத்தவன் - புல்லறிவினோருடைய மனத்தில் தோற்றாது மறையும் கள்வன்.

125. வனசம் - தாமரை. தூவியில் தோன்றும் அனம் - மெல்லிய இறகுகளோடு விளங்கும் அன்னப் பறவை. என் கண் அகலாள் - என்னிடத்தினின்றும் பிரியாள்.

126. என் ஆவியாய் வரும் மின் பொருட்டால் - என் உயிர் போல வரும் தலைவியின் பொருட்டு. இரங்கலை - வருந்தாதே.

127. எனை அளித்தார் - என்னைப் பெற்றவர்கள். தலைவியைத் தான் கூடும் வகை பெற்றமையின் அவளுக்கும் நன்மையுண்டாதலின் மதிநுதலாள் தன் உயிர் உய்ந்ததென்றான்.

128. ஊசலானது ஓரிடத்தில் நில்லாது இங்கும் அங்கும் ஆடினாற் போல. தேசம் நிலாவ - ஒளி விளங்கும்படி. அவர் எண்ணம் என்னோ?

129. வன்பாரம் ஒழிக்கும் - உலக பாரத்தைத் தீர்க்கும். ஓர் பெண் - மோகினி. பொன்னனைக் காய - இரணியனைச் சங்கரிக்க. மிடல் - வலி. இலகவல - விளங்குவதற்கேற்ற. கம்பத்து ஒன்றும் - தூணிலே நரசிங்க மூர்த்தியாகப் பொருந்தும். திலகம் போன்றவன். அம்பென்றது திருமாலை.

130. மேவு அணியென்று பாம்பைக் கொள்வதோடு அன்பர் சொல்லும் தோத்திரப் பாக்களையும் கொள்வோன். தபோதனருக்கு அருகே இருத்தலினால், (பிறருக்குத் தீங்கு புரியாத இயல்பைப் பெற்று) சோலைக்கு அலங்காரமாகப் பொருந்திய புல்லை உண்ணுதல் தகாதென்று எண்ணி அகலுகின்ற இந்தப் பசுவின் கூட்டம் எங்கும் உலாவி ஒரு துன்பமுமின்றித் தங்குவதற்குக் காரணமான ஆசீர்வாதம் என்ன? புல்லை உண்ணாமல் அகன்றும் சுகமாக உள்ளனவே என்று வியந்தாள்.

131. ஒரு மானையும் யானையையும். ஒரு பெண்ணாகிய பராசக்தியை அன்னையாகவும் மனைவியாகவும் பொருந்திய சிவபெருமான். சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றுதலின் அன்னையென்றார்; "எம்பெரு மானிம வான்மகட்குத், தன்னுடைக் கேள்வன் மகன் றகப்பன்" (திருவா. திருப்பொற்சுண்ணம், 13); "கனக மார் கவின்செய் மன்றில், அனகநாட கற்கெம் மன்னை, மனைவி தாய் தங்கை மகள்" (குமரகுருபர. 514.)

132. புலம் - அறிவு. சலம் மறி வார்சடையார் - கங்கைநீர் மறித்தெறியும் நீண்ட சடையை உடையவர்.

133. மலரின் - மலரைப்போல. நின் குரைகழல் சார் கணத்தை - நின் திருவடியைச் சார்ந்து நிற்கும் வினைவல்ல பாங்கியரை. ஓதல் கரந்தது என் - சொல்லுதலை மறைத்ததற்கு என்ன காரணம்? தன் வணத்தை மறைக்கும் தெரியான் - தன் தன்மையை வேதத்துக்கும் தெரியச் செய்யாதவன்.

134. தோற்றும் நாள் முதல் - பிறந்த நாள் தொடங்கி.

135. வேல்விழி மான் : விளி. கைம்மான் - யானை. கையில் ஆர்ந்த நீரைப் பிடிக்கு அருத்தி. இக்கணி நிழற் சார் - இந்த வேங்கை மரத்தின் நிழற் கண்ணே. பொய்யாரை - வஞ்சகரை.

136. எனை இரங்தோனென்றது தலைவனை. மின் - கலைமகள்.

137. பனை - பனைமடல். ஐம்படை - ஐந்து அம்புகள். கரும்பனை - மன்மதனை. இப்படிக்கு அனை அப்பனையே நிகர் - இவ்வுலகத்திற்குத் தாய் தகப்பனை ஒத்த. ஒப்பனை - அலங்காரம்.

138. இன் உயிர் அன்ன பைங்கோதை மின்னார் - உனக்கு இனிய உயிரைப்போன்ற வேறு தோழியர்; இது தோழியின் சினக் குறிப்பைப் புலப்படுத்தியது. யாது நெறி கூறினர். போதி - நடப்பாயாக.

139. நின்குற்றந் தான் இது - குற்றம் செய்யாமலே குற்றம் செய்ததாக ஏற்றுக் கொண்டு சொல்லும் இதுவே நின் குற்றம். உன் நெறிப்படியே நன்கு உற்று அமைந்த - உன்னுடைய வழியிலே நன்றாகச் சேர்ந்து பொருந்திய.

140. மடவார்க்கு நாண் அணி என்பர். பூந்தழையானது நான் அணிகின்ற, பிறர் கண்டால் நாணுகின்ற அணியாகும்படி. இந்நாள் நண்ணி ஓதில். நாண் அணி ஓங்க - மங்கல நாணாகிய ஆபரணம் சிறந்து விளங்க.

141. பழிநீர் அகற்றும் - பழிக்கின்ற இயல்புகளை நீக்கும்; பழியின் இயல்பெனலும் ஆம். நகையாகிய நிலவை உண்டாக்கியது.

142. பவநோய் - பிறவி நோய். இந்திர நீலமணியோடு கூடிய பாசறைக்கு வன்மை பொருந்திய சந்திரன் பொருந்தியது போல.

143. திருவடியையும் கங்கா நதி பொருந்திய திருமுடியையும் முறையே திருமாலும் பிரமதேவனும் காணமாட்டாத. மலையாளொடும்-பார்வதி தேவியாருடன். மதமலை - யானை ; இங்கே ஆண் யானை. ஒள்ளிய பிடியைத் தேடி.

144. உடை - தோல்வியுறுகின்ற. இணைவிழிக்கும் சிறப்பையுடைய நடைக்கும் தோல்வியடைகின்ற மானும் பிடியும். அயல்

நண்ணலை - அருகில் போகாதே. உடை மென்மலர் - அலர்ந்த மெல்லிய மலர்களை. ஐம்படைக்கு உடையான் - திருமால்.

145. இவ்வருள் - இவ்வாறு நீ எழுந்தருளியதற்குக் காரண மான கருணை. வேள் படையால் - காமன் எய்யும் அம்பினால். உயிரென்றது தன் உயிரை. திருமாலாகிய இடபத்தால்.

146. சேலார் கருங்கண் : விளி. பாற்கடலும் அதிலே பிறந்த அமுதும் அதனை நுகர்ந்த தேவரும்போல முறையே நின் கனிவாயும் அதில் ஊறிய இதழூறலும் காம மயக்கத்தையுடைய எளியேனும் ஆகும்படி அமைந்ததற்குக் காரணம் கழுக்குன்றில் வாழும் சிவபெருமானது திருவருளே. பண்ணவர் - தேவர். நீல் - நீலம். களம் - கழுத்து.

147. சங்கத்தில் - மதுரையிலிருந்த கடைச் சங்கத்தில். கீரனை வென்றோன் - தருமியின் பொருட்டு நக்கீரனோடு வாதிட்டு அவனை வென்றவன். இடை சிங்கத்திற்கு ஒப்பான மயில் போன்றவள்; தலைவி. அவள் முகத்திற்குச் சமானமென வந்த தாமரை யானது அவமானத்தினால் கண்ணீர் துளிக்க முள்ளானது உடம் பெல்லாம் பாய நடுங்குகின்ற அங்கத்தோடு கண்ட கண்ட காடு களிலெல்லாம் சென்று அலைச்சற்பட்டது; இது தொனிப்பொருள். கமலம் சேற்றில் தேனாகிய நீர்துளிக்க முள் எங்கும் பரவ, காணப் பட்ட நீர் நிலைகளில் புகுந்து அலைகளில் நீண்டதெனை அதன் இயல்புக்கேற்ற பொருளும் அமைந்தது. பங்கம் - இழிவு; சேறு. வனம் - காடு; நீர்.

148. தூய கல்லாலும் பெரிய மாணிக்கங்களாலும் செறிந்து விளங்கும் மாலையில்; தூய கல்லென்றது வைரத்தை. ஆயம் - மகளிர் கூட்டம். தீ - சினத்தீ; தீமையுமாம். ஏய - பொருந்திய. கலாநிதி வேணி - சந்திரனைத் தரித்த திருமுடியையுடைய.

149. மெல்லியலாகிய நின்கை வருந்தும்படி. போது - மலர். விரை - நறுமணம். வல் - சூதாடு கருவி. மன்னுயிரே : விளி. அல் இயல் கண்டன் - இருள் தங்கும் திருக்கழுத்தை உடையவன்.

150. கனங்குழையோடு வாதுசெய்யும்பொருட்டுச் செல்லும் விழி.

151. மனக்கே களிப்ப - மனத்துக்குள் மகிழ. ஆவியின் - உயிரைப்போல.

152. குரம்பை - இலைவேய்ந்த குடில். சவரி - சபரியென் பவள். எழில் நகர்க்கு - அழகையுடைய நினது ஊருக்கு.

153. அகத்திலே மலர்ந்த அன்பு செம்மையாகிய வாய்வழியே வழிந்ததுபோல. முகமலர் - வாயாகிய மலரால்; முகம், இங்கே

வாய்; "கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்" (நீதிநெறி.) அதனால் என் முகமானது தாமரை மலருக்கு ஒப்பாக மலர்ச்சியைப் பொருந்தியது. உம்முடைய இல்லிற் புகுந்து உண்டு. எல்லி - இரவு. சூகம் அலர் - கிளியைப்போன்ற; அலர்: உவம வாசகம்; இனிமை பரவிய எனலும் ஆம்.

154. மாலையை அன்று அளித்து - தாம் அணிந்த மாலையைத் தம்மோடு நான் அளவளாவிய காலத்தில் அளித்து; மாலை: கையுறையாகக் கொணர்ந்தளித்த மாலையுமாம். மதித்தவர் - நினைத்தவர். புன் மாலையை - புல்லிய மாலைக் காலத்தை; துணைவன் இல்லாதபொழுது மெல்லியலைத் துன்புறுத்தலின் புல்லியதாயிற்று. ஆல் மாலையை அன்புறும் - ஆல மரத்தின் இயல்பை விரும்பும். மாலையை அன்புறும் மெய்யன் - நல்லியல்புகளையுடைய உமாதேவியாரை விரும்பியமைத்துக்கொண்ட திருமேனியை உடையவனெனலுமாம். மாலை ஐயோ உற - அந்தோ! நான் மயக்கத்தைப் பொருந்தும்படி. செய்தவன் - பிரமன். வாழியவே என்றது குறிப்பு மொழி.

155. குவளையானது கள்ளாகிய நீர் பெருக்க; கண்ணீரென்பது வேறு பொருள். ஆதவன் கடல்வாய் ஒளிப்ப. கமலம் மெய் வாட்டமுற. செக்கர் வடவை-செவ்வானமாகிய வடவைத்தீ. அணைந்தோர்ப் பிரியும் எம்மான் - தன்னை அணைந்த தலைவரைப் பிரிந்த எம்முடைய மானைப்போன்ற தலைவி.

156. சுவற்றும் - வற்றச் செய்யும். விண் மொய்த்ததென - வானத்தைச் சூழ்ந்தாற்போல. புல்லிய இயல்பை வெளிப்படுத்தும் செவ்வானம். கதிர் - சூரியன். நீரையும் மதியையும் உடைய சடையார்.

157. அருளையுடையவர் பிறர்பால் பகை உண்டானாலும் அதனைப் புலப்படுத்தமாட்டார்கள். தன் நடை கண்டு அன்னத்திற்குத் தன்பாற் பகை உண்டாதல் இயல்பாயினும் அதனை நினையாமல் தூது சென்று வரவேண்டுமென்பது தலைவியின் கருத்து. அன்பர் ஊரர் - தலைவர் இன்னும் வந்திலர். மருள் - அவர் பிரிவால் உண்டான மயக்கம். ஒள்ளிய சேவலை மணந்து துயின்று தெளிவு பெற்ற அன்னம் தலைவர்பால் எனக்குத் தூதாகச்சென்று என் நிலையைச் சொல்லாத செயல் சிறப்பானதன்று. இகந்தவர் - பிரிந்த தலைவர்.

158. கூட்டம் - சேர்தல். கருவிடைக் கூட்டுமன்று - பிறவியிற் புகுத்தும் அப்பொழுதே. அயன் - பிரமதேவன். அன்பர்

நண்ணுகின்றார் - தலைவர் வருகிறார்; தெளிவுபற்றி நிகழ் காலத்தாற் சொன்னாள். மாழ்கல் - வாடுதல்.

149. கரய்கொண்ட நெஞ்சு - கனியாத உள்ளம். கழறின் - இடித்துரைத்தால்.

160. திருமுடியில் ஆத்தி மாலையும் ஒரு பெண்கொடியாகிய கங்கையும் பொருந்திய; ஆர் - ஆத்தி மாலை. சிவனடியார் கூடுகையில் இன்பமும் பிரியும்போது துன்பமும் உண்டாவதுபோல. சேர்வு - கூடியிருத்தல்.

161. வானினம் - தேவர் கூட்டம். மன்னாரென - போய்த் தங்காதாரைப்போல. நும்கோன் இனம் சேரலன் என்று - உன் தலைவன் இன்னும் வரவில்லை என்று. குறுகி எய்ப்பாய் - சென்று இளைப்பாய். மாற்ற கிலாய் - நீக்கும் ஆற்றல் இல்லாதவள் ஆயினை. தலைவனையே நினைந்து வருந்துவதனால் தினைப்புனங் காத்தலாகிய காரியத்தைத் தலைவி செய்யவில்லை. இற் சேர்த்திடும் - வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிடுவாள்.

162. அரிவாளினால் மகவைக் கழுத்தரிந்து கறியாகச் செய்தார்; சிறுத்தொண்டர். புணர்ந்தார் - தம்மொடு கூடியவரை; பிரிந்தால் உயிர் நிற்றல் அரிது. பிரியின் அணைப்பேனென்று தெரிந்துகொள்ளவில்லை. மலர்மான் - திருமகள். உரம் - திருமார்பில். இன்று உரஞ் சேர்தல் என்?

163. மள்ளர் - உழவர். மகிழ் - மகிழ்ச்சி. தகை என - இயல்பைப்போல. மணி கூர் ஒலி கேட்டு, எனக்குத் துயர் ஓடும். உவந்து உணர் - இதை மனமகிழ்ந்து தெளிவாயாக.

164. இனி எம்மைத் தாய் வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவாளென்பதைத் தலைவன் உணரும்படி தோழி மான் முதலியவற்றைப் பார்த்துச் சொல்வாளாய்ச் சொல்கின்றாள்.

உழையே - மானே. உனக்கு இவ்விடத்தில் இருக்கும்படி செவ்வி பொருந்தும். தலைவி தினை உண்ணுவதனின்றும் அதனை விலக்காளாதலின் இங்ஙனம் கூறினள். குழையே - தளிரே. குழையேல் - வாடுதலை யொழி. அன்பர் - தலைவர். தலைவி அங்கு இராமையின் தலைவர் வருதலும் அவள்பொருட்டுத் தளிர் கொய்தலும் இல்லையாகும். களம் கார் மழை ஏய் - திருக்கழுத்து கரிய மேகத்தை ஒத்த. அருளின் மழைஏய் - கருணைமழைபோன்ற சிவபெருமான் பொருந்திய. பிழையே அலது அன்பு இழையேமை.

165. மானே: தலைவியை நோக்கிய விளி. மானே முதலிய மான் - மான் முதலிய விலங்குகள். அலக்கண்தான் ஏது உறுது -

துன்பம் ஏதும் அடையாமல். புனந்தான் புரக்கும் - தினைப் புனத்தை ஆட்சி செய்யும். காவலின்மையின் மான் முதலியன புனத்தைத் தமக்கு இடமாகக் கொள்ளுமென்றபடி. நேர் - வாய்ந்த., பிரானுடைய எழுச்சியையுடைய கழுக்குன்றென்பதும் ஆம். கணி - வேங்கைமரம். தேன் நேர் அருந்து பைந்தேன் ஏய் அலர் கொளும் செய்கையின் - தேனை நேரே இருந்து நுகரும் பசுந்தேன் பொருந்திய மலர்களைக் கொண்ட செயலினால். வேங்கை பூத்தது கண்டு குறவர் தினையரிதலும், தலைவியை இற்செறித்தலும் மரபு. அலர்கொளும் செய்கையினால் மான் புரக்கும் என்க.

166. என் ஆருயிரை - என்னுடைய அரிய உயிரைப்போன்ற தலைவியை. அன்பரென்றே இருந்தும் - அன்புடையவரென்றே எண்ணியிருந்தும். அன்னார் - அவர். சிறிதும் அன்பு இல்லாதவராகி நம்மை மறந்தாலும் நாங்கள் மறவேம். அவர் மேவின் மறவாது சொல்வீர். பொன்னார் - பொன்னைப் போன்ற.

167. கணியார் மலர்க்கையின் ஏடு அவிழ்த்து இப்போது கொய்வீர் என - சோதிடர் மலரைப்போலக் கையினால் சுவடியை அவிழ்த்து இச்சமயத்தில் தினையை அரிவீரென்று சொல்ல; வேங்கைமரம் மலராகிய கையிலுள்ள இதழ்களை மலர்த்தி இச் சமயத்தில் தினையை அரிவீரென்று தெரிவிக்க என்பது இயல்பான பொருள். எமர் - எம்மவர். தினைப்பூங்குரல் கொய்தார் - தினையினது பொலிவு பெற்ற கதிரை அரிந்தார். எம்மாதென்றது தலைவியை. குறிச்சி - குறிஞ்சி நிலத்து ஊர்.

168. பாபாரி - பாவத்தைப் போக்குபவன். திருமால் பாம்புருக்கொள்ளும் சாபத்தை நீக்கியவன். மார்க்கண்டனாகிய ஒரு பிள்ளையை அடர்த்த யமனதுகோபத்தைப்போக்கியவன். உனக்கே பாரி என்றலின் - உனக்கே இவள் மனைவி என்று அமைத்தமையால். நீ பாரியன்றேல் - நீ இவளைத் தாங்குபவனாகாவிடின்; பாரி - வகிப்பவன்.

169. இனிச் செய்வது என்னும். வகுத்ததன்றி - அமைத்ததல்லாமல். என் எதிர் நேர் கணியாரை - என் எதிரே நிற்கும் வேங்கைமரத்தை. ஒறுத்து எறிகோ - தண்டித்து வெட்டுவேனோ. கொன் - அச்சம்.

170. புனத்தினைக் காவாது (யாம்) ஒழியும்படி எமர் கடிவர்; கடிவர் - அரிவார். அன்னை ஊர்க்குப் போக்கும் புகன்றனள். போகு அலரால் வாக்கும்படி - நீண்ட மலர்களால் சொரியும்படி; அருச்சனை செய்யும்படி. அருள்வாரா எனக்கும் அலரால் வாக்

கும்படி அருள் வள்ளல். அவன் தான் வைகும்படி ஆக்கிக் கொண்ட கழுக்குன்றத்து. ஆகாது - பகலிற் கண்டு அளவளாவுதல் நடவாது. மன்ன அறம் ஆய்ந்தருளே - தலைவனே, இனிச் செய்யும் தர்மத்தை யோசிப்பாயாக; வரைந்துகொள்ள வேண்டுமென்பது குறிப்பு.

171. மாமை - பெண்கள்பால் இயல்பாகவுள்ள பேரழகு. ஊட்டம் கொள்ளாமையும் - உணவு உட்கொள்ளாத தன்மையும். நாட்டம் கொள் துயில் தீர்வையும் - கண்கொண்ட தூக்கமின்மையும். தீர்வை - தீர்தல். தேட்டங்கொள் பார்வை - தேடுதலைக் கொண்ட பார்வை. ஓட்டம் கொள் செம்மை - உதட்டிலே கொள்ளவேண்டிய செந்நிறத்தை. கண்கொண்டாள் - கண்ணிலே கொண்டாள்; சினந்தாளென்றபடி. இவ்வாடு இடத்து ஒன்றலை - இந்த விளையாட்டிடத்தில் வாரற்க.

172. பிரியாமை உண்டு எனின் நட்பு ஆம் - பிரியாமல் இருத்தல் உண்டானால் நட்புப் பொருந்தும். புனம் நீங்க எழுதல் பேதை யறிவினுஞ் சீருடைத்தே. சிவபிரான் அடியவர்களோடு நட்பாகிப் பிறகு அறியாமையால் அகலும் பேதையினது அறிவை விடச் சிறப்புடையதா? அதைப்போன்ற இழிவை யுடையதே என்றபடி.

173. அவர் - தலைவர். வன்பால் வழி நோக்கியும் - வற்புறுத்தலினால் இல்லிற்குச் செல்லும் வழியைப் பார்த்தும். செல்லுகின்ற சோர்ந்த நிலைமையை. மின்பாலவன் - உமாதேவியாரை ஒரு பாகத்திலே உடையவன்.

174. கேழ் - நிறம். கிளி சொல்லுக்கும் மயில் சாயற்கும் வண்டு கண்ணிற்கும் தோற்றுப் பகையாயின. ஒளியைக் காணுகின்ற மதிபோன்ற நெற்றியையுடைய தலைவி.

175. கையிகந்து - நீங்கி. இதண் - பரண். அஞ்சம்-அன்னம். ஏனம் - பன்றி.

176. மணம் கூந்தலுக்கு இயல்பானதென்று ஒரு திருப்பாடலை அருளிய சிவபெருமான் தருமியின் பொருட்டுப் பாடிய, "கொங்கு தேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ் செப்பாது கண்டது மொழிமோ, பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற், செறியெயிற் றரிவை கூந்தலின், நறியவு முளவோநீ யறியும் பூவே" (**குறுந்தொகை**, 2) என்னும் செய்யுளைக் குறித்தது. எண் மணம் - பிரமம் முதலிய எண்வகை மணங்கள். அம்மான் மணத்தைப்பெற - அந்தத் தலைவியின் கூட்டத்தைப் பெற. இற்

செறிக்கப்பட்டமையின் அம்மானென்று சேய்மைச் சுட்டொடு கூறினன். தலைவி இனித் தனக்கு அரியாளென்று கவன்றான்.

177. அட்டு அருள்வோன் - சங்கரித்து மீண்டும் உண்டாக்கு பவன். தூங்கும், கூடும் : முற்று. குழல் : விளி. யான் நும்மூர்க்கு வருவிருந்து ஆவேனென்று ஒரு சொல் வருவித்து முடிக்க.

178. கோடு - தந்தம். களிற்றினத்தை விரும்பிச் சிங்கம் குறுகும். மோட்டுப் பசு - பெருமையையுடைய காட்டுப் பசு. பல கோட்டுத் திண் வேங்கையின் மூண்டு குத்தும் - பல கிளைகளையுடைய திண்ணிய வேங்கை மரத்தின்மேற் கோபம் மூண்டு கொம்பாற் குத்தும். மேவல் - வருதலை யொழி.உன் வீட்டுக்கு அகல்வாயாக. புலி கட்செவிமுன் ஆட்டுக்கு உவந்தவன் - வியாக்கிரபாதருக்கும் பதஞ்சலிக்கும் முன்னே திருநடனம் புரியத் திருவுளங் கொண்டவன்.

179. மாதங்கம் கைக்கே சரியுண்டு தோற்றிடும் - யானை என் கைவலியால் தாழ்ந்து தோல்வியுறும். கேசரியுண்டு - சிங்கத் தால் உண்ணப்பட்டென்று ஒருபொருள் தோற்றியது. மெய்க்கே கஞ்சுகிபோம் சுவண அணி உள - என் உடம்பில் பாம்பு மின்ன லென்று அஞ்சி ஓடிப்போதவற்குக் காரணமான பொன்னு பரணங்கள் உள்ளன ; கஞ்சுகி - பாம்பு. வாருண்ட மென்கழல் ஆர்ப்பக் கேசரிகளை வெல்லும் - வாரோடு சேர்ந்த மெல்லிய வீரக் கழல் சப்தித்துச் சிங்கங்களை வெல்லும். இக்காரணங்களால் உம்முடைய சிற்றாரை அணுகுதல் எனக்கு எளியகாரியம். இக்கே நிகர்மொழி பங்கன்-கரும்பையொத்த இனிய சொல்லை யுடைய உமைபாகன்.

180. ஏது - காரணம்; இங்கே தகுதி. என்பு ஆரே தலைக்கு அணிஈசன் - எலும்பையும் ஆத்திமாலையையும் திருமுடிக்கண் அணிந்த கடவுள். தார் ஏது - உன் நாட்டுமகளிர் மாலை யாது ? பூச்சு - பூசும் குழம்பு. தோய்நீர் - ஆடும்நீர்.

181. என்னுடைய கல்லைப்போன்ற நெஞ்சிலே நாட்டிய அருளே வடிவாயிருக்கும் பாதமலரை உடையவன். மென்மை யாகிய நாட்டுகின்ற பண்ணோடு கூடிய பாடல்.

182. தினைகணியார் நிழல் விளையாடல் - தினைக்கருகில் உள்ள வேங்கை நிழலில் விளையாடுதல். கல்லாரம் - குவளைமலர். மெய்ம் மூடல் கல்லாரத்தொடு தளிர்கள் - உடம்பை மூடுவது குவளை மலரோடு தளிர்களாகிய ஆடை. குறிஞ்சி - குறிஞ்சிப் பண். கழுக்குன்றாடு. அல் இயை குழல் - இருட்டையொத்த

கூந்தலையும். வாடல் இடை - வாட்டத்தையுடைய இடையையும்.

183. செந்தேன்மொழி: விளி. தனம் - நகில், பொருள். பண மணி - நாகபடத்திலுள்ள மணி; வேறுபொருளும் கொள்க. இந்து ஏய் - சந்திரன் அமைந்த. இறுத்தனர் - அடைந்தார்.

184. மதமாதங்கம் - மதத்தையுடைய யானை. புன்னெறி தன்னில் - புல்லிய காட்டுவழியில். உமைக்கு அங்கம் பகிர்ந்து அருள். வெம்கங்குலின் வர - வெவ்விய இருளிலே வரும்படி.

185. கலியைக் கெடுத்தார்; கலி - அஞ்ஞானம். நலியைத் தடுத்தார் - துன்பத்தை நீக்கினார். சுனைநின்று எடுத்தா ரென்பது புனல்தருபுணர்ச்சியைச் சுட்டியது. அன்பால் நமக்கு உயிரைக் கொடுத்தார்.

186. நினக்கும் உன் உரையை எண்ணி அவனை இரந்த எனக்கும் மகிழ்ச்சி உண்டாகும்படி. நம்பி-சுந்தரமூர்த்தி நாயனார். இரந்த அன்று - திருப்புகலூரில் வேண்டிக்கொண்டபொழுது. மின்னை - தலைவியை. இவ்விருள் அருள்பெற்று - இந்த இருளில் அருளைப்பெற்று.

187. பாகை நிகர்க்கும் - வெல்லப்பாகை ஒக்கும். நம்பிக்கு - சுந்தரமூர்த்தி நாயனாருக்கு. ஈகை - பொன். சாகை அனைத்தும் - எல்லாக்கிளைகளிலும். தோகை - மயில். எழுந்து ஓசையோடே கூவும்.

188. மாலும் அயனும் முறையே பதத்தையும் முடியையும் பலநாள் திரிந்து அலைந்துதேடிக் காணமாட்டாமல், பிறகு தம் அகங்காரத்தை விட்டொழித்து உள்ளங் குவிந்து கூடிப் புகழ்ந்த வுடன் அவர்களுக்கு வெளிவந்த பெருமான். கைம்மா - யானை. பிடியினை நேடி. அலம்வந்து-மனம் சுழன்று. தலைவன் தலைவியைத் தேடிவந்து நிற்பதைக் குறிப்பாற் புலப்படுத்தினாள்.

189. கோ தாம்பு அல்வாய்கட்டி மேய்க்கும் முகுந்தன் - பசுக் களைத் தாம்பினால் இரவிலே கட்டி(ப் பகலில்) மேய்க்கும் திருமால். குசே சயத்தோன் - பிரமன். மீது ஆம் பல் விண்ணோர் - மேலுல கத்தில் உள்ள பல வானவர்கள். மெல்லியல்; விளி. பார் - பார்ப்பா யாக. சேதாம்பல் - செவ்விய ஆம்பல். சுனையிலே வந்து. முல்லை யரும்புக்கு மாறாகிய பல்லையுடைய வாயை ஆம்பலானது சுனையில் வந்து கண்ணீரோடு வணங்கியது; கள்ளாகிய நீரோடு வளைந்தது.

190. திருமகளும் கலைமகளும் சேர்ந்து வளருங்கழுக்குன்றம். மயிலும் குயிலும் சேர்ந்து வளரும் நந்தாவனமெனத் தோற்றுவது ஒரு நயம். அடியாகிய தாமரையில் அன்புள்ள அன்னமே,

சந்தனத்திலேயுள்ள மலர்களையும் தழைகளையும் பறித்துப்பின் உன்னை அடைவேன். தாழ்த்து - தங்கி.

191. தலைவியைத் திருமகளாக உபசரித்துக் கூறுகின்றான்.

நின்முகத்தை நான்கண்டு நீ கூறும் பலமொழிகளை உணர்ந்து விளக்கம் பெறுதலைத் திருவுள்ளத்தில் எண்ணி. முந்நீரென்றது பாற்கடலை. கஞ்சத்து - தாமரையைக்காட்டிலும். அதிகம் என்றோ - சிறப்புடைய தென்று கருதியோ. சுகங்கண்ட வாய்ச்செவ்வொளி தள்ள - கிளியின் தன்மையை உரையினால் பெற்ற வாயினது சிவந்த ஒளி திறக்க; இதழாகிய கதவத்தை ஒளி தள்ள. இரவா தலின் மூடியிருந்த இதழைத் தள்ளவேண்டியதாயிற்று. இந்த இருளில் வெளிப்பட்டது.

192. கற்பத்தில் - பிரளய காலத்திலுள்ள. கொண்மூ - மேகம். ஆனைக்கரத்தைப்போலப் பெய்கின்ற. இருள் தூங்கு யாமம். விலங்குகள் திரிகின்ற நீண்டவழியில் பொருந்துவது உண்டா? கூடா தென்றபடி.

193. கனம்மின் அன்றி-மேகத்திலுள்ள மின்னலையல்லாமல். பொய்வேய் உனது இடை மின்னும் - பொய்யைத்தன் உருவாகக் கொண்ட உன் இடையாகிய மின்னலும். வேலும் மின்னலும் முறையே விலங்கையும் இருளையும் போக்கும். அலங்கல் - மாலை. மணந்து உய்வேன் - அளவளாவி உய்ந்து போதற் பொருட்டு.

194. முடிமேல் சசியைக் கொண்டவர்; சசி - சந்திரன். தறுகண்மையையுடைய ஆலகாலவிடமாகிய இருளை ஏற்றுக் கொண்டவர். அசி - வேல். ஆனந்தம்: எழுவாய். தொலையா அனம் - உண்ண உண்ணத் தொலையாத சோறு.

195. இக்கு அல் மொழி குழல் மின்னாள்-கரும்பைப்போன்ற மொழியையும் இருளைப்போன்ற கூந்தலையுமுடைய மின்போன்ற தலைவி. தலைவியின் முகத்திலுள்ள அழகைக் கவர்ந்து பக்கத்தி லுள்ள இருளை ஓட்டுபவரைப்போல வானத்திலே செல்லும் சந்திரனே, இந்தக்களவு செய்த கன்மமானது இறைவன் தக்கன் மகத்தில் உன்னைத் தண்டிக்கும்படியாக முடிந்தது. அக்கன்மம் முற்றியது - அந்தக்கன்மம் விளைந்தது. மகம் - யாகம். உன் உடலறச் சாடியது - உன் உடல் தன் இயல்பு அழியும்வண்ணம் காலால் தேய்த்தது.

196. பரிவினில் - அன்பினால். சிங்கம் களிறாகிய இரையைப் பெற்று அங்கும் இங்கும் திரிகின்ற சாரல். வரல் ஏற்பதன்று - வருதல் பொருந்துவதன்று.

197. விரல் கன்றி வருந்தும்படி மலர் கொய்வது எதற்கு. நல்லார் - ஆய மகளிர். சேக்கை - படுக்கை. இருவர்க்கு - பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும்.

198. கல் நேர் என் நேர் அருள் - கல்லையொத்த மன வன்மையையுடைய என்னிடத்தே அருள்பாலித்த. முன் ஏது இல் - அதற்குமுன் தான் அருள் செய்வதற்கொரு காரணம் இல்லாத. காரணமின்றிக் கருணை செய்தவன்; அவ்யாஜ கருணா மூர்த்தியென்றபடி. மின் நேர் இடைக்கு ஆம் தழையும் - மின்னலையொத்த இடைக்கு உதவும் தழைகளையும். இன்னே - இப்பொழுதே. பொன் ஏர் மலர் - பொலிவும் அழகுமுடைய மலர்களை. அல் நேர் குழற்கும் - இருளையொத்த கூந்தலுக்கும்.

199. அன்னை எழுந்தால் வைது சீறும். அருள்பெய்து எனை ஆம் என காக்கும்பிரான் - கருணையை மேற்கொண்டு தகுதி சிறிதேனுமில்லாத என்னை இவளைக் காத்தல் தகுமென்று திருவுளங்கொண்டு பாதுகாக்கும் தலைவன்.

200. அன்னை துயிலும் எழும். வெஞ்சியம் இடந்தன்னை அயின்று ஆர்ப்பரித்து அணைபுனம். புனத்தேபயின்றால் - காட்டில் வந்தால். பழிவருமென்றது தலைவனுக்கு ஏதம்வர அதனால் தமக்குப் பழியுண்டாகுமென்பதை நினைந்து. பேதை அஞ்சும்; அதனால் நீ எம்பால் வரல்; வரல் - வருதலை யொழிவாயாக. குயின்ற ஆர் சடை உடை எம்பெருமான் - பதித்த ஆத்திமலரை யுடைய சடாபாரத்தைப் பெற்ற சிவபெருமான்; குயின்ற ஆர், குயின்றாரென விகாரம்.

201. கண்டோர் தமை என்றும் காணு வகை செய்-தன்னைத் தரிசித்தவர்கள் சிவபோதம் அறும்படி செய்த. விண்டோர் வரும்- துறவியர் அணுகும். விடாய் கொண்டோர் அது தீரும்பொருட்டு ஒரு புனலைக் கைக்கொண்டு மிக்க மகிழ்வோடு உண்டவர்களது கழுத்தைப் பிடிப்பவர் செயலை ஒக்கும். உரை ஒக்கும் என்க.

202. நீ இரவில் எய்தற்கு எம் மான் சித்தம் திகைத்திடும். நின்னைச் சார்ந்து அடி வணங்கும் ஏவலாளர் கூட்டம் தங்கும் நின் நகரத்தை அடைந்தபோது. சத்தம் - ஒலி. கணிதமுறும் - நிச்சய உணர்ச்சியைப் பெறுவாள். சத்தமாகிய இலக்கணம் தெரிந்தால் கணிதமாகிய சோதிடம் பொருந்துமென வேறொரு பொருள் தோற்றியது. இவ்விரண்டையும் ஒருங்குரைத்தல், "சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவை பிதற்றும், பித்தர்" (**நாலடி.**) என்பதனாலும் உணரப்படும்.

203. கன்னியைத் தோய்வதற்குக் காரணமான யாசகத்தை அஞ்சுவேன். அல்லா அரவு - அல்லாத மற்றப் பாம்புகளை. எம் ஊர்க்கு உறல் எளிது.

204. முத்தைப்போல அரும்புகளைத் தோற்றி, மரகதம் போன்ற பச்சை இலைகள் செறிந்து அலருகின்ற பொலிவு பெற்ற கொத்தையுடைய. புன்னைச் சேக்கையின் - புன்னை மரத்திலுள்ள இருப்பிடத்தில். கத்தி உறும் - ஆரவாரித்து இருக்கும். துயில் கொள்ளாதது என்னை - தூங்காததற்குக் காரணம் யாது?

205. சீரால் நிறையும். பிறையாலும் நீராலும் நிறைந்த சடையை உடையார். புள்ளோசையைத் தலைவனது தேர் மணி யோசையென்று தவறாக எண்ணிப் போய்ப் பார்த்தேன்.

206. சங்கம் ஈன்ற தரளம்; தரளநிரை - முத்தின் வரிசை. மடவார் நகைபோல - மகளிர் பற்களைப்போல. அங்கங்கு அவிர். கங்கம் குலவு - கழுகுகள் உலாவுகின்ற. ஐயம்பெறுகுறி - சந்தேகத்துக்கிடமாகிய குறிப்பை. ஆற்றினர் - செய்தனர்.

207. முடங்கல் - வளைவு. தாழையிலே உள்ள முள்ளானது தைக்கவும். கங்குல் அடங்கலும்-இரா முழுவதும். கானல் - கடற் கரைச் சோலை. பதத்தால் வழி ஆய்ந்து - காலால் தடவி வழியை ஆராய்ந்து. மடங்கரும் - மீள்வதற்கரிய. வாழிய நீ யென்றது இகழ்ச்சிக் குறிப்பு. விடம் களம் கொள்வோர் - ஆலகால விடத்தைத் திருக்கழுத்தில் ஏற்றுக்கொண்டவர்.

208. நல் நாகத்தின் மேல் துயில் கொள்பவனாகிய திருமாலால் அளக்கப்படாதவன். என்னுடைய குற்றஞ் செறிந்த கவியைப்போலப் பல நாகங்களைத் தன் மேலே அணிபவன். அன்பர் - தலைவர். பண்பால் அவாய் - தம்முடைய அருட் குணத்தால் அவாவி. புன்னாகம் - சுர புன்னை. கைதை - தாழை. புனை - நீர். அன்பர் என் ஆகம் மேவ இங்கு உற்றார் கொல்? இகந்த பின் - சென்ற பிறகு.

209. என் ஆரியன் - என் தலைவன்; ஆரியன் - மேலோன். கூர் இயல் - கூர்மை பொருந்திய. மூவிலை வேல் - திரிசூலம். சீர் இயல் நெஞ்சன் - சிறப்பையுடைய உள்ளத்தினன்.

210. திருமேனியில் உமாதேவியைப் பொருந்தினவர். மேக மண்டலத்தின் மேலும் சென்று உயர்ந்த திருக்கழுக்குன்றம். தாகத்தின் மேல் - ஆசை காரணமாக. நாகம் - புன்னை மரம். மாலை தோன்றலாகிய இதனை ஆராய்வாயாக. தலைவன் தான் வந்ததை அறிவிக்கும்பொருட்டு அடையாளமாகப் புன்னை மரத்திற் கற்பக மாலையை வைத்துச் சென்றான்.

211. கலை - ஆண்மான். திரிமான் என - திரிந்த பெண் மானைப்போல. மலையினையும் மலைச்சாரலையும் சுற்றி. அல்முழுது எய்த்தும் - இரா முழுதும் இளைப்புற்றும். சிலை - வில். குன்றினைச் சிலையெனக் கொண்டோன் என மாறுக. நின் நகர்க்கு ஒன்றுதும் - இனி இத்தகைய வருத்தம் உண்டாதற்கு இடமின்றி உன்னுடைய ஊருக்கே வருவோம்.

212. தாலு அறம் மன்னும் அடியார் - தம்முடைய நாவில் தர்மம் நிலைபெற்ற அடியவர்; அற நெறி கூறும் சொற்களையே பேசுவாரென்றபடி. அன்னோரை - அவ்வடியாரை. அவன் - இறைவன்.

213. கழி வாய்க்கும் பெண்ணை - கழிக்கரையில் வளர்தலைப் பெற்ற பனையிலிருந்து. வன்கால் பொரலால் உதிர் காய்த்தொனி - வலியகாற்று வீசுதலால் உதிர்ந்த காயினால் உண்டாகிய ஓசையை. நின்னுழி - நின்பால். பேரன்பினள்: தலைவி. நின்குறியென ஒன்றி - நின் அடையாளச் செயலென எண்ணிச் சென்று. பவச் சுழி - பிறவியாகிய சுழல். தலைவி அழுதுகொண்டே திரும்பினாள்.

214. அன்பர் குழு பாதம் முற்ற - அடியவர் கூட்டம் தன் திருவடிகளைச் சூழ. பாதவத்திடை - மரங்களினிடையே.

215. தேன் - வண்டு. தெரியல் - மாலை; இது சிவபெருமானை வழிபடச் சென்ற தேவர் கைக்கொண்டது. வான் தெரியலொடும் சென்று இறைஞ்ச. கான் - சோலை. அவர் - தலைவர்.

216. செயிர்த்து - கோபித்து. செல் - மேகம். வயிர்த்து - வலிபெற்று. கருவுயிர்த்து இப்பி மாண்டாற்போல. நம்மைப் பெற்றுத் தான் செத்துப் போகாமல்; சினத்தால் இங்ஙனம் கூறினாள். அயிர்த்து - ஐயுற்று.

217. பிராட்டி - உமாதேவியார். பெருந் திருக் கூத்து - மகா தாண்டவம்; ஆய்க்கூட்டம் வாட - தாய்களின் தொகுதி வாட்டம்அடைய; இனித் தாய்வயிற்றிலே பிறவாதபேறு ஜீவர்கள் அடையவென்பது கருத்து; "உரு மாறிப் பவக் கடல் வீழ்ந் தூசலெனத் தடுமாறி யுழலு மாக்கள், கரு மாறிக் கதியடையக் கான் மாறி நடித்தவரைக் கருத்துள் வைப்பாம்" (திருவிளை.) செய்வோன் திருவாயிலே சேர்க்கும்பொருட்டு ஆலகால விஷத்தை அளித்த கடலைப்போல ஆரவாரித்து. மதிநுதல்: விளி. யாமத்தும் துஞ்சில.

218. கொண்டு - உணவாகக் கொண்டு. ஓயும் - ஓய்ந்து போதற்குக் காரணமாகிய. வாயும் - வாய்க்கும்; அமையும். வாய் துஞ்சிலதென்றது பேசிக்கொண்டே இருப்பதைக் குறித்தது.

219. ஒப்பு அறை ஓசை இலார் - ஒப்பாகச்சொல்லும் சொல்லின் தொனியே இல்லார். தப்பு அறை ஓசைஇல் நண்பர் - ஒருவர் குற்றம் கூறும் ஒலி இல்லாத தலைவர்; குற்றமில்லாதவரென்றபடி. காவலர் - ஊர் காவலர். எற்றுகுணில் - அடிக்கின்ற குறுந்தடியையுடைய. அப்பு அறை ஓசை ஒத்து - கடலின் நீர் மோதுகின்ற ஓசையைப்போன்று. அச்சம்தரும் - எனக்குப் பயத்தைத் தரும்.

220. தண்ணிலவு என்றது நகையை. கழுக்குன்றுள் நிலவு என்று - திருக்கழுக்குன்றத்தில் இரு என்று கூறி. ஓசை செவியில் நண்ணிலது. என் துயர் தீரஒட்டாது - என் பிரிவுத்துயரம் நீங்க ஒட்டாமல். அலை நாப்பண் - கடலினடுவே.

221. என் நேய அன்பர் - என்பால் விருப்பத்தையுடைய தலைவர். என் ஏர் வரவு உன்னி - என்னுடைய அழகிய வரவை எதிர் நோக்கி. கல்லைப்போன்ற நெஞ்சை யுடையவர்களுக்கு முன்னே எதிர்ப்படாதவன். கொன்னே - வீணே. கூகைகள் - கோட்டான்கள்.

222. வன்கண்ணரெய்தினும் தீதினை மாற்றுவன்; மாற்றுவனென்றது சிவபெருமான் கூற்ருகக் கூறியது. தாழும் - வணங்குவீர்களாக. சாற்று வன்தோல் உடையான் - சாற்றிய வலிய தோலை உடையாக அணிந்தவன். வன்ருேணுடையான்: சிவனென்னும் துணையாய் நின்றது. சார்வு - வருதலை.

223. பேதுறல் என் - மயங்குதற்குக் காரணம் யாது? முன் நால்வருக்கு இன்பு அருள்வோன்; நால்வர் - திருஞான சம்பந்தர் முதலிய சமயாசாரியர் நால்வர்.

224. சுழியும் - சுழியை உண்டாக்கும்,

225. குரை நாய் - குரைக்கும் நாய்கள். புரப்பார் - ஊர் காவலர். இந்து உம்பர் வாய் துஞ்சிடாது - சந்திரன் வானத்தில் மறையாது. வேய் துஞ்சுதோளி - மூங்கிலின் தன்மை தங்கிய தோளையுடைய உமாதேவியார்.

226. நிறை நீங்க - உள்ளத்தை நிறுத்தும் ஆற்றல் நீங்கவும். இவ்வூர் நிலை நீங்க - இவ்வூரில் நிற்றலை நீங்கவும். இந்நாண் நிறுத்திய நம்மறைநீங்க - இந்த நாணத்தால் நிறுத்தப்பட்ட நம்முடைய இரகசியம் வெளிப்படவும். மருந்து - பரிகாரம். மெய்யும் முறையும் நீங்கலாத கழுக்குன்று. முறை - நீதி.

227. நச்சி நயம் உறக்கண்டோர்க்கு - உதயமாகும்போது விரும்பி இனிமை பொருந்தப் பார்த்தவர்களுக்கு. வெய்யோன் - சூரியன். வெப்பு உறுத்துதல்போல் - வெப்பத்தை மிகுதியாக

உண்டாக்குவதைப்போல. கழுக்குன்றர் செயல் - இது கழுக்குன்றத்துள்ள சிவபெருமான் கூட்டுவித்த காரியம்.

228. க்ரு-கர்ப்பம். உயிர்த்து - முட்டையிட்டு. அது பார்த்து நின்று ஆக்கும் - அம்முட்டையைப் பார்த்து நின்று குஞ்சுகளை உண்டாக்கும். மீன் பார்வையால் முட்டையிலிருந்து குஞ்சு வெளிவருமென்பர். கயலையுடைய துறையை யுடையவர்; தலைவர். மரு - நறுமணம். ஓதி - கூந்தல். வெரு ஆர்ந்து - அச்சம் நிரம்பி. கழுக்குன்றத்து ஈசன் கையிலும் வேணியிலும் தீயையும் நதியையும் உடையனாகி முறையே வெப்பத்தையும் தட்பத்தையும் பொருந்துவான். தலைவர் வன்பும் அன்பும் ஒருங்கே யுடையவர் என்பது தலைவி கருத்து.

229. தைவந்து - தடவி. அலர் வேய்ந்து - மலரை அணிந்து. ஆரம் கொங்கை பயில்வித்து - நகில்களில் சந்தனத்தைப் பூசி. விழித்தபின் காணார். தீ ஆர முற்று கை - நெருப்பு நிரம்பச் சூழ்ந்த திருக்கரத்தையுடைய.

230. என் அன்பர் முன் புரிந்திடு குற்றம் உண்டாம் கொல். பேரழகு - மாமை யென்னும் அழகு. ஒன்ற - அணுகி.

231. எய்தின் எனக்கு இனிது. அவர்க்கு-புகல்பவருக்கு. அவர்க்குப் புகழ் எய்திடும். மின் அன்னாய்: தோழியை நோக்கிய விளி. அன்பர் முன் வாய்ந்து - தலைவருக்கு முன்னே சென்று. எனது பொன்னாள் நடன மெய் பொன் ஆனது என்று - திருமகள் நடனம் புரிகின்ற எனது மேனி பசலை நிறைந்ததென்று.

232. பரியாதவர் - அன்பு செய்யாதவர். பார்த்திபர் மேற் பிரியாத அன்பினின் - தலைவர்பால் நீங்காத அன்பினால். தீதையும் காணாது - அவர் குற்றத்தையும் பாராமல். தெரியாதவரெனின் காணாது ஓதல் வேண்டும். பெற்றி - உன் இயல்பு. தெரிந்தும் - இயல்பை அறிந்தும். அளி புரியாதவர்க்கு - அன்பைத் தெரிந்து கொள்ளாதவருக்கு.

233. ஆவிகள்தோறும் - உயிர்தோறும். புகழின் - புகழைப் போல. இந்நாள் - இக்காலத்தில். மின்னுக்கு - தலைவிக்கு. மயல்- காம மயக்கம். நொந்து உகும்படி எவ்விடத்தையும் கவர்ந்து அலராகி அப்புகழை நுங்கும். உகுதல் - மனம் உடைதல்

234. தேசம் கலந்து - பல நாட்டினர் ஒன்று கூடி. பாசங் கலந்த இருள் - அஞ்ஞானம். வாசங் கலந்து - வாழ்க்கை பொருந்தி. வழங்கு அதரின் - உலவுகின்ற வழியில். எம் வயின் உறல் - எம்பால் வருதல், நீதி - முறை.

235. எம் அண்ணல் உருமையின் - எம் தலைவர் வாராமையினால். புளினமே - மணல் மேடுகளே. கனமே - மேகமே. அலைவனமே - அலைகளையுடைய நீரே. வனமே - காடே. இனம் ஏது உரையீர் - இன்னும் சிறிதேனும் சொல்லாமல் இருக்கின்றீர்; ஏதுமென்றதன் உம்மை தொக்கது. புரை ஈர் - குற்றத்தைப் போக்கிய.

236. கண்ணீர் - தேனாகிய நீர், துயரத்தால் கண்ணிலிருந்து வரும் நீர். கால் தடுமாறி கழி ஒழிவாய் - காற்றால் தடுமாறிக் கழியின்கண் தங்குவாய், கால் தடுமாற்றம் அடைந்து மிக்க ஓய்வையுடையையாகி. பெண்ணீர் மருவி - பெண்ணின் இயல்பைப் பொருந்தி. ஓர் ஏந்தலை யுட்கொண்டு - மேலுயர்ந்த அலையினிடத்தில் இருத்தலை மேற்கொண்டு; ஒரு தலைவனை உள்ளத்தே கொண்டு. பேதுறுவாய் - மயங்குவாய். நெய்தல் மலரைக் கண்டு தன்னைப்போல அதுவும் துன்புறுவதாகச் சிலேடை வகையாற் புலப்படுத்தினாள். தொடை - மாலை. மண் நீடு அயர்வுகொள் என்போல் - உலகத்தில் நீண்ட அயர்ச்சியைக் கொண்ட என்னைப் போல.

237. ஊரார் அலரின் - ஊரினர் கூறும் பழிமொழியினிடையே. ஓங்கலின் ஓங்குபுகழ் - மலையைப்போல உயர்ந்த புகழையுடைய. அலரின் உறின் நலம் தாரார் - பழிமொழியினிடையே வந்தால் ஊரார் நன்மை செய்யார்; துன்பத்தை உண்டாக்குவாரென்றபடி. துயர் சாரும் என்று உரைத்தி. வாரார் முலை : தோழியை நோக்கிய விளி. தேவரின் பொருட்டு நஞ்சத்தையுண்டு கரிய நிறம் பொருந்திய கண்டத்தைக் கொண்ட பெருமான்.

காவலர்க்கு, அவர் வாராது உரைத்தி யென்க.

238. இன்னும் தினைப்புனத்தைக் காவல் செய்வீராக என்று அன்னை நம்மை ஊருக்கயலிலுள்ள இடத்துக்குச் செல்லும்படி ஏவ அதனால் தலைவி இல்லைவிட்டுச் சென்றாளென்று தலைவருக்குச் சொல்லி, இரவுக் குறிக்கண் இங்கே வாராதவாறு செய்வாயாக. மானம் - பெருமை.

239. நெறி கொன்று - உரிய வழியை நீத்து. எச்சம் நின்றவற்று ஓர் மறி கொன்று - யாகத்தில் நின்ற ஆடுகளுள் ஓர் ஆட்டைக் கொன்று. அதன்முடி ஈவோன் - அதன் தலையைத் தக்கனுக்குக் கொடுத்தவன். அனைக்கு - தாய்க்கு. அனைக்கு விளம்பு என முடியும். அறிகொன்று அறியாது இமைப்பாய் - அறிவைப் போக்கி உண்மை தெரியாமல் இச்செயல் செய்தாய். நம்மான்

தொடர் ஆண்டகையார் வெறி கொன்றிடாது - நம்முடைய மான் போன்ற தலைவியால் தொடரப்பட்ட தலைவன்பாலுள்ள அவள் பற்றினைப் போக்காமல். வெறி - அளவிறந்த அன்பு. இவ்வெறி கொன்று என் என்ன - இந்த ஆட்டைக் கொன்று என்ன பயன் என்று. மின்னே - தோழியே.

240. எம் மன்னுனவர்க்கு அடிமை என்று. சில தூதுவந்து எவன் வாய்ப்பது - நொதுமலர் வரைவின்பொருட்டுச் சில மணத் தூது வந்து என்ன கிடைக்கும்? ஒன்றும் பயனில்லை என்றபடி. என்பாய் - என்று அறிவிப்பாயாக. முன்னுனவர்க்கு முன்னோன் - முதல்வர்களுக்கெல்லாம் முதல்வன்; பழையவர்களுக்கெல்லாம் முந்திய பழையவனெனலுமாம்; "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே" (திருவா.)

241. வீட்ட - தொலைக்க. அங்கண் - அவ்விடத்தில். களிறு தருபுணர்ச்சியைக் குறித்தபடி. சினவு - சினந்த. பணிகொள் - அந்தவேழத்தைத் தொலைத்து நம்மை ஆட்கொண்ட. அன்பர் - தலைவர். வரைவு - கல்யாணத்தை. இங்கட் குரவர் - இங்குள்ள தாய் தந்தையர். எதிர்கொள்ள - ஏற்றுக்கொள்ள. எற்புரப்பாய் - என்னைப் பாதுகாப்பாயாக.

242. கவினும் - அழகுபெறும். மாலை புலர்ந்த - மாலைக் காலத்தில் வாடிய. என்னென வந்த அன்னைக்கு - என்ன காரணம் என்று இங்கு வந்த தாய்க்கு. ஆலை உகந்த பிரான் - கல்லால மரத்தை விரும்பிய சிவபெருமான். அஞ்சுகத்தின் பாலை - கிளி உண்ணுதற்குரியபாலை. பூசை - பூனை. பைங்கொடி - தலைவி. அன்னைக்குச் சொன்னேன் என வருவித்து முடிக்க.

243. கோடு - கிளை. கோடு முதலியவற்றில் மலர்ந்த ஒளி மிக்க மலர்களும் நிலவுகின்ற உலகில்; கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என நான்கும் கூறினர். மின்னர் வாய் அலர்நின் நிறை அளிகொண்டு ஆடும் இது - மகளிருடைய வாயிற் பிறக்கும் பழிமொழி நினது நிறைந்த அன்பைக் காரணமாகக்கொண்டு பேசப்படும் இந்தச் செயல்; அலர் அளி கொண்டாடும் என்றது ஒரு நயம். அயனும் மாலும் ஆகிய இருவர்.

244. விளர்ப்பு - வெளுத்தல். நங்கைக்கு - தலைவிக்கு. அயர்ச்சியும் - சோர்வும். சங்கைக்கு இடம் உற்று - சந்தேகத்துக்கு இடமுண்டாகி. உயிர்த்து - பெருமூச்சுவிட்டு. செயிர்த்து - கோபித்து. சகிக்கலள் - பொறுக்கவில்லை.

245. பிள்ளை நகைகொள - அரியப்பெறும் பிள்ளை மகிழ்ச்சி கொள்ள. தந்தையென்றது சிறுத்தொண்டரை. தள்ளை - தாய்.

அமை - சமைத்த. கறி - பிள்ளைக்கறியை. தலைவியின் எழிலைக் கொள்ளை கொள்ளுவது உன்னால் வந்த குறையென்று அன்னை எண்ணாமல். பேதைமையறிவால் வெள்ளாடு இறந்துபட விரும் பினாள். அற - இறந்துபட.

246. மின் எறி - மின்னலை வீசுகின்ற. விரவுதலால் - வந்து பழகுதலால். நீ வரும்வழியில் யானையைத்தேடிச் சிங்கம் திரிதற் கிடமாகிய கொடிய புல்லியவழி நேர் வழியாயிற்று. பலர் அடுத் தடுத்துத் தலைவியை வரைந்துகொள்ளும் எண்ணத்தோடு வரு தலின் காட்டுவழி மாறி நல்லவழி யாகிவிட்டதென்றாள். உன் புணர்ப்புரை - உனது கட்டுரை; நீ முன்பு யோசித்துச்சொன்ன வார்த்தை.

247. கண்ட அன்பர்க்குக் கதி அருள்வோன். இன்னாள் மணம் சூழ்ந்து வந்தால் - இவளது மணத்தையெண்ணி நீ வந்தால். ஆதுலர் - இரவலர். கேளிர் - உறவினர். நினைமகிழ்வார் - நின் பால் மகிழ்ச்சி பூண்பார். உண்டே - உண்டா?

248. யாங்கள் துயர் தங்கும்படி வேங்கை செவ்வாய் மலர்ந்து எங்கும் பரந்தன - நாங்கள் வருத்தம் அடையும்படி வேங்கைமரம் நன்றாக மலர்ந்து எங்கும் பரவியுள்ளன; வேங்கை யானது ரத்தத்தாற் சிவந்த வாயைத் திறந்ததென்பது வேறொரு பொருள். அம்புலி ஊர்கொளச் சார்ந்தது - சந்திரன் பரிவட்டம் கொள்ளாநிற்க வானை அடைந்தது; அழகிய புலியானது ஊரிலுள்ளாரை உணவாகக்கொள்ள வந்ததென்பது வேறு பொருள். திரு - தலைமகள். மணஊர்க்கு அனுப்ப - கல்யாணம் செய்தலையுடைய ஊருக்கு அனுப்பும்படி. தினைப்புனத்தே இருந்த தலைவியை இற்செறித்து மணம் செய்விக்க வேண்டுமென்பது எம் மவர் கருத்து. வேங்கைமலர் மலரச் சந்திரன் பரிவேடங் கொள்ளுங் காலத்தில் குறிஞ்சி நிலத்தார் மணம் செய்தல் மரபு.

249. வியப்பு எய்துறும் - ஆச்சரியம் உண்டாகும். குழையைக் கீண்டு அகன்ற கயல்போன்ற விழியையுடைய தலைவி. நின்னால் வரும் அலர் - உன்னால் உண்டானபழிமொழியை. சூது - சூதுக்காய். பண்ணைக்கும் - விளையாட்டு மகளிர் கூட்டத் திற்கும். இந்தப் பகலும் - இன்னும்.

250. அடுகுறி ஓர்ந்து - சங்காரஞ்செய்யும் குறிப்பை எண்ணி. புரம் நகைத்தோன் - புரத்தை நகைத்து எரித்தவன். விடுகுறி - சேரவிடுகின்ற குறிப்பை. மின்னை - தலைவியை. வை - கூர்மையான. நீ தொடுகுறி - நீ பயிலுங் குறியிடத்தில். மின்னார் பயிறலின் - மகளிர் பழகுவதனால். கண்டு அலர் தூற்றற்கும்

உன் இடு குறி காரணம் ஆம் - கண்டு பழிமொழியைக் கூறுதற்கு நீ இடுகின்ற அடையாளம் காரணம் ஆகும். எய்திடுகுறி வேறு தேடு - தலைவியை அடைதற்குரிய குறிப்பிடம் வேறு தேடுவாயாக. இடுகுறிகாரணம் என்ற இலக்கணச் சொல் தோற்றியது ஒரு நயம்.

251. அல்வாயும் - அஞ்ஞானம் வாய்ந்த. ஏய்வோன் - பொருந்தினவன். வில்வாயும் யாணர்ப்புருவம் - வில்லின் தன்மை வாய்ந்த அழகையுடைய புருவம். மின் - தலைவி. வலியவாயையும் வெவ்வியமனத்தையும் கொண்டவேடர். பல்வாயும் ஆர்தலின் - பலவிடங்களிலும் நிறைதலினால். எல்வாயில் - பகலில்.

252. நாமின் - கலைமகள். இராமுகிழ் பூமின் - இரவிலே குவிகின்ற தாமரைப்பூவிலுள்ள திருமகள். இமாசலை - பார்வதி. இம்மூவர் நாமத்தையும் தான் பொருந்தும் வாமி பராசக்தி; வாமி - அழகி. இறைவியே மூன்று தேவியராகவும் இருக்கிறாளென்றபடி. தோம் இல் நிலா நுதல்-களங்கமில்லாத பிறையைப் போன்ற நெற்றியையுடைய. இருள் சூழ்கரியின் - இருளில் உலவுகின்ற யானையைப்போல. யாமினி நீ வரல் - இரவில் நீ வருதலையொழி. யாம் இனி நீ வரல் ஏற்கிலமே - இனி இவ்வாறு நீ வருதலை ஏற்றுக் கொள்ளோம்.

253. தண் - தண்மை. கண்ணார் குவளையும் - கண்ணைச் சேர்ந்த குவளை மலரும். நெஞ்சாகிய கமலமும். கண் மலர மதி போலவும், நெஞ்சக் கமலம் மலரச் சூரியன்போலவும் நீ வந்து கலத்தலால்.

254. சாபமும் கோலும் மலை மால் உற்றோர் - வில்லாக மேரு மலையையும் அம்பாகத் திருமாலையும் பெற்றவர். இருள் - அஞ்ஞானம். தீபமும் பானுவும் - விளக்கும் சூரியனும். செல்வர் - சிவபெருமான். பிரதாபம் - வீரத்தால் வரும் புகழ்; இது செந்நிறமுடையதென்பர். சீர்த்தி - ஈகையால் வரும் புகழ்; இது வெண்ணிற முடையதென்பர். இவ்விரண்டின் நிறங்களையும் தாம் ஒவ்வாமையால் சூரிய சந்திரராகிய கதிரவர் அஞ்சினர். பிரதாபங் கண்டு சூரியனும், சீர்த்தி கண்டு சந்திரனும் அஞ்சினர். சார் களவை - நீ வந்து ஒழுகும் களவொழுக்கத்தை. பாபம் உந்தா உரைப்பர் - பாபத்தைச் செலுத்திச் சொல்வர்; கதிரவர் உரைப்பரென்க; என்றது நீ பகலிலும் இரவிலும் வருங்கால் நின் களவொழுக்கத்தைக் கண்டு முறையே சூரியனுஞ் சந்திரனும் பழி கூறுவரென்றவாறு. ஆதலின் நீ பகலிலும் இரவிலும் வருதலை ஒழிவாயாக என்றாள். அல் - இரவு.

255. இத்துறைக்குரிய செய்யுளில், "இங்ஙனம் நீ வரை யாது வந்தொழுகுதல் நின் நாட்டுக்கும் ஊருக்கும் குலம் முதலிய வற்றிற்கும் ஏற்புடையதன்று" என்ற கருத்து அமைதல் மரபு. இங்கே வேறுபாடாக அமைந்துள்ளது.

வீட்டிற்கு - முத்தி பெறுதற்கு. தேட்டிற்கும் - செல்வத் திற்கும். கோட்டிற்கு நேரும் - மலைச் சிகரத்தை ஒக்கும்; யானைத் தந்தத்தை ஒக்குமெனலுமாம். பொற் கோட்டிற்கும் - மேரு மலைக்கும். நகில் உன் பெருமைக்கு விலையாமேயன்றி மேரு மலை யாயினும் விலையாகக் கொடுத்துப் பெறுதற்கரியது.

256. சிவந்த கண்ணையும் தறுகண்மையையுமுடைய சிங்கம். கூற்றின் தெறும் மடங்கல் - யமனைப் போலக் கொல்லும் சிங்கம். வெங்கட் களிற்றுக்கு - வெவ்விய கண்ணையுடைய யானையின் பொருட்டு. திரிசரி மேவல் என் - திரிகின்ற மலைச்சாரலில் வருவது எதற்கு? குலதெய்வமன்னாள்-தலைவி. அண்ணல்: விளி. சாரலை - வருதலை ஒழி.

257. விரகத்தழற்கு - பிரிவினால் உண்டாகும் துன்பமாகிய அக்கினியில்; உருபு மயக்கம். ஐங்கணை தென்றல் காட்டம் விசிறி யின் என் உரகத்த அல்குல் மெய் எங்கும் வேவிப்ப - மன்மத னுடைய பஞ்ச பாணங்கள் விறகைப்போலவும் தென்றல் விசிறி யைப்போலவும் இருந்து நாகத்தைப்போன்ற அல்குலையுடைய என் தலைவியின் உடம்பெங்கும் வேவச்செய்ய; உரகத்த - நாகத்தைப் போன்ற. உற்ற - அடைந்த. நவக்கிரகத் துயரம் - நவக்கிரகப் பீடை; எல்லாத் துயரங்களும் நவக்கிரகங்களால் உண்டாவன வென்னும் துணிவுபற்றி இந்த விரகதாபத்தையும் நவக்கிரகத் துயரமென்றாள். ஆற்றினள் - பொறுத்தாள். மறைத்துரகத் தவன் - வேதங்களாகிய குதிரையை உடைய சிவபிரான். துணிவு - கருத்து.

258. கறை - கறுப்பு. படர் - விரும்பிச் சென்ற. படர் அன்னை - ஏவலாளரும் தாயும். நிறை படர் அன்றி - இதனால் நிறைந்த துன்பத்தை அல்லாமல். மிறை படர் காவலர் - நடுக் கத்தை உண்டாக்கும் யாமங் காவலர். குணில் பறை பட - குறுந் தடி பறையினிடத்திலே பட. நெஞ்சம் குறைபட - மனம் வருந்த. மின் - தலைவி. மின் ஆவி பதைக்குமென்க. யாமம் காவலர் பறையைக் கேட்டு அது தலைவன் வருதற்கு இடையூறாகுமே யென்று தலைவி வருந்தினாள்.

259. காவி - கருங்குவளை மலர். கூடலின் ஏழ்கடல் ஓர் வாவியின் வந்தென-மதுரைத் தலத்தில் ஒரு தீர்த்தத்தின்கண் எழு

தடலும் வந்து சேர்ந்தாற்போல; ஸ்ரீ மீனாட்சியம்மையின் அன்னை யாகிய காஞ்சனமாலையின் பொருட்டு ஸ்ரீ சுந்தரேசர் எழுகடலை யும் ஒரு தீர்த்தத்தின்கண் வரச்செய்தருளினா ரென்பது புராண வரலாறு; இதன் விரிவைத் திருவிளையாடற் புராணத்திற் காண்க. என் ஆவியின்மேய சிறியாட்கு-என்னுடைய உயிரைப் போலப் பொருந்திய தலைவிக்கு. காமம் அடர்ந்து - காமநோய் மிகுதியாக அடைய. அடர்ந்து : எச்சத்திரிபு. "சிறு கோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள், உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (**குறுந்தொகை.**) அறல் இல்சாவியின் - தண்ணீர் இல்லா மல் பதராய்ப் போன பயிரைப்போல. சாவி : வழக்கு. தாழ்ப்பது அன்று - வரைந்துகொள்ளாமல் தாமதஞ் செய்தல் தக்கதன்று.

260. கழிதரும் என்பு அணிவோர்-கழிக்கப்பட்ட எலும்பை அணிபவர்; ஊனினின்றும் பிரித்துத்தரும் என்பு எனலுமாம். கன்னி - தலைவி; எழுவாய். எழுபோது - விழித்த காலத்தில். கணு இலளாய் என்று கூட்டுக. உந்தி - செலுத்தி. கண்ணீர் அருவி சுழிதரும் வெள்ளத்திடை. கரைதோன்றச் செய்யே என்றது, இத்தகைய துன்பம் மேலும் வாராமல் வரைந்துகொள்க என்னும் கருத்தினது.

261. உள்ளம் கனிவாராகி உறுபவர்களுக்கு. கண்டம் களங்கனியார் - களாப்பழத்தைப்போன்ற கண்டத்தை யுடைய வர். அவரது திருக்கழுக்குன்றத்தைப்போன்ற தலைவி. கரியுண் விளங்கனியாகி - யானை உண்ணப்பட்ட விளாம்பழத்தைப்போல ஆகி. மண்ணுண் மணியன்ன மேனிகொண்டாள் - மண்ணால் மூடப்பட்டு ஒளியிழந்த மாணிக்கத்தைப்போன்ற மேனியைப் பெற்றாள்; ஒளி இழந்தாளென்றபடி. வளம் கனி நாட - நீர் வளம் நிலவளம் மிகுந்த நாட்டையுடைய தலைவனே. தாழ்க்கின் வசை உனக்கு எய்தும்.

262. மறுக்கலை - மறுக்காமல். நேர்ந்தருள் - உடம்படுவா யாக. சுபம் ஏதுவதாய் - மங்களச் செயல் காரணமாக. நகர் ஏய்ந்து - என் ஊருக்குச் சென்று. உதிக்குமுன் உன்னைக் காண் பேன் - சூரியோதயத்திற்கு முன்னே மீண்டு வந்து உன்னைப் பார்ப்பேன். கழுக்குன்று ஒளி - திருக்கழுக்குன்றத்தில் எழுந் தருளிய பரஞ்சுடராகிய சிவபிரான். அவரது அருளையொத்த தலைவி. பின்னை - தங்கை; என்றது தலைவியை. தெருட்டுதி - தெளிவிப்பாயாக.

263. புனலூரர் - புனல்வளத்தையுடைய ஊரினர். மாற் றம் - வார்த்தையை. கண்ணீர்வெள்ளம் நின் தேரை வழி

மறிக்கும். அலைபொருபுனல் - கங்கை. பூப: விளி. அங்கண் தருபுனல் நீர்க்கடன் மங்கைக்கியற்றி - அவ்விடத்தில் வரும் புனலால் இறந்தோருக்குச் செய்யும் கடனைத் தலைவிக்குச்செய்து; இவள் இறந்துபடுவாளென்பது கருத்து.

264. யாது பிரிவு - இந்தப்பிரிவு எவ்வகையான பிரிவு? பிரிவின்கண் சாராதென்பது கருத்து. மெய்யை உயிரானது கனவிலே பிரிவதை இப்போது பிரியும் பிரிவு போன்றதென்று புத்தியால் தெளியாமல். குழையொடு வாது இகல் விழியாய் - காதணியோடு வாது செய்கின்ற விழியையுடையாய்.

265. பிணைக்கொள்ளை எங்கே - மான் கூட்டம் எங்கே? கை கெழுமு பொன்னம் பிள்ளை எங்கே - கையிலே பொருந்திய பொன்னாலாகிய பாவை எங்கே? தள்ளை இவை எங்கே எனப்பேசின்-தாய் இவ்வாறு இவற்றை எங்கேயென்று கேட்டால். தலைவி நின்னைப் பிரிந்த துயரத்தால் செயலொழிந்து கிடப்பாளாதலின் அவள் நிலைகண்டு, "இவள் விளையாடும் கிள்ளை முதலியன எங்கே?" என்று தாய் கேட்பாளென்றாள். எஃளை எங்கே சொல்வது - அவள் கூறும் இழிவான சொற்களை எவ்வாறு சொல்வது? எள் - இழிவு; ஆகு பெயரால் இழிவுடைய சொற்களைச் சொல்லுதலுக்காயிற்று. இருவள்ளை எங்கே என்று இணை கண் என் என்று உள்ளை - இருவள்ளைபோன்ற காதுகள் எங்கே என்று சென்று பொருந்துகின்ற கண்ணையுடைய தலைவி எத்தகையவளென்று இருக்கிறாய்? எங்கே செய்வன்-அவள் இறந்துபட்டால் அவளைப் போல மற்றொருத்தியை எங்கே சிருஷ்டி செய்வேன்! ஆதலின் நீ நீட்டிக்காமல் ஒல்லையில் உறுவாயாக; ஒல்லை - விரைவில்.

266. கவலேல் - கவலாதே. நல மாநாரணன் நாடரும் - நல்ல பெரிய திருமாலும் நாடுதற்கரிய. வாரணம் - யானை. புலருமுன்னே - விடியுமுன்பே. வயினடைந்து புலருமுன் (வந்து) காண்பர் என்க.

267. முன்னே யென்றது இயற்கைப் புணர்ச்சிக் காலத்தைச் சுட்டியது. நெஞ்சென்னும் விளி முன்னத்தாற் பெறப்பட்டது. பரவை வெதுப்புவது ஒத்து - கடல் கொதித்துச் சுடுவதைப் போன்று. கொன்னே - வீணுக. வருந்தலாகிய ஒன்றையன்றி நம்பால் ஒரு தவறும் இல்லை.

268. காம மிகுதியினால் சங்கை நோக்கித்தலைவி அது தன்னைப்போலவே துன்புறுவதாகக் கூறுகிறாள். அலைவாய் அலைந்து - அலைகளினிடத்தே திரிந்து. அலைச்சலாக அலைந்து

என்பது வேறுபொருள். உரியார் வாயுறலற்று - ஊதுவதற்கு உரியவர்கள் வாயிற் சேர்தலை யொழிந்து; உரிமையுடையார்பால் சேர்தலையொழிந்து என்பது தொனிப்பொருள். அறவிளர்ப்புற்று-முற்றும் வெண்மையை யடைந்து; பலமின்மையால் உடல் முழுதும் வெளுத்தலைப் பெற்றதென்பது வேறுபொருள். உலைவு ஆம் என்போலும் - தளர்ச்சியமைந்த என்னைப்போல. கண்ணீர் முத்து அரும்பி - துவாரம் செய்தற்குரிய முத்தைத் தோற்றுவித்து; கண்ணீராகிய முத்தைத் துளித்தென்பது வேறுபொருள். இங்கு ஊர் சங்குகாள்-இங்கே ஊர்ந்து செல்லுகின்ற சங்குகளே. மலைவாய் மயில் - பார்வதி. மன்னலர்போல் - சேர்ந்து நிலைபெறுதவரைப்போல. வாய்திறப்பது இலை எனின் நலனோ - நாம் வாய் திறப்பதில்லை என்றால் அது நன்றாகுமா? அவர்க்கு இசைப்பீர் - தலைவருக்கு என் நோயை உரைப்பீராக.

269. அடியார் அகத்தே - தன் அடியவர்களது உள்ளத்தில். கடி - நறுமணம். உனது உள்ளத்து அன்பர் கலந்து இருப்ப - உன்னுடைய உள்ளத்தில் தலைவர் பொருந்தி இருக்கவும். மிடியார் நிதி ஆசையின் மெலிந்தாங்கு - வறுமையுடையவர் பொருளாசையினால் இளைப்பதுபோல. நொடி ஆர் பொழுதே - நொடிப் பொழுதிலே. நோய் உறல் - துன்பத்தை அடையாதே.

270. நீல் ஓடு கண்டர் - நீலநிறம் பரவிய திருக்கழுத்தை உடையவர். நோக்கத்தின் நீற்றும் மதன் - திருவிழியால் நீறாகச் செய்யும் மன்மதனது. தோல் ஓட - யானை தோற்று ஓடவும். ஊர்தரும் கால் ஓட - அவன் தேராகக்கொண்டு ஊர்ந்து வரும் தென்றற் காற்று ஓடவும். பூங்கழைத் தோற்றும் மணக்கோல் ஓட - பொலிவுபெற்ற கரும்பாகிய வில்லினிடத்தே தோற்றுகின்ற வாசனையையுடைய மலரம்புகள் செயலற்று ஓடவும்; கோல் - அம்பு. நின் உளம் மால் ஓட - நின் உள்ளத்திலுள்ள காமமயக்கம் ஓடவும். தலைவன் வந்தமையால் தலைவிக்குக் காமனால் வருந்துயர் நீங்கிற்றென்பது கருத்து. குறுகினர் - அடைந்தார். சேலோடு அலர் வெள்ளி வேலோடு வென்ற கண் - சேல் மீனையும் தாமரை மலரையும் வெள்ளி வேலையும் வென்ற விழிகளையுடைய.

271. உம்பர் பணிவோன் - தேவராற் பணியப்பெறுவோன் பண் ஆரும் மென்மொழி - பண்ணையொத்த மெல்லிய மொழியை உடைய தலைவி; அன்மொழித்தொகை. இடர்ப் பவ்வம் அன்றி - துயர்க்கடலில் தோய்வதை யல்லாமல். கண் ஆரும் நீர் வெள்ளம் தோய்தல் கண்டு - கண்ணிலிருந்து வரும் நீர் வெள்ளத்தில் தங்கு

தலைப் பார்த்து. கண்டனன் - உணர்ந்தேன். பெண் ஆரும் உற்பவம் - பெண் பிறவி. ஈனம் - இழிவானது. பேசுவதை உண்மையாக உணர்ந்தேன். உற்பவம் மீனம் எனப் பிரித்து, நீர் வெள்ளத்தில் தோய்தலால் பெண்பிறவி மீனுக்குச் சமானமானது எனப் பேசுவதை உணர்ந்தேன் என்று பொருள் செய்யக்கிடத்தல் ஒரு நயம்.

272. கார் ஆர் களத்தர் - நீலகண்டர். யான் உம்மைத் தீர் தலின் - நான் உங்களை நீங்கிச் செல்லுதலினால். கச்சுப்பொருந்திய நகிலினிடத்தே வழிகின்ற கண்ணீர் பரவுதலை வாய்க்கும் செயலை அல்லாமல், காம வேள் செய்யும் போரில் பொருந்திய மலர் அம்பு களுக்கும் உம்முடைய ஊரில் உள்ளார் கூறும் பழிமொழிக்கும் பொறுத்திருந்தீர்களோ? என்போல் பொறுத்தனிரே ; ஏகாரம், வினா.

273. மறி - மான் கன்று. நென்னல் - நேற்று. உரை தேறி- நின்னுடைய வார்த்தையை மெய் என்று தெளிந்து. வரும் நெறி காட்டி - நீ மீண்டு வரும் வழியைத் தலைவிக்குக் காட்டி. தலைவி யையும் உளப்படுத்தி நீவிர் என்றாள். குறி - குறியிடம். மின்னைப் புரந்தேன் - தலைவியைப் பாதுகாத்தேன். நமது உயிர் கூடு உற - நம்முடைய உயிர்கள் உடம்பில் பொருந்தி யிருக்கும்படி ; தலைவி உயிர் நீத்தால் தோழியும் தலைவனும் வாழ்தலிலராதலின் இங் ஙனம் கூறினாள்.

274. அலையுள் வரும் சேயிழை தினம் வந்தனை செய்து நெஞ்சின் உன் அமலை - கடலில் உதித்த திருமகள் நாள்தோறும் வணங்கித் தன் நெஞ்சிலே தியானிக்கும் பார்வதி. மலைவு-மயக்கம் தெளிப்பாய் - தலைவியைத் தெளிவிப்பாயாக. சென்று வாய்ப்ப - நான் போய் (தனமலை) எனக்குக் கிடைக்க. நும்மான் தனம் மலை கொள்ள - உங்கள் தலைவியின் நகிலாகிய மலையைப் பெறும் பொருட்டு. தனமலை கொண்டு - நகில்விலையாகிய பொருட் குவி யலைப் பெற்றுக் கொண்டு. சென்று, தனமலை வாய்ப்ப, கொண்டு சார்குவனென்க.

275. பிரிவு - இரக்கமும். உறவும்-நட்பும். பொருட்பிரிவும் - நீ பொருளீட்டி வருவதற்காகப் பிரிதலையும். துயர் நோயின் பிரிவும் - துயரந் தரும் நோயினின்றும் பிரியும் இயல்பையும்; துயர் நோய் 'இன்பு இரிவுமென்று பிரித்துத் துயர்நோயாகிய இன்பம் நீங்குதலுமென்று பொருள் கொள்ளுதலும் ஒன்று. மின் பால் - தலைவியினிடத்து.

276. பாதம் கம் பங்கயக் கண்ணர்கள் காணு - திருவடி யையும் திருமுடியையும் முறையே தாமரைபோன்ற விழியை யுடைய திருமாலும், தாமரையினிடம் இருப்பவனாகிய பிரம தேவனும் காணாத ; பங்கயக் கண்ணர் - தாமரைபோன்ற கண்ணை யுடையவர், தாமரைக் கண்ணே உள்ளவர். ஆதங்கம் செய்விடம் - துன்பத்தைச் செய்த ஆலகால விடத்தை ; ஆதங்கம்: "இப்பா ராதங்க மாற" (**வி. பா.** அருச்சுனன் தீர்த்த. 87.) நும்மூர் மீது - உங்கள் ஊரிடத்தே. அங்கங்கு ஆர் நுமர் கொண்டாட - அங் கங்கே உள்ள உம்முடைய உறவினர் பாராட்டும்படி. மாது அங்கம் தோய்வுற - தலைவியின் திருமேனியைப் பொருந்தி மணம் புரிய. மாதங்கம் கோடியில் - கோடி யானைகளின் மேல். மாதங்கம் - அளவாற் பெரிய தங்கத்தை. மாதங்கம் கொண்டு நும்மூர் மீது மீள்வன்.

277. இரங்கல் - வருந்தாதே. நமர் - நம்மவர். இப்பகல் வருவான் - இன்றே வரும்பொருட்டு. இரங்கு அருவி கழுக்குன்று இல்லாய் உற ஏய்நர்க்கு - ஒலிக்கின்ற அருவியையுடைய திருக் கழுக்குன்றம் தமக்குரிய இல்லமாக இருக்க அதன்கண் பொருந் திய சிவபிரானுக்கு. அன்பு இல் அல்லாய் - அன்பு இல்லாத இருளாகி. இரங்கலில் நெஞ்சர் செல் - இரக்கமில்லாத நெஞ்சை யுடையவர் செல்லுதற்குரிய. கான் - காட்டில். ஆர்ந்தனர் - சென்றனர். வியப்ப, கொண்டு, வருவான் ஆர்ந்தனரென்க.

278. தெரிந்தார் - ஞானிகள், விரிந்து ஆர். நகை - ஒளி. மின்னே : தோழியை நோக்கிய விளி. கரிந்து ஆர் உடல் வெந்திட- கரியாகி அரிய உடல் வேகும்படி. வேள் அழற்கணை - காமனது நெருப்பைக் கக்கும் அம்பு.

279. அகன்றூர்க்கு - பிரிந்த தலைவரின் பொருட்டு. தணந்து- பிரிந்து. இடரெய்தின் - நீ துன்புற்றால். இது தன்னை - நீ துன் புறும் இச்செய்தியை. வேள் அலர்க்கு - காமனது மலரம்பைக் காட்டிலும். இங்கு உறைந்தார் அலர்தான் - இவ்வூரில் வசிப்ப வர்கள் கூறும் பழிமொழியே. முன்னை அணைந்திடும் - முன்பு உன்னை அடையும். காமன் செய்யும் துயரைப் பழிமொழி முந்திக் கொள்ளும் என்றபடி.

280. யாது புகல்வேன் - நான் என்ன சொல்வேன்? எனது ஆசை அன்னார் - என் ஆசையைப்போன்ற தலைவர். இபத்தை அரி காது கடம் புகுவாராம்-யானையைச் சிங்கம் தாக்குகின்ற காட்டிற் செல்லுவாராம். காது உணர்ந்து - என் காதால் கேட்டு. இப் போது புலம்பல் தகாதாம்; ஆம்: இழிப்புக் குறிப்பைக்

குறிக்கும் சொல். அலர் - பழிமொழி. தவிர்க என்று தெளிப்பதற்கு-ஒழிவாயாக என்று தோழி தெளிவிப்பதற்கு விடையாக. தெளிப்பதற்கு யாது புகல்வேனென்க.

281. சினை - கிளை. பாதவத்து - மரத்தின்கண். ஆதவத்து ஒன்றும் வெப்பான் அலந்த பெடைக்கு - வெயிலினால் உண்டான வெம்மையால் இளைப்படைந்த பெண் புறாவிற்கு. புறவு சிறை நிழல் ஆற்றல் கண்டு - ஆண் புறா தன் சிறகால் நிழல் செய்தலைப் பார்த்து. சுரத்து அகன்றார் - பாலை நிலத்திற் பிரிந்து சென்றார். ஆண் புறா தன் பேடையைப் பாதுகாக்கும் அன்புகண்டு உன்னைப் பாதுகாப்பதைக் கருதி மீள்வரென்றாள். மும்மலந் தவிரும்படி அருள் செய்பவர்.

282. கார்ப் பருவத்தில் மீள்வேனென்று சொல்லிச் சென்ற தலைவன் அப்பருவம் வந்தும் வாராமை கண்டு தலைவி வருந்திக் கூறுகிறாள். கார் தோன்றிய - மேகங்கள் தோன்றின. மயில் நடைச்சீர் தோன்றிய - மயில்களிடத்தே நடைச் சிறப்புக்கள் தோன்றின. ஏர் - அழகு. கொன்றை மாலைபோல மலர்தலின் அப்பூங்கொத்தைக் கொன்றைத்தாரென்றாள்.

283. ஆகுதியைத் தேவர்களுக்குத் தரும் யாகத்தைத் தினந் தோறும் அந்தணர் நீங்காமல் செய்து வருவார்; அதனால் நூல்களிற் சொல்லியபடி மாதத்துக்கு மூன்று மழை பொழியும். வம்பு - பருவமல்லாத காலத்துப் பெய்யும் மழை. ஓர்தி - இதைக் கருதுவாயாக. நையேல் - வருந்தாதே. மாது இயல் ஆகத்தன் - உமாதேவியார் ஒளிர்கின்ற திருமேனியை உடையவன்.

284. பொன்னாள் தொழும் எழில் - திருமகள் தொழுவதற்கேற்ற அழகையுடைய. கூந்தலின் பொலிவுக்குப் பயமுற்று கழுக்குன்றின்பால் ஒளித்து மின்னுதிருந்த மேகக் கூட்டம். இந்நாள் - இன்று. நின்மேனியின் மெலிவை மனதில் நினைந்து அங்கிருந்து எழுந்துவர, அது கண்டு மயில்கள் முன்னே ஆடும். இது வம்பு; ஆதலின் பரந்த துயரத்தை நீ ஒழிவாயாக.

285. வில்வாய்ந்து - இந்திர வில்லைப் பெற்று. அம்பு கான்று - நீரை வீசி. கோபம் - இந்திர கோபப் பூச்சி. திசை வாய் தடித்து வெளிநின்று - திக்குக்களிலெல்லாம் மின்னல் வெளிப்பட. கார் - மேகம். உரக்கச் சப்தித்து வில்லைப் பெற்று அம்பை வீசிக் கோபம் எழாநிற்கும் திக்குகளிலெல்லாம் பேருருவத்தைப் படைத்து என வேறொரு பொருள் தோற்றியது. அன்பர்த் தீர்ந்தோர் - தலைவரைப் பிரிந்த மகளிர்களுடைய. கார் வர. அது கண்டு அஞ்சும் என்னிடத்தில், வம்பு ஆம் என்று கூறல்

வம்பு ஆம் - இதுகாரன்று, காலமல்லாத காலத்தில் பெய்யும் மழை யென்று நீ உரைத்தல் வீண்வார்த்தையாகும். நடித்து நலம் உயிர்க்கு ஈவோர் - திருநடனம் புரிந்து அதனால் இன்பத்தைச் சீவராசிகளுக்கு அருள்பவர்.

286. தன்நேர் இலா - தனக்கு ஒப்பு இல்லாத. மின்நேர் இடை பங்கிற் சங்கரர் - மின்னலைப்போன்ற இடையையுடைய உமாதேவியாரை ஒருபாகத்திலே கொண்ட சிவபெருமான். நெஞ்சினும் : உம்மை தன் நெஞ்சு மிக இழிந்ததென்பதைச் சுட்டியது. கொன்னே - வீணாக. பொன்னே : தலைவியை நோக்கிய விளி. உறுதலை முன்னே நமக்குச் சொல்ல. தூதின் - தூதைப் போல. கொண்மூ உற்றது - மேகம் வந்தது.

287. ஆர்விக்கும் - நுகரச் செய்யும். அன்று என்றது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த காலத்தைச் சுட்டியது. மருள்-மயக்கம். நையலை - நீ வருந்தாதே, என்ற வாய்மையர் - என்று கூறிய உறுதி மொழியை யுடையவர். வெருள்கொண்டு அலந்திட - நாம் அச்சம் கொண்டு செயலற்று நிற்க. மணம் மேவ - வரைவு அமையும்படி. பொருள் - நகில் விலை.

288. தலைவி தனிமையிலே படும் துயரத்தை நினைந்து தலைவன் வருந்துகிறான்.

ஊற்றிலிருந்து பெருகிவரும் நீரைப்போலக் கண்ணினின்று வழிந்து ஓடுகின்ற நீர் நிரம்பிய ஆற்றிலே சுழன்று எனது வரவை ஆராய்ந்து, என்னைக் காணாமல் சோர்வுற்று இளைத்த இறுதியில் தூக்கம் வர, அத் தூக்கத்தில் என்னை அணைப்பதாகக் கனவு கண்டு, தூக்கத்தினின்றும் எழவே அணைத்தல் உண்மையில் இல்லாமையால் வெவ்விய கோடைக் காற்றிலே அலைபடும் சருகைப்போல மனம் சுழல்வாள் தலைவி. உதகம் - நீர்.

289. நள்ளார் - பகைவர். புங்கம் - அம்பு. தேரிலுள்ளான் விடும் அம்பைப் பகைவருள் முன்னணியில் நிற்பார் கண்டு புறங்கொடுக்க, அவ்வளவில் அந்த அம்பையே பின் நிற்பாரும் கண்டு ஒருமிக்க விழும் வண்ணம் குதிரையை அத்துணை வேகமாகச் செலுத்தும் பாகனே. பொன் - தலைவி. மான் - குதிரைகள். உய்வான் - உய்யும்படி. ‘கலங்கும் பொன் தேர்கண்டு உய்யுமாறு செலுத்துக’ என்றவாறு.

ஈண்டுப் பாகனைப் புகழ்ந்தது தேரை அவன் விரைவிற் செலுத்தும் பொருட்டு என்க.

290. குழல்கொண்டு - கூந்தலால். எம்மைக்கு எனது உயிராகி நிற்பார் - எப்பிறவியிலும் எனக்கு உயிரைப்போலத்

தொடர்ந்து வந்து நிலைபெறும் தலைமகள்; எம்மைக்கும் என்ற உம்மை தொக்கது. செம்மைப் பொருள்முற்றி - நல்வழியில் ஈட்டிய பொருள் கைவரப் பெற்று. வருமாறு - வருதலை.

291. எம் குலம் பலநாள் புரி மாதவத்தால் வருவோய். ஒன்னூரது தோள் வலியை வென்று. தோள் : ஆகுபெயர். உலம் புரி - உருண்டைக் கல்லை யொத்த. வலம்புரி - சங்கம். இறைஞ்சி வலம்புரி - வணங்கி வலஞ் செய்வாயாக.

292. தனஞ்சயன் மயங்க அவனைக் காக்கும்பொருட்டு முன்பு பாரத யுத்தத்தில் கண்ணன் ஊதிய சங்கம். உயங்க - தளர. வயங்கு அற்பு உளத்தார் - விளங்குகின்ற அன்பை உள்ளத்தே கொண்ட அடியார்கள்.

293. பவ வெப்பம் - பாவமாகிய வெம்மை. அன்பில் நனைத்து - அன்பிலே நனையச் செய்து. அனை ஏயும் அன்பாளன் - அன்னையை ஒக்கும் அன்பையுடைய சிவபெருமான். நாயக - தலைவனே. போர் முனைத்தனை - போரில் முன் சென்றாய்; முனைந் தனை யென்பது வலித்தது. அவை முற்றுமிடை - வெற்றியும் பொருள் முயற்சியும் நிறைவேறுதற்கிடையே. நினைத்தனையே - நினைத்தாயா? திருவினை - தலைவியை.

294. நான் மறந்துபோனால் நினைத்தாயோ என்று கேட்டல் முறையாகும்; இவள் என் நெஞ்சிலிருந்து நீங்கினால் மறக்கவும் இயலும்; இரண்டும் இல்லையென்றபடி; "மறந்தா னினைத்தலு முண்டுபொன் னேயுங்கள் வஞ்சியையே" (**வெங்கைக்கலம். 282.**) இவ்வுழி நாம் துறந்தால் - இந்த இடத்தை நாம் விட்டுப் போனால். அவண் நினைத்தேன் என்று சொல்வது என் - அங்கே நான் நினைவு கூர்ந்தேன் என்று சொல்லுதல் எதற்கு? இடம் மாறினால் நெஞ்சு மாறுமா என்றபடி. அறம் தாழ் விடை உடையான் - அறமே வாகனமாகத் தங்கிய இடபத்தையுடைய சிவபிரான்; சிவபிரானைத் தருமதேவதை இடபவாகனமாகித் தாங்குமென்பர்.

295. வாய்மை - சொற்பிறழாத சத்தியம். நின்னால் - நின் பொருட்டாக. பொன்னது காதலின் - பொருளைப்பெறும் விருப்பத்தால். மின் - உமாதேவியார்; தலைவி.

296. அருந்து அன்னம் செல்லாது - உண்ணும் சோறு செல்லாமல். அரும் துயில் கொள்ளாது அயர்ந்து - அருமையாகிய தூக்கத்தையும் பெறாமல் வாடி. வருந்தல் - வருந்தாதே. நம் செல்வமனை முன்றில் வாய் - நம்முடைய செல்வம் நிரம்பிய மனையின் முற்றத்தே. பல்மலையில் - பல மலைகளைப்போல. மலை பொருந்து அனம்பால் உடையோர் - மலையிலே பொருந்திய

அன்னம்போன்ற உமாதேவியாரை ஒரு பாகத்தில் உடைய சிவ பெருமான். தனம் - நகில். பெருந்தனம் - மிக்க செல்வம். புரவலர் நின் தனம் கொள்ளப் பெருந்தனத்தை மலைபோலக் குவித்தார்.

297. வேணியில் - திருமுடியின்கண்ணே. தோணியின் கங் கையில் திங்கள் மிதக்கவைப்போன் - கங்கையிலே தோணியைப் போலச் சந்திரன் மிதக்கும்படி வைப்பவன்; "இளம்பிறை முயற் குழந்தைக் கேறவிடு மோடமென" (குமரகுருபர. 433.) காணியிற் பேணி இற் கொண்ட கழுக்குன்றில் - உரிமையால் விரும்பித் தம் வீடாகக் கொண்ட திருக்கழுக்குன்றத்திலுள்ள. காவலர் தம் பாணியிற் பாணியொடு என்பாணி நாளைப் பதிப்பது - தலைவனது கையில் நீரோடு என் கையை நாளைக்குப் பதிக்கும் செயலை; தலை வியை நீர்வார்த்துக் கொடுக்கத் தலைவன் பாணிக்கிரகணம் செய்துகொள்ளுதலை. எம்மோய் - எம் தாய். வாணியின் - கலை மகளைப்போலவும். சேணியிற் பொன்னாரின் - வித்தியாதரருலகத் திலுள்ள மகளிரைப்போலவும்.

298. தன்னேரிலா...பங்கன் : 286. அல் நேர் - இருளை ஒத்த. தமர் - உறவினர். வரைவை - கல்யாண முயற்சியை. எதிர்ந்து - ஏற்றுக்கொண்டு. கொள் ஓகை முகமன்கள் என்னே - அவர்கள் கொள்ளும் மகிழ்ச்சியையும் பேசும் உபசார வார்த்தைகளையும் என்னவென்று சொல்வது?

299. பரசு அங்கையர் - மழுவாயுதத்தை உள்ளங்கையிலே வைத்த சிவபெருமான். அன்பர் - தலைவர். என்னுடைய அழகிய கையைப் பற்றுகின்ற மணத்திற்குரிய முரசம் ஒலித்தன. மைநீலம் முத்தம் முகிழ்ப்பது அன்றி - மையையணிந்த கருங் குவளைமலர் போன்ற கண்களில் முத்துப்போன்ற உவகைக் கண்ணீர் துளிப்பதோடு. கர சங்கு அணிவளை அங்குலிக்கே இனிக் காண்டும் - கையிலணிந்த சங்காலாகிய அழகிய வளை இனிமேல் உவகையால் பெருத்த எனது விரலுக்குத்தான் ஆகும் படி பார்ப்போம்.

300. ஊரார் சொல்லிய அலராலும், தென்றல் தேரையுடைய மன்மதனது அலராலும் உள்ளமானது நெருப்பிலேயிட்ட மலரைப்போல ஆகிய தலைவியை; அலர் - பழிமொழி, மலரம்பு; தேராரென்ற பன்மை இழிவுபற்றி வந்தது; "காமரை வென்ற கண்ணோன்" (சிற்.) என்புழிப்போல. தார் - மலர். உன் தாரான் - உன்னுடைய மணமாலையால். தழைவித்து - வாடாது தழையச்செய்து, மாலும் சீரார்ந்த திருவும் போல. ஆரா மகிழ்வு -

தெவிட்டாத மகிழ்ச்சியை. சீர் - புகழ்; எழுவாய். கயிலையின் - கயிலையைப்போல. நீடுக - நிலைத்து ஓங்குக. சீர் நீடுக என்க.

301. இணங்கு ஆதரத்து அன்பர் - பொருந்திய ஆர்வத்தை யுடைய பத்தர்கள். வணங்கார் - பகைவரது. வணங்கும் சிலையின் - வளைந்த வில்லினால். வணக்கும் - தன்னை வணங்கச் செய்கின்ற. மொய்ம்ப - வன்மையையுடைய தலைவனே. பணம் - நாகபடம். முன் - முன்னே. அணங்கு ஆதரித்து - துர்க்கையை விரும்பி; திருமணத்துக்கு முன்பு பெண்கள் தேவியை வணங்குதல் ஒரு வழக்கம்; ருக்மிணி கண்ணனை மணப்பதற்குமுன் துர்க்கா பூஜை செய்த வரலாறு இங்கே நினைத்தற்கு உரியது.

302. என்னை - இஃது என்ன ஆச்சரியம்? என்னை இங்கு ஏய்வதற்காய் - என்னை இங்கே பொருந்துவதற்காக. பொன்னை வணக்கும் எழில் - திருமகளை வணங்கச் செய்யும் பேரழகு. ஆரணங்கு தன்னை - துர்க்கையை. பலி - நிவேதனங்களை. தூஉய் - தூவி. பராவுந் தகைமையது என்னை!

303. பண்ணினது நீர்மையைக் கொண்ட சொல்லையுடைய உமாதேவியார். எம்மானது மடைப்பள்ளி யென்றது கடலை; அவர் உண்ட ஆலகாலவிடம் உண்டான இடமாதலின் இங்ஙனம் கூறினார். சேர்ந்து - இங்கே வந்து. புண்ணீருற - புண்ணின் இயல்பை உறும்படி. அன்னை புகன்றனளோ?

304. பாகு இயல் - வெல்லப்பாகினது இயல்பையுடைய. நாகு இயல் - இளமை இயலுகின்ற. நேயத்தால் அணைத்து. நெஞ்சு உறக் காணாது - உள்ளம் மீண்டுவரக் காணாமல். கண் அழுது அழிவெய்தும் - கண்கள் அழுது இரங்கும்.

305. திரை - அலை. திருமுன் நின்று - சந்நிதியில் நின்று. உரையாடல் - தலைவர் கூறியவை. ஆடரவல்குல்: விளி. ஓர்ந்து - நினைந்து. ஒருபாற்பரையார் - ஒரு பாகத்தில் பராசக்தியை உடையவர். கழுகின்வரையார் - திருக்கழுக்குன்றத்திலுள்ளசிவ பெருமான். அவர்தம் அன்பரை நெஞ்சம் பற்ற விழி நீர் கலுழ்வதற்கு என்ன காரணம்? கரையார்ந்த நதியைப்போல விரைந்து கண்ணீர் பெருகுவதற்குக் காரணம் என்ன?

306. அன்பர் - தலைவர். என்னை மன்னும் அந்நாள் - என்னைக் கலந்தின்புற்ற இயற்கைப்புணர்ச்சிக் காலத்து. கரியார் எவர், இலர் என்றே - சாட்சியாவார் யார்? ஒருவரும் இலர் என்றெண்ணி. காதலர் இகந்தனர் - தலைவர் என்னைப் பிரிந்தார். "யாரு மில்லைத் தானே கள்வன், தானது பொய்ப்பின் யானெவன்

செய்கோ" (குறுந்.) பெரியவர்கள் குற்றம் செய்தால் குற்ற மாகாதோ?

307. புரவலர் என்னும் சொல் மன்னரென்றும் காத்தலைச் செய்யாதவர் என்றும் இருபொருள்பட்டது. நின்னைப் புரவலர் - நின்னைப் பாதுகாத்திலர். சொல்லும் புரவலர் - வார்த்தையையும் காப்பாற்றவில்லை. விண்ணோர் புரவலர் - சிவபிரான்.

308. கொண்டல் துளி அன்றி உண்ண விரும்புவது சாதகப் புட்கு இன்று - மேகத்துளியையல்லாமல் மற்றதை உண்ண விரும்பும் இயல்பு சாதகபக்ஷிக்கு இல்லை பெய்யாமை மழைக்கும் இன்று - சாதகபக்ஷி உணவு பெறும்படி பெய்தலின்றியிருக்கும் தன்மை மழைக்கும் இல்லை. அருட்கண் வாய்ந்தவர் - தலைவர். அவருக்கும் எனக்குமுள்ள தொடர்பு அவ்வாறுள்ளதென்று தெரிந்துகொள்வாயாக. தலைவனுக்கு மேகமும் தலைவிக்குச் சாதகபக்ஷியும் உவமைகள். மழை பெய்வது எவ்வாறு நிச்சயமோ அவ்வாறு தலைவன் தலைவிக்கு அருள் செய்வதும் உறுதி யென்பது படவைத்து, இயற்படமொழிந்தாளாயிற்று.

309. குமைத்த - தண்டித்த. நம்முன் என்றது தெய்வம் நினைப்பதைக் கொண்டு கூறியது. மாற்றம் பிழைப்ப - சொல் தவறும்படி. இவட் பிரிந்தான் - இவளைப் பிரிந்து சென்றான். சீற்றம் செய்யாது பொறைசெய்ய. பலி ஊட்டி - நிவேதனங்களை நிவேதித்து. பணிதர - வணங்க.

310. அலர் - பழிமொழி. மேனி விளர்ப்பு - உடல் வெளுத்தல். உன்னு - எண்ணிப்பார்த்து. புறம்போக்கு ஒழிக என்று - வெளியே போதலைத் தவிர்ப்பாயாக என்று; இதனால் இற்செறித்தமை கூறினாள். அன்பு ஆர் - அன்பு பொருந்திய. மன்னார் - வாரார். ஓகை - உவகை; இங்கே குறிப்புமொழி.

311. எல்லியின்வாய் - இரவில். மன்னார் பொன் ஆர் இரதத்தின் வர - தங்காராகிப் பொற்றேரில் இங்கேவர. பொங்கி-சினந்து. ஒன்னாரென - பகைவரைப்போல. எவன்-யார்? அவனோ - அலர் கூறுவார் குறிக்கும் அவனோ? இருள் மணந்தன்னார் - இருட்டு ஒருபாற் பொருந்தியதுபோல உமாதேவியாரை ஒரு பாகத்தில் உடையவர்.

312. தோள் அங்குலி ஆகின்ற - தோள்கள் மெலிந்து விரல்களைப்போல் ஆகின்றன. அன்னம் விடமாகின்ற. மங்குலின் - மேகத்தைப்போல. மாது அங்கம் வெள்ளி ஆம். என்னை - இதன் காரணம் யாது? குலிசாயுதன் - இந்திரன்; குலிசம் - வச்சிரம். வீயாவிதம் - இறவாதபடி. கடு ஆர் - ஆலகாலவிடத்தை

நுகர்ந்த. கங்குலின் ஆர்ந்த களத்தான் - இரவைப் போலப் பொருந்திய திருக்கழுத்தை உடையவர்.

313. வரை ஆட்டை உண் மகிழ் வார் தெய்வம் ஆதலின் - மலையிலுள்ள ஆட்டை உண்ணுகின்ற, கள்ளை வார்க்கப்பெறுகின்ற தெய்வம் ஆதலால். தெய்வமாதலின் வாய்ந்தது என்று பிதற்றி நைவாயென்க. வாய்த்தது என்று - நமக்கு நல்ல சமயம் கிடைத்ததென்றெண்ணி. வரை ஆட்டை உள் மகிழ்வார் - இலக்கணங்களால் வரையறுக்கப்பட்ட நடனத்தைத் திருவுள்ளத்திலே மகிழ்ச்சியோடு இயற்றுவார். வாய் - தங்கிய. வாழ்த்துறு நாவரை - தலைமகனை. ஆட்டை மேவும் வனத்தில் - விளையாட்டை விரும்பும் காட்டில். இம்மானென்றது தலைவியை. மயல் வகை தீர்வரை - காமமயக்கத்தின் பகுதிகள் தீரும் வரையில். ஆட்டையினும் தெரியாய் - ஒரு வருஷத்திலும் இதன் காரணத்தை நீ அறியாய். முருகே - முருகக்கடவுளே. "கடவு ளாயினு மாக, மடவை மன்ற வாழிய முருகே" (நற்றிணை.)

314. பூ மனையாய் வளர் பொன் பொருட்டால் - மலரே வீடாகக்கொண்டு வளரும் திருமகளைப் போன்ற தலைவியின் பொருட்டினுல். கடப்பந்தாமனை - கடப்பமாலையை அணிந்த முருகக் கடவுளை. பல் நாமனை - பலபெயர்கள் உடையவனை.

315. எழில் - அழகு. ஏது ஒன்று தொட்டு ஒளிர் - உயிர்கள் தரிசித்து உய்தலாகிய காரணம் ஒன்றைப்பற்றி எழுந்தருளி விளங்குகின்ற; கழுக்குன்றிலேயே தொன்று தொட்டு ஒளிரு மெனலும் ஆம். போது ஒன்று - ஒரு மலரை. அருள்போது - அளிக்கும் சமயத்தில். ஒன்றி நோக்கினர் - மனம்பொருந்திப் பார்த்தார். போது ஒன்றின் - ஒரு பொழுதில். தலைவன் தலைவிக்கு ஒரு மலரைத் தர உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்ததென்றுள்.

316. அரும்பு அலர் வல்லியைக் கொங்கை முகம் இடையால் வென்றதால் - தன்னுடைய அரும்பைக் கொங்கையாலும், மலரை முகத்தாலும், கொடியை இடையாலும் தலைவி வென்றமை காரணமாக. சுரும்பு அலர்கஞ்சம் - வண்டுகள் பரவித்தங்குகின்ற தாமரையானது; எழுவாய். கொடியால் வெல்வான் - தன் கொடியால் இவளை வெல்லும்பொருட்டு. சுனைதோய் செவ்வி வாய் - நீராடும் பொருட்டுச் சுனையிலே தோய்ந்த சமயத்தில். கரும்பு அலர் சொல் - கரும்பைப் போன்ற இனிய சொல்லையுடைய. அடி ஈர்த்திடுங்கால் - காலை இழுத்தபோது. தாமரைக் கொடி காலிலே சிக்கத் தலைவி மூழ்கிய செயலைத் தற்குறிப்பேற்ற அணி அமையக் கூறினுர். கரைக்கே எடுத்தான் என்க. விரும்

பலர் - பகைவர். ஓர் வேள் - ஒரு சிற்றரசன்; மன்மதனைப் போன்றவனெனலுமாம்.

317. கடலற வேல்விடும் அண்ணல் - உக்கிரகுமாரபாண்டியர். யானைக்குக் கடலும் தலைவனுக்கு உக்கிரகுமாரரும் உவமைகள். எரி காய் கரியின் - நெருப்பைப்போலச் சினந்தெழுந்த யானையினது. துகிர் - பவளம். உதிரம் துகிரொத்தது. வெள்ளிக்கிரி - கைலாயமலையை. அரக்கன் - இராவணன். தழுவு அன்னை - சிவபெருமானைத் தழுவிய உமாதேவியாரை; "அருவியங் குன்ற மரக்கன் பெயர்ப்ப, வெருவிய வெற்பரையன் பாவை - பெருமான், அணியாக மாரத் தழுவினா டான்முன், தணியாத வூடறணிந்து" (தண்டி. 71, மேற்.) யானையைக் கண்டு அஞ்சி, தலைவி தலைவனைத் தழுவிக் கொண்டாள்.

318. பேதைப் பருவத்துக் குரிய தன்மையால் சந்திரனைக் கண்ணாடியிற் கண்டு அதனைப் பிடிப்பதற்காக உள்ளத்தில் எண்ணி உன்னைக் கண்டு அதுவேண்டுமென்று அழுகின்ற மான் போன்ற தலைவி. தேவருடைய அடிமலரை.

319. நான் என் உரைப்பன் ? பல் எழுவதற்கு முன்னமுதுக் குறைந்தாள் - பல்முளைப்பதற்கு முன்னே அறிவுவரப் பெற்றாள். ஒழுங்குடன் - வரிசையாக. அயில் - சூலம்.

320. புலவரை - அறிவுடையவரை. குலவரை எட்டை நிகராக - குலாசலங்கள் எட்டையும் ஒப்ப. வெண் நிலவு அரை நீள் நுதல்-பாதிச் சந்திரனைப்போன்ற நீண்ட நெற்றி; "மதியின் பாகந்தரு நுதலாள்" (கம்ப.) நேர்கலர் - உடன்படார். ஏழ்தல அரையா - ஏழுலகுக்கும் அரசனே.

321. பாதம் - தலைவியின் அடி. என் நகர் சேய்த்து - என் ஊர் தூரத்தில் உள்ளது. புலன் ஓர் அஞ்சினும் உய்ய நின்றுள் மகிழ்வு ஆற்றும் என் ஆரமுதை - ஐந்து பொறியினிடத்தும் உய்யும்படி நின்று இன்பத்தைச் செய்யும் அரிய அமுதத்தைப் போன்ற என் தலைவியை; ஐம்பொறியாலும் நுகரும் இன்பமுடையாளென்றபடி; "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" (குறள்.) நவ்வி - மான். நேர்வது நெஞ்சினும் இன்று - உடன்படுதல் மனத்தாலும் நினைப்பது இல்லை.

322. அன்பர்ப்பிரிவு எனும் தீ எரியினும் சுடுமென்று - அன்பரைப் பிரிதலாகிய தீயானது உண்மையான நெருப்பைவிடச் சுடுமென்றெண்ணி. அரி இன்னும் நாடற்கு அரியார். கொண்கர்ப் பிரியினும் - காதலரைப் பிரிந்தாலும். மின்னார், பிரிவெனுந்

தீச்சுடுமென்று வெந்தழல் வீழ்வர். உடன்று அழல் கற்சுரம் - மாறுபட்டு எரிகின்ற கல்லையுடைய பாலை நிலம். ஐயமே - சந்தேகம் உண்டோ?

323. வீய - அழிய. எல்லினும் அல்லினும் - பகலிலும் இரவிலும். பஞ்சு ஏய் அடியும் - பஞ்சை ஒத்த மெல்லிய அடியும். அடியும் துணிந்தது என்றால். வல்லிது - வலியது.

324. "அனிச்சமு மன்னத்தின் றூவியு மாதர், அடிக்கு நெருஞ்சிப் பழம்" (குறள்.) ஏர் மாது - அழகையுடைய உமா தேவியார்.

325. ஆவியின் நாண் உயர்வாம் மடவார்க்கு - மகளிருக்கு உயிரை விட நாணம் உயர்ந்தது; "உயிரிற் சிறந்தன்று நாணே" (தொல். களவு. 22.) பெண்மை இழிவு ஆம் - பெண் பிறவி இழிவானதாகும்; மை - பிறப்பு; இம்மை, அம்மையென்புழி மை பிறப்பை உணர்த்தியது காண்க. காவியின் நேர் - கருங்குவளையை ஒத்த.

326. உற்று நினைக்கில் - நன்கு சிந்தித்தால். நாண் கற்பிற் றாயதன்றால்: "நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல். களவு. 22.)

327. பரை - பராசக்தி. புரை - குற்றம். இந்நாள் - இன்று. அன்பென்னும் கடல் உடன்போக்கென்னும் அலையால் நாணமாகிய கரையைக் கரைத்தது.

328. அல்லினும் இருள் கூரும் குழலாளொடும் - இரவைக் காட்டிலும் இருள் மிகுதியாகும் கூந்தலையுடைய உமாதேவியாரோடும். அலர் கட்டுரைக்கும் இல்லினும் - பழிமொழி கூறுவோருள்ள வீட்டைக் காட்டிலும். கொடுமையோடு: ஓடு வேறு வினையொடு. அனமே - அன்னம்போன்ற தோழீ.

329. வாரி - கடல். குன்று அலைவாய் உறினும் - மலைகள் கடலில் வீழ்ந்து மூழ்கினாலும். கருங்களம் - நீலகண்டம். மாரி நிகர்க்கும் குழல் - மேகத்தையொத்த கரிய கூந்தலையுடைய தலைவி. சாமரை மயிர் வாய்த்திடினும் - முதுமைப் பருவமெய்திச் சாமரையைப்போன்ற கூந்தல் வாய்க்கப்பெற்றாலும். நாரிதனை-தலைவியை. புரத்தி - பாதுகாப்பாயாக. நரபதியே - மன்னனே.

330. ஊரார் அலர் - ஊரிலுள்ளார் கூறும் பழிமொழி. அலர் மலரோதி - அலர்ந்த மலரையணிந்த கூந்தலையுடைய தலைவியே. செகம் அலைக்கும் - உலகத்தை யெல்லாம் வருத்திய. மகிழ்நர் தம் ஊர் ஆர்தருமுன் - கணவர் தம்முடைய ஊரை அடைவதற்கு முன். அகற்றி எய்துவன்.

331. பாலையும் ஆலையும் போலும் மொழி - பாலினையும் கரும்பினையும் போன்ற இனிய மொழியையுடைய; ஆலை - கரும்பு. வேலை வெல்லும் விழியையும் நூலை வெல்லும் இடையையும் உடைய. சாலையும் - நடக்கும் வழியையும்.

332. கன்றிடும் - வாடும். முத்தாற் புல்லிய - முத்தொடு சேர்ந்த. பைந்தேன் சொல் இயல் ஆகன் - பசிய தேனைப்போன்ற சொல்லையுடைய உமாதேவியார் தங்கிய திருமேனியுள்ள சிவபெருமான். கல் இயல் ஆர் - கல்லின் தன்மை நிறைந்த. உறை - தங்குவாயாக.

333. பொன் - திருமகள். மான் - தலைவி. அடிகள் தைவந்து - பாதங்களை வருடி. குழல் முடித்து - கூந்தலை முடித்து. கைவந்தது - கிடைத்தது.

334. சாலும் - நல்லியல்புகள் அமைந்த. காலும் - துளிக்கும். எழில் மாலும் எழில் கண்டு மாலும் - அழகையுடைய திருமாலும் இவனது அழகைக் கண்டு மயங்குவார். திருவும் எழில் கண்டு பித்து மருவும் - திருமகளும் இவளது அழகைக் கண்டு பைத்தியத்தைப் பொருந்தும். எழில் கண்டென்பதை இரண்டிடத்தும் கூட்டுக.

335. அணிமையின் இன்று - அருகில் இல்லை. கதிரும் - சூரியனும். கான் யாறு - காடாகிய ஆறு. விண்ணும் பாரும் புகழும். எம் இல் - எம்முடைய வீட்டில்.

336. ஒன்றின் - சென்று சேர்ந்தால். அகழ் - அகழி. எயில் - மதில். துன்றின் - நெருங்கினால்.

337. கடல் என்று அயிர்த்து அகழி தோய்ந்து - கடலென்று ஐயுற்று அகழியிலே படிந்து. கார்க்கணம் - மேகக் கூட்டம்; எழுவாய். கைவிடல்-எம்மைக் கைவிடாதே. தமது உடல் என்று - தமது சரீரமென்று கருதி. உறங்கிடல் என்றும் உற்று - உறங்குதலை எப்பொழுதும் பொருந்தி. மாளிகையை மேகம் கழுக்குன்றெனஎண்ணித் தோய்ந்தது.

338. தலைவி நடப்பதைப் பார்த்துச் செவிலி கண் குளிர்ந்தாள். செவிகள் இன்பம் புல்ல. கிள்ளை யென்றது தலைவியை. உம்பர் அல்லல் அகற்றும் களத்தான் - ஆலகால விடத்தை உண்டு தேவர்களின் துன்பத்தைப் போக்கும் திருக்கழுத்தை உடையவன்.

339. கூர்த்த - கூரிய. நின் மானென்றது தலைவியை. ஓர் வேளென்றது தலைவனை.

340. எடுத்து - மலவிருளிடை வீழாமல் எடுத்து. தான் வரும் நாள் - தலைவி பிறந்த நாளில். அனை - அன்னை; பெற்ற தாய். வளர்த்தேனை - வளர்த்த என்னை. அல்லலாகிய சுனையில் விட்டு விட்டு.

341. பிறப்பு ஆர் நோய்மையின் தீர்ப்பவர் - பிறவியிலே பொருந்திய வருத்தத்தினின்றும் தீர்ப்பவர். நுணுகு - குறுகிய. மான் - தலைவி. வாய்மையில் - வாய்மொழியில். இவ்விடர்க்கு உடல் வாய்ந்தனன் - இந்தத் துன்பத்தை அனுபவிக்கத் தேக மெடுத்தேன்.

342. காலாயுதம் - சேவல். குறிஞ்சி நிலமக்கள் முருகனுக்குச் சேவலும் மயிலும் விடுவதாக வேண்டிக்கொள்ளுதல் மரபு; "வாரணச் சேவ லோடு வரிமயிற் குலங்கள் விட்டு" (பெரிய. கண்ணப்ப. 11.) வேலாயுத: விளி. பலி - நிவேதனம். தூய் - தூவி.

343. சுனைவாய் விழ எடுத்தும் - தலைவி சுனையில் விழ அவளை எடுத்துப் பாதுகாத்தும். முன்னைத் தொடர்பின் - பிறவிகள்தோறும் வந்த பழைய தொடர்பினால்; "பயிலிய து கெழீஇய நட்பின்" (குறுந். 2.) உயிர் புரந்தார் நிற்ப - உயிரைக் காப்பாற்றிய தலைவர் வறிதே நிற்கவும். என்று - என்று அஞ்சி. மின் - தலைவி.

344. மின்னை - தலைவியை. குலக்கு இழிவு எய்தாமல் - நமது குலத்திற்கு இழிவு வராமல். அத்தம்தான் அகற்றி - பாலை நிலத்திற் போகச்செய்து. பெண்பேதையென் வாய்மை - பெண்களுட் பேதை என்ற வார்த்தையை.

345. காயம் பல கலனால் அழகு உற்றென - உடம்பு பல ஆபரணங்களால் அழகைப் பெற்றாற்போல. தலைவிக்கு உடம்பும் ஆயமகளிர்க்கு ஆபரணங்களும் உவமைகள். ஓர் ஏதிலனால் அமையும் நேயம் பிடர் பிடித்து உந்த - ஓர் அயலானால் அமைந்த காதல் பிடரியைப் பிடித்துத் தள்ள. என் மாயம் - என்ன ஆச்சரியம்! வாணுதல் - தலைவி.

346. நீர் அறைந்து எனைத் தேற்றி என் - நீங்கள் துணிவான சொற்கள் கூறி என்னைத் தேற்றி என்ன பிரயோசனம்? துயர்ப்பவம் ஏய்ந்து - துயரத்தைத் தரும் பாவம் பொருந்தி. புன்னீர் அகற்றும் - புன்மையான குணத்தைப் போக்கும்.

347. தேனே - வண்டே. என் மான் - மானைப்போன்ற என் மகள். திருமால் நேர் ஒரு பெருமானுடன் - திருமாலையொத்த ஒரு தலைவனுடன். என் மான் ஒரு பெரிய மானுடன் ஏகினள் எனத் தோற்றுதல் ஒரு நயம்.

348. கொடியே - காக்கையே. கொடி ஏர் இடையொடு - பூங்கொடியையொத்த இடையையுடைய தலைவியோடு. கொற்றம் முற்றி - அரசுரிமை கைவரப்பெற்று. படிஏழ் அளிக்கும்படி ஏயும் அண்ணல் - உலகேழையும் பாதுகாக்கும்படி பொருந்திய தலைவன். எம்பால் வரக் கரைந்து; கரைந்து - கூவி. கைத்துடியேய் - கையின்கண் உடுக்கையைப் பொருந்திய. இடை வண்துடி ஏய் உருவினன் - இடையானது வளவிய உடுக்கையைப்போன்ற உமா தேவியாரைப் பொருந்திய திருமேனியை உடையவன். கழுக் குன்று அடியே - திருக்கழுக்குன்றத்தின் அடிவாரத்தில். அவ் வடியே - அப்பொழுதே. பலி - உணவு. கரைந்து பெறுவை யென்க.

349. பாலைக் கொடும் என்று அழுத. குழவி - உபமன்யு முனிவர். தித்தித்திடும் பால் ஐ வேலை உண் என்று அருள்வோர் - இனிக்கின்ற பாலையுடைய அழகிய கடலை உண்பாயாக என்று கொடுத்தவர்; "பாலுக்குப் பாற்கடல் வேண்டி யழுதிடப் பாற் கடலீந்தபிரான்" **(திருப்பல்லாண்டு.)** அடும்பாலை வெல் மொழி - காய்ச்சிய பாலை வெல்லும் இனிய மொழியை யுடையவள். சுடும் பாலை ஆற்றிக் குடி - சுடுகின்ற பாலைநிலத்தை ஆறச்செய்து வெம்மையைப் போக்குவாயாக; சுடுகின்ற பாலினை ஆற்றிக் குடிப்பாயாக என வேறொரு பொருள் தோற்றியது.

350. மெல் அடி - தலைவியின் மெல்லிய அடிகள். வஞ்சர் நெஞ்சினும் நஞ்சினும் அழல்காலும் பாலை. இன்னும் என் உயிர் உஞ்சு நிற்கும் உபாயங்கள். உபாயங்களில் ஒன்றும்.

351. தன் நிழலை வாவியில் கண்டால் அதனை நிழலென்றறி யாமல் வேறொரு பெண்ணென மதிக்கும் பேதைப் பருவத்தினை ளென்றாள். ஆவியின் - உயிரைக்காட்டினும். அம்மனை - தாய்; என்றது இங்கே தலைவியை. இல் தோய்ந்து - அவனுடைய வீட்டில் இருந்து. குற்றேவல் செய் புந்தியும் - சிறு வேலைகளைச் செய்யும் அறிவும்.

352. எலி தான் ஓடுகின்ற வீட்டுக்குள்ளே புக அதுகண்டு அஞ்சி வாடும் தலைவி. எய்த்த - இளைப்புற்ற. வலி ஓட நைந்திடு காலையில் - வன்மை ஓடும்படி வருந்துகின்ற பொழுதில்; என்றது நண்பகலை. வாரணமும் பல புலியும் ஓட; வாரணம் - யானை.

353. பெருங்கரத்தால் உரம் எற்றி - பெரிய கைகளால் மார்பில் அடித்துக்கொண்டு. ஒண் கண்ணின்நீர் முலை முகடு முற்ற - கண்ணீர் நகிலையடைய. பண்ணை - விளையாட்டு மகளிர்.

சுற்றம் - உறவினர். ஓர்தோகையென்றது தலைவியை. தோகை துறந்ததற்கு அன்னை பிசைந்து எற்றி முற்ற முற்றப் பெற்ருளென்க.

354. கார்க்கண் - மேகத்திலிருந்து; உருபுமயக்கம். கால - ஒழுக. இரங்கல் ஒழிதருவாய் - வருந்துதலை நீங்குவாயாக. எயில் அடுங்காலை - திரிபுரங்களாகிய மும்மதில்களை அழித்த சமயத்தில். போதன் - ஞானவுருவத்தையுடைய சிவபெருமான். அவன்கொண்ட தேர் பூமி. மின் எங்கு நீங்கும் - தலைவி எங்கே போய்விடுவாள்? "இந்தப் பூவுலகத்திலேதான் இருக்கப் போகிருள்; வேறு எங்கே போகப்போகிருள்? நான் தேடிக் கொணர்வேன்" என்பது படக் கூறும் செவிலித்தாய், அந்தச் செயல் எளிதென்று தோற்றும்படி சமற்காரமாக, "ஒரு தேர்க்குள்ளே தானே இருப்பாள்" என்று கூறினுள். "வடிக்கே வடிவு தருங்கணல் லாயுன் மயிலையொரு, நொடிக்கே தருவ னினிவருந் தேன்மலை நோற்றுப்பெற்ற, கொடிக்கே யிணங்கும் புயபூ தரர் சொக்கர் தூண்டும்விடை, யடிக்கே யமைந்ததன் றேகட லாடை யகலிடமே" (**மதுரைக்கோவை, 293.**)

355. சொல் நேரும் மாமறை அந்தத்து - சொற்கள் பொருளொடு பொருந்திய பெரிய வேதத்தின் முடிவினிடத்து. ஒருமையின் - ஒருமித்த தன்மையினுல்; என்றது வேதாந்தத்தை ஒன்று பட்ட மனத்தோடு சிந்தித்தமையாலென்றபடி. தோற்று இருமையின் நேருமென்று - இகலோக வாழ்வாகிய இம்மையும் சுவர்க்க லோக வாழ்வாகிய மறுமையும் மின்னலைப்போல அழிவுபாடுடையனவென்று புலப்படுத்தி. முக்கோல்களினுல் - மூன்றுமூங்கிற் கோல்கள்கொண்ட தண்டினுல்; இதனையுடையவர் திரிதண்ட சந்நியாசிகளென்று வழங்கப்படுவர். ஐவர் வீய - ஐம்பொறிகளும் தம் செயல் ஒழிந்து அடங்க. பொன் நேரும் மின் - திருமகளை ஒத்த தலைவி. மால் நேரும் மன்னுடன் - திருமாலை ஒத்த தலைவனுடன். போந்தது உண்டே - இங்கே சென்றது உண்டா? இதில் எண்ணணி வந்தது.

356. தரு உறு போது - மரத்திலுள்ள மலர். அணிவார்க்குப் பயன் அன்றி - தன்னை அணிந்துகொள்பவருக்குப் பயனுவதல்லாமல். தருவின் மருவுறு போது - மரத்திற் பொருந்தியிருக்கும் சமயத்தில். என் பயன் - என்ன பிரயோசனம்? எளியோன் வெருவுறுபோது. திரு உறுபோது - திருமகளைப்போன்ற தலைவி பிறந்தபோதே. அவ்விதி விதித்தான் அயன் - தலைவனுடன்

போகவேண்டுமென்ற அந்த விதியைப் பிரமதேவன் விதித்து விட்டான்.

357. அயில் - அம்பு; வேலுமாம். ஒருவாத-நீங்காத. வேள்-காமன், முருகன். குரம்பை - குடிசை. ஒருவா மயலால் - நீங்காத காம மயக்கத்தால். எயில் ஒரு மூன்றும் - திரிபுரங்களையும். எயின் மகள் - பாலை நிலத்தினளாகிய எயிற்றி.

358. குரவு - குராமரமே; விளி. ஓர்கிலாய் - நீ எண்ண வில்லை. கொள் இன் பாவையும் நீயும் குலாவியும் - மேற்கொண்ட இனிய பாவையாகிய மலரும் நீயும் அளவளாவியும்; குரவமலரைப் பாவை யென்றல் மரபு. நீ ஒரு பாவையுடன் குலாவியும் எம் பாவையின் அருமை அறிந்தாயில்லை யென்றாள். எம் குரவோர் தவத்து உறு பாவையும் - எம்முடைய நற்றாயும் தந்தையும் செய்த தவத்தினால் வந்த தலைமகளும். குலாவற - அளவளாவுதல் நீங்க. நல்குரவோர் - வறியவர். திரு - செல்வத்தை. குன்று என - குன்றைப்போல. வாகு உரவோர் - தோள் வலியையுடைய தலைவர். மின் சேர்வது - தலைவி இங்கே போவதை. ஒழிக என்று கூறுதற்கே ஓர்கிலாயென்க.

359. தலைவியும் தலைவனும் சென்ற வழியில் அவர்களுடைய அடிச் சுவட்டைக் கண்டுணர்ந்து செவிலி இரங்கிக் கூறுகின்றாள். பொன் அடி இங்கு இவை - இங்குள்ள இவை திருமகளைப் போன்ற தலைவியின் அடிச்சுவடுகள்; சிற்றளவாலும் மெத்தெனப் பட்ட சுவட்டாலும் உணர்ந்தாள். மன் அடி - தலைவனது அடிச்சுவடு. உங்கு உவை - அவ்விடத்தில் உள்ள அவை; அளவின் பெருமையும் வலிபெற நின்ற சுவடும் கொண்டு உணர்ந்தாள்.

360. மாலும் - திருமால் போன்ற இவ்வாடவனும். திருவெனும் நீயும் - திருமகளைப்போன்ற நீயும். பேதை - தலைவி. இருகாலும் - இரண்டு அடிகளும். இருகாலும் நொந்து வரக் கண்டதுண்டோ? இது தலைவியை நோக்கி வினவியது. அடுத்த செய்யுளாலும் இது விளங்கும்.

361. உமை நிகர்த்தார் - உம்மை ஒப்பார். மின்னை நேர் இடை - தலைவியே. அன்னை யென்றது செவிலித்தாயை. உனை நேர் உரு ஒன்று - உன்னையொத்த உருவம் ஒன்றை. "பிறன்மனை நோக்காத பேராண்மை" உடையவனாதலால் அவன் தலைவியை நோக்கினனலன்; ஆதலின் அவளைப் பார்த்த தன் காதலியை விடையிறுக்கச் சொல்லுகின்றான். இச்செய்யுளோடு பின்வரும் செய்யுட்கள் ஒப்பு நோக்கற்குரியன: "மீண்டா ரெனவுவந் தேன்

கண்டு நும்மையிம் மேதகவே, பூண்டா ரிருவர்முன் போயினே ரேபுலி யூரெனைநின், ருண்டா னருவரை யாளியன் ஞானைக்கண் டேனயலே, தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை சொல் லியதே" (திற். 244); "பொன்னே யெழிற்சடை யெம்மான் சிரா மலை போற்றுமித்தாய், இன்னே யிருவ ருமைநிகர் வாரிவ ணெய் தினரோ, முன்னே யெனவுரை யாடினள் கண்டனன் மொய்ம் பனையான், மின்னே யனையென்கொல் சொல்லிய வாறு விளம் புகவே" (சிராமலைக் கோவை, 362.)

362. அன்னை சொன்னால் - நற்றாய் கேட்டால். சதிர் - திறமை.

363. சேறும் - செல்லுவோம். எய்த்து - இளைப்புற்று. நாறும் மலர் நிறை ஓதியை - மணம் வீசுகின்ற பூக்கள் நிறைந்த கூந்தலையுடைய தலைவியை. நங்கை ஒரு கூறு பெறும் - உமா தேவியார் தம் திருமேனியில் ஒரு பாகத்தைப் பெறுதற்கு இட மாகிய. அன்னை : விளி.

364. மானே : தலைவியை நோக்கிய விளி. முன்னம் என்றது இயற்கைப் புணர்ச்சிக் காலத்தை. ஊன் ஏய் உதிரம் பெருக வென்று. வாரணத்தை வென்றதென்றது களிறுதருபுணர்ச்சியை நினைப்பூட்டியபடி. அழுந்தும் உனை - நீரில் ஆழ்ந்த உன்னை ; என்றது புனல் தரு புணர்ச்சியை நினைந்தது.

365. ஒருவாது - நீங்காமல். இருமையும் எய்த - இம்மை மறுமை வாழ்வை அடையும்படி. முத்தீயை மறை நான்கின் உதவியால். முத்தீயை வளர்ப்பீர். இங்கு எண்ணணி வந்தது. பண்ணையின் வாய்ந்து - விளையாட்டு மகளிர் கூட்டத்திற் சென்று. உரு வார் குழல் - அழகு ஒழுகிய கூந்தலையுடைய தலைவி.

366. பொய்யா - தன்னைப் பூசித்தோர்க்குப் பொய்க்காத. விநாயகனையும் வேலோனையும் பெற்ற. அருள் மெய் ஆர் உமை யுடன்-சிவபெருமானது திருவருளே தனது மெய்யாகப் பொருந்திய உமாதேவியுடன் ; "அருளது சக்தி யாகு மரன்றனக்கு" (சிவஞான சித்தியார், சுபக்கம், 239.) பண்ணை - விளையாடலையுடைய. மொய்ம் பர் - வலியையுடைய தலைவர். மையார் விழி - தலைவி.

367. அமுது உகுத்தென - அமிர்தத்தைத் துளித்தாற்போல. அறைகுதும் - சொல்வேம். உன்னார் - தியானம் செய்யாதவர்கள். மன்னா - சென்று. அன்னான் நகர் உற்று - அத்தலைவனது நக ரத்தை அடைந்து.

368. வேட்ட - மணம் செய்து கொண்ட. வேலோய் - வேலனே ; இவன் படிமத்தான் ; வேலைக் கையில் வைத்திருந்தலின் வேலனெனப்படுவான். குகன் வாழ்ந்தென எம்மில் ஏய்ந்திடுமோ

'வென்க. தலைவனென்னும் எழுவாயை வருவித்துப் பொரு ளுரைக்க. அணைமனை - தன் தாய்க்குரிய மனை.

369. நளிர் வரைமேல் அம்மாதினை-குளிர்ந்த இமாசலத்தின் மேல் இருந்த உமாதேவியாரை. நமது ஊரில் வேட்ப; வேட்ப - மணக்க. அன்பரும் அவர்தம் நகரிலுள்ளாரும் அவர் தாயும் வருவதற்கு ஏற்ப வேண்டியவற்றை அமைப்பாயாக.

370. அன்றுயென்றது செவிலியை; அவள் தோழிக்கு நற்று யாகலின் இங்ஙனம் விளித்தாள். அன்னை சொல் வகை - நற்றாய் சொல்லுமாறு; அவள் சொன்னது தன்னுடைய ஊரில் மணம் நிகழ வேண்டுமென்றது. பின்று - பிற்பட்டு. நடக்கை உணராது - நிகழ்ந்ததை அறிந்துகொள்ளாமல். இயம்பினள் - நற்றாய் சொன்னாள். மதனென்றது தலைவனை. அந்நாள் இயற்றும் மண வோகை - முன்பொருநாள் செய்த கல்யாணமென்னும் சந்தோஷச் செய்தியை. தலைவன் தன் வீட்டில் முன்னரே தலைவியை மணந்து கொண்டானென்பதை இதனால் தோழி புலப்படுத்தினாள்.

371. கீதது ூரம் நறுமணம் வீசும் பசிய கூந்தலையுடைய உமாதேவியார். போதம் - ஞானம். உன் மகளென்றது தோழியை.

372. தூரியம் - துளைக் கருவிகள். பல் இயம் - பல வாத்தி யங்கள். சுடர் எரி முன் - ஒளிவிடுகின்ற அக்கினிக்கு முன். சேடை செய்து - அட்சதையிட்டு. உற்றூர் - உறவினர். உளம் கூரிய - மனத்திற் படும்படி.

373. மீன் போன்ற பார்வையையும் புல்லாங்குழலின் இசை போன்ற சொல்லையுமுடைய உமாதேவியாரை வாமபாகத்திலுடை யவன். ஆன் குழலோசையினுல் அழைத்தோன் அன்ன - பசுக் கூட்டத்தைப் புல்லாங்குழலோசையினுல் அழைத்த கண்ணபிரா னைப்போன்ற; "ஆக்குவித் தார்குழ லாலரங் கேசர்" (திருவரங்கத் தந்தாதி.) வண்டுகள் நிரம்பிய கூந்தலையுடைய தலைவியானவள் சிறப்பையுடைய ஆபரணங்கள் முத்துமாலை என்பவற்றோடு நின் கையால் செம்பொன்னுலாகிய திருமங்கிலியம் புனைந்து கொண்டதை. தேன் குழல், பணியாரமென்ற தின்பண்டங்களின் பெயர்கள் தொனித்தன. தாரையுடைய அன்னைக்கு நான் முனமே ஓதினன்.

374. அன்பு ஆர் ஆயத்தவர்க்கு - அன்பையுடைய உடன் விளையாடும் மகளிருக்கு. மின்னூர்க்கு - மகளிருக்கு. என்று இத் தேயத்து அவர்க்குப் பணிவிடை · செய்ய - என்று கருதி இந் நாட்டில் கணவருக்குப் பணிவிடை செய்வதற்காக, தெறும் -

வருத்தும். தீப்பாய - தீயின் வெம்மை பரவா நிற்க. தவர்க்கும் - தவ முனிவர்க்கும். அகல்வரும் - செல்வதற்கரிய. பணிவிடை செய்யப் படர்முறையை உரை செய்வீரென்க.

375. எனை ஈன்றாளென்றது மரபு வழுவமைதி. நற்றாய் தலைவியை அங்ஙனம் கூறுவதை, இங்கே தலைவி கொண்டு கூறினாள். புகல் - உய்வதற்குப் புகும் இடம். அலமரும் - மனம் சுழலும். அங்கு உற்று - என் தாய் உள்ள இடத்தை அடைந்து.

376. துவளுகின்ற இடை, ஒரு நூல்போன்ற இடையென்க. ஒரு கோவொடும் - ஒரு தலைவனோடு. கவலேல் - கவலையுறாதே. இவள் ஒரு சாலி, அச்சாலி ஓர்சாலி எனச் சொல்லவே - இது காறும் அருந்ததி ஒருவரென்று கூறும் வழக்கு மாறி, 'இவள் ஓர் அருந்ததி; அந்த அருந்ததி மற்றோர் அருந்ததி' என்று உலகினர் சொல்ல. "முருந்ததி வாலெயிற் றாளொடு வேளொடு மூளுமன்பு, திருந்ததி காரி யெனச்சுரஞ் சென்றனள் சீர்வடமீன், அருந்ததி யானதுன் மான்பாலின் கற்பினுக் கன்பருளம், இருந்ததி யாகப் பிரான்றன் சிராமலை யேந்திழையே" (**சிராமலைக்.** 377.)

377. செங்கதிரோனை - சூரியனை. பொருவான் - எதிர்க்கும் பொருட்டு. கான் - பாலைநிலம். அடர்த்து - பொருது. அதிர்வால் - அதிர்ச்சியால்.

378. மேவார் - பகைவர். ஓர் விளக்கில் பல் விட்டில் எனச் சாவார் - ஒரு விளக்கினிடத்தே போய் விழும் பல விட்டிற் பூச்சிகளும் இறப்பதைப்போல இறந்துபடுவார்கள். மிடல் - வலி. நின் ஐயர் - உன்னுடைய தமையன்மார். நெஞ்சம் ஓவாது இரங்கலின் - நீ ஒழியாமல் மனம் வருந்துவதனால். ஊங்கு - அவ்விடத்தே. கோவாய் - தலைவனாகி.

379. உருத்து - சினந்து. இருத்தும் - இருக்கச் செய்யும். என் பொருட்டு - எனக்காக. என்னையர்மேற் பொருத்து கருணையின் - என் தமையன்மாரிடத்துக் கொண்ட கருணையினால். வெங்கிடும் - புறங்காட்டிச் செல்லும். மருத்துமலை கொணர் மாருதிபோல் - சஞ்சீவி மலையைக் கொணர்ந்த அநுமனைப்போலச் சிரஞ்சீவியாக. தலைவி இங்ஙனம் புரவியை வாழ்த்தலைப் பின் வரும் செய்யுட்களிலும் காணலாம்: "ஏமா னெனவஞ்சு மெற்காத் தலினவ் விரவிபொற்றேர், வாமானின் வாழ்வன வாகபன் னுடைஞ்சை வாணனென்னோர், போமா னதரிடத் தென்னையர் தோன்றப் புறங்கொடுத்த, கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட குரகதமே" (**தஞ்சை.** 365); "கான்படர் வேடரைக் காய்ந்த நம் முன்பர்முன் காட்டுமெமர்க், கூன்படர் வேலொடு பின்காட்டுங்

தேர்செல வூர்புரவி, தேன்படர் சோலைச் சிராமலை யீசர் திருவருளால், வான்படர் பானு மதியுள காலமும் வாழியவே" (**சிராமலைக்.** 380); **திருவாவடுதுறைக்.** 384; **கலைசைக்.** 381.

380. மடல் - பூவிதழ். கருணைக் கடல் என்றது சிவபெருமானை. கண்ணுற - பார்த்து மகிழ. மால் உந்தி உற்றவன் - பிரமதேவன். "குயிற்கா தலிக்குங் கனிமொழி யாண்மணக் கோலமுமான், உயிர்க்காத லண்ணன் மகிழ்ச்சியுங் காணவெள் ளோதிமங்கள், வெயிற்காயுந் தண்வய லாரூரர் வீதி விடங்கர் வெற்பில், மயிர்க்கால்க டோறும் விழிபடைத் தானில்லை மான்மகனே" (**திருவாரூர்க் கோவை,** 431.)

381. திருவருள் - சிவபெருமானுடைய அருள். அனநடையே - அன்ன நடைபோன்ற நடையையுடைய தோழியே. இருவர் தவம்போல - இருவர் செய்த தவத்தைப்போல. தோழிக்குத் திருவருள் உவமை: "ஆன்மா புகலிப் பெருமா னடிக ளடையளவும், தான்மா முயற்சி தவாவருள் போற்றமி யேனறும்பூந், தேன்மா வுணுங்குழன் மான்மா முலைத்துணை சேருமட்டும், மான்மா வனையகண் ணெய்முயன் றுயுன் மதிப்புநன்றே" (**சீகாழிக் கோவை,** 441); "முத்தியென் னப்படு மங்கையைச் சேர முயல்பவருஞ், சத்தியென் னப்படு மீச னருளன்றிச் சார்தலுண்டோ, சுத்திபெற் றூர்தொழுஞ் சொர்ணத் தியாகர் துறைசைவெற்பிற், சித்திர தீபத் துயிர்ப்பாங்கி யாற்சுகஞ் சேருதுமே" (**திருவாவடு துறைக்.** 80.) தோழிக்குத் தவம் உவமை: "மின்னொரு நுண்ணிடை பாகன் சிராமலை மெல்லியலாய், எந்நாளு நாமிட ரின்றியன் பாக வினியவின்பம், பொன்னொளு மாலு மெனவுற்று வாழப் புரிந்ததனாற், பன்னாளு நாஞ்செய் தவப்பய னேயிந்தப் பான்மொழியே" (**சிராமலைக்.** 382.)

382. வீவது இன்றி - அழிவில்லாமல். அருள் ஆர்ந்த.

383. யான் முதலாகிய பல் இடையூற்றின் - என்னை முதலாகக்கொண்ட பல இடையூற்றினிடையே. முதல் நாள் தொட்டு - இயற்கைப் புணர்ச்சிக் காலமுதல். ஊன் - உடல். ஒளித்து - உன் காதலை மறைத்து. வான் - தேவர்.

384. அகமலர்வு முதலியன தலைவனுக்குரியன. முகமலர் மொய்த்த நகை தன்னால் - முகமாகிய மலரினிடத்தே மேவிய நகையினால். மன்னுமவர் - தலைவர். இந்நாள் - இவ்வளவு காலம்.

385. ஐவாயினும் - ஐந்து பொறி வழியாகவும்; ஐவாயினும் ஊட்டும் இன்பம்: **குறள்.** 1104. கணமும் ஒழியாய். முன்னரென்றது

களவுக் காலத்தை. முன்னர் இடையிடை தீர்ந்து ஆற்றும் நிலை எவன்?

386. ஆதரம் - அன்பு. வாங்காது அமர்ந்து - நீங்காமற் பொருந்தி. வானவன் - சிவபிரான். ஆர்விக்கும் நேய இன்பம் - நுகரச் செய்யும் விருப்பத்தையுடைய இன்பம். இன்பம் உண்டு.

387. தற்கொண்டவற் பேணி - தன்னை மனைவியாகக் கொண்ட தலைவனைப் பாதுகாத்து. தேவென்று தாழ்ந்து - கடவுளென்று வணங்கி. வந்தோர் மனைக்காத்து - வந்த விருந்தினர்களை வீட்டினிடத்தே உபசரித்துப் பாதுகாத்து. ஊண் பாகம் பெற அமைத்து - உணவுகளைப் பக்குவம் அமையும்படி சமைத்து. இல்லின் வாய்ந்த அறத்து - மனைக்கண் அமைந்த இல்லறத்தால். உனைக் காத்தனள் - உனக்குப் பழி வாராது உன் புகழைப் பெருக்கிப் பாதுகாத்தாள். இதன்கண், "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்", "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்ற திருக்குறட் கருத்துக்கள் வந்தன.

388. மனைத்தக்க மாண்பு - இல்லறத்திற்கு ஏற்ற தகுதிகள். வளத்தக்கவீகை - தன் கணவனது வருவாய்க்கு ஏற்ற தருமம். உண்டபினைத் தக்க உண்டி - காதலன் உண்டபின்னர்த் தான் உண்டல். துயின்றால் துயிறல் - தலைவன் துயின்றால் பிறகு தான் துயிலுதல். பெயர்முன் எழல் - தலைவன் எழுவதற்கு முன்னே தான் துயிலெழுதல். அனைத்தக்க ஆர் அளி - அன்னையைப் போன்ற அரிய அன்பு. தெய்வத்திற் போற்றல் - கொழுநனைத் தெய்வத்தைப்போலப் போற்றுதல். நின் மான் - நின் மகளாகிய தலைவி. நினைத்தக்கவள் என்று - எல்லோராலும் நினைக்கத் தகும் சிறப்புடையவளென்று. நிறுத்தினள் - நிலை நிறுத்தினாள். நின்னைத் தகுதியுடையவளென்று சொல்லும்படி நிலைநிறுத்தினாளெனலுமாம்; "தக்கார் தகவில ரென்ப தவரவர், எச்சத்தாற் காணப் படும்" (குறள்.) இச்செய்யுளில், "மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான், வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" (குறள். 51), "அன்னை தயையும்", "பின்தூங்கி முன்னெழும் பேதையே" (தனிப்.) என்னும் செய்யுட் கருத்துக்கள் வந்தன. "தூய கடவுள் கொழுநனென் றேத்தித் தொழுதெழுந்து, நேயமொடுமுன முண்டபி னுண்டு நினதுமகள், பாய லிடைத்துயில் கொள்ளத் துயிலுமெய்ப் பண்பு பெற்றாள்" (சிராமலைக். 389.)

389. அடுவது - சமைப்பது. வந்தோர் - வந்த விருந்தினர். இடுவது - உணவு படைத்தல். பின்வரல் பார்த்திட - மேலும்

விருந்தினர்கள் வருவதைப் பார்க்கும்பொருட்டு; "செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பார்" (**குறள்**) என்பது நினைத்தற் குரியது. திரு மேவினள் - இல்லறச் செல்வத்தைப் பெற்றாள். நூல் நடுவது - நூல்போன்ற இடையையுடைய உமாதேவியாரை.

390. பெத்தத்து - பந்தத்துட்பட்ட நிலையில். முத்தத்து - முத்திபெற்ற நிலையில். இரண்டெனக் காணரிதாகு முறைமையின் - சிவனும் உயிரும் தனித்தனியே இரண்டு என்று காண்பது அரிதாகும் தன்மையைப்போல. கத்தத்துவம் - தலைமை. "பாச மிகந்துயிர் தென்கயி லாச பதியையன்னே, நேச முடனணைந் தானந்த மார்ந்திடு நீர்மையென்ன, வாச மலர்க்குழ லாளு மிறையு மகிழ்ந்தணைந்து, பேசவரிய சுகானந்தத் தென்றும் பிறங்குவரே" (**சிராமலைக்.** 391.)

391. மாலும் அயனும் முனிவர்களும் தேவர் கூட்டமும் நால் வேதமும் அறியாதவன். மதுவேய் அலங்கல் - தேனையுடைய மாலையையுடைய. பாடலை மகிழ்ந்தமையால். ஏதுவின் ஏய்ந் திடும் - காரணமாகப் பொருந்திடும்.

392. துரகத் திருமறையான் - குதிரைகளாக அழகிய வேதத்தையுடையவன். கிரகத்திடை உற்று நீப்பது உண்டோ - இல்லத்திலே என்னை அடைந்து பிறகு பிரிவது உண்டோ. உரகத் தினை நிகர் - பாம்பினை ஒத்த. உருத்து - கோபித்து. தென்றல் தழலை எழுப்ப.

393. இறைதான் இகந்திடல் இன்றி - சிறிதளவாவது நீங்கு தல் இல்லாமல். வைக - தங்கியிருக்கவும். என்னை - என்ன காரணம்? நீ குலைவது என்னை?

394. பொகுட்டு - உட்கொட்டை. அம்புயக் கேசரம் - தாமரையிலுள்ள பூந்தண்டுகளை. உகள் மீன் அருந்தா - துள்ளுகின்ற மீனை உண்ணு; அருந்தா: முற்று. அம்புயத் தொடை வேற்று மணம் பெறல் மா வியப்பால் - தாமரைமாலை வேறு பூவின் மணத்தையுடையதாதல் பெரிய வியப்பாகும்; தலைமகன் தனக்குரிய தலைவியோடு இன்பம் நுகராது புறத் தொழுக்கம் உடையனாயினனென்பதைக் குறிப்பாற் புலப்படுத் தினாள்; இஃது ஒட்டணி. உயர்ந்த தாமரைக் கேசரம் நுகரும் அன்னம் இழிந்த மீனை உண்ணுமென்றதும் அக்குறிப்பை யுடையது.

395. தென்றி - தென்றற்காற்று; "தென்றியா யசைந்து" (**கந்த.** திருவவதாரச். 11.) மலரின் - மணமுள்ள மலரினது. நிலை அல்லது - தனக்குரியநிலையல்லாத ஒழுக்கத்தை; மன்னர்

உறினும் - தலைவர் உடையரானாலும்; என்றது புறத்தொழுக் குடையரானாலும் என்றபடி. கன்றி - சினந்து.

396. வினைத் துவந்தம் - வினையின் பிணிப்பு. தலைவி தான் பூப்பெய்தினமையைத் தலைவனுக்கு உணர்த்தும்பொருட்டுத் தோழிக்குச் செவ்வணி அணிந்து விடுத்தாள்.

397. இந்துவை - சந்திரனை. அரவு என்பும் அணி - பாம்பை யும் எலும்பையும் அணிகின்ற. கற்பின் மேவு ஒழுக்கத்து அவ் வணியே மகிழ் - கற்பிற் பொருந்திய ஒழுக்கமாகிய அந்த அழ கையே மகிழ்ந்த; ஒழுக்கத்து அணி: அத்து வேண்டாவழிச் சாரியை. மயங்கும் அணியர் - மயங்குதற்குக் காரணமாகிய அலங்காரத்தை உடைய பரத்தையர். தம்மின் - தம்பால். தெவ் அணியாமென்று - பகைவருடைய படைவகுப்பென்றெண்ணி.

398. ஆவணம் காட்ட - விலையோலையைக் காட்டும்பொருட் டும். வழக்காடும் நம்பி அலமர என்றே - வழக்காடிய சுந்தர மூர்த்தி நாயனார் மனம் மயங்கவும் நினைந்தே. வணம் காட்டி - அந்தண வேடம் காட்டியவன். நாண் சற்றிலாதவள் என்றது தோழியை. நம் கோ - தலைவன். அவர் வாயில் மருவு செய்ய பூவணம் காட்டும் அப்பொன் அனையாளை - அவர் வீட்டிலுள்ள சிவந்த பூப்பினது அழகைக் காட்டும் அத்தலைவியை. காட்டல் கோ புணர்பொருட்டே யாகுமென்க.

399. கடு ஆர் களன் - விடந்தங்கிய திருக்கழுத்தை உடை யவர். கதலியென்றது துடைகளை. வடுவார் விழியாய் - மாவடு வைப்போன்ற விழியை யுடையாய். பரத்தையர் இல் நின்றும் - பரத்தையரது வீட்டிலிருந்து. அவர் - தலைவர். வாய்மை முதலிய வற்றை விடுவாரலர். அறங்கருதி வந்துவிட்டமையின் இங்ஙனம் கூறினார்.

400. மாலைச்சிவப்பு உறு சேடியை-மாலைக்காலத்துச் செக்கர் வானத்தின் சிவப்பைப்போலச் செவ்வணி அணிந்த பாங்கியை. வந்த காலை - வந்தபொழுது. சிவப்புறல் - கோபித்தல். கருதார் களத்தில் - பகைவரோடு போர் செய்யும் களத்தில். வேலைச் சிவப்புறச் செய்வோர் முன் - பகைவர் உடலிற் செலுத்தி ரத்தக் கறை தோய்தலால் தம் வேலினைச் செந்நிறம் பற்றச் செய்யும் தலைவருக்கு முன்னே. மேவுதி - செல்வாயாக. வேள் கோலை சிவப்புற ஏவ அட்டார் - மன்மதன் தன் அம்பைச் சிவப்புறுமாறு எய்ய, அப்போது அவனை அட்ட சிவபிரான்.

401. ஒருவுறின் - தலைவர் பிரிந்தால். ஊடல்: எழுவாய். ஒன்றிடுமேல்-பொருந்தி யிருந்தால். கணம் ஊடல் ஒன்றிடுமேல்;

என்றது தலைவன் வருங்காலத்து ஊடல் ஒழிகின்றதென்றபடி. என்கண் உருவுறின் - என் கண்ணின் முன்னே தலைவருடைய உருவம் தோற்றினால். மகிழ்வு முந்தும் - மகிழ்ச்சி முந்திக் கொள்ளும். அப்படியிருக்கச் சினம் எங்ஙனம் உறும்?

402. பதமாகிய ஒள்ளிய மலரில் தங்கிய இன்பம். நறை - தேன். வண்டின் - வண்டைப்போல. அன்பது: அது பகுதிப் பொருள் விகுதி. என்பது உருகுறும் இன்பம் - என்பு உருகுதற்குக் காரணமாகிய இன்பம். இம் மான் - இந்தத் தலைவி.

403. கருமான் - யானை; கரிய மானுமாம். இந்து பொரும் மாது உடை - சந்திரனைப்போன்ற விருப்பத்தைத் தரும் ஆடையையும். ஓர் பொன்னை - ஒரு பெண்ணை. இற்கண் உய்ப்பாம் - வீட்டிற்கு அனுப்புவோம். குழவியின் வந்தது - குழந்தையைப் போலப் பிறந்த செய்தியை. கணவற்கு அறிவிக்க உய்ப்பாம்.

404. என்வயம் அன்றி வரு பிழை ஆதலின் - நான் செய்த பிழை என் வசத்தால் வந்ததல்லாமல் வேறு காரணத்தால் வந்த குற்றமாகையால். ஏந்திழையென்றது தலைவியை. மின் - உமா தேவியார்.

405. வேய் பெற்ற முத்து ஒருபால் - மூங்கிலாற் பெறப் பட்ட முத்துப்போன்ற சிவபெருமானது ஒரு பாகத்திலுள்ள. ஒருபால் தாயென்று கூட்டுக. பச்சைத்தாய் - உமாதேவியார். சேயின் - முருகக்கடவுளைப்போல. நெய் ஆடினள் - எண்ணெய் நீராடினள். அவள் தீர்ந்த - அவளைப் பிரிந்த. நுணுகிடை - தலைவி; எழுவாய்.

406. "மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன், நன்கல நன் மக்கட் பேறு" (**குறள்**) என்பதை நினைவுகூர்ந்தான் தலைவன். இங்கு அலமந்து; அலமந்து - சுழன்று. பவம் - பிறவி. அருள் செய்யும் கலன் - கிருபை செய்யும் ஆபரணம் போன்றவர். அன்பினே - அன்பின் பயனாகி.

407. கானிடை நடந்து - காட்டுக்குப்போய். அகற்றுவதோ - போக்கிவிடுவதா? மின் பால்வளர் - உமாதேவியார் ஒருபாகத்தே வளர்கின்ற.

408. உரல்வாய்ப் பிணிப்பு உண்டோன் - கண்ணபிரான். தினைக்கொழுங் குரல் ஆர் - தினையினது கொழுவிய கதிர்கள் நிரம்பிய. பணைத்தோள் - மூங்கிலைப்போன்ற தோளையுடைய. குரலாதி ஏழிசை - குரல் முதலிய ஏழு நரம்பையுடைய இசை. பாட்டு ஆர் செவிக்கு - பாட்டை நுகர்கின்ற காதுகளுக்கு. மகிழ்வு எய்துமோ - மகிழ்ச்சி அடையுமோ.

409. பூம்போதின் ஆரணன் - பொலிவையுடைய தாமரை மலரில் இருக்கும் பிரமதேவனும். புழுங்கி - வெம்மையை அடைந்து. நஞ்சாற் புழுங்கி. கூம்போதில் - கூவி அரற்றிய சமயத்தில். ஆளும் - அந்நஞ்சை உண்டு அவர்களைப் பாதுகாத்தருளிய. யாம் போதி என்ன - போவாயாக என்று நாங்கள் சொல்லவும். இசைக்காம்போதி - ராகமாகிய காம்போதியானது. வேசையர்க்கு ஆம் - பரத்தையருக்கு இனியதாகும். அன்னார் கடைத்தலைக்கே போதி - அவர்கள் வாசலுக்கே போவாயாக.

410. வசை ஆண்ட வன்கண்ணர் காணார் - உலகில் வசையைப் பெற்ற கொடியவர்களாற் காணப்படாதவர். மன்னவர் - தலைவர். உன்மிசை ஆண்ட காதல் மகன் ஏயும் வாயிலில் மேவ - உன்பால் காதல் மகன் பொருந்திய இவ்வாசலில் மேவுதற்காக. அன்னோர் பணியாற் புகழுவன் - அவருடைய ஏவலால் தூதாகப் புக்கு உன்னைப் புகழ்வேன். மேவப் புகழுவன். இசை ஆண்ட நீ - புகழையுடைய நீ. என் இசை ஆண்டிடாவிதம் என்னை - என்னுடைய சங்கீதத்தை விரும்பிக் கேட்டுப் பாதுகாவாமைக்குக் காரணம் யாது? அன்னே - தலைவியே.

411. விடக்கு நுகரும் மதியோ - ஊனை உண்ணும் புத்தியினால் வந்த செயலோ. தமையென்றது தலைவரை. தொடர்க்கு - தொடர்பு. போதனையோ - உபதேசமோ. இடக்கும் - பெயர்க்கும். கொன்றே - வீணே. முடைவாய் விறலி - துர்நாற்றமுள்ள வாயையுடைய விறலியே. நின் பாடலும் ஆடலும் அடக்கு.

412. ஆட்டத்தருமை - கூத்தின் அருமையை. கற்பு ஆர் மடவார் வாட்டத்து உற. அவர் அன்பரை - அந்த மடவாரின் கணவரை. உறவும் வாய்ப்பவும் மயல் கூட்டும் அக்கணிகையர். கணிகையர் அருமை ஓர்வர். இக்கூத்தை அவர்பாற் காட்டு. அக்கு அணிவோன் - ருத்திராக்கத்தை அணிபவன். எம்மிடை - எம்மிடத்தில். என்னே - என்ன பயன்?

413. கிளியையும் கற்கண்டையும் வெல்லும் இனிமையையுடைய சொல் இவர்கள் சொல் என்று அன்பு பொருந்திப் பரத்தையரது மிகுதியைக் கண்டு, அவர்கள் செல்வீராக என ஏவ அத்தலைவர் வந்தார்; தாமாக அன்புவைத்து வரவில்லையென்றபடி. வள்ளையைக்கண்டு அடர்சேல்விழி வள்ளி மணாளன் - வள்ளையைப் போன்ற காதைக்கண்டு மோதும் சேல்போன்ற விழிகளையுடைய வள்ளிநாய்ச்சியாரின் கணவராகிய முருகக்கடவுள். வள்ளையை ....மணாளன்: முருகனென்னும் துணையாய் நின்றது,

தள்ளையைக் கண்டு என்னை - தாயாகிய என்னைக் கண்டதனால் பயன் யாது?

414. பசுமை - பசுநரம்போடிய கோலம். மெய்யிற் காலும் நெய்யின் கசிவும். இடை நொசிவும் - இடையின் மெலிவும். பயம் - பால். காண - யான் காணுவதற்கு உபகாரமாக. படர் - வந்த. மை - மேகம். கருணையின் - கருணையினால்; கருணையைப் போலவெனலுமாம். விருந்து வாய்த்தது என்க.

415. தலைவன் புதல்வனைக் காண்டல் என்னும் இத்துறை சிலகோவைகளில் இல்லை; வேறு சில கோவைகளில் பாங்கி அன்பிலை கொடியையென்று இணர்த்தார் மார்பனை இகழ்தலென்ற துறையின்பின்னர் மகப்பொறை கூர்ந்த வண்ண முரைத்தலென்பதும் அதன் பின்னர் இத்துறையும் இருக்கின்றன. **சிராமலைக் கோவையில்** மாத்திரம் இக்கோவையிலுள்ள அடைவே இத்துறைகள் உள்ளன. எல்லாவிடத்தும் இது கவியின் கூற்றாக உள்ளது; இங்கே தலைவன் கூற்றாக அமைந்திருக்கிறது.

அவியால் வான் இன்புற - வேள்வியில் தரும் அவிர்ப்பாகத்தால் தேவர் இன்புறவும். இமையோர்கோன் - சிவபிரான். அவர் வழிபாட்டால் இன்புறவும். கோதில் அந்தணர் குழாம் - குற்றமற்ற அந்தணர் கூட்டம். பொன்னால் என்பதை இடைநிலைத் தீவகமாக்கி அந்தணர்குழாமும் கவிஞரும் பொன்னால் இன்புறவென்று கொள்க. என் தவமணியைக் கண்டு யான் இன்புற எடுத்தனன்; தவமணியென்றது புதல்வனை.

"தேனார் மலர்சுரர்க் காக்கிநெய் வாக்கிச் செழுந்தழல்வாய்த், தானார வேட்டு மறையவர்க் காநிதி தானளித்து, மானார் கரத்தன் சிராமலை நேரிறை வன்மகவை, ஆனா மகிழ்வி னுடனெடுத் தாகத் தணைத்தனனே" (**சிராமலைக்.** 416); "ஆடுந் திரவியத் தியாகேசர் கோகழி யந்தணர்க்கு, மாடுங்கற் றாவு மளித்திமை யோர்க்கு மலர்களும்விண், மூடும் புகையும்பெய் தெல்லோரும் வாழ்த்தச்செய் முற்றவத்தாற், கூடும் புதல்வனைக் கோவுங்கைக் கொண்டுகொண் டாடினனே" (**திருவாவடுதுறைக்.** 428); "கோவுந் தனமு மறையோர்க் களித்தலர் கூரவியும், கோவும்பர்க் கேற்றிக் கலைசைத் தியாகரைக் கும்பிட்டெடந்தக், கோவு மிவற்கொப்பி லென்றே புலவர்கள் கூறவிரு, கோவுங் களிப்பப் பொருளைக்கண் டேந்தினன் கொற்றவனே" (**கலைசைக்.** 424.)

416. பண்கள் புரைமொழி - தலைவி. விளர்த்து - வெளுத்து. தேன் உண் கள்வழி - வண்டுகளால் உண்ணப்பெறும் தேன் வழிகின்ற. இடை எழில் உற்றது - இதுகாறும் மறைந்திருந்த இடை

இப்போது எழுச்சியை அடைந்தது. வயிற்றிற் பிறந்தவன்று - கருப்பம் உற்ற காலத்தில். "சேயா ரிதழ்வெளுத் தாகம் பசந்து சிகரிங்க, ராயார் முலைக்கண் கறுத்துச் சிராமலை யாயிழைக்குத், தாயா மமல னருளாற் கருப்பந் தரிக்கவிசைத், தூயா யெழில் பெறத் தோன்றா விடைவந்து தோன்றியதே" (**சிராமலைக். 417.**)

417. சுகம் - கிளி. மென்மொழி - உமாதேவியார். நோக்கும் சொல்லும் முலையும் இன்பந்தருமென. உள்ளத்து அன்பகம் காட்டிடாது - உன் உள்ளத்திலே உள்ள அன்பின் அந்தரங்கத்தை வெளிப்படுத்தாமல். புறம் - முதுகு. அமளி - படுக்கை; போரென வேறுபொருள் தோற்றியது. "வென்காட்டி யிந்த வமளியின் மேவுதன் மேன்மையன்றே" (**சிராமலைக். 418.**)

418. போது ஆர் அமளியில் - மலர் நிரம்பிய படுக்கையில்; மலரம்புகள் நிறைந்த மன்மதனது போரில் என்பது மற்றொரு பொருள். தாரகம் - பற்றுக்கோடு. முன் தீது ஆர ஓர்ந்து வெகுளலை - முன்னைத்தீயொழுக்கத்தை நிரம்ப நினைந்து கோபித்தலைச் செய்யாதே. தாது ஆர் அடிகள் - பூந்தாதை யுடைய பாதங்களை. இப்போது ஆர வந்திப்பன். கோது ஆருறாது அருள் - குற்றம் பொருந்தாதபடி திருவருள் செய்யும். ஆதாரர் - யாவருக்கும் ஆதாரமாக இருப்பவர்.

419. அனக்கு இளையாத நடை - அன்னத்தின் நடைக்குத் தோலாத நடையையுடைய உமாதேவியார். வேதவெற்பு: திருக்கழுக்குன்றத்தின் திருநாமம் மனக்கு இளையாத பெரியோய் - மனத்தில் சோர்வுறாத பெரியோய்; இளையாத - சலியாத. இகபர போகம் - இகலோக இன்பத்தையும் பரலோக இன்பத்தையும். இருமையின்பமும் மனைவியாற் பெறுதலின் அவற்றை உதவு நலம் தனக்கிளையாத எனக்கு என்றாள். இன்பம் நுகர்தலினால் இக போகமும், அறம் புரிதலினால் பரபோகமும் மனைவியாற் கிடைக்கும். எனக்கு இளையார் - என் தங்கைமாராகிய பரத்தையர். சழக்கு - தீமை. சழக்கு ஆமென ஒருசொல் வருவித்து முடிக்க.

420. பின்னலது ஆரும் பிறை - பின்னிய சடையினிடத்தே பொருந்திய பிறையையுடைய. இன்னலது: அது பகுதிப்பொருள் விகுதி. விடயம் மன்னலராய் உறல்போல - விஷயங்களில் தங்காதவராகியிருத்தல்போல; விஷயமென்றது ஐம்புலத்தை.

421. நின் சாயல் இயைந்த மணி - நின்னைப்போன்ற சாயல் பொருந்திய மணிபோன்ற புதல்வன். புதல்வனை மணியென்றல்: 415. மோப்ப - காமக்கிழத்தி மோவாநிற்க. உன் மகவால் - உன்னுடைய குழந்தையே. நின்று அலமரல் - அங்கே நின்று

மனம் சுழலாதே. என - என்று நான் சொல்ல. அம்மான் - அந்தப் பெண். உடைந்து - மனங்கலங்கி.

422. தலைவியைத் திருமகளாகவும் தலைவனைத் திருமாலாகவும் கொண்டு கூறுவது இச்செய்யுள். உரம் ஆர்த்தும் இம் மொய்ம்பன் - நின்னைத் தன் திருமார்பில் வைத்திருந்த திருமாலாகிய இவ்வலியுடைய தலைவன். விருந்தைக்கு உழன்றமை பார்த்தும் - பிருந்தையென்பவளின் பொருட்டாகத் திரிந்ததைப் பார்த்தும். மலைமின்னுட்கு - உமாதேவியாருக்கு. அந்நாள் பொறுத்தென-அக்காலத்தில் திருமகளாகிய நீபொறுத்தாற்போல. பார்த்தும் பொறுத்தென. "தேருத செல்வ முருகன் மயில்வரைச் செல்வனும்பாற், கூரு தனசொல்லிச் செய்யா தனசெய்துங் கோப மென்னே, மாருன் மகிழுந் திருமகிழ்ந் தாளின்பம் வாய்த்தபதி, ஞுரு யிரரன்றி யோர்மானெஞ் சேறி யமர்ந்ததுவே" (**மயூரகிரிக் கோவை, 467.**)

423. இன்சொல் இசைத்தும் - இனிய சொற்களை மெல்லக் கூறியும். உயிரும் சித்தமும் நைந்து. அடி தைவந்து - பாதத்தை வருடி. இன்று - இல்லாமல். அணங்காயினை - வருத்தத்தைத்தரும் தெய்வமகளாயினும்; என்னுல் அணுகுதற்கு அரியையாயினை யென்றபடி. கத்தனை - சிவபிரானை. பொற்பு : குறிப்புமொழி.

இத்துறை பெரும்பாலும் தலைவியைப் படர்க்கையில் வைத்துக் கூறுங் கூற்ருகப் பிற கோவைகளில் உள்ளது.

424. பரத்தையர் இயல்பைத் தோழி கூறுகிருள். பொருள் அளிப்போன் புணர்காலை - தனக்குப் பொருளை அளிக்கும் ஒருவன் அளவளாவுமிடத்து. 'எப்போது இந்த மனிதன் போவான், எப்போது மிகுதியாகப் பொருள் தருபவன் வருவான்' என்று எண்ணுபவர்களை நட்புக்குரியாரென்று நினைத்து உண்மையான உறுதிப் பொருளாகிய இன்பத்தைத் தரும் மனைவியரை இகழ்வது. போமிடத்தே யென்றது பரத்தையரைக் குறித்தவாறு. "நீரிந்த நாளில்விலைப், பண்பார் பரத்தையர் மாலினன் ஞேரைப் பணிவதற்காப், புண்பாவை நெஞ்சுறச் சீறலிர் போமிடைப் போதுகவே" (**சிராமலைக். 425.**)

425. இருமனம் கொண்டவர் - பரத்தையர்; "இருமனப் பெண்டிரும்" (**குறள், 920.**) நின் மாண்பு எங்களது போன்றதன்று. இருகற்பு ஒருமனம் கொண்ட - கற்பென்னும் குணத்தையும் கல்வியையும் ஒப்பற்ற மனத்தில் கொண்ட; கற்பு - மகளிர்க்குரிய கற்பு, கல்வி. ஊடல் உருது - ஊடுதல் பொருந்தாது. நம் கொண்டல் அனைய கை அன்பர் உள்ளத்தில் பொருமல் புகாது சேர்ந்தரு

ளென்க. பொருமல் - வருந்துதல். இருமனங் கொண்டவர்போலு மென்போலு மன்றே: "என்போ லியர்க ளௌவூட னின்னுளத் தேய்வ தன்றே" (**சிராமலைக்.** 426); "எங்க ணீர்மைகொ லுன் னருளே" (**திருவாவடுதுறைக்.** 429); "எனைப் போலலை யூடல்" (**சீகாழிக்கோவை,** 495); "தேக்கிலை நீரெனச் செய்வதென் போல் பவர் செய்வதுவே" (**மயூரகிரிக்.** 473.)

426. தமக்கு என்று நாடு இருந்தும் - தமக்கே உரியதென்று நாடு இருந்தாலும். அயற் புலம் நாடல் - வேற்று நாட்டைக் கைக்கொள்ள எண்ணுதல். விறல் கூடும் அவர்க்கு - வீரம் பொருந்திய மன்னர்களுக்கு. கோளும் - கொள்கையும். அற்றாய் நீடும் - அத்தகையதாகி யிருக்கும். அதற்கு - அதன்பொருட்டு. இவண் ஊடி - இங்கே ஊடலைக்கொண்டு. உடல் நீ வருந்தில் - நீ உடம்பு வருத்தத்தை யடைந்தால். எழிற் குட்டன் வாடும் - அழகையுடைய நின் மகன் வாடுவான்.

427. ஆவது இன்று - ஆகும் காரியம் ஒன்றில்லை. துணை யென எய்தலின் - துணையாகக்கொண்டு அணுகுதலினால். யாமினி நேர் களத்தார் - இரவையொத்த திருக்கழுத்தை உடையவர். தோம் இல் அடி, நிலாவு அடி என்க; குற்றத்தின்கண் நில்லாத திருவடியெனலும் ஆம். இன்பு ஆற்றி - இன்பத்தைச் செய்து. இல் தோற்றுதும் - இந்த வீட்டில் தோன்றச் செய்வோம்.

428. பெற்றவர்க்குற்ற துயரத்தைப் போக்கி இன்பத்தைப் பெருக்கினவர்கள் கண்ணனும் என் மகனுமாகிய இருவரென்பதை உணர்ந்தேன். உற்றவர்க்கு உற்ற பகை கஞ்சனை - உறவினர் களுக்கு உற்ற பகையாகிய கம்ஸனை. வெல்லும் உத்தமன்: கண்ணன். அற்றவர்க்கு - பற்றுக் கோடொன்று அற்றவருக்கு.

429. ஆலையின் ஆட்டு கரும்பு இரதம் தருமாறு - ஆலையிலே ஆட்டிய கரும்பானது சாற்றையளிப்பதுபோல. எதிர்ந்த வேலை யின் ஆற்று புலவி துயரம் விளைப்பவும் - அவரை எதிர்ப்பட்ட சமயத்தில் நான் தாங்கிய புலவியானது துயரத்தை விளைக்கவும். அக்காலையில் - அந்தச் சமயத்தில். இன்பு - இன்பத்தை. ஆலையிலே இட்ட கரும்பு நெருக்குண்டு துன்புற்றாலும் அடுத்துச் சாறு கிடைப்பதுபோல, புலவியால் வருந்தினும் பின்பு இன்பம் தந்தா ரென்க. மாலையின் ஈட்டு அரவு ஆர்வோர் - மாலையைப் போலத் தொகுத்த பாம்புகளைக் கொள்பவர்.

430. அதிர் ஆழி மருந்து வர நுகர்வோர் - முழங்குகின்ற பாற்கடலில் அமுதம் எழ அதனை உண்ட தேவராலும். அண்டர்- இடையர். வாழும் மனை தரும் ததி ஆர் மால் - வாழ்கின்ற வீடு

களில் தரப்படும் தயிரை உண்ட திருமாலாலும். புகழ்வோர் - புக ழப்படுவோர். மன்னனுல் பொருந்து அதிசோகம் - தலைவனுல் உண்டாகிய மிக்க துயரத்தையும். பிழை - குற்றத்தையும். என் அருந்தவமே யென்றது தலைவியை.

431. கல்விப் பொருளில் மெய்தீர் மாலை - கல்வி என்ற பொருளில் ல் என்ற மெய்யெழுத்துத் தீர்ந்த மாலை; கவிமாலை. கல்வியுடையார் இறைவன் திருவடிக்குக் கவிமாலை சூட்டும் கருத் துறுவதோடு. கல்விப் பொருளில் முதல் உயிர் சேர் இன்பம் காண்பர் - கல்வி என்பதில் உள்ள, ல் என்ற மெய்யின்மேல் முத லுயிரெழுத்தாகிய அகரம் சேர்ந்த இன்பத்தை உணர்வர்; கலவி யின்பத்தை அடைவார். அதிகம் இல்லை. காசினிக்கே - பூமியில்; உருபு மயக்கம்.

432. நோய் இழை வெம்பவம் நீப்பான் - துன்பத்தை விளை விக்கும் வெவ்விய பாவத்தைப் போக்குபவன்; பவம் - பிறவியு மாம். வாய் இழை பந்தர் - வாயால் இயற்றிய பந்தரை. சிலந்தி பந்தரிழைத்த தலங்கள் திருவானைக்காவும் திருக்காளத்தியுமாம். முன் நான்கு ஆயிழை உய்ந்திடச் செய்யும் முனிவரன் - முற்காலத் தில் நான்கு பெண்கள் உயிர்பெறும்படி செய்த முனிவன்; இவ்வர லாறு புலப்படவில்லை. விஞ்சை - வித்தை.

433. நல்ல மனிதர்களுக்குத் திருமகளால் வரும் செல்வமும் கலைமகளால் வரும் அறிவும் கிடைக்கும். திருமகளால் வரும் இன்பம் நின்ணுல் சேர்ந்தனன்; திருமகளென்றது தலைவியை. அம் மருமகள் - கலைமகள். இன்று ஏவில் - இன்று யான் போகும்படி எனக்கு விடையளித்தால். வரும் - எனக்குக் கிடைக்கும்.

434. கல்வி : எழுவாய். அனத்தின் - நீரை விட்டுப் பாலை உண்ணும் அன்னப் பறவையைப்போல. ஒன்றும் : முற்று. துயரது அகற்றும். கனத்தின் - மேகத்தைப்போல. என்னின் - ￼என்று நீ கூறினுல். கழறி என்னே - உன்னை இடித்துரைத்துத் ￼தடுத்தலாற் பயன் யாது? கல்வி நீக்கும், அகற்றும், செறிக்கும், தரும், செய்யும் என்க.

435. ஆடலின் ஐந்தொழில் ஆற்றும் - தன்னுடைய திரு நடனத்தால் பஞ்ச கிருத்தியங்களை இயற்றுகின்ற; 78. கூடலின் ஆய்ந்த - மதுரையின்கண்ணே ஆராய்ந்த. தமிழ்ப் பாற்கடலின் - தமிழாகிய பாற்கடலில். "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும், உறைவா னுயர்மதிற் கூடலி னய்ந்தவொண் டீந்தமிழ்" (சிற். 20.) வீடலில் - அழிவில்லாத. இன்பு ஆரமுது - இன்பமாகிய அரிய அமுதத்தை. அயில்வான்

உண்ணும்பொருட்டு. மேவினர் - சென்றார். ஓடல் இல் நீடு அரவு.

436. நமனில் கருகா - யமனைப்போலக் கறுத்து. அவன் ஆர்ப்பின் இடித்து - அவனது முழக்கத்தைப்போல இடியொலி செய்து. கண்கால் கனல்போல் பெருகா மிகு மின்னொடு - கண்ணிலே புறப்படுகின்ற தீயைப்போலப் பெருகி மிகும் மின்னலோடு. முகில் : எழுவாய். உயிர் பருகா - உயிரை உண்டு. முகில் வரின். வேம் பாவி ஆவி - வேகின்ற பாவியாகிய எனது உயிர். மேகத்துக்கு யமன் உவமை: "கூற்றுவ னார்த்துவந் தென்னவிவ் வேலையுண்ணப், படலமை மேகமென் னுருயிர் சோரப் பரந்தும்" (கலைசைக். 437.)

437. ஆசு அகல் கல்வி அறிவிற்கு இலாபம் கொல்லாமை என்று - குற்றம் நீங்கிய கல்வியறிவு பெற்றதற்குப் பயன் கொல்லாமை என்று. காசு - குற்றம். நின் தேசு - நின்மேனியொளி. அகல்வு எய்தி - நீங்குதலைப் பெற்று. நல்லோர் புகழ்வார் - நல்லோரால் புகழப்படுபவர்.

438. என் நாட்டிடைத் தருமம் தவறாது ஒழுகவும்; ஒழுக - நடைபெற. பகைஞர் மருமம் தவறாது நெய்த்தோர் ஒழுக - பகைவர்களுடைய மார்பு தவறாமல் இரத்தம் ஒழுகவும்; என்றது தன் வேலால் துளைக்கப்படுவதைக் கருதியது. இறைமைக் கருமம் - அரசுரிமைக்குரிய கடமை. அளிப்பன் - பாதுகாப்பேன். துருமந் தவறாது பைந்தேன் ஒழுகும் - மரந்தவறாமல் பசிய தேன் ஒழுகும்.

439. புரவலர் என்கை தக - மன்னவரென்பது தமக்குத் தகும்படி. பொருநர் என்கை கரவலர் என்று புகழக் களைகட்டு - போர் செய்வாரென்பதை மறைத்திலர் என்று யாவரும் புகழும்படி பகைவராகிய களைகளைக் களைந்து. மகிழ்வு இரவலர் ஒன்ற அருள்வான் - யாசகர் சந்தோஷம் பொருந்தும்படி அருள்செய்யும் பொருட்டு. இகந்தனர் - பிரிந்து சென்றார். பூங்குரவு அலர் பைங்குழல் : விளி; குரவு - ஒரு மலர்; நறுமணமுமாம்.

440. காற்றெனும் கூற்றம் - வாடைக் காற்றாகிய யமன். கொண்மூவெனுங் கூட்டின் - மேகமாகிய அம்பறாத்தூணியில். எஞ்சி ஒளிர்தரும் அம்பின் எனது ஆவி உண்பான் உற - மிக்கு விளங்குகின்ற அம்பினால் என் உயிரை உண்ணும்பொருட்டு வர; அம்பு - நீர், பாணம்; சிலேடை. காற்றெனுங் கூற்றம் உற. மலைமான் - பார்வதி. தணந்தது - பிரிந்தது.

441. உயிரன்னார் - தலைவர். தம் நாட்டினவர்க்கு அளித்தும் - தம் நாட்டிலுள்ள குடிகளைப் பாதுகாத்தும். ஒன்னார் உடல் உயிர்

மன்னுது அகல ஒறுத்தும் - பகைவர்களுடைய உடல்களில் உயிர் தங்காமல் நீங்கும்படி தண்டித்தும்.

442. கதிர் உடல் போழ்ந்து - சூரியனுடைய உடம்பைக் கீறிச் சென்று. போரில் இறந்து வீர சுவர்க்கம் புகுபவர் சூரிய மண்டலத்தைப் பேதித்துச் செல்வரென்பர். வெங், கல்லிடை நிற்பான் - வெவ்விய நடுகல்லிடையே புகழ் தோன்ற நிற்கும் பொருட்டு; பகைவரோடு போர் செய்து இறந்த வீரர்களுக்குக் கல் நாட்டிப் பெயரும் பீடும் எழுதி வழிபடுதல் தமிழ்நாட்டு மரபு; "தற்புறந் தந்து வைத்த தலைமகற் குதவி வீந்தாற், கற்பக மாலை சூட்டிக் கடியர மகளிர்த் தோய்வர், பொற்றசொன் மாலை சூட்டிப் புலவர்கள் புகழக் கன்மேல், நிற்பர்தம் வீரந் தோன்ற நெடும் புகழ் பரப்பி யென்றான்" (**சீவக.** 2302) என்பதையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க. கதிருடல்......நிற்பான் கருதி யென்றது, போர் செய்து வீர சுவர்க்கம் அடைய எண்ணி யென்றபடி. இடி உதிருடல் நாந்தகத்தார் - இடி உதிர்கின்ற உருவத்தையும் வாளையும் உடையராகி. உடல - போர் செய்ய. சதிருடன் - சாதுர்யத்தோடு. சந்தி செய்திட - சமாதானம் செய்விக்க. ஓர் தாழ்குழல் - உமாதேவியார். பால் முதிர் உடல் நண்பர் - ஒரு பாகத்திலே பல காலம் வாழும் திருமேனியையுடைய சிவபெருமான். மின்னே - தோழியே.

443. உகாந்த வெள்ளத்தின் - யுகமுடிவில் உண்டாகும் வெள்ளத்தைப்போல். பன்மாந்த ரென்றது காலாட்களை. மலை தற்கு - போர் புரிவதற்கு. நின் காந்தர் - நின்னுடைய கணவர். முனை - போர்க்களத்திற்கு.

444. குனிக்கும் - நடனம் புரியும். உறும் முன்பணிக்கு. சனிக்கு: துன்பந் தருவதைச் சனியென்றல் வழக்கு. தணந்தார் இரதம் தொனிக்கும் மணியொலி - பிரிந்த தலைவரது தேரினிடத்தே லிக்கும் மணியினது சத்தத்தை.

445. எவ்வணம் - எவ்வாறு. ஓர் மாதின்பொருட்டு எவ்வணம் தோன்றுவரென்று அயரேல். தருமி - மதுரையிலிருந்த தருமியென்னும் அந்தணன். ஓர் வாதின்பொருட்டு - நக்கீரரோடு செய்யும் வாதத்தின்பொருட்டு. சூது - சூதுக்காய்.

446. நொச்சி - மதிலைக் காப்பவர் புனையும் மாலை. நள்ளார் எயில் காப்ப - பகைவர் தம் மதிலைப் பாதுகாக்க. அந்நொச்சி - அந்த மதிலை. நச்சி - விரும்பி. எமக்கு நண்புடையானாகிய ஒரு மன்னன், வஞ்சி மாலையைத் தன் தலையிலே புனைந்தான். மேற் சேறலுக்குரியதுவஞ்சி. கச்சி - காஞ்சீபுரம். காரிகை - தலைவி.

வாரா அவசமானாள். அதுகண்டு இன்ன காரணமென்று தெரியாத தலைவன் மயங்கிப் பின் ஆற்றுவித்தான். தெளித்து ஈரப்புனல் - குளிர்ந்த நீரைத் தெளித்து. எழுப்ப - மயக்கம் நீங்கி எழச் செய்ய. இம் மெய் முன் ஏயதோ எனும் - இந்த உடம்பு முன் பெற்றதுதானா என்று சொல்லும். தலைவன் பிரிவானென்ற எண்ணத்தால் தான் உயிர் நீங்கி வேறொரு பிறவி எடுத்ததாகவும் தலைவி எண்ணிக்கொண்டாள். ஆதலின் இங்ஙனம் கேட்டாள். எம் மான் - எம் தலைவி. பொருட்பிரிவு தொனிமாத்திரத்தில் அமைந்தாலும் பொறாத இவளிடம் நான் பொருளுக்குப் பிரிவதைச் சொல்லுதல் இயலுவதன்று, நீ சொல்லவேண்டுமென்பது குறிப்பு. "பொருளா விகபர மென்னுமுன் னீர்கண் பொழியவுள்ளம், மருளா வயர்ந்தன டீநீர் தெளித்துடன் மாற்றமின்னே, வெருளா வெழுந்தின்ன நாட்சென்ற தோவிங்கு மேவவென்று, தெருளா வணங்கிடு மெம்மான் சிராமலைத் தேமொழியே" (சிராமலைக். 453); "பொன்னே யெனுமுன் னவசமுற் றொல்லைப் புறந்தடவி, என்னே யெனப்பின் விழித்தெழுந் தெங்குற்ற தித்துணைநாள், கொன்னே யென் றுட்குன் பொருட்பிரி வென்னெனக் கூறுவனீ, மின்னே யெதிர்புகல் கோடைச் சுரநம்பர் வெற்பிடத்தே" (கோடைச்சுரக். 436); "திரைகட லோடித் திரவியந் தேடென்று செப்புமௌவை, உரைபழு தன்றெனச் சோர்ந்தாள் கழுக்குன்றத் தோர்மடமான் அரைபனி நீர்ச்சந் தனங்கொண்டு பாங்கிய ராற்றியபின், இரைகடல் போய்வர வெத்தனை நாளென் றெழுந்தனளே" (தனிப்பாடல்.)

451. ஞானச் செயலினர்க்கு - ஞானநெறிப் படரும் செய்கையாளருக்கு; ஞானிகளுக்கு. எள் துணையாயினும் - எள்ளளவாவது. நன்கு அளிக்கும் தானச் செயல் - நன்றாக உதவுகின்ற கொடை; எழுவாய். தானச் செயல் முத்தி தரும். நடுநின்று - அறம் பொருளின்ப மென்பவற்றின் நடுவிலே நின்று. முன் பின் தரும் - முன்னுள்ள அறத்தையும் பின் உள்ள இன்பத்தையும் தரும். பொருள் தருமென்க. அன்பர் என்று செல்வர். முற்றுதற்கு - அடைவதற்கு. "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவண தெய்த விருதலையு மெய்தும்" (நாலடி. 114); "அறம் பொரு ளின்பமென், றாரா ரிவற்றி னிடையதனை யெய்துவார், சீரா ரிருதலையு மெய்துவர்" (சிறிய திருமடல், 3–4); "ஏரணி நல்லற மின்பங்க ளான விரண்டினுக்கும், காரண மேபொருள்" (திருவாரூர்க்கோவை, 507); "படுவொன் றறம்பொரு ளின்பெனு மூன்றனுட் பாங்கிரண்டும், நடுவொன் றுளதெனி னுண்டாமென் றோதி

சென்றூர், கடுவொன்று சுந்தரர் கோடீச்சு ரேசர்தண்
வரைக்கே" (**கோடீச்சுரக். 437.**)

452. கூற்றுவன் தூதர் - யம தூதர்கள். அறை கூவுதல் - போருக்கு அழைத்தல். தோற்று வன் கோகிலம் கூவும் - தோற்றிய வலிய குயில் கூவுதற்கிடமாகிய. சூழலின் - சூழ்ந்த சோலையில். எங்கு - எப்படி.

453. மலயத் தென்றல் - பொதிய மலையிலிருந்து வரும் தென்றற் காற்று. ஈட்டுபு - ஈட்டி. உயங்குவது - தளர்வதை. தீர்ப்பான் - நீக்கும்பொருட்டு. உறுவர் - வருவார்.

454. பவத்தினை ஈர்த்தி - எம் பாவத்தை அறுத்தருள்வாயாக. அருள் சேர்த்தி - எம்பால் திருவருளைச் சேர்ப்பாயாக. என்று இறைஞ்சுநர்ச் சேர் - என்று வேண்டி வணங்கும் அன்பர்களைச் சேர்கின்ற. தார்த்திகழும் - மாலையினிடையே விளங்கும். ஆர்த்தி - ஆர்வம். பார்த்தி - பார்ப்பாயாக. உடல் முகிழ்ப்பு போர்த்தி வணங்கு - உடல் முழுதும் மயிர்க்கூச்செறிய வணங்குவாயாக.

455. பரை - பராசக்தி. இங்கு இத்திருந்து இளவேனிலில். தழைத்தனள் - தலைவி மகிழ்ந்தாள். தோழி மகிழ்ந்து கூறும் இக்கூற்றோடு கோவை முடியும் முறை **சிராமலைக்கோவையில்** மாத்திரம் காணப்படுகிறது.

"உருவார் மதனென நீயிள வேனிலி லுற்றதனால், மருவார் மலர்க்குழ லெம்பெரு மாட்டி மனமகிழ்வாற், பெருவாழ் வெனவளரானந்த போகத்தைப் பெற்றினிதாய்த், திருவார் சிராமலை யெம்மானருளெனச் சீர்கொண்டதே" (**சிராமலைக். 457.**)